# மாதவம் புரிவாள்

(மரப்பெயர் - மூன்றாம் பாகம்)



## சுந்தரசண்முகனார்

# மா தவம் புரிவாள்

(மர இனப் பெயர் வைப்புக் கலை - பாகம் 3)

ஆசிரியர்:
புதுப்படைப்புக் கலைஞர், ஆராய்ச்சி அறிஞர்
முனைவர் சுந்தர சண்முகனார்
தமிழ்—அகராதித்துறைப் பேராசிரியர் (ஓய்வு)
புதுச்சேரி-11

வெளியீடு:
சுந்தர சண்முகனார்
புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்
38, இரண்டாம் தெரு,
வேங்கடநகர், புதுச்சேரி-11

**மா றவம் புரிவான்**

(மர இனப் பெயர்வைப்புக் கலை - பாகம் 3)

முதல் பதிப்பு - மே 1991

**விலை ரூ. 22—00**

அச்சிட்டோர்:

சபாநாயகம் பிரிண்டர்ஸ்
73-A, கீழ ரத வீதி
**சிதம்பரம் - போன்: 2350**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | குறுக்க வடிவ விளக்கம் | — 4 |
| | ஆசிரியர் முன்னுரை | — 5 |
| 1. | மாதவம் புரிவாள் | — 7 |
| 2. | தெருவில் அழகி | — 49 |
| 3. | காணாமல் பூ பூக்கும் - கண்டு காய்காய்க்கும் | — 98 |
| 4. | மடிக்குருவி | — 108 |
| 5. | உள் கண்ணாடி | — 131 |
| 6. | யானை வணங்கி | — 164 |
| 7. | ஒரு கண்ணோட்டம் | — 166 |
| 8. | கருத்து வழங்கிய கருவூலங்கள் | — 175 |
| 9. | மரஇனப் பெயர்களின் பட்டியல் | — 184 |

# குறுக்க வடிவ விளக்கம்
# Abbreviation

அ. கு. பா. - அகத்தியர் குணபாடம்

இ. சா. - இலக்கியச் சான்று

சா. சி. பி. அ. - சாம்பசிவம் பிள்ளையின் தமிழ் ஆங்கில அகராதி

சி. வை. அ. - சித்த வைத்திய அகராதி

த. பே. அ. - சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி

தே. கு. பா. - தேரையர் குணபாடம்

தே. பா. - தேரையர் பாடல்

பொ. ப. நூ. - க. ச. முருகேச முதலியாரின் பொருட் பண்பு நூல்

மூ. வை. அ. - மூலிகை வைத்திய அகராதி

மலை - வைத்திய மலை அகராதி

வை. ம. அ. - வைத்திய மலை அகராதி

ஜூ, ஜூபிலி - ஜூபிலி தமிழ்ப் பேரகராதி

# ஆசிரியர் முன்னுரை

'மரஇனப் பெயர் வைப்புக்கலை' என்னும் பெயரில் ஒரு (சுமார்) அறுநூறு பக்கங்களில் ஒருநூல் எழுதினேன். அறுநூறு பக்கங்களில் நூல் வெளியிடின் அறுபது உரூபா விலை போட வேண்டியிருக்கலாம்; எனவே அதை மூன்று பாகங்களாகப் பிரித்து வெளியிடின், ஒவ்வொன்றின் விலையும் குறைந்த அளவில் தெரியும் - வாங்குவோர்க்கு மலைப்பா யிராது - என நண்பர்கள் அறிவுரை கூறினர். அவ்வாறே மூன்றாகப் பிரித்து வெளியிடலானேன்.

முதல் பாகத்தின் கையெழுத்துப் படியைப் புதுச்சேரி அரசின் நிதியுதவிக்காக 1989-ஆம் ஆண்டு அனுப்பி யிருந்தேன். ஓரளவு நிதியுதவி 1990-ஆம் ஆண்டுதான் கிடைக்கும்; எனவே, அதை 1990-ஆம் ஆண்டுதான் வெளியிட முடியும். எனவே, அதற்குள் இரண்டாம் பாகத்தை நிதியுதவி பெறாமல் நாமே வெளியிட்டு விடலாம் என்றெண்ணி 1989-ஆம் ஆண்டு 'மருந்தாகித் தப்பா மர இனப் பெயர்கள்' என்னும் பெயரில் வெளியிட்டேன்.

பின்னர் முதல் பாகத்திற்கு 1990-ஆம் ஆண்டு புதுச்சேரி அரசின் நிதியுதவி ஓரளவு கிடைத்ததால், அதை 1990-ஆம் ஆண்டு வெளியிட்டேன். இந்த மூன்றாம் பாகத்திற்கு இந்த 1991-ஆம் ஆண்டு புதுச்சேரி அரசின் நிதியுதவி ஓரளவு கிடைத்ததால், இதை 'மாதவம் புரிவாள்' என்னும் பெயரில் வெளியிட்டுள்ளேன்.

பின்னர் ஒருகால் வாய்ப்பு நேரின் - அதாவது - அடுத்த பதிப்பு வெளியிட நேரின், மூன்று பாகங்களையும் சேர்த்து ''மரஇனப் பெயர் வைப்புக்கலை' என்னும் தலைப் பெயரில் வெளியிடலாம்.

இந்த மூன்றாம் பாகத்தில் மரஇனம் பற்றிய ஏழு தொடர் கட்டுரைகள் உள்ளன. முதல் கட்டுரையின் பெயர் 'மாதவம் புரிவாள்' என்பது. ஒருவகைக் கவர்ச்சிக்காக ம,ாதவம் புரிவாள்' என்னும் முதல் கட்டுரையின்

பெயரையே இந்த மூன்றாம் பாகத்திற்குச் சூட்டியுள்ளேன். இந்த நூலில் ஒரு முந்நூறு பெயர்கட்குப் பெயர்க் காரண விளக்கம் தரப்பெற்றுள்ளது.

நெடுநேரம் எண்ணிப் பார்த்துப் பெயர்க் காரணங்கள் கண்டுபிடித்துத் தரப்பெற் றுள்ளன. அவற்றுள் சில பொருந்தாதவை என எவர்க்கேனும் தோன்றின் அவற்றைத் தள்ளிவிடலாம்.

மரஇனப் பொருள்கட்கு, சார்பு, பண்பு, பயன், உடற்கூறு, வடிவம், வண்ணம், செயல், மொழிபெயர்ப்பு, சொல் விளையாட்டு, ஒப்புமை முதலிய பல்வேறு தொடர்புகளால் புனைபெயர்கள் வைக்கப்பெற் றுள்ளன. இந்த நூலில் உரிய இடங்களில் அந்தத் தொடர்புகள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

ஏறத்தாழ இருநூறு மேற்கோள் சான்றுகள், பல இலக்கிய - நிகண்டு - அகராதி நூல்களிலிருந்து இந்நூலில் தரப் பெற்றுள்ளன.

இந்நூலின் இறுதியில், மூன்று பாகங்கட்கும் சேர்த்து 'ஒரு கண்ணோட்டம்' என்னும் தலைப்பில் ஒருவகை ஆய்வு முடிபு தரப் பெற்றுள்ளது. மூன்று பாகங்களையும் படித்தாலேயே இந்த ஆய்வு முடிபு தெளிவுறும். இருப்பினும், இந்த மூன்றாம் பாகத்தைக் கொண்டும், ஆய்வு முடிபைப் போதுமான அளவு தெளிந்து கொள்ளலாம்.

அன்பர்களின் நல்லாதரவைத் தலைவணங்கி என்றும் வேண்டுகிறேன்.

இந்த நூல் வெளியீட்டிற்கு ஓரளவு பொருளுதவி புரிந்த புதுச்சேரி அரசுக்கு நன்றி செலுத்துகிறேன்.

மூன்று பாகங்களையுமே நன்முறையில் அச்சிட்டுத் தந்த சிதம்பரம் சபாநாயகம் பிரிண்டர்சுக்கு நன்றி.

பணிவுடன்

25—5—1991 சுந்தரசண்முகன்

# 1. மா தவம் புரிவாள்

## I. சார்பினால் பெற்ற பெயர்கள்

### 1.1. தண்ணீரில் தவம்

நூல்களுள் தவஞ்செய்யும் முறைகள் பல சொல்லப் பட்டுள்ளன. அம்முறைகளுள். தண்ணீரில் இருந்து கொண்டு தவஞ்செய்வதும் ஒன்றாகும். இதனைப் பிரபுலிங்க லீலை-மாயையின் உற்பத்தி கதியில் உள்ள

''கண்ணிய நிலத்த கங்கைக் கரையிலும்
முழையிடத்தும்
புண்ணிய வனத்தும் எய்திப் புற்றுமாய் மரமா
யுற்றும்,
தண்ணிய புனலில் தீயில் சார்ந்தும், ஊண் துயில்
துறந்தும்
பண்ணிய தவத்தோர் நெஞ்சம் பதைத்தன மயலின்
மூழ்கி (32)

என்னும் பாடலால் அறியலாம். 'தண்ணிய புனலில் சார்ந்து பண்ணிய தவத்தோர்' என்பது ஈண்டுக் கருதவேண்டியது. புனல் = தண்ணீர்.

### 1.1.2. நால்வகைப் பூக்கள்

பூக்களை, நீர்ப் பூ, நிலப் பூ, கோட்டுப் (கிளைப்) பூ, கொடிப் பூ என நால் வகையாகப் பிரிப்பதுண்டு. நான்காவதாகிய கொடிப்பூ என்பது தரையில் உள்ள கொடிப் பூவைக் குறிக்கும். முதலில் உள்ள நீர்ப்பூ என்பதில். நீரில் உள்ள தாமரை, அல்லி, ஆம்பல், நெய்தல், குவளை, கொட்டி முதலிய கொடிகளின் பூக்கள் அடங்கும்.

### 1-1.3. மா தவம் புரிவாள்

இந்த நீர்க் கொடிகள், நீரில் இருந்து தவம் செய்வதாகக் கூறினால், அஃது ஒரு வேடிக்கை—விளையாட்டுக் கூற்றேயாகும். இக் கொடிகளுள் தாமரைக் கொடி, தண்ணீரில் இருந்து கொண்டு மா (பெரிய) தவம் புரிவதாகக் கொண்டு. அதற்கு 'மாதவம் புரிவாள்' (சா.சி.பி.) என்னும் பெயர் வழங்கப்பட்டுள்ளது.

### 1.1.4. தாமரையின் தனிச் சிறப்பு

தண்ணீருக்குள் உள்ள மற்ற கொடிகட்கு இன்றி, தாமரைக்கு மட்டும் இப் பெயர் தந்திருப்பதில் உள்ள பொருத்தம் யாது? ஒரு வேடிக்கைப் பொருத்தம் உண்டு. தாமரை இலையில் மெழுகு போன்ற ஒரு பொருள் இயைந்திருப்பதால், தாமரை இலையில் தண்ணீர் ஒட்டுவதில்லை. தாமரை இலையில் ஒரு சொட்டுத் தண்ணீர் தெளித்தாலும், அது முத்துப் போல் திரண்டு வெளியாகி விடும். தாமரை தண்ணீரில் ஒட்டி முளைத்திருந்தும் ஒட்டாதது போல் காணப்படுகிறது. உண்மைத் தவசிகள், மாந்தர் நடுவண் ஒட்டியும் ஒட்டாமல் இருப்பர். தாமரை இலையின் நிலையும் அதுதானே! இங்கே,

''தாமரை யிலையினிலே தண்ணீர் தங்காத்
தன்மைபோல் சகத்தாசை தள்ளிவிட் டெங்கும்
தூமணியாய் விளங்கிய சோதி பத்தைத்
தொழுது தொழுது தொழுது ஆடாய் பாம்பே''(70)

என்னும் பாம்பாட்டி சித்தர் பாடலும் மற்றும் திருவேங்கட நாதர் அருளியுள்ள கீதாசாரத் தாலாட்டு என்னும் நூலில் உள்ள

''வீடும் தாரமும் உறவும் மேவி என்றும் இருந்தாலும்
நீடுந் தாமரை இலைநீர் நிகராவார் என்றவரோ''(97)

என்னும் பாடலும் எண்ணத் தக்கன.

எனவே, தண்ணீரில் இருக்கும் சார்பினால், தாமரைக்கு ''மாதவம் புரிவாள்'' என்னும் பெயர் வேடிக்கைச் சுவையுடன் தரப்பட்டுள்ளது என அறியலாம்.

## 1.2 தண்ணீரும் தாமரையும்

தண்ணீரில் இருக்கும் செடி கொடிகட்குள் தாமரையே சிறப்பிடம் பெற்றிருப்பதால், தண்ணீருக்கும் தாமரைக்கும் நெருங்கிய இயைபு கூறப்பட்டுள்ளது. நீர் வாழ் பறவை வகைக்குத் 'தாமரைச் சிறகி' என்னும் பெயர் தமிழ்ப் பேரகராதியில் தரப்பட்டுள்ளது. சிறகி = சிறகையுடைய பறவை. இங்கே தாமரை என்பது தண்ணீரைக் குறிக்கும் சொல்லாயுள்ளது. தமிழ்ப் பேரகராதியில் தரப்பட்டுள்ள சொல் விளக்கம் வருமாறு:-

''தாமரைச் சிறகி = A kind of teal in lotus tanks = நீர் வாழ் பறவை வகை'' - என்பதாகும். teal = என்பது வாத்து வகையைக் குறிக்கும்.

சிவ ஞான சித்தியர்-சுபக்கம் என்னும் நூலில், மண், நீர், தீ, காற்று, வானம் என்னும் ஐந்து பூதங்கட்கும் உரிய வடிவங்களும் நிறங்களும் எழுத்துக்களும் அடையாளங்களும் தெய்வங்களும் கூறப்பட்டுள்ளன. பாடல்கள் வருமாறு;-

''மண்புனல் அனல்கால் வான்பால் வடிவு நாற்கோண மாகும்
தண்பிறை, மூன்றுகோணம், அறுகோணம், வட்டம்;
வண்பொன்மை வெண்மை செம்மை கறுப்பொடு தூம வன்னம்;
எண்டரும் எழுத்துத் தானும் லவரயவவ்வ வாமே''-
(2-67)

''குறிகள் வச்சிரத்தி னோடு, கோகனகம், சுவத்தி,
அறுபுள்ளி, அமுதவிந்து; அதிதெய்வம் அயன், மால், ஆதி,
செறிபுகழ் ஈசனோடு, சதாசிவம் பூத தெய்வம்;
நெறிதரு கலையைந்திற்கும் நிகழ்த்துவார் இந்த நீர்மை''- (2-68)

இவ்வைந்தனுள் புனலை (தண்ணீரை) மட்டும் எடுத்துக் கொள்ளலாம். தண்ணீரின் வடிவம் பிறை நிலாவாம். உலகின் பல பகுதிகளிலும் துண்டு துண்டாக உள்ள நிலப் பகுதிகளைப் பிறை வடிவாக வளைத்திருத்தலின் இது பொருந்தும்,

தண்ணீரின் நிறம் வெண்மையாம். தண்ணீருக்கு நிற மில்லை என்பது இக்கால அறிவியல் கொள்கையுமாகும். எனவே, தண்ணீரின் நிறம் வெண்மை எனப் பண்டு கூறி யிருப்பதும் ஒரு வகையில் சரியே, தண்ணீரின் எழுத்து 'வ' என்பதாம். தண்ணீரைத் தூக்கி ஊற்றினால் ஓரளவு வெண்மையாய்த் தெரிவதைக் காணலாம்.

தண்ணீரின் குறி (அடையாளம்) கோகனகம் (தாமரை) என்று கூறப்பட்டுள்ளது. இதனால் தண்ணீருக்கும் தாமரைக் கும் உள்ள மிக்க-நெருங்கிய தொடர்பு புலனாகும்.

தண்ணீருக்கு உரிய தெய்வம் திருமாலாம். திருமால் நீர்க் கடவுள். நாராயணன் என்னும் பெயரின் பொருள் (நாரம் + அயணன்) நீரை இருப்பிடமாகக் கொண்டவன் என்னும் செய்தியெல்லாம், தெருவிலழகி என்னும் குப்பை மேனியைப் பற்றிய கட்டுரையில் விளக்கமாகக் கூறப் பட்டிருப்பது காண்க.

மேற்காட்டிய சிவஞான சித்தியாரின் பாடல்களால், தண்ணீரே தாமரை-தாமரையே தண்ணீர் என்று சொன்னா லும் தகும் என்பது புலனாகலாம்.

பொலிவற்றிருக்கும் ஒரு பொருளுக்கு உவமையாக, வெண்ணிலா இல்லா விண்ணகம் போலவும், தாமரை இல்லாத் தடாகம் போலவும் பொலிவற்றிருக்கிறது-எனக் கூறும் உலகியல் வழக்கும் இக்கருத்துக்கு அரண் செய்யும்.

இவ்வாறு, தாமரை தண்ணீரோடு நெருங்கிய தொடர்புடையதாயிருத்தலின், தண்ணீர் சார்பான பல பெயர்கள் தாமரைக்குத் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

**1.2.1,2 அம்புசம்** அம்புயம்: அம்பு என்பதற்கு நீர் என்ற பொருள், தைலவ சருக்கச் சுருக்கம் (பாயிரம்-30) என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. அம்புஜம் என்பது வடமொழிச் சொல். 'ஜ' என்னும் வடமொழி வேர்ச் சொல்லுக்குப் பிறத்தல், தோன்றுதல் என்று பொருளாம். பிறப்பைக் குறிக்கும் ஜநு, ஜநந் என்பவற்றின் வேர்ச்சொல் 'ஜ' என்று கொள்ளலாம். இராமாநுஜன் = இராம + அநு + ஜன் = இராமனுக்குப் பின் பிறந்தவன். சகஜம் = சக + ஜம் = உடன்பிறந்த இயற்கைத் தன்மை. இவற்றால் 'ஜ' என்பதன் பொருள் புலப்படும். அம்பில் ஜனிப்பது = நீரில் தோன்றுவது அம்புஜம் ஆகும். அது அம்புசம் என்றாகிப் பின்னர் அம்புயம் என்று தமிழ் ஒலி பெற்றது. ஆகாசம் ஆகாயம் ஆனமை ஒத்திடற்பாலது. இ. சா.:

> ''அம்புயத்தின் போதை அறுகாலால் — தும்பி
> திறக்கத் தேன்ஊறும் திருநாடன்'' (19)
>
> (நளவெண்பா-கலிநீங்கு படலம்)

**1.2.3** அம்போசம், அப்புசம் என்னும் பெயர்களும் இதே பொருளில் தாமரைக்கு உண்டு. அப்பு = நீர்.

**1.2.4** அம்போருகம்: அப்பு=நீர்; உருகம்=பிறப்பது; நீரில் பிறப்பது அம்போருகம் = தாமரை.

**1.2.5 அம்பு சாதம் (மலை. அ.)** அம்பு=நீர்; சாதம்= பிறத்தல் - தோன்றல். இ. சா: பெருங்கதை - உஞ்சைக் காண்டம் 43-61.

''போதத்தின் அகன்று சாதத்தின் வழிநின்று''
எனவே, அம்பில் (சாதம்) தோன்றுவது அம்பு சாதமாம்.

**1.2.6 சரசீருகம்,** சரோருகம், சரோசம், சரசிசம், சரோசினி என்பவை தாமரையின் பெயர்கள்.

சரம் என்றால் நீர். இ. சா: திருவெங்கைக் கலம்பகம்

''கோபம் தோன்ற அதிர்ந்தெழுந்து கோள்கள்தொறும்
மின்வாள் வீசிச்
சாபந் தோன்ற வளைத் தொழியாச்
சரமேபொழிந்து''(84)

எனவே, சரசீருகம் முதலாய ஐந்து பெயர்களும் நீரில் தோன்றுபவை என்னும் பொருளில் தாமரையைக் குறிக்கும். சரசீருகம் (சங். அக.). சரசிசம் (சங். அக.), சரோசம் (சூடா. நிக.) சரோருகம் இ. சா:

''முக சரோருகத்தினார்'' (பாரத-வாரணா — 65)

**1.2.7 வனசம்**: வனம் = நீர் (திவா. நி.) வனத்தில் (நீரில்) தோன்றுவது வனசம்-தாமரை. ஞானாமிர்தம்:

''வனச நீர்நிலை நின்று'' (46-19)

**1.2.8 கஞ்சம்**: கம் என்பதற்கு நீர் என்ற பொருள் உண்டு. கஞ்சம் என்பதும் நீரைக் குறிக்கும். **மணிமேகலை-** பதிகம்-10.

''கஞ்ச வேட்கையின் காந்தமன் வேண்ட''

**நளவெண்பா - சுயம்வர காண்டம்**

''அஞ்சிலம்பே வாய்விட்டு அரற்றுவன
கஞ்சம் கலங்குவன'' (15) கஞ்சம் = தாமரை.

எனவே கஞ்சத்தில் தோன்றுவது
கஞ்சம்-தாமரை. கம் + சம் = நீரில் தோன்றுவது.

**1.2.9 குசேசயம்:** குசம் = நீர் (பிங். நி). குசத்தில் தோன்றுவது குசேசயம்-தாமரை.

**1.2.10 கமலம்:** கம் = நீர்; அலம் = நீர். நீரில் தோன்றுவது கமலம் (திவா. நி.)

**1.2.11 நளினம்** = நீர். நளினத்தில் தோன்றுவது தாமரை. க. ரா. சூர்ப்பணகைப் படலம்.

''நாளங்கொள் நளினப் பள்ளி நயனங்கள் அமைய''(4)

**1.2.12 சவோசினி** = சவம் = நீர். சவத்தில் (நீரில்) தோன்றுவது சவோசினி - தாமரை.

**1.2.13 சலசம்:** சலசப்பூ: சலத்தில் (நீரில்) பிறப்பது சலசம்.

''சலசத் தீயுள்... மலர்ப் பொரியட்ட'' (தேவா. 575-6)

**1.2.14 வாரிசம்-வாரிசாதம்:** வாரி = நீர், நீர்நிலை (பிங்-நி), சாதம்=பிறப்பது, வாரியில் பிறப்பது, வாரிசம் - வாரிசாதம்.

**திருப்புகழ் 7079**

''பாத வாரிசத்தில் விழாதே''

**வில்லிபாரதம்** - பதினேழாம் போர்ச் சருக்கம்

''வாரி சாதக் காலை மலரென மலர்ந்த முகமும்'' (2471)

**1.2.15 சந்திரம்:** சந்திரம் = நீர் (யாழ் — அக.), சந்திரத்தில் தோன்றுவது. சந்திரம் - தாமரை, இதனை, இடவாகு பெயராகக் கொள்ளலாம்.

**1.2.16 கோகனகம் - கோகனதம்:** கோ = நீர்

''வரு கோவைச் சூடி'' – (இலக்கண விளக்க உரை)

கனகம் = பொன். பொன்னம்பலத்தைக் 'கனகசபை' என்று கூறுதல் ஒப்புநோக்கற் பாலது. செந்தாமரையைப் பொற்றாமரை என்று கூறும் செய்யுள் வழக்குக்குச் சில எடுத்துக்காட்டுகள்: திருவிளையாடற் புராணத்தில் உள்ள 'பொற்பங்கயத் தடம்', 'ஆடகப் பங்கயப் பொய்கை' என்னும் ஆட்சிகளும் ''பாணர் சூடிய பசும்பொற் றாமரை'' என்னும் புறநானூற்று (141) ஆட்சியும், 'பைம்பொற் றாமரை பாணர்ச் சூட்டி' என்னும் பதிற்றுப் பத்து (48) ஆட்சியும் தக்க எடுத்துக்காட்டுகளாம். எனவே, 'கோ கனகம்' என்பதற்கு, நீரில் உள்ள கனக (பொன்) நிறமான தாமரை எனப் பொருள் கொள்ளல் வேண்டும். இது 'கோகனதம்' என்றும் கூறப்படும். இ.சா:

**திருவாய்மொழி 9.8.2**

''கொடியே ரிடைக் கோகனத் தவள் கேள்வன்'' —

[கோகனத்தவள் = கோகனத்தில் (தாமையில்) உள்ள திருமகள்]

கோகனத முகங் காட்ட (தேவா - 575-3)

(பழைய பதிப்பு)

**1.2.17 கோசயம் (மலை-அ.)** கோ = நீர், கயம் = நீர், நீர்நிலை. இ.சா; மணிமேகலை.

''துணி கயந் துகள்படத் துளங்கிய வதுபோல்'' (24-84) நீர் நிலையில் உள்ளது தாமரை. இஃதும் இடவாகு பெயராம்.

**1.2.18 நீரோருகம்** (மலை.அ.) நீர் + உருகம் = நீரில் தோன்றுவது — தாமரை.

## 1.3 சேறும் தாமரையும்

**1.3.1 பங்கஜம்** = பங்க+ஜ = சேற்றில் தோன்றுவது. பங்கம் = சேறு. இ.சா:

**பரிபாடல்:**

''செங் குங்குமச் செழுஞ் சேறு
பங்கஞ் செய் யகில் பல பளிதம்'' (10-81, 82)

பங்கஜம், பங்கசம் ஆகிப் பின் பங்கயமாகத் தமிழ்நடை பெற்றது- அம்புஜம் அம்புயம் ஆனாற் போல.

**பங்கயம்** = சேற்றில் தோன்றும் தாமரை, இ.சா.

''பங்கயக் காடுகொண் டலர்ந்த பாங்கெலாம்''
(சூளாமணி – நாட்டுப் படலம் – 2)

**1.3.2 பங்கேருகம்:** பங்கத்தில் பிறப்பது. இ.சா.

''இராம நாதன் பாத பங்கேருகங்கள்''
(சேதுபுராணம் - தோத். - 40)

**1.3.3 பங்கசாதம்:** பங்கத்தில் தோன்றுவது. இ.சா.

''பங்க சாதப் பரிமளங்கொள் பானு ராச சூனுவே''
(பாரதம் – வாரணா – 61)

## 1.4 வண்டும் தாமரையும்

**1.4.1 வண்டுணி:** தாமரைப் பூவில் வண்டு தேன் உறிஞ்சும். தாமரைப் பூவிலிருந்து உறிஞ்சி ஆக்கிய தேன் உண்பவரின் கண்ணுக்கு நலம் பயக்குமாம். தாமரையில் வண்டு விரும்பித் தேன் உறிஞ்சும் என்பதால், தாமரைக்கு 'வண்டுழு', (நிக.), 'வண்டுணி', (சா.சி.பி.), வண்டுணிக் கொடி (சி.வை.அ.) என்னும் பெயர்கள் தரப்பட்டுள்ளன. வண்டு உழுவது = வண்டுழு வாகும், வண்டு உண்பது வண்டுணியாகும்.

**1.4.2 சந்திகாம்புயம்** (மலை.அ.) என்னும் பெயரும் உண்டு. சந்திரக + அம்புயம் = சந்திரகாம்புயம்; வண்டு தேன் உண்ணும் தாமரை என்று இதற்குப் பொருளாம். சந்திரகம் = வண்டு.

**1.4.3 புண்டரிகம்:** புண்டரீகம் - என்னும் பெயரும் உண்டு. புண்டரிகம் என்றால் வண்டு. இ.சா:

''பாடல் புண்டரிகத்த செம்பதுமம்''

(இரகுவம்சம் - குலமு. - 3)

வண்டு தேன் உண்பதால் புண்டரிகம் — புண்டரீகம் எனப் பெயர் தரப்பட்டது தாமரை. இ.சா:

**திவ்யப் பிரபந்தம்**-இயற்பா-நான்முகன் திருவந்தாதி:-

''புரிந்து மலரிட்டுப் புண்டரிகப் பாதம்
பரிந்து படுகாடு நிற்ப...'' (45)

**தக்கயாகப் பரணி:**

''வெள்ளிதழால் ஒரு புண்டரீகமும்'' (282)

**1.5 திருமகளும் தாமரையும்:**

தாமரைக்குத் திருமலர் (நி.), திருமாதகம் (நி.), சீதளம் (நி.), பொன் மனை (பொ.ப.நூ), திருமால் கொம்பர் (ஐ௰) என்னும் பெயர்கள், அதனிடம் திருமகள் தங்கி யிருப்பதால் இடப்பட்டுள்ளன.

**1.5.1 திருமலர்,** திரு = இலக்குமி (திருமகள்). இ.சா:

**திவ்யப் பிரபந்தம்**

''திருவாழ் மார்வன் தன்னை'' - (1604)

''திருவுக்கும் திருவாகிய செல்வா! தெய்வத்துக்கு
அரசே! செய்ய கண்ணாய்[''

திரு (இலக்குமி) தங்கியிருக்கும் மலர் திருமலர் ஆகும். இ.சா: **கல்லாடம்**

''திருமலர் இருந்த முதியவன் போல''

**1.5.2 திருமாதகம்**: திருமாது = திருமகள்; அகம் = இருப்பிடம். திருமாதின் அகம் திருமாதகம்.

**1.5.3 சீதளம்:** சீ = சீதேவி (இலக்குமி) – இ.சா:

''சீ தளங்கொடு புயங்கை கொண்டார்''

(கந்தர் அந்தாதி – 8)

தளம் என்பதற்கு இடம் என்ற பொருள் உண்டு. இலை, பூ, இதழ் என்ற பொருள்களும் (சூடா.நி.) உண்டு.

''எரிவிரிந் தன்ன பல் தளத் தாமரை''

(கல்லாடம் - 71-3)

சீ (திருமகள்) இருக்கும் பூ, சீதளம் ஆகும். இதற்கு மற்று மொரு பெயர்க் காரணம் பின்னர்க் கூறப்படும்.

**1.5.4 பொன்மனை:** பொன் = இலக்குமி; மனை = வீடு. இ.சா: சீவகசிந்தாமணி.

''பொன் துஞ்சு ஆகம் பொருந்திற் பொருந்துக''-(908). சிலப்பதிகாரம் - 19-61:

''பொன் துஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக் கொள்ள'' பொன் இருக்கும் வீடு பொன்மனை (தாமரை) யாகும்.

### 1.5.5 திருமால் கொம்பர்

கொம்பர் என்றால் கொம்பு; மரஞ்செடிகளின் மெல்லிய கொடி போன்ற கழி - கோல் ஆகும். இ.சா: சீவக சிந்தாமணி - 2019.

''நாறு மலர்க் கொம்பர் நடை கற்பதென வந்தாள்''

கொம்புபோல் ஒல்லியா யிருக்கும் பெண்டிரை உவமையாகு பெயராய்க் 'கொம்பர்' எனல் உண்டு. மற்றும், உயர்திணை விகுதி சேர்த்துக் கொம்பினர், கொம்பனார் எனக் கூறலும் உண்டு. இ.சா: **கல்லாடம்**

''குளிர்மணற் கேணியில் கொம்பினர் படர்ந்தும்''

**திவ்யப் பிரபந்தம்**

''கொம்பனார்க் கெலாம் கொழுந்தே-''

எனவே, திருமால் கொம்பர் என்பது, திருமாலின் மனைவியாகிய திருமகளைக் குறிக்கும். இப்பெயர் இடப் பொருள் (தானி) ஆகுபெயராய்த் தாமரையைக் குறிக்கும். இடத்தில் உள்ள பொருள் இடப் பொருள் - தானத்தில் உள்ளது தானி. தானமாகிய தாமரையில் இருக்கும் தானி - இடப்பொருள் திருமகள் ஆவாள். அந்த இடப்பொருளின் பெயர் இடமாகிய தாமரைக்கு ஆயிற்று - தானி தானத் திற்கு ஆகி வருவது தானியாகுபெயர்.

## 1.6 திருமாலும் தாமரையும்

திருமால் சார்பாகத் தாமரைக்குத் திருமால் கொப்பூழ் (நி.), மாலுந்தி (நி), மாலின் நேத்திரம் (சா.சி.பி.), இராமப் பிரியம் (சா.சி,பி.) என்னும் பெயர்கள் ஏற்பட்டுள்ளன.

### 1.6.1.2 கொப்பூழ்-உந்தி

திருமாலின் கொப்பூழ் (உந்தி) தாமரை வடிவின தாதலின், தாமரைக்குத் திருமால் கொப்பூழ், மாலுந்தி (மால் + உந்தி) என்னும் பெயர்கள் ஏற்பட்டன.

### 1.6.3 மாலின் நேத்திரம்

நேத்திரம் = கண். திருமாலின் கண்ணும் தாமரை வடிவினது. ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு சிவனை பூசனை செய்து வருகையில், ஆயிரமாவது தாமரை மலர் குறைய, திருமால் தம் ஒரு கண்ணைத் தோண்டிச் சிவனடியில் இட்டுப் பூசனையை முடித்தார் என்பது புராண வரலாறு, ''தாமரைக் கண்ணான் உலகு'' என்னும் திருக்குறள் பகுதியும், கமலக் கண்ணன், செந்தாமரைக் கண்ணன் என்னும் உலக வழக்குப் பெயர்களும் ஈண்டு

ஒப்பு நோக்கற் பாலன. எனவே, தாமரைக்கு 'மாலின் நேத்திரம்' என்னும் பெயர் இயைவ தாயிற்று.

### 1.6.4 இராமப் பிரியம்

திருமாலின் ஒரு பிறவி இராமன் ஆவான். இராம னாகிய திருமாலுக்குப் பிரிய மானவள் திருமகள். திருமகள் இருக்கும் தாமரை மலர்மேல் திருமால் பிரியம் கொள்வார். எனவே, தாமரைக்கு இப்பெயர் ஏற்பட்டது எனலாம். இதற்கு மற்றுமொரு பெயர்க் காரணம் பின்னர்த் தெரிவிக்கப்படும்.

### 1.7 வாணியும் தாமரையும்

வாணி என்றால் கலைமகள். திருமகள் இருப்பது செந்தாமரை. வாணியாகிய கலைமகள் இருக்கும் மலர் வெண்டாமரை. எனவே, வாணி மலர் (ஜுு) என்பது வெண்டாமரையைக் குறிக்கும்.

### 1.8 ஞாயிறும் தாமரையும்

தாமரைக்கு, வெயிலுந்தரவிந்தம் (ஜூ), எலி மனை (சா.சி.பி.), எல்லி மனை (பொ.ப.நூ.), சூரிய நட்பு (பொ.ப.நூ.), பனிக் கஞ்சி (சா.சி.பி.)- என்னும் பெயர்கள் ஞாயிறு சார்பால் சூட்டப்பட்டுள்ளன.

**1.8.1 வெயில் உந்து அரவிந்தம்** வெயிலுந் தரவிந்தம் ஆகும். வெய்யில் புறப்பட்டு உந்தியவுடன் தாமரை மலர் வதால் இப்பெயர் பெற்றது. அரவிந்தம் = தாமரை

### 1.8.2 எலி மனை, எல்லி மனை

எல் என்பதற்கு ஒளி என்ற பொருள் உண்டு. இ.சா.
''எல்லே இலக்கம்''- (தொல்-சொல்-266)
''எல் வளை'' ''விளங்குகிற வளையல்''- (புறம்-24)
இலக்கம் எனினும் ஒளி எனினும் ஒன்றே.

எல் (ஒளி) உடைமையால் ஞாயிறுக்கு எலி, எல்லி, எல்லவன்- என்னும் பெயர்கட் ஈயப்பட்டன. இ.சா.- திருமுருகாற்றுப்படை.

**எல்:**

''கள்கமழ் நெய்தல் ஊதி எல்பட'' (எல் = ஞாயிறு)
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர் (74, 75)

**எல்லி** = சூரியன் எனப் பிங்கல நிகண்டு கூறுகிறது.

**எல்லவன்**: (பாரதம்-பதினெட்-119)
''எல்லவன் வீடு முன்னம்''
மனை என்றால் மனைவி. இ. சா:
''பிறன்மனை நோக்காத பேராண்மை'' (குறள்-148)

எலியின் (எல்லியின்) மனைவி தாமரையாகும். தாமரையின் கணவன் ஞாயிறு என இலக்கியம் பேசுகிறது. அதைக் கொண்டு ஞாயிறின் மனைவி தாமரை எனக் கொண்டு 'எலி மனை' எனச் சா.சி.பி. அகர முதலியும், 'எல்லி மனை' எனப் பொருட்பண்பு நூலும் பெயர்கள் தந்துவிட்டன.

### 1.8.3 தாமரை நாயகன்

ஈண்டு இந்தக் கணவன்-மனைவி உறவுமுறை பற்றி ஒரு சிறிது ஆய்வு செய்ய வேண்டும்; பின்னர் உண்மை விளங்கும்.

பொதுவாக, மலரை மனைவியாகவும், ஞாயிறு (சூரியன்) அல்லது திங்களைக் (சந்திரனைக்) கணவனாகவும் உருவகித்துப் பாடுவது ஒருவகை இலக்கிய மரபாகும். காட்டாக, சூரியகாந்தி மலரை நோக்கி, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடியிருப்பது வருமாறு:

**மலரும் மாலையும்**-சூரியகாந்தி (49)

''ஆகாயவீதி உலாவிவரும் இந்த
ஆதித்தனோ உனது அன்பனடி!''

''மங்கையே உன் மணவாள னாகில் — அவன்
வார்த்தை ஒன்றும் சொல்லிப் போகானோ?''
''ஆசை நிறைந்த உன் அண்ணலை நோக்கிட
ஆயிரம் கண்களும் வேண்டு மோடி?''
''மஞ்சள் குளித்து முகம் மினுக்கி — இந்த
மாயப் பொடிவீசி நிற்கும் நிலை
கஞ்ச மகள்வந்து காணிற் சிரிக்குமோ?
கண்ணீர் உகுக்குமோ? யார் அறிவார்!''

என்று கவிமணி மிகவும் இனிமையாகவும் நயமாகவும் பாடியுள்ளார். அன்பன், மணவாளன், அண்ணல் என்னும் சொற்களால், சூரியகாந்தி மலரின் கணவனாகக் கதிரவனைக் குறிப்பிட்டுள்ளார். அவனை மயக்குவதற்காக, மஞ்சள் குளித்து, முகம் மினுக்கி, மாயப் பொடியும் மலர் வீசுகிறதாம். மஞ்சள் குளித்தல் என்பது மலரின் பொன்னிறத்தைக் குறிக்கும்; முகம் மினுக்கி என்பது, மலரின் பளபளப்பைக் குறிக்கும்; மாயப் பொடி வீசுதல் என்பது, மகரந்தப்பொடி தூவுதலை அறிவிக்கும்.

இந்தப் போட்டிக் காட்சியை, ஞாயிறின் மற்றொரு மனைவியாகிய - சூரியகாந்தியின் மாற்றவள் (சககளத்தி) ஆகிய தாமரை மலர் கண்டால் எள்ளி நகையாடிச் சிரித்தாலும் சிரிக்குமாம் - அல்லது கவலையால் கண்ணீர் சொரிந்தாலும் சொரியுமாம். எவ்வளவு கற்பனையான பாடல்! சிரித்தல் என்பது மலர்தலையும், கண்ணீர் உகுத்தல் என்பது (கள் + நீர்) தேன் சொரிதல் என்பதையும் இயற்கையாகக் குறிக்கும். இந்த இறுதிப் பாடல், இரு பொருள் (சிலேடை) நயம் செறிந்ததாகும்.

சூரியகாந்திப் பூவுக்கும் தாமரை மலருக்கும் கதிரவனைக் கணவனாகக் கூறும் மரபு உண்டென்பது மேற்காட்டிய பாடல்களால் அறியவரும்— மேலும், கச்சியப்ப முனிவர் **கந்தபுராணத்தில்,**

''திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்'' (காப்பு-1)

என்றும், சிவப்பிரகாச அடிகளார் திருவெங்கையுலாவில்,

''செந்தாமரை நாதன் தேரில் பதாகையொடு
நந்தா மதிற் கொடிகள் நட்பாட'' — (40)

என்றும் கூறியிருப்பதைக் கொண்டு, ஞாயிறுக்குத் 'தாமரை நாயகன்', 'தாமரை நாதன்' என்ற பெயர்கள் உண்மையும் தெரியவரும். நாயகன் – நாதன் என்றால் கணவன் தானே!

நம் புலவர்கள் திங்களை மட்டும் விட்டுவைத்தார்களா என்ன! குமுத (ஆம்பல்) மலரின் கணவனாகத் திங்களைக் (சந்திரனைக்) கூறி வைத்தார்கள். இதனை,

''ஆம்பல் களிகூர வரும் வெண்ணிலாவே - உனக்கு
அம்புயம்செய் தீங்கு எதுவோ வெண்ணிலாவே''
(மலரும் மாலையும் — 46 வெண்ணிலா)

என்னும் தேசிக விநாயகம் பிள்ளையின் பாடலாலும்,

''காமக் கருத்தாக் குமுத நாதன்
கங்குல் வரக் கண்டும்''

என்னும் தனிப்பாடல் திரட்டுச் செய்யுளாலும் அறியலாம். திங்கள் ஆம்பலின் கணவனாம் - குமுத நாதனாம்!

ஆனால், உண்மையில், ஞாயிறும் திங்களும் மலர்களின் கணவன்மார்களாக முடியாது. கதிரொளியாலும், நிலவொளியாலுமா மலர்கள் கருவுற்றுக் காய் காய்க்கின்றன? இல்லையே! செஞ்ஞாயிறும் வெண்டிங்களும் புறப்படும் நேரத்தில் அல்லது – புறப்பட்டபின், வழக்கமாக மலர்கள் மலர்வதால், அவற்றை அம்மலர்களின் கணவன்மார்களாகக் கூறியிருப்பது ஒருவகை இலக்கிய மரபே! காய் காய்க்கும் மலர்களின் கணவன்மார்கள் வேறே உளர். எனவே, கதிரவனையும் திங்களையும், மலர்களின் மலர்ச்சிக்கு உதவும்

உதவியாளராக - ஆதரவாளராக - நண்பராக வேண்டுமானால் ஒரு வகையில் கூறலாம். இதனை நன்கு அறிந்ததனால் தானோ, பிங்கல முனிவர் தம் பிங்கல நிகண்டில், 'குமுத சகாயன்' என்றும், மண்டல புருடர் தம் சூடாமணி நிகண்டில் 'குமுத நண்பன்' என்றும் திங்கட்குப் பெயர் கூறியுள்ளனர் போலும்! சகாயன், நண்பன் என்னுஞ் சொற்கள் கணவனைக் குறிக்கா அல்லவா?

ஆனால் ஒருசிலர், மலர்களின் கணவராக வண்டுகளைக் கூறுவது வழக்கம். இதனை,

''காமர் செவ்விக் கடிமலர் அவிழ்ந்தது
உதய குமரன் எனும் ஒரு வண்டு உணீஇய''

என்னும் மணிமேகலைப் பகுதியால் (18-59, 60) அறியலாம். அதாவது, மாதவியின் மகளாகிய மணிமேகலை என்னும் மலரை, சோழ இளவரசன் உதய குமரன் என்னும் வண்டு உண்ண விரும்புவதைப் பற்றிக் கூறுகிறது இப்பகுதி. இதனால், மலரைப் பெண்ணாகவும் வண்டை ஆணாகவும் கூறும் ஒருவகை மரபு உண்டு என்பது தெரியவரும். இத்தகைய இலக்கிய வழக்காற்றைப் பல சங்க நூல்களிலும் காணலாம். அங்ஙனமெனில், வண்டுகள் மலர்களின் கணவராக முடியுமா? முடியாது. உண்மையை ஆராயின், காய் காய்க்கும் பெண் மலர்களுக்கும் அவற்றின் கணவன்மார்களாகிய ஆண்மலர்களுக்கும் இடையே தூது செல்லும் தூதுவர்களே வண்டுகள் என்பது புலனாகும். இந்த வேலை செய்வதற்காக வண்டுகள் பெறும் கூலி — இல்லையில்லை பரிசு — இல்லையில்லை கையூட்டே (இலஞ்சமே) அவை உறிஞ்சும் தேனாகும். ஆண் பூவிலுள்ள மகரந்தப் பொடியை (Pollen) வண்டுகள் பெண் பூவுக்குக் கொண்டு வருதலால் பெண்பூக்கள் கருக்கொண்டு காய் காய்க்கின்றன - என்பதே உண்மையாகும்.

எனவே, எலி மனை - எல்லி மனை (ஞாயிறின் மனைவி) என்னும் பெயர் உண்மையில் தாமரைக்குப் பொருந்தாது; அஃது ஒருவகை இலக்கிய மரபே என்பதை உணர்த்தவே இவ்வளவு கூறப்பட்டது. இப்பெயர் ஒரு வேடிக்கை விளையாட்டுப் பெயரேயாகும்.

### 1.8.4 சூரிய நட்பு

முருகேச முதலியார் தம் பொருட் பண்பு நூலில் எல்லி மனை என்னும் பெயரைக் கூறியிருப்பினும், உண்மையில் தாமரைக்கு ஞாயிறு கணவன் அல்லன் என்பதை அறிந்த அவர், தாமரைக்குச் 'சூரிய நட்பு' என்னும் பெயரையும் கொடுக்கத் தவறவில்லை. 'குமுத நண்பன்' என்பது போல, தாமரைக்கு ஞாயிறு நண்பன் என்னும் பொருளில் 'சூரிய நட்பு' என்னும் பெயர் அமைந்துள்ளது.

### 1.8.5 தந்தையும் தாயும்

ஞாயிறைத் தாமரையின் தந்தையாகவும், தண்ணீரைத் தாமரையின் தாயாகவும் விவேக சிந்தாமணி என்னும் நூல் கூறுகிறது:

''சங்கு வெண்டாமரைக்குத்
தந்தை தாய் இரவி தண்ணீர்''-(13)

என்பது பாடல் பகுதி. நிறத்தால் சங்கு போன்ற வெண்டாமரைக்குத் தந்தை ஞாயிறு (இரவி) ஆகும்-தாய் தண்ணீர் ஆகும் என நிரனிறைப் பொருள் கோளாகக் கொள்ள வேண்டும். தண்ணீரில் பிறப்பதால் தண்ணீர் தாயாகும்; ஞாயிறு வர மலர்வதால் ஞாயிறு தந்தையாகும்.

### 1.9 பனிக் கஞ்சி

தாமரைக்குப் 'பனிக்கு அஞ்சி' என்னும் ஒரு பெயர் தரப்பெற்றுள்ளது. முன்பனி பெய்யும் முன்னிரவிலும் சரி-பின் பனி பெய்யும் பின்னிரவிலும் சரி-அதாவது, கதிர்

வீழ்ந்த மாலையிலும், கதிர் எழாத வைகறையிலும் தாமரை மலராது. பனி பெய்யும் இந்த இரவில் அல்லி, நெய்தல், ஆம்பல் முதலியனவே மலரும். ''ஞாயிறுமுன் பனி போல'', என்று கூறும் ஒப்புமைக்கு ஏற்ப, ஞாயிறு புறப்படத் தொடங்க - பனி மறையத் தொடங்க-அந்நேரத்திலேயே தாமரை மலரத் தொடங்கும். அதனால் தாமரைக்குப் 'பனிக்கு அஞ்சி' என்னும் பெயர் தரப்பட்டுள்ளது.

பனி பெய்யும் இரவில் திங்கள் (சந்திரன்) கதிர் (ஒளி) வீசும்; அதன் ஒளி குளிர்ச்சியாய் இருக்கும். (பனி-குளிர்ச்சி) அதனால் அதற்குப் பனிக் கதிர் என்னும் பெயர் தரப் பட்டுள்ளது. தான் மலர்தலுக்கு இடையூறாக இருக்கும் பனி மட்டுமன்று; திங்களும் தாமரை மலருக்குப் பகை எனச் சொல்லப்பட்டுள்ளது. இதனைச் சீவக சிந்தாமணியில் உள்ள,

''களிப்புறு சொல்லளைஇப் பறந்து காளைதன்
பனிக்கதிர்ப் பகைமலர்ப் பாதஞ் சேர்ந்ததே''-(1020)

என்னும் பாடல் பகுதியில் காணலாம். பனிக்கதிர் = திங்கள்; பனிக்கதிரின் பகை மலர் தாமரையாகும். இந்தப் பகை நிலைமையை, 'அம்பிகாபதி காதல் காப்பியம்' என்னும் நூல் வேறொரு கோணத்தில் நின்று அறிவிக்கிறது. பகலில் மலரும் தாமரை முதலிய மலர்களும், இரவில் மலரும் அல்லி முதலிய மலர்களும் ஒன்றுக்கு ஒன்று பகையாம். பகலில், குவிந்து கிடக்கும் அல்லி முதலிய மலர்களைப் பார்த்துத் தாமரை எள்ளி நகையாடி - சிரிப்பாய்ச் சிரிக்கிற தாம். (சிரிப்பு = மலர்ச்சியழகு). இரவில், குவிந்து கிடக்கும் தாமரையைப் பார்த்து அல்லி முதலிய மலர்கள் எள்ளி நகைக்கின்றனவாம்.

''பல்வகை மலர்க்கொடி பரவிய வாவியில்
சில்வகை மலர்கள் சிரிப்பாய்ச் சிரிக்கும்;

*அகலிதழ் குவிந்துதாம் அயர்வுற் றிருந்த*
*பகலெலாம் தம்மைப் பார்த்துச் சிரித்த*
*தாமரை குவிந்து தருக்கடங் கிடவே*
*ஏமம் இலாமே இருந்தவவ் விரவில்,*
*அல்லியும் நெய்தலும் ஆம்பலும் மலர்ந்தே*
*எள்ளி மரையை இன்பமாய்ச் சிரிக்கும்''* (7:75-82)

என்பது பாடல் பகுதி. இச் சூழ்நிலைகளையெல்லாங் கொண்டு காணுங்கால், தாமரைக்குப் 'பனிக்கஞ்சி' என்னும் பெயர்ப் பொருத்தம் புலப்படும்.

## 1.10 அருகனும் தாமரையும்

அருகன் சமணத் திருநெறிக் (சைனமதக்) கடவுளாவார். அவருக்குத் தாமரை இருக்கையா யிருத்தலின் அதற்கு 'அருகன் வாகனம்' (சா.சி.பி.) என்னும் பெயர் அளிக்கப் பட்டுள்ளது. வாய்ப்பு நேருங்கால் வாளா விடலாகாது; சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்லி விடவேண்டும்.

பொதுவாகத் தாமரை நான்முகனுக்கும், செந்தாமரை திருமகளுக்கும், வெண்டாமரை கலைமகளுக்கும் உரிய இருக்கைகளாகச் சொல்லப்பட்டுள்ளன. இவர்களோடு ஒரு போட்டிபோல் அருகனும் தாமரை இருக்கைஉடையவராகச் சொல்லப்பட்டுள்ளார். இங்கே ஒரு சிறு ஆய்வு தேவைப் படுகிறது.

### 1.10.1 மலர்மிசை ஏகினான்

அருகன் தாமரை வாகனன் என்பது, திருக்குறளில் உள்ள

''மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்'' (3)

என்னும் குறளை நினைவு செய்கிறது. இதைக் கொண்டு திருவள்ளுவரைச் சமணர் எனக் கூறுபவர் உளர். இந்தக்

கூற்றை ஒத்துக் கொள்ள உடன்படாத உரையாசிரியர்கள், தம் திறமையைக் காட்டுமளவில் எப்படியெப்படியோ உரையெழுதித் தீர்த்துள்ளனர். பழைய உரையாசிரியர்களின் உரைப் பகுதிகள் சில வருமாறு:

பரிமேலழகர்: மலர்மிசை ஏகினான் = மலரின் கண்ணே சென்றவன். அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேரலின் 'ஏகினான்' என இறந்த காலத்தாற் கூறினார். இதனைப்

'பூமேல் நடந்தான் என்பதோர் பெயர்பற்றிப் பிறிதோர் கடவுட்கு ஏற்றுவாரும் உளர்

மணக்குடவர்: மலர் மிசை ஏகினான் = மலரின்மேல் நடந்தான்.

பரிதியார்: மலர்மிசை ஏகினான் = பக்த சனங்கள் இட்ட புஷ்பத்தின்மேல் எழுந்தருளியிருக்கும் சிவன்.

காலிங்கர்: மலர் மிசை யேகினான் = எல்லாருடைய நெஞ்சத் தாமரையினும் சென்று பரந்துள்ளான்.

இவை பழைய உரைப் பகுதிகள். இக்காலத்தார் எழுதிய உரைகள் பல உள. கி. பி. 1949-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் அடியேன் (சுந்தர சண்முகன்) எழுதி வெளியிட்ட திருக்குறள் உரையில் இப்பகுதி பற்றிய விளக்கம் வருமாறு:

''மலர் மிசை ஏகினான் = பூவின்மேல் சென்றமர்ந்திருக்கும் கடவுள். கடவுள் எங்கும் இருப்பினும், மங்கலப் பொருளாகிய மலர், மலை முதலியவற்றில் விருப்பமாய்த் தங்கியிருப்பதாகக் கூறுவது வழக்கம். தம் மதிப்பிற்குரிய மங்கலப் பொருள்களில் கடவுள் அமர்ந்திருப்பதாக எண்ணுவது உயிர்களின் இயற்கைதானே! மற்றும், அன்பர்களின்

மனத்தையும் மலராகச் சொல்லுவது உண்டு. குமரகுருபர அடிகளார், கலைமகளை நோக்கி, 'கலைமகளே! உன் திருவடியை வெண்டாமரையால்தான் தாங்க முடியுமா? என் வெள்ளை உள்ளமாகிய தாமரை மலரால் தாங்க முடியாதா?'' என்று கேட்கும் கருத்தில்,

''வெண்டாமரைக் கன்றி நின்பதம் தாங்க என்
வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொல்லோ?''
(சகல கலா வல்லி மாலை-1)

என்று பாடியுள்ளார். மதுரைக் கலம்பகம் என்னும் தம் நூலிலும், 'விள்ளும் கமலம்' என மனத்தைக் குறித்து அதில் கடவுள் இருப்பதாகக் கூறியுள்ளார். எனவே, அன்பர்களின் மன மாகிய மலரில் தங்கியிருப்பவர் கடவுள் என்னும் கருத்தில் திருவள்ளுவர் கூறியிருப்பதாகவும் பொருள் கொள்ளலாம்.''- என்பது அடியேனது விளக்கம்.

1949 ஆம் ஆண்டில் இதையெழுதிய அடியேன், 1965 ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்ட 'தமிழ் அகராதிக்கலை' என்னும் நூலில் பின் வருமாறு ஒரு கருத்து எழுதியுள்ளேன்.

''திவாகர நிகண்டில், சமண சமயக் கடவுளாகிய அருகனுக்கு உரியனவாக நாற்பத்து மூன்று பெயர்கள் கூறப் பட்டுள்ளன. அவற்றுள், ஆதியங் கடவுள்-பகவன்-அற வாழி யந்தணன்-எண் குணன்-பூமிசை நடந்தோன்-என்னும் பெயர்களும் அடங்கியுள்ளன. இப்பெயர்கள் அருகனுக்கு உரியனவாகச் சூடாமணி முதலிய நிகண்டுகளிலும் சொல்லப்பட்டுள்ளன. இவை, திருக்குறள் கடவுள் வாழ்த்தி லுள்ள ஆதி பகவன் - மலர்மிசையேகினான் - அறவாழி யந்தணன் - எண் குணத்தான் - என்னும் பெயர்களோடு ஒத்துள்ளமை ஆராய்ச்சிக்கு உரியது. இதைக் கொண்டே, திருவள்ளுவர் ஒரு சமணர் என்று சிலர் கூறுகின்றனர்

போலும்! இருப்பினும், திருவள்ளுவரைச் சாதி சமயங்கட்கு அப்பாற்பட்டவராக மதிப்பிடுதலே எக் காலத்திற்கும் ஏற்புடைத் தாகு மன்றோ''—என்பது அடியேனது கருத்து விளக்கம்.

### 1.10.2 பூமிசை நடந்தோன்

பூமிசை நடந்தோன் என்னும் பெயர் அருகனுக்கு வந்த வரலாற்றை ஒரு சிறிது ஆராய வேண்டும். சமணம், புத்தம் என்னும் திருநெறிகள் (மதங்கள்) இரண்டும் இந்து மதம் என்னும் குட்டையில் ஊறின மட்டைகளே! அதாவது, இந்து மதத்திலிருந்தே இவை பிறந்தன. ஊழ்வினை-முற் பிறப்பு-பிற்பிறப்பு முதலியன மூன்றுக்கும் ஒத்திருத்தலைக் காண்க.

### 1.10.3 சமணம் பரப்பல்

கிறித்துவம் பரப்ப இத்தாலியிலிருந்து தமிழ் நாட்டுக்கு பெஸ்கி (Beschi) என்னும் வீரமா முனிவர், தமிழ்த் துறவியர் போலவேவந்த நடையுடை போக்கில் காணப்பட்டார். இந்து மக்களை யிழுக்க, அவர் மதத்தில் உள்ளன போன்ற சில வற்றைச் செயற்கையாகத் தம் மதத்தில் செய்து காட்ட வேண்டும். எனவே, கிறித்துவத்திலும் தேர்த் திருவிழா புகுந்தது; டிசம்பர் 24 ஆம் நாள் இரவு தீபாவளி எனப் பட்டது; சனவரி 6 ஆம் நாள் பொங்கல் எனப்பட்டது.

இவ்வாறே, சமணம் பரப்பியவர்களும், இந்து மதக் கடவுளரின் பெயர்களைத் தம் மதத்திலும் புகுத்திக் கொண்டனர். பவணந்தி என்னும் சமண முனிவர், தம் நன்னூலின் எழுத்ததிகாரக் காப்புச் செய்யுளில்,

''பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த
நான்முகன் தொழுது நன்கு இயம்புவன் எழுத்தே''-

என்று நான்முகனையும், சொல்லதிகாரக் காப்புச் செய்யுளில்,

> ''முச்சகம் நிழற்றும் முழுமதி முக்குடை
> அச்சுதன் அடிதொழுது அறைகுவன் சொல்லே''

என்று அச்சுதனையும் வணங்கியுள்ளார். நான்முகனும் அச்சுதனும் இந்து மதத்திலும் உண்டு. நான்முகன் = பிரமன். அச்சுதன் = திருமால். 'அச்சுதா அமரர் ஏறே'' என்னும் திவ்யப் பிரபந்தப் பாடல் காண்க.

எட்டாம் நூற்றாண்டில் இராமனது வாழ்க்கை பற்றி எழுதப் பெற்ற 'பதும புராணம்' என்பது, 'சைன ராமாயணம்' என்று கூறப்படுகிறது. ஜினசேனர் என்பவர் கிருஷ்ணனுடைய வாழ்க்கைபற்றி எழுதிய 'ஹரி வம்சம்' என்னும் நூல் 'சைன பாரதம்' என்று கூறப்படுகிறது. சமணர்கள் இராமாயணம், பாரதம் ஆகியவற்றையும் விட்டதாகத் தெரியவில்லை. இராமனும் கிருட்டிணனும் திருமாலின் திருப் பிறவிகள் அல்லவா?

சமணர்கள் நான்முகனையும் திருமாலையும் இந்து மதத்திலிருந்து பெயரளவில் தம் மதத்திற்கு இட்டுச் சென்றது போலவே, சிவனையும் இட்டுச் சென்றுளர். அருகனைக் குறிக்கும் ஆதி, பகவன், எண்குணன் என்னும் பெயர்கள் சிவனுக்கும் உண்டு என நிகண்டுகள் பலவுங் கூறியுள்ளன.

அருகனுக்கு உரிய பகவன், அந்தணன், பூமிசை நடந்தோன், நான்முகன் என்னும் பெயர்கள் பிரமனுக்கும் உண்டு. இதே சொற்களால் சொல்லப்படவில்லை யெனினும், இந்தச் சொற்களின் பொருளுடைய வேறு சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. பிரமனுக்கு, மறையவன் (அந்தணன்), நான்முகன், பகவன், கமல யோனி,

மலரோன் - தாதவிழ் போதன் (பூமிசை நடந்தோன்) என்னும் பெயர்கள் உரியனவாகப் பல நிகண்டுகளில் கூறப் பட்டுள்ளன.

### 1.10.4 அருகனும் புத்தனும்

இந்த நிலையில், நான்முகன், திருமகள், கலைமகள் முதலிய இந்து சமயக் கடவுளர்க்கும் உரிய தாமரை மலரை அருகனுக்கு மட்டும் உரியதாகக் கூறமுடியாது. தாமரை அருகனுக்கும் உரியது என்ற அளவிலேயே கருத்து கொள்ள வேண்டும். அருகனுக்கு உரிய பெயரான 'பூமிசை நடந்தோன்' என்னும் பெயர் புத்தருக்கும் உரியதாக நிகண்டில் கூறப்பட்டுள்ளது. சான்று:

**திவாகர நிகண்டு**: (1) அருகன் பெயர்:

''பொன்னெயில் நாதன், பூமிசை நடந்தோன், ...
அருகற்கு இன்னும் அனந்தம் பெயரே'' - (11)

2. புத்தன் பெயர்:

''போதிவேந்தன், சினன், வரன், புத்தன், ...
வளர்ந்த பூமிசை நடந்தோன் ... இன்னவும்
பலவே'' – (12)

பூமிசை நடந்தோன் என்னும் பெயரேயன்றி, அண்ணல் - பகவன் - ஆதி - சினன் - வரன் - சாந்தன் – புண்ணியமூர்த்தி - சாந்தன் - புங்கவன் - முதல்வன் - புனிதன் — முதலிய பெயர்கள், அருகன், புத்தன் ஆகிய இருவர்க்கும் உரியன வாக நிகண்டுகள் கூறுகின்றன. மற்றும், சிவனுக்கும் அருகனுக்கும் உரியதாக அமலன் முதலிய பெயர்கள் கூறப் பட்டுள்ளன. திவாகரத்தில் சிவனுக்கு உரியதாகச் சொல்லப் பட்டுள்ள காம தகனன் என்னும் பெயரும், அருகனுக்கு உரியதாக அறிவிக்கப்பட்டுள்ள காமற் காய்ந்தோன் என்னும் பெயரும் பொருளால் ஒத்தன. புத்தன், விநாயகன் என்னும் பெயர்களும் அருகனுக்கு உரியனவாம். மற்றும்,

சிவனுக்கும் அருகனுக்கும் உரியதாக நிகண்டுகளில் கூறப்பட்டுள்ள 'எண்குணன்' என்னும் பெயர் எண்ணத்தக்கது. திருக்குறளிலும் இடம் பெற்றுள்ளது இது.

### 1.10.5 எண்குணம்

''கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை'' — (9)

என்பது குறள். எண்குணம் பற்றிப் பரிமேலழகர் கூறியிருப்பதாவது:

''எண்குணங்களாவன: தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பொருளுடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை என இவை, இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது. அணிமாவை முதலாக உடையன எனவும், கடையிலா அறிவை முதலாக உடையன எனவும் உரைப்பாரும் உளர்-''

வைணவப் பரிமேலழகர், வடமொழி நூலில் உள்ள அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் எண்குணங்களையும், சமண நூலில் கூறப்பட்டுள்ள கடையிலா அறிவு முதலிய எட்டுக் குணங்களையும் ஒத்துக்கொள்ளாமல், சைவ ஆகமத்தில் கூறப்பட்டுள்ள எட்டுக் குணங்களையே ஏற்றுக் கொண்டுள்ளார். இதன்படி பார்க்கின், எண்குணன் சிவன் எனக் கருத்து கொள்ளவேண்டி வரும்.

மலர்மிசை ஏகினான் என்பவன் சிவன் எனக் கூறிய பரிதியார், பின்வரும் எண்குணங்களைக் கூறுகிறார்.

''எட்டுக் குணத்தான்: எட்டுக் குணமாவன: அனந்த ஞானம், அனந்த வீரியம், அனந்த குணம், அனந்த

தெரிசனம், நாம மின்மை, கோத்திரம் இன்மை, அவா இன்மை, அழியா இயல்பு - என்பன.

மேலே, நான்கு வகையான எட்டுக் குணங்களைக் கண்டோம். 1949ஆம் ஆண்டிலேயே, அடியேனது திருக்குறள் உரையில், அடியேன் எண்குணம் பற்றி எழுதியுள்ள விளக்கம் வருமாறு:—

''கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவது ஏன்? திருவள்ளுவரே தெரிவித்துள்ளாரே! 'கோளில் பொறியின்' என்னும் இக்குறள் ஒன்பதாவது குறளாகும். இதற்குமுன் எட்டுக் குறள்களிலும் இறைவனை எட்டுக் குணங்கள் உடையவனாகக் கூறியுள்ளார். முறையே அவை வருமாறு:

(1) உலகின் முதற்பொருளா யிருப்பவன் (ஆதிபகவன்), (2) வாலறிவன். (3) மலர்மிசை யேகினான், (4) வேண்டுதல் வேண்டாமை யிலான், (5) இறைவன் (இறைவன் என்றால், எங்கும் எல்லோருக்கும் தலைவனாய்த் தங்கியிருப்பவன் என்பது பொருள்), (6) பொறிவாயில் ஐந்தவித்தான், (7) தனக்கு உவமை யில்லாதவன், (8) அறவாழி யந்தணன் - என்பனவாம். இங்ஙனம் முதல் எட்டுக் குறள்களிலும் எட்டு இயல்புகளைச் சொல்லிக் கொண்டு வந்து, பின்பு ஒன்பதாவது குறளில் எண் குணத்தான் என்றால், முன் கூறிய எட்டுக் குணங்களை உடையவன் என்று பொருள் கூறுவதில் என்ன பிழை? பத்தாவது குறளில் புதிதாக ஒரு பெயரும் சொல்லவில்லை; ஐந்தாவது குறளில் கூறியுள்ள இறைவன் என்பதையே குறிப்பிட்டுள்ளார்.'' என்பது அடியேனது விளக்கம். எனவே, குறிப்பிட்ட சில-பல பெயர்கள், குறிப்பிட்ட ஒரு கடவுளுக்கு மட்டுமே உரியன என்று கூற முடியாது.

இதுகாறுங் கூறியவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து, 'அருகன் வாகனம்' என்னும் பெயரோடு, திருக்குறளில் உள்ள 'மலர்மிசை யேகினான்' என்னும் பெயரை முடிச்சு போடுதல் சிறப்புடைத் தாகாது என்பது புலனாகலாம்.

### 1.10.6 கமலவூர்தி

அருகன் வாகனம் என்னும் பெயருக்கு ஒத்த பொருள் உடையதாகக் 'கமல வூர்தி' என்னும் பெயர் நிகண்டுகளில் அருகனுக்குத் தரப்பட்டுள்ளது. சில:

**திவாகர நிகண்டு**

''காமற் காய்ந்தோன், கமல வூர்தி...
அருகற்கு இன்னும் அனந்தம் பெயரே'' (11)

**சூடாமணி நிகண்டு**

''பண்ணவன், கமல வூர்தி, பரமேட்டி, காதி
வென்றோன்
அருகன் பேராகும்'' (2 & 5)

பிங்கல நிகண்டிலும் இப்பெயர் கூறப்பட்டுள்ளது.

கமல வூர்தி (கமலம் + ஊர்தி) என்பதற்கு, தாமரையை வாகனமாக உடையவன் என்பது பொருள். நான்முகன், திருமகள், கலைமகள் ஆகியோருக்குத் தாமரை இருக்கையாக உள்ளதெனில், அருகனுக்கு அது ஊர்தியாக இருக்கிறதாம். இந்து மதத் தெய்வங்களுக்கு ஊர்திகள் குறிப்பிடப் பட்டிருப்பதுபோல், அருகனுக்கும் ஓர் ஊர்தி சொல்லப் பட்டுள்ளது என்ற அளவோடு அமைதல் நலம்.

மாதவம் புரிவாள் என்பது முதல் அருகன் வாகனம் என்பது வரையுள்ள பெயர்கள், தாமரைக்குச் சார்பினால் பெறப்பட்டவையாகும்.

## 2. வடிவால் பெற்ற பெயர்கள்

### 2.1 அட்ட தளம்

அட்டம் = எட்டு; தளம் = இதழ்; எட்டு இதழ்களை யுடைய ஒருவகைத் தாமரை அட்ட தளம் (சா. சி. பி.) எனப்பட்டது. இது சினையாகு பெயராய்த் தாமரையைக் குறிக்கிறது.

### 2.2 சததளம்

சதம் + நூறு; நூறு இதழ்களையுடைய தாமரை சத தளம் (வை. மலை) ஆகும். இ. சா: மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்:

''தவள மலர்வரும் இளமினொடு
சததளமின் வழிபடு தையலை'' (2)

கருத்து: வெண்டாமரையில் வீற்றிருக்கும் இளைய கலைமகளோடு, நூறிதழ்த் தாமரையில் (சததளம்) வீற்றிருக்கும் திருமகளும் வழிபடும் மீனாட்சியம்மை என்பதாகும். இங்கே சததளம் என்பது செந்தாமரை. இது சினையாகு பெயர்.

### 2.3 சத பதுமம்

நூறு இதழ்களையுடைய பதுமம். (பதுமம்—தாமரை) இப்பெயர் மலையகராதியில் உள்ளது.

### 2.4 சதபத்திரம்

பத்திரம் என்பதற்கு இலை என்னும் பொருளேயன்றி, இதழ் என்னும் பொருளும் உண்டு. நூறு இதழ்களை உடையது சதபத்திரம். இஃதும் சினையாகு பெயர். இ. சா:

''விழைவுபடப் பொதி சதபத்திர வீ''

(இரகு வமிசம்-நகர-16)

(சதபத்திர வீ=சதபத்திரமுடைய வீ.வீ.=பூ)

**2.5 சதபத்திரி**

நூறு இதழ்களையுடைய தாமரை சதபத்திரி (திவா.நி)

**2.6 சகஸ்ர பத்திரம்**

சகஸ்ரம் = ஆயிரம். ஆயிரம் இதழ்களையுடையது சகஸ்ர பத்திரம் (சா. சி. பி.) இஃதும் சினையாகு பெயரே.

**2.7 அஞ்சித பத்திரி**

அஞ்சிதம் என்பதற்கு வளைவு-வணக்கம் என்ற பொருள் உண்டு. வளைந்த இலைகளையுடைய ஒருவகைத் தாமரை அஞ்சித பத்திரி (சா.சி.பி.) எனப்படும். அஞ்சித பத்திரி = வளைந்த இலைகளுள்ள ஓர்விதைத் தாமரை) - a lotus with curved leaves'' - என்று சா. சி. பி. கூறுகிறது. அஞ்சித்தல் என்பதற்குப் பூசனை செய்தல் என்ற பொருளும் உண்டு. எனவே, பூசனைக்கு-கடவுள் வழிபாட்டுக்கு உரிய மலர் எனவும் பொருள் கொள்ளலாம். இ. சா:

''அஞ்சித்தல் சொற்ற பூசனை யடைவுமாம்''
(காஞ்சிப் புராணம்-திருவே-36)

திருமால் தாமரை மலர்களால் சிவனுக்குப் பூசனை புரிந்ததான புராணக்கதை முன்பு ஓரிடத்தில் கூறப்பட்டிருப்பது ஈண்டு நினைவுகூரத் தக்கது.

**2.8 முளரி**

தாமரை இலைக்காம்பில் முள் போன்ற ஒருவகை உறுப்புகள் இருப்பதால் முளரி என்னும் பெயர் உண்டாயிற்று. இ. சா: சீவகசிந்தாமணி

''முளரி முகநாக முளை எயிறு'' - (2870)

நச்சர் உரை: தாமரைப் பூப்போலும் புகரையுடைத்தாகிய முகத்தை யுடைய யானையினது முளைத்த எயிறு''-

## 2.9 முண்டகம்

முண்டகம் என்றால் முள். இ. சா:

''முண்டக விறும்பி னுற்று''

(அரிச்சந்திர புராணம்-வேட்-36)

முண்டகம் (முள்) உடையது முண்டகம். இ. சா: ''முண்டக வதனம் அழகெழ''- (திருவால-37-58)

## 2.10 இண்டை

இண்டு என்பது பொதுவாகக் கொடி வகையைக் குறிக்கும். இ.சா: ''இண்டு படர்ந்த மயானம்'' (பதினோராம் திருமுறை—

ஓராண்டில் முப்பது அல்லது நாற்பது அடி நீளம் வளரக் கூடிய கிழங்குத் தண்டு தாமரைக்கு உண்டு. எனவே, நீளத்தில் மிக்கிருக்கும் கொடி வகையைச் சேர்ந்த தாமரைக்கு இண்டை (நிக.) என்னும் பெயர் பொருந்தும். இண்டு உடையது இண்டை.

## 2.11 தென்புறம்

வட்டத் தாமரை என்னும் ஒரு வகைத் தாமரைக்குத் 'தென் புறம்' (சா.சி.பி.) என்னும் பெயர் தரப்பட்டுள்ளது. தென் என்பதற்கு அழகு என்னும் பொருள் உண்டு. இ.சா:

''மதனன் தன் தென் னீர் உருவம் அழிய''

(தேவாரம்—1155—4)

புறம் என்பது வெளித் தோற்றம். எனவே, அழகிய புறத் தோற்றம் உடையது தென் புறம்-தாமரை. தென் என்ப தற்கு இனிமை என்னும் பொருளும் உண்டு. இ சா:

''தென்னிசை பாடும் பாணன்''

(திருவாலவாயுடையார் திருவிளையாடல்—56-7)

இனிமை யுடையது என்ற பொருளிலும் இப் பெயரைக் கொள்ளலாம். பொருட் பண்பு நூலில், தாமரையின் சுவை இனிப்பு என்றும், இது இனிப்புப் பிரிவைச் சேர்ந்த கொடியினம் என்றும் கூறப்பட்டுள்ளது. தாமரைப் பூவின் நடுவில் உள்ள மணி போன்ற விதைகளைச் சிறார்கள் தின்னுவதுண்டு. (இது சொந்தப் பட்டறி வாகும்)

அட்ட தளம் முதல் தென் புறம் வரையுள்ள பெயர்கள் தாமரைக்கு வடிவால் வந்தவை.

## 3. நிறத்தால் பெற்ற பெயர்கள்

3.1 தாமரை, பூவின் நிறத்தைக் கொண்டு, செம்மை, வெண்மை, மஞ்சள், நீலம் என நான்கு வகைப்படும் எனச் சொல்லப்படுகிறது. திருமகள் இருக்கும் செந்தாமரையும், கலைமகள் இருக்கும் வெண்டாமரையும் தமிழர் அறிந்தவை; மஞ்சள் தாமரை ஓரளவு அறியப்பட்டிருக்கலாம். நீலத் தாமரை சிறிது புதிதாகும். இந்த நால்வகை பொருட் பண்பு நூலில் கூறப்பட்டுள்ளமை காண்க.

### 3.2 கருந்தாமரை

கருந் தாமரை, கருஞ் செந்தாமரை என்னும் இருவகை சா. சி. பி. அகர முதலியில் கூறப்பட்டுள்ளன. கருந் தாமரையை நீலத் தாமரை எனலாம். கருமையும் செம்மை யும் கலந்தது கருஞ் செந்தாமரை யாகும். கருந்தாமரை நீரில் மிதப்பதாம்.

### 3.3 இரத்தக் குமுதம்

இரத்தம் செந்நிற மல்லவா? மிகவும் சிவப்பாயுள்ள தாமரைக்கு ''இரத்தக் குமுதம்'' என்னும் பெயர் சா.சி.பி. அகர முதலியில் தரப்பட்டுள்ளது.

### 3.4 மஞ்சள் தாமரை

'லோட்டஸ் உண்ணிகள் நிலம்' (Land of Lotos Eaters) என்னும் தீவு பற்றியும் அதில் கிரேக்கப் படை மறவர்கள் தங்கியது பற்றியும் பொன்னாங் கண்ணியைப் பற்றிய கட்டுரையில் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். அந்தத் தீவில் உள்ள தாமரை மலர்கள் மஞ்சள் நிறம் உடையனவாம். இதனை, லார்டு டென்னிசன் (Lord Tennyson) இயற்றிய "The Lotos-Eaters" என்னும் பாடலில் உள்ள "And the yellow down, Border'd with Palm" என்னும் (3ஆம்) பாடல் பகுதியில் அறியலாம்.

## 4. பண்பால் பெற்ற பெயர்கள்

### 4,1 சீதளம்

சீ = திருமகள், எனவே திருமகள் இருக்கும் இடம் சீதளம் என்னும் ஒரு பொருள் முன்னர்த் தரப்பட்டுள்ளது. சீதளம் என்பதற்குக் குளிர்ச்சி என்னும் பொருளும் உண்டல்லவா? தாமரை குளிர்ச்சி தரும் பொருளாதலால் சீதளம் (நி) என்னும் பெயரைப் பண்பு காரணமாகப் பெற்றதெனவும் கூறலாமன்றோ? பொருட் பண்பு நூலில் தாமரையின் தன்மை 'சீதம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அகத்தியர் குண பாட நூலில் உள்ள

"கண்ணுக்கு ஒளிகொடுக்கும் காசபித்தம் போக்கும்
எண்ணும் குளிர்ச்சிதரும் ஏந்திழையே - புண்ணுகளில்
தூமரைப் புண்ணும் போக்கும் தொந்திக் கடுப்பகற்றும்
தாமரைக் கந்தமது தான்"

என்னும் பாடலில் "எண்ணும் குளிர்ச்சி தரும்" — "தொந்திக் கடுப்பு (வயிற்றுக் கடுப்பு) அகற்றும்" - என்று கூறப்பட்டிருப்பது காண்க. ஈண்டு இப்பெயரைப் பண்பாகு பெயராகக்கொளல் வேண்டும்.

## 4.2 அற்ப கந்தம்

அற்ப கெந்தம் என்னும் பெயர் மூ.வை. அகராதியிலும், அற்ப கந்தக் கொடி என்பது சி.வை. அகராதியிலும் தரப் பட்டுள்ளன; செந்தாமரை என்றும் பொருள் தரப்பட் டுள்ளது. அற்ப கந்தம் அல்லது கெந்தம் என்றால், சிறிதளவு மனமே உடையது என்று பொருளாம். சில மலர் கட்கு இருப்பது போல் செந்தாமரை அவ்வளவாக மிக்க மணம் உடையதன் றாதலின் இப்பெயர் பெற்றது. இஃதும் பண்பாகு பெயரே.

## 4.3 விஷ புட்பம்

சா.சி.பி. அகர முதலியில் தரப்பட்டுள்ள 'விஷபுட்பம்' என்னும் பெயரின் பொருத்தம் என்னவோ! இதனைச் சினையாகு பெயராகக் கொளல் வேண்டும்.

## 4.4 இராமப் பிரியம்

இராமம் என்பதற்கு அழகு என்னும் பொருள் உண்டு. இ.சா: இரகுவமிசம் — தேனு-17

''மெய்ப்பொலி இலங்கொளி இராமம்''

தாமரை தன் தோற்றப் பொலிவால், காண்பவர் கண்கட்கு அழகும் கவர்ச்சியும் உண்டாக்கி, மேலும் காணும் பிரியத்தை (விருப்பத்தை) உண்டாக்குவதால் இராமப் பிரியம் (சா.சி,பி.) என்னும் பெயர் கொடுக்கப்பட்டதாகவும் கூறலாம். இது பண்பாகு பெயர்.

## 4.5 இரதி காந்தள்

இரதி என்பதற்குப் புணர்ச்சி என்னும் பொருள் உண்டு. இ.சா:

''இரதி வேட்கையிற் பொருதனர்''

(செவ்வந்திப் புராணம் — தாயான-(11)

காந்தள் என்பது மலர். புணர்ச்சி வேட்கையைத் தூண்டும் காமனது ஐந்து மலர்க்கணைகளுள் தாமரைப் பூவும் ஒன்றாதலின், இரதி காந்தள் (சா.சி.பி.) என்னும் பெயர் நல்கப்பட்டது. இஃதும் பண்பாகு பெயரே.

### 4.6 அருங்கலம்

இந்தப் பெயர் (சா.சி.பி.) அப்பர் தேவாரம் - நமச்சிவாயத் திருப்பதிகம் — இரண்டாம் பாடலிலிருந்து எடுக்கப்பட்டது. முழுப்பாடல் வருமாறு:

''பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை;
ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சாடுதல்;
கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது;
நாவினுக்கு அருங்கலம் நமச்சி வாயவே''

பூக்களுக்குள் அழகு மிக்க பொருளாக - கிடைத்தற்கு அரிய அணிகலன் போன்றதாகப் பொலிவு பெற்று விளங்குவது பொங்கு (மலர்ச்சி பொங்கும்) தாமரை மலராகும் — என்று தேவாரம் கூறுகிறது. மலர்கட்குள் தாமரைப் பெற்றிருக்கும் சிறப்புத் தலைமைப் பண்பு கருதி, அதற்கு 'அருங்கலம்' என்னும் பெயர் பண்பாகு பெயராய் அளிக்கப்பட்டுள்ளது.

## 5. சொல் விளையாட்டுப் பெயர்கள்

### 5.1 சிவ சத்தி பகிர்ந்தான்

இப்பெயர் சா.சி.பி. அகர முதலியில் தரப்பட்டுள்ளது. சிவ சத்தி என்பதற்கு, சிவனது ஆற்றல் எனப் பொருள் செய்து, அந்த ஆற்றலைத் தாமரை பகிர்ந்து கொண்டது என்பதாகப் பெயர்க் காரணம் கூற முடியாது. அல்லது, சிவனது சத்தி நெருப்பு — அதைத் தாமரை பகிர்ந்து கொண்டது — என்றும் கூற முடியாது. குப்பைமேனி வெப்பம் தரும் பொருள் ஆதலின், நெருப்புக் கடவுளாகிய

சிவன் பெயர்கள் அதற்கு அளிக்கப்பட்டுள்ளமையைக் குப்பை மேனிக் கட்டுரையில் காணலாம். ஆனால், தாமரை வெப்பம் தராதது — குளிர்ச்சி தருவது என்னும் செய்தி இக்கட்டுரையில் மேலே கூறப்பட்டுள்ளது.

திருமால் எடுத்த மோகினிப் பெண் வடிவோடு சிவன் உடலுறவு கொண்டதால் கையனார் பிறந்தார் என்பது புராணக் கதை. எனவே, திருமாலைச் சிவனுக்குச் சத்தியாக - மனைவியாகக் கூறுவது சைவர்கள் சிலரின் மரபு.

எனவே, சிவனது நெருப்பு வெப்பத்தைக் கொள்ளாமல், சத்தியாகிய திருமாலைச் சிவனிடமிருந்து பகிர்ந்து (பிரித்து) அத்திருமாலின் தன்மையாகிய குளிர்ச்சியைக் கொண்டது தாமரை: ஆதலின் இப்பெயர் பெற்றது எனக் கூறலாம். திருமால் நீர்க்கடவுள்; தாமரை நீரோடு நெருங்கிய தொடர்புடையது - என்னும் செய்திகளை ஈண்டு மீண்டும் நினைவுகூர வேண்டும். இப்பெயர்க் காரணப்படி பார்த்தால், இப்பெயர் சார்பினால் பெறப்பட்டது எனக் கொள்ளல் வேண்டும். மேலும், இப்பெயரில் ஒரு சொல் விளையாட்டு செய்து பார்க்கலாம்.

### 5.1.1 சொல் விளையாட்டு

உலகில் உயிர்கள் அனைத்திலும் ஆணும் பெண்ணும் இருக்கக் கண்ட நம் முன்னோர் சிலர், கடவுளை ஆணாக்கு வதா அல்லது பெண்ணாக்குவதா – என்று எண்ணிப் பார்த்தனர்; கடவுளை இரண்டுமாக ஆக்கிக் காண்பதே சரி என்ற முடிவுக்கு வந்தனர். அதன்படி, சிவனாகிய கடவுளின் வலப்பக்கம் ஆண்வடிவம் என்றும், இடப்பக்கம் பெண் வடிவம் என்றும் கூறலாயினர். வலப்பக்கம் சிவன்; இடப் பக்கம் உமாதேவி. எனவே, சிவன் பெண்ணை ஒரு பாகத்திலே உடையவன் என்னும் கருத்தில், மாதொரு **பாகன், தையல் பாகன், மங்கை பாகன், நாரி பாகன்,**

ஏழை பங்காளன், அர்த்தநாரீசுரன் முதலிய பெயர்களைச் சிவனுக்குச் சூட்டினர். தையல், நாரி, ஏழை = பெண். ஏழை பங்காளன் என்னும் பெயர், வறியவரின் பக்கம் இருந்து அருள்புரிபவன்; பெண்ணை ஒரு பங்கிலே உடையவன் என்னும் இருபொருள் நயம் உடையது. அர்த்தம் என்றால் பாதி; நாரி என்பது பெண்; பெண்ணை உடம்பின் ஒரு பாதியில் உடையவன் என்னும் பொருளில் அர்த்த நாரீசுரன் என்னும் வடமொழிப் பெயர் உள்ளது.

மேற்கூறிய பெயர்களுள் சில வேறு நிகண்டுகளில் இருக்க, கயாதர நிகண்டில் 'பாதி உமாபதி' என்னும் பெயர் கூறப்பட்டுள்ளது; அதாவது, பாதி பாகத்தில் உள்ள உமையின் கணவன் என்பது இதன் பொருள். இந்த அடிப்படையுடன், சிவசத்தி பகிர்ந்தான் என்னும் பெயருக்குச் செல்லலாம்.

## 5.1.2 பகிர்தல்

பகுத்தது பாகம். பகிர்தல் என்பதற்கும் இப்பொருள் கூறலாம். அதாவது, பகுத்தல், பகிர்தல் என்பனவற்றிற்குப் பாதியாகப் பிரித்தல் என்று பொருள் கூறலாம். இப் பொருளின்படி நோக்கின், 'சிவசத்தி பகிர்ந்தான்' என்பதற்கு சிவனையும் சத்தியாகிய உமையையும் பாதியாகப் பிரித்தான் என்று பொருள் செய்யலாம். சிவனது உடம்பு பகிர்க்கப் பட்டுள்ளது என்னும் ஆட்சி, அதாவது, பகிர்தல் என்பதன் இலக்கிய ஆட்சி 'நால்வர் நான்மணிமாலை' என்னும் நூலில் உள்ளது.

''விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ (4)

என்பது பாடலின் முதல் இரண்டடி. விளங்கு இழை = விளங்கும் அணிகலம் உடைய சிவை. இது, வினைத்

தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. முக்கண் காரணன் = மூன்று கண்களையுடைய உலக முதல்வனாகிய சிவன். சிவன் எத்தகைய மெய்யை (உடம்பை) உடையவன்? உமைக்காகப் பாதி பகிர்ந்த மெய் உடையவன். இங்கே, பாதியாகப் பகிர்தல் என்னும் சொல்லாட்சி வந்துள்ளமை காண்க. பாதி யெனினும் அரை யெனினும் ஒன்றே. அரைப்பாகம் சிவனாகவும் அரைப்பாகம் சிவையாகவும் பகிர்ந்தவன் தாமரை என்பதில் உள்ள சொல் விளையாட்டாவது: தாமரை என்பதை, தாம்+அரை என்று பிரித்துக் காண வேண்டும்; சிவனும் சிவையும் தாம் அரை - அரைப் பாகமாகப் பகிர்க்கப்பட்டிருக்கின்றனர் என்று இதற்குப் பொருள் காண வேண்டும். தாம்+அரை=தாமரை என்ற சொல் விளையாட்டு நயம் ஒன்றையே ஈண்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

## 5.2 பழுதுடை நாயகம்

இப்பெயர் சா.சி.பி. அகர முதலியில் உள்ளது. நாயகம் என்றால் தலைமை, மேன்மையாகும். தலைமையிடத்தில் பழுது (குறைபாடு) இருத்தலாகாது. பழுது உடையது தலைமைக்கு ஏற்றதன்று. ஆனால், தாமரை நாயகமாகவும் உள்ளது - பழுது உடையதாகவும் உள்ளது. இதனால் இதனை ஒரு சொல் விளையாட்டுப் பெயராகக் கொள்ள லாம். சொல் விளையாட்டு எனினும் இதற்குத் தீர்வு காண வேண்டுமன்றோ?

### 5.2.1 நாயகம்

தாமரை, மலர்கட்குள் தலைமையானது என்பதற்கு, முன்பு காட்டியுள்ள

''பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை''

(அப்பர் தேவாரம்)

''பூவெனப் படுவது பொறிவாழ் பூவே'' (40)
(நால்வர் நான்மணிமாலை)

என்னும் இலக்கியப் பகுதிகள் தக்க சான்றாகும். அதே நேரத்தில், தாமரையில் உள்ள பழுதுகளையும் நோக்க வேண்டும். சில பழுதுகள் (குறைபாடுகள்) வருமாறு:

### 5.2.2 பழுதுகள்

1. சேற்றில் தோன்றியிருத்தல்.
2. மாலையில் குவிந்து விடுதல்.
3. பனியில் மலராமையால் 'பனிக் கஞ்சி' என்னும் பெயர் பெற்றிருத்தல்.
4. மற்ற நீர்ப் பூக்களைப் போல் இல்லாமல், பூவின் இதழ்கள் உதிர்தல்.
5. குறைந்த மணம் உடையதாகி 'அற்ப கந்தம்' என்னும் பெயர் பெற்றிருத்தல்.
6. விஷ புட்பம் என்னும் பெயர் பெற்றிருத்தல்.
7. இலைக் காம்பில் முள் இருத்தல்.
8. இலை உடம்புக்குத் தீமை பயத்தல்.

முதலியவை தாமரைக்கு உள்ள குறைபாடுகளாம். இலையின் தீமை பற்றிக் காண்போம்: தாமரை இலையில் உணவு இட்டு உண்டால், உடம்புக்குக் கொடிய வெப்பம் தரும்; வளி நோய் (வாயு) மிகும்; பசித் தீ குறைந்து மந்தம் உண்டாகும்; திருமகள் தங்காள் வறுமை உண்டாகும். இக் கருத்துக்களை யுடைய அகத்தியர் குணபாடப் பாடல் வருமாறு:

''தாமரைப் பன்னத்தில் உண்டால் தாங்கரிய
உட்டிண மாம்;
நாம வாதம் சினந்து நண்ணுங்காண்—தூம முறா

அக்கினி மந்தங்கள் உண்டாம்; அன்றே மலர்த் திருவத்

திக்கினில் இராள் எனவே தேர்''—

என்பது பாடல். இவ்வளவு பழுதுடைய தாமரை மற்ற வற்றிற்கு எவ்வாறு தலைமை தாங்க வியலும்? இருப்பினும், இப்பழுதுகள் பொருட்படுத்தப்படாமல் தாமரைக்கு நாயகச் சிறப்பு தரப்பட்டுள்ளது. பழுது-நாயகம் என்பன முரணான சொற்கள். அங்ஙன மிருந்தும், இரண்டும் இணைக்கப் பட்டுப் 'பழுதுடை நாயகம்' என்னும் பெயர் தாமரைக்குத் தரப்பட்டிருப்பது ஒருவகைச் சொல் விளையாட்டு எனலாம்.

## 5.2.3 இடப் பெருமை

பழுதுடை நாயகம் என்னும் பெயருக்கு இன்னொரு வகையிலும் தீர்வு காணலாம். பழுது என்னும் சொல்லுக்கு இடம் என்னும் பொருள் உண்டென அகராதி நிகண்டு கூறு கிறது. தாமரை, நான்முகன், திருமகள், கலைமகள், அருகன், புத்தன் ஆகியோருக்குத் தங்கும் இடமாக இருந்து, மற்ற பூக்களினும் சிறப்புற்றிருப்பதால் 'பழுதுடை நாயகம்' என்னும் பெயர் தரப்பட்டதாகவும் கூறலாம்.

## 5.3 நீர் நிதி

இப் பெயரும் சா.சி.பி. அகர முதலியில் உள்ளது. நிதி = செல்வம். நீரில் உள்ள செல்வம் நீர் நிதியாகும். தாமரை செல்வமாவது யங்ஙனம்?

நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம், வெள்ளம் தாமரை—என்னும் பெயர்கள் மிக மிகப் பெரிய அளவைக் காட்டும் எண்ணுப் பெயர்களாகும். கமலம், தாமரை என்பன எண்ணுப் பெயர்களினில் அதே பொருள் உடைய பதுமம் என்பதும் பேரெண்ணைக் குறிக்கும் பெயரேயாகும். இதற்கு இலக்கியச் சான்று காண்போம்:-

''நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்
மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய
செய்குறி யீட்டங் கழிப்பிய வன்முறை ..''
(2-13,14,15.)

என்பது பரிபாடல் என்னும் நூலில் உள்ள ஒரு பாடல் பகுதியாகும். இவை யாவும் பேரெண்ணைக் குறிப்பன எனப் பரிபாடல் கூறுகிறது. தொல்காப்பியரும் இது குறித்துக் கூறியுள்ளார்:

''ஐ, அம், பல் என வரூஉம் இறுதி
அல் பெயர் எண்ணும் ஆயியல் நிலையும்'' (394)

என்பது தொல்காப்பிய நூற்பா. தாமரை (ஐ), வெள்ளம் (அம்), ஆம்பல் (பல்) என்னும் எண்ணுப் பெயர்களை எடுத்துக்காட்டுகளாக, இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் உரைகளில் எடுத்துக் கொடுத்துள்ளனர்.

தாமரையாகிய பதுமத்தின் பெயரால் ஒரு வகை நிதி குறிப்பிடப்பட்டுள்ளது. குபேரனிடம் உள்ள ஒன்பது வகை நிதிகளுள் சங்க நிதி, பதும நிதி என்பனவும் அடங்கும். இலக்கியச் சான்று; அப்பர் தேவாரத் திருத்தாண்டகம்-பொது:-

''சங்க நிதி பதும நிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்ல ராகில்...''

என்னும் பாடல் பகுதியால், பதும நிதி (தாமரை நிதி) என ஒரு நிதி உண்டென அறியலாம். இந்தத் தாமரையாகிய (பதும) நிதி தண்ணீரில் இருப்பதால், இது ''நீர் நிதி'' என்னும் பெயர் பெற்றது. இஃதும் ஒரு வகைச் சொல் விளையாட்டு எனலாம்.

## 5.4 சம்சுகிருதப் பெயர்கள்

இக்கட்டுரை நூலில், சம்சுகிருதப் பெயர்கள் பலவற்றின் பெயர்க் காரண விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. இம் மொழிப் பெயர்களைப் பற்றியும் எழுத வேண்டுமா? — என்று சிலர் வினவலாம். வடமொழிச் சொற்கள், தமிழ் நூல்களில் — தமிழ்ப் பாடல்களில் கலந்திருப்பதால், அச் சொற்களின் பொருளும் தெரிந்தால்தான், தமிழ்ப் பாடலின் முழுக் கருத்தையும் அறிய முடியும். இதை உணர்த்துவதற்கே தாமரை பற்றிய இக்கட்டுரையில், வடமொழிச் சொற்கள் தமிழ்ப் பாடல்களில் ஆளப்பட்டிருப்பதை 'இலக்கியச் சான்று' என்னும் பெயரால் எடுத்துக்காட்ட நேரிட்டது. இவ்வாறு இலக்கிய ஆட்சிகளை எடுத்துக் காட்டியிருப்பது, பெயர்க் காரண விளக்கத்திற்குத் தக்க அரண் செய்யும.

# 2. தெருவில் அழகி

## 1. இடத்தால் ஏற்பட்ட பெயர்கள்

### 1.1 தெருவில் அழகி

தெருவிலே அழகிகள் பலர் செல்லலாம். ஆனால், தெருவிலே, குறிப்பிட்ட இடங்களிலே அழகிகள் நிலையாய் இருபத்து நான்கு மணி நேரமும் நின்றுகொண்டிருக்க முடியுமா?

நின்றுகொண்டிருக்க முடியும் என்ற பதில் குப்பைமேனிச் செடியின் வாயிலாகக் கிடைக்கிறது.

பார்ப்பதற்கு மேனி (வடிவம்) அழகாக உள்ள ஒரு வகைச் செடி குப்பையிலே செழித்து வளர்கிறது. இதனால் இது 'குப்பை மேனி' என்னும் பெயர் பெற்றது. இதற்குத் 'தெருவில் அழகு (அழகி)' என்னும் பெயர் மூலிகை வைத்திய அகராதியில் வழங்கப்பட்டுள்ளது.

#### 1.1.1 தெருவும் குப்பையும்

குப்பைக்கும் தெருவுக்கும் என்ன தொடர்பு என்ற ஐயம் எழலாம். இங்கேதான் இந்தியாவின் பெருமை (?) இருக்கிறது. இந்திய நாட்டுச் சிற்றூர்களில் மட்டுமன்று - பேரூர்கள் சிலவற்றிலுங் கூட, அன்று மட்டுமன்று - இன்றுங்கூட, தெருவிலே குப்பை கொட்டி வைக்கும் வழக்கம் இருக்கிறது.

புதுச்சேரியைச் சேர்ந்த நாராயணசாமி என்னும் அறிஞர் ஒருவர், இன்றைக்கு ஏறத்தாழ எழுபது ஆண்டு

கட்கு முன், பிரான்சு நாட்டிலே, பாரிசு தலைநகருக்கு முந்நூறு கல் தொலைவு அப்பால் உள்ள ஓர் ஊரிலே படித்துக் கொண்டிருந்தாராம். ஒரு நாள், தாம் தங்கியிருந்த இடத்திலிருந்து புறப்பட்டுத் தெருவழியே கல்விக் கூடத்திற்குச் சென்று கொண்டிருந்தாராம்; வழியில் அஞ்சல் காரர் (Post-man) ஒரு கடித உறையை இவரிடம் தந்தாராம். இவர் அந்த உறையின் நுனிப் பகுதியைக் கிழித்தெடுத்து அந்தத் துண்டுத் தாளைக் கீழே எறிந்துவிட்டு மடலைப் படிக்கத் தொடங்கினாராம். அப்போது பின்னால் வந்து கொண்டிருந்த பிரெஞ்சுக்கார அம்மையார் ஒருவர், இவரை நோக்கி, சிறு தாளையும் கீழே எறியலாகாது – அதோ இருக்கும் தொட்டியில் போட வேண்டும் — என்று கூறி, அந்தத் துண்டுத் தாளை அவரே எடுத்துச் சென்று குப்பைத் தொட்டியில் போட்டுச் சென்றாராம்.

இந்த நிகழ்ச்சியை, அறிஞர் நாராயணசாமியே என்னிடம் கூறினார். இது நடந்தது, எழுபது ஆண்டுகட்கு முன்பு — பாரிசு தலைநகருக்கு வெகு தொலைவில் உள்ள ஓரிடத்திலாகும்.

இந்த நிலைமையோடு, நம் இந்திய நாட்டுத் தெருக் குப்பைமேடுகளை ஒத்திட்டு நோக்குங்கால் நாணத்தால் தலை கவிழ்கிறது.

### 1.1.2 அமைதி

இதற்கும் ஓர் அமைதி கூறப்படுகிறது. வயலுக்கு உணவாக எரு இடவேண்டும். குப்பை கூளங்களைச் சேர்த்து வரின், அவை மக்கி நல்ல எரு உரமாகும். அந்த உரத்தை வயலில் இடின் நன்றாக விளையும். அதனால் மக்கள், தம் வீட்டுத் தோட்டத்தில் சேர்க்கும் குப்பையே யன்றி, தெருவிலும் தத்தம் வீட்டிற்கு எதிரே குப்பை சேர்த்து வந்தார்கள். அந்தக் குப்பைமேடு நல்ல உரம்

உள்ளதாதலின், அதில் முளைக்கும் செடி நல்ல மேனி (வளம்) கொண்டு செழித்து வளர்கிறது; இதனால் இதற்குக் 'குப்பை மேனிச் செடி' என்று பெயர் வைக்கப்பட்டது. அன்றியும், இச்செடி வளமான உரத்தினிடையே விளைதலின் பார்ப்பதற்குத் 'தள தள' என அழகாய்த் தோன்றுகிறது. அதனால் இதற்குத் 'தெருவில் அழகி' என்னும் 'திருப்பெயர்' சூட்டப்பட்டது.

அடுத்து, எடுத்துக் கொண்ட பெயர்க் காரணங்களை விளக்கக் குப்பையின் வரலாற்றை ஒரு சிறிது ஆய்வு செய்ய வேண்டும்.

### 1.1.3 குப்பையின் வரலாறு

தொடக்கக் காலத்தில் மக்கள் குப்பையைச் சேர்க்க வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்படவில்லை. கழிவுப் பொருட்களைக் கண்ட இடங்களில் கண்டபடி போட்டு வந்தார்கள்.

பிறகு வீட்டுப் பின்புறத் தோட்டத்தையும் வீட்டின் எதிர்ப் புறத் தெருப் பகுதியையும் துடைப்பம் கொண்டு தூய்மை செய்யத் தொடங்கியபோது, இறைந்து கிடக்கும் குப்பைகளை ஓரிடத்தில் கூட்டினார்கள்.

இந்நிலை வளர வளர, பன்னாளாய்க் குப்பை கூட்டப் பட்ட இடங்களிலேயே கழிவுப் பொருட்களைப் போடத் தொடங்கினர். மாட்டுச் சாணமும் இடம் பெற்றது.

கழிவுப் பொருட்களின் கூட்டம் குன்றுபோல் குவியலா யிற்று; குப்பைமேடு உருவாயிற்று.

குப்பை மேட்டில் இயற்கையாகச் செடிகள் முளைக்க லாயின.

வேறிடங்களில் முளைக்கும் செடிகளினும், குப்பைகள் மக்கி மடிந்து கிடக்கும் குப்பை மேடுகளில் முளைக்கும்

செடிகள் வளமாகவும் அழகாகவும் நல்ல மேனியுடனும் காணப்பட்டன.

குப்பைமேட்டில் நல்ல மேனியுடன் காணப்பட்ட செடி வகைக்குக் குப்பைமேனி என்று பெயரிட்டனர்.

குப்பைமேட்டில் விளையும் செடிகள் செழிப்பாயிருப்பது மக்களின் எண்ணத்தைக் கிளறலாயிற்று. இந்தக் குப்பையை வயலில் போட்டாலும் வயல் நன்கு விளையும் என உணர்ந்தனர். அங்ஙனமே வயலில் இட்டனர் — நற்பயன் கண்டனர்.

பின்னர்க் குப்பையைக் கண்ணுங் கருந்துமாய்ச் சேர்க்கத் தொடங்கினர். மணல்மேடென, கல்குன்றெனக் குவியல் குவியலாய்க் குவிக்கத் தொடங்கினர்.

குப்பையின் மதிப்பு உயர்ந்தது. நிலம் இல்லாரின் வீட்டுக் குப்பைகளையும் நிலம் உள்ளவர் விலை கொடுத்து வாங்கத் தொடங்கினர்.

இந்நிலையில், நிலம் இல்லாதவரும், ஒரு வாணிகப் பொருள்போலக் குப்பையைக் குவிக்கத் தொடங்கினர்.

இந்நிலையில் குப்பை பணமாயிற்று - படிப்படியாக ஒரு வகைச் செல்வமாகக் கருதப்படலாயிற்று - மிகவும் இன்றியமையாத பொருளாக மதிக்கப்பட்டது.

ஒருபலம் மண், கால்பலம் மண்ணாகும்படி நிலத்தை உழுது உழுது ஞாயிற்றொளி படச்செய்து காய வைத்தால், ஒருபிடி எருவும் போடாமலேயே நிலம் மிகுதியாக விளையும். அந்த அளவுக்கு ஏர் உழ முடியாதவர்கள் எரு இடுதல் நல்லது என்று திருவள்ளுவர் கூறலானார்.

''தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்'' (1037)

''ஏரினும் நன்றால் எரு இடுதல்'' (1038)

என்பன வள்ளுவர் அறிவுரைகளாம். இதனால் எருவின் இன்றியமையாமை புலப்படும்.

இவ்வாறாகக் குப்பை, தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு உயர்ந்தது.

கழிவுப் பொருள்களின் குவியலுக்கு ஏற்பட்ட குப்பை என்னும் பெயர், மற்ற பொருள்களின் குவியலுக்கும் வழங்கப்படலாயிற்று.

மணல் மேட்டுக்கும் இலைசருகு முதலியவற்றின் குவியலுக்கும் குப்பை என்னும் பெயர் தரப்பட்டது.

விளைந்த நெல் முதலிய பயிர் வகைகளின் தாள்கள் அறுக்கப்பட்டுக் கும்பலாய்ப் போடப்பட்ட குவியலும் குப்பை எனப்படலாயிற்று.

நாளடைவில் அடித்துத் தூற்றப்பட்ட நெல் குவியலும் குப்பையாயிற்று.

பின்னர், வரகு, ஆம்பல், இறால் மீன், உப்பு, பாக்கு, அகில், சந்தனம், இரத்தினம், ஒன்பான் மணிகள் (நவ இரத்தின மணிகள்) பல்வேறு மாபெரு நிதியங்கள் முதலிய வற்றின் குவியலும் குப்பை எனப்பட்டன. குப்பைக்கு அடித்த நல்ல காலத்தைப் பாருங்கள்! இவற்றிற்கு இலக்கியச் சான்றுகள் வேண்டுமா? இதோ?

குப்பை இழிந்ததாய் - மட்டமானதாய் - அருவருப்பான கழிவுப் பொருள்களின் தொகுப்பாய்க் கருதப்படுவதற்கு உரிய சான்று:

**நாலடியார். 341-பகையியல்-கீழ்மை**

''கப்பி கடவதாக் காலைத்தன் வாய்ப்பெறினும்
குப்பை கிளைப்புஓவாக் கோழிபோல் — மிக்க

கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினும் கீழ்தன்
மனம்புரிந்த வாறே மிகும்''

கருத்து: காலையிலேயே போதிய அளவு தானியக் கப்பிகளைத் தீனியாக வாயிலிட்டு நிரப்பி விட்டாலும் கோழி இழிந்த குப்பையைக் கிளறுதலை நிறுத்தாதவாறு போல், உயர்ந்த நூற்கருத்துக்களை உரைத்து நல்லறிவு புகட்டினும் கீழ் மக்கள் தம் மனம் விரும்பியவாறு தீய வழியில் மேற்செல்வர்.

**பெருங்கதை-3 மகதகாண்டம்-14 நலனாராய்ச்சி**

''சூட்டுமுகந் திருத்தி வேட்டுநறு நீரின்
மயிரும் சிறகும் செயிரறக் கழீஇக்
கோல்நெய் பூசித் தூய்மையுள் நிறீஇப்
பாலுஞ் சோறும் வாலிதின் ஊட்டினும்
குப்பை கிளைப்புஅறாக் கோழி போல்வர்
மக்க ளென்று மதியோ ருரைத்ததைக்
கண்ணிற் கண்டேன்...'' (108-114)

கருத்து: உயர்ந்தோர் உரையைக் கேளாத கீழ் மக்கள், கொண்டையோடு முகத்தைச் செம்மை செய்து-நறுமண நீரால் மயிரையும் இறக்கைகளையும் அழுக்கு போகக் கழுவி-கோலினால் உடம்பின் மேல் நெய் தடவி-தூய்மை செய்து-உயர்ந்த பாலும் சோறும் வாயில் ஊட்டி விடினும், குப்பை கிளறுதலை நிறுத்தாத கோழி போன்றவராவர்.

''நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் விட்டாலும் வாலைக் குழைத்துக் கொண்டு மலம் தின்னப் போகும்'' என்னும் பழமொழி ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

மேற் காட்டியுள்ள இரு பாடல்களால், குப்பையின் அருவருப்பான இழிவு புலப்படும். கோழிப் போரைக்

குறிப்பிட்ட குறுந்தொகைப் புலவர் ஒருவர், வெறுங் கோழி என்று கூறாமல்,

''குப்பைக் கோழித் தனிப்போர் போல'' (305-அடி 6) எனக் 'குப்பைக் கோழி' என்று குப்பையைக் கோழிக்கு அடை மொழியாக்கி யுள்ளார். கோழிப் போர் பற்றிக் கூறியதால் இவர் 'குப்பைக் கோழியார்' எனப் பெயர் வழங்கப்பட்டுள்ளார்.

குப்பையின் வரலாற்றில், தொடக்கக் காலத்திலிருந்து அதற்கு உள்ள இழிவு இவண் எடுத்துக் காட்டப்பட்டது. இனி அடுத்த படிகட்குச் செல்லலாம்.

குவியல் என்னும் பொருள் பெற்ற குப்பை என்னும் பெயர் மணல்மேட்டைக் குறிக்கும் சான்று:-

''குப்பை வெண்மணல் ஏறி'' (நற்றிணை-291-3)

இலை சருகுக் குவியலுக்கு:-

''பீரை நாறிய சுரையிவர் மருங்கின்
ஈத்து இலைக் குப்பை ஏறி'' (புறம்-116-6,7)

அடித்துத் தூற்றாத நெற் கதிரின் குவியலுக்கு:-

''கூனிக் குயத்தின் வாய்நெல் அரிந்து
சூடு கோடாகப் பிறக்கி நாடொறும்
குன்றெனக் குவைஇய குன்றாகக் குப்பை''
(பொருநராற்றுப்படை—242-44)

கருத்து: சூடு = அடித்துத் தூற்றாத நெற் கதிர். 'குப்பை' என்னும் சொல் பெற்ற 'குவியல்' என்னும் பொருள் மாற்ற வரலாற்றினைக் 'குவைஇய குப்பை' என்னும் தொடர் அறிவிக்கிறது. அடித்து மாளாதது என்பதைக் 'குன்றாக் ,குப்பை' என்பது தெரிவிக்கிறது. ,'மேரு (மலை) என்னும்படி திரட்டின தொலையாத நெற்

பொலி'' என்பது, இறுதி அடியின் நச்சினார்க்கினியர் உரையாகும்.

தூற்றிய நெற் குவியலுக்கு:

''குப்பை நெல்லின் முத்தூறு தந்த'' (புறம்-24-22)

நெற்குப்பை என்னும் ஓர் ஊர் தமிழகத்திலிருப்பது ஈண்டு நினைவுகூரத் தக்கது.

குப்பை என்னும் சொல்லே நெல்லைக் குறிப்பதற்கு:-

''வையும் துரும்பும் நீக்கிப் பைதறக்
குடகாற் றெறிந்த குப்பை, வடபால்
செம்பொன் மலையின் சிறப்பத் தோன்றும்''
(பெரும்பாணாற்றுப்படை - 239-41)

வைக்கோலும் தூசு துரும்புகளும் போகும்படியும் ஈரம் உலரும்படியும் மேற்காற்றில் தூற்றப்பட்ட நெல், வடக்கே யுள்ள பொன்மலை (மேரு) போல் தோன்றும் - என்பது கருத்து.

''களமலி குப்பை காப்பில வைகவும்'' (புறம்-230-3)

களத்தில் மிக்க நெற்குவியல் காவல் இன்றிக் கிடக்கவும்-என்பது கருத்து.

இப்பாடல் பகுதிகளிலே, நெல்லின் குவியலை, நெல் என்னுஞ் சொல்லைக் காட்டாமலேயே. வெறுங் 'குப்பை' என்னும் சொல்லாலேயே சுட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. இது குப்பையின் பதவி உயர்வைக் (Promotion) காட்டுகிற தன்றோ!

வரகுக் குவியலுக்கு:

''சில்விளை வரகின் புல்லென் குப்பை'' (புறம்-327-2)

ஆம்பல் குவியலுக்கு:- கல்லாடம் (மர்ரே)

''மரகதப் பன்னத்து ஆம்பலங் குப்பை'' (56-28)

இறால்மீன் குவியலுக்கு:

''சுற்றிய பிணர சூழ்கழி இறவின்
கணங்கொள் குப்பை உணங்குதிறன் நோக்கி''
(நற்றிணை - 101-2,3)

இறவின் கணங்கொள் குப்பை = இறால் மீனின் கூட்டம் கொண்ட குவியல், குப்பை என்னும் சொல்லுக்கு, கணம் - கூட்டம் என்னும் பொருள் உண்மை இதனால் புலப்படும்.

உப்புக் குவியலுக்கு:

''உவர்விளை உப்பின்குன்றுபோல் குப்பை
(நற்றினை 138-1)

பாக்குக் குவியலுக்கு:

''பளிக்காய்க் குப்பையும் பலம்பெய் பேழையும்''
(பெருங்கதை - 2-2-72)

பளிக்காய்க் குப்பை = பச்சைக் கருப்பூரம் விரவிய பாக்கின் தொகுதி.

அகிலின் குவியலுக்கு:

''யானை வெண்கோடும் அகிலின் குப்பையும்''
(சிலம்பு. 25-37)

சந்தனக் குவியலுக்கு;

''சந்தின் குப்பையும் தாழ்நீர் முத்தும் (சிலம்பு 26-168)

இரத்தினக் குவியலுக்கு,

''மரக்களி யன்ன திருத்தகு பொன்னும்
இரத்தினக் குப்பையும் இலங்கொளிப் பவழமும்''
(பெருங்கதை. 2-14, 68 & 69)

பல்வேறு உயர்ந்த செல்வப் பொருள்களின் குவியலுக்கு:

''கோடிபல அடுக்கிய கொழுநிதிக் குப்பை''
(சிலம்பு. 6-121)

"விரைமரம் மென்றுகில் விழுநிதிக் குப்பையோடு"
(மணிமேகலை. 16-122 & 123)

கொழுநிதி, விழுநிதி என்னும் அடைமொழித் தொடர்கள் இவண் குறிப்பிடத் தக்கன.

பெயர்க் காரண விளக்கத்திற்குப் பயன்படலாம் என்னும் நோக்கத்தாலும், தொடர்புடைய வாய்ப்பு நேர்ந்ததாலும், இங்கே குப்பையின் வரலாறு கொடுக்கப்பட்டது.

குப்பை தெருவில் கொட்டிக் குவிக்கப்பட்டதன் காரணம் தெரிய வரும். இந்தக் குப்பையின் வளத்தால் அதன்மேல் செழித்து மேனியுடன் வளரும் செடிக்குத் 'தெருவில் அழகி' என்னும் பெயர் வைக்கப்பட்டதன் பொருத்தமும் இப்போது புலனாகும்.

## 1.2 சாணக்கி மேனி

### 1.2.1 சேர்ப்பு உரம்

கண்டகண்ட கழிவுப் பொருள்கள் - குப்பைக் கூளங்கள் ஆகியவை நிலத்திற்கு உரமாக இடப்படுகின்றன. இந்த உரத்திற்குச் 'சேர்ப்பு உரம்' (Compost) என்று பெயராம்.

### 1.2.2 தொழு உரம்

மாடுகளின் சாணம், மாட்டுச் சிறுநீர் கலந்த வைக்கோல் முதலிய கழிவுகள் நிலத்திற்குச் சிறந்த உரம் ஆகும். இது 'தொழு உரம்' (Farmyard manure) எனப்படும். மாட்டுத் தொழுவத்தில் உண்டாகும் உரம் ஆதலின் 'தொழு உரம்' எனப்படுகிறது. தொழு, தொழுவம், தொழுவறை என்பவற்றிற்கு மாட்டுக் கொட்டில் என்று பொருளாம். முறையே இலக்கியச் சான்றுகள் வருமாறு:

1. **தொழு** — கலித்தொகை. 101-9

''ஏறு தொழூஉப் புகுத்தனர் இயைபுடன் ஒருங்கு''
நச்சர் உரை; தொழூஉப் புகுத்தனர் = தொழு விடத்தே புகுத விட்டார்.

2. **தொழுவறை** — அகநானூறு - 253:16, 17

''தூறுகாழ் வல்சியர் தொழுவறை வெளவிக்
கன்றுடைப் பெருநிரை மன்றுநிறை தரூஉம்''

3. **தொழுவம்** — குறுந்தொகை. 190-7

''பல்லான் தொழுவத்து ஒருமணிக் குரலே''

எனவே, தொழுவத்துக் கழிவாகிய சாணம் முதலியன தொழு உரம் எனப் பெயர் பெற்றது. வயலுக்கு உரமாக இடுவதற் கென்றே, சிற்றூர்களில் மாட்டுச் சாணத்தை ஓரிடத்தில் கொட்டிக் கொண்டுவந்து குப்பையாகக் குவிப்பர். இந்தச் சாணம் மக்கிய குப்பைமேட்டிலும் மேனிச் செடி நன்கு செழித்து வளரும்.

சாணகம் என்பதும் சாணம் என்னும் பொருள் கொண்ட சொல்லே. இலக்கியச் சான்று:

1. **இறையனார் அகப்பொருள்-3 உரை**

''வழிப்போகா நின்றான் ஒருவன், பிழைத்துச் சேறானும் சாணகமானும் மிதித்த விடத்துக் காலைக் கழீஇப் பாதுகாத்துத் தன் இல்லம் புக்கது போல''

சாணகச் சாறு என்பது, ஆவின் (பசுவின்) ஐம்பயன் ஆகும். இதனைப் 'பஞ்ச கவியம்' என்பர். ஆவின் பால், தயிர், நெய், சாணம், சிறுநீர் ஆகியவையே இந்த ஐம்பயன் ஆகும். இலக்கியச் சான்று:

2. **ஈடு 4.1.10**

''சாணகச் சாற்றோ பாதி சுத்தி மாத்திரத்தையே **உபஜீவித்து**''

இந்தச் சான்றுகளால் சாணம், சாணகம் என்பன ஒரு பொருட் சொற்கள் என அறியலாம். எனவே, சாணகம் நிறைந்த குப்பை மேட்டைச் 'சாணக்கி' என்று கூறலாம். அந்தச் சாணக்கியில் வளரும் மேனிச் செடி 'சாணக்கி மேனி' எனப்படும். இது சா.சி.பி. அகர முதலியில் உள்ளது.

தெருவில் அழகி, குப்பை மேனி, சாணக்கி மேனி என்பன இடத்தால் பெற்ற பெயர்களாகும்.

## 2. வடிவால் வந்த பெயர்கள்

**2.1** இனி, மேனி என்னும் சொற்பொருள் பற்றிச் சிறிது காண்போம். மேனி என்னும் சொல்லுக்கு, உடம்பு, வடிவம், நிறம் என்ற பொருள்கள் உண்டு. இலக்கியச் சான்றுகள்:

**உடம்பு**-(சிலம்பு-8-68 & 69)

''பசந்த மேனியள் படருறு மாலையின்
வசந்த மாலையை வருகெனக் கூஉய்''

**வடிவம்**-(பிங்கலம்)

''விக்கிரகம், பிண்டம், மேனி—
பூட்சி, தாபரம், புற்கலம், உடம்பே'' (994)

''படிவம், உருவம், சட்டகம், மேனி,
வண்ணமும் ஆகும் வடிவின் பெயரே'' (995)

**நிறம்**-(திருமுருகாற்றுப்படை-144)

''மாவின் அவிர்தளிர் புரையும் மேனியர்''

நச்சினார்க்கினியர் உரை: ''மாவினது விளங்குகின்ற தளிரை யொக்கும் நிறத்தினை யுடையராய்''

மற்றும் மேனி என்பதற்கு, அழகு, உயர்வு, சிறப்பு, தெய்வத்தன்மை, பொலிவு, நல்ல நிலைமை, மிகுதி முதலிய பொருள்களும் உண்டு.

கடவுள் சிலையினையும் உயர்ந்தவர் உடம்பினையும் 'திருமேனி' என்று குறிப்பிடுவது மரபு. நெல் முதலிய பயிர்வகை, பொலிவுடன் வளமாய்க் காணப்படினும், விளைச்சல் மிகுதியாயிருப்பினும், 'பயிர் மேனி கண்டிருக் கிறது' என்று கூறுவது மக்கள் மரபு.

### 2.2,3,4 திருமேனி-திருமேனி அழகி

குப்பையில் மேனியுடன் வளரும் செடிக்குச் சங்கத்து அகராதியில் 'திருமேனி' என்னும் பெயரும், மூலிகை வைத்திய அகராதியில் 'திருமேனி அழகி' என்னும் பெயரும் சி.வை. அகராதியில் திருமேனிச்செடி, திருமேனி அழகிச் செடி, மேனியிலைச் செடி என்ற பெயர்களும் கொடுக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இப்பெயர்கள் வடிவால் வந்தவை.

### 2.5,6,7 மேனி-பத்திரி-கண்டன்

மூலிகை வைத்திய அகராதி, எந்த அடைமொழியும் இன்றி, 'மேனி' என்னும் தனிச் சொல்லாலேயே குப்பை மேனியைக் குறிக்கிறது. அந்த அளவுக்கு மேனி பெயர் பெற்றுள்ளது, 'திருமேனி பத்திரி' (பத்திரம் = இலை; இலையுடையது பத்திரி), 'திருமேனி கண்டன்' (அழகிய உடலுறுப்பு உடையவன்) என்னும் பெயர்களும் இப் பொருளின் அடிப்படையில் எழுந்தனவே.

### 2.8 காந்திமெய்

தேரையர் பாடலில் 'காந்தி மெய்' என்னும் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. காந்தி என்றால் ஒளி-பளபளப்பு-பிரகாசம் - என்று பொருளாம். மெய் = உடம்பு. பள பளப்பான மெய் (மேனி) உடையது என்னும் பொருளில் இந்தப் பெயர் தரப்பட்டுள்ளது. இது வடிவால் வந்த பெயர் அன்றோ!

## 2.9 வினை விகாசச்செடி

இப்பெயர் சித்த மருத்துவ அகராதியில் தரப் பட்டுள்ளது. விகாசம் என்பது, மலர்ச்சி - மகிழ்வு - ஒளி (பளபளப்பு) என்றெல்லாம் பொருள்படும். எனவே, பள பளப்பான மேனி என்னும் பொருளில் விகாசம் என்னும் சொல் அமைந்திருப்பதாகக் கொள்ளலாம். வினை விகாசம் என்பதற்கு, பளபளக்குஞ் செயல் தோற்றம் உடையது என்று பொருள் கொள்ளலாம். இஃதும் வடிவில் வந்த பெயரே.

வினை என்பதற்கு, தீர்வு, பரிகாரச் செயல் என்னும் பொருள் உண்டு. இலக்குவன் நாக பாசத்தால் கட்டுண்ண, வானரர் வீடணனை நோக்கி வினவுவதாக உள்ள, கம்பராமாயணம்-நாகபாசப் படலப் பாடல் பகுதியாகிய

''வீடணன் முகத்தை நோக்கி வினையுண்டே
யிதனுக் கென்பர்'' (உ.வே.சா. பதிப்பு-184)

என்பது காண்க. எனவே, இங்கு, வினை என்பதற்குப் பரிகாரமாகிய மருத்துவம் எனப் பொருள் கொண்டு, மருத்துவத்துக்கு உதவும் மேனிச் (விகாசச்) செடி வினை விகாசச் செடி என்று பொருள் காணலாம். இபபொருளின் படி, இது பயனால் வந்த பெயராகக் கொள்ள வேண்டும்.

## 2.10 மூன்றிலை மேனிச்செடி

சா. சி. பி. அகராதியில் இப்பெயர் கொடுக்கப் பட்டுள்ளது. குப்பைமேனியின் பெண் பூவில் மூன்று புற இதழ்கள் இருக்கும் - சூலகம் மூன்று அறைகள் கொண்டது- கனி மூன்றாக வெடிக்கும் - என்னும் இந்த மூவகை மூன்று களால் மூன்றிலை மேனிச்செடி என்ற பெயர் இதற்கு ஏற்படவில்லை. நம் முன்னோர் நுண்ணிதின் உற்று நோக்கி இதற்கு இப்பெயரைத் தந்துள்ளார்கள். உரிய மூன்று வருமாறு:

குப்பைமேனிச் செடியிலுள்ள ஒவ்வொரு கணுவிலும் மூன்று காம்புகள் கிளைத்திருக்கும். அம்மூன்று காம்புகளுள் ஒன்று ஓரிலைக் காம்பு, இதில் ஒரே இலை மட்டுமே இருக்கும். இலையினும் காம்பு நீளமானது. இலையின் விளிம்பு இரம்பம் போன்ற பல்வெட்டு உடையது. இரண்டாங் காம்பில் இலைகள் கொத்து கொத்தாக உள்ளன. ஏறக் குறைய ஒவ்வொரு கொத்திலும் மும் மூன்று இலைகள் உள்ளன. இந்த இரண்டு காம்புகட்கும் இடையில் உள்ள சிறிது சிறிய காம்பில் பூக்கதிர் உள்ளது.

குப்பைமேனிச் செடியில் உள்ள கணுக்கள் மாற்று ஒழுங்கில் உள்ளன. அடியில் ஒரு கணு வலக்கைப் பக்கம் இருக்கும்; அதற்கு மேலே ஒரு கணு இடக்கைப் பக்கம் இருக்கும்; அதற்கும் மேலே ஒரு கணு வலக்கைப் பக்கம் இருக்கும்; இவ்வாறு மாறி மாறி இருப்பதற்குத்தான் 'மாற்றொழுங்கு' என்பது பெயராகும். இத்தகைய மாற்றொழுங்கு அழகினை ஆலம் இலைகளின் அமைப்பில் காணவேண்டுமே-கருத்தைக் கவரும் காட்சி யாகும் அது!

எனவே, செடியின் ஒவ்வொரு கணுவிலும் மும் மூன்று காம்புகள் இருப்பதனாலும், இரண்டாங் காம்பிலுள்ள ஒவ்வொரு கொத்திலும் மும்மூன்று இலைகள் இருப்பதனாலும், இச்செடிக்கு 'மூன்றிலை மேனிச்செடி' என்னும் பெயர் மிகவும் பொருந்தும். இச்செய்தி, பலகுப்பை மேனிச் செடிகளைக் கொண்டு வந்து நேரில் பார்த்து ஆய்ந்தறிந்து எழுதப்பட்ட தாகும். இது வடிவால் வந்த பெயர் வடிவால் வந்த மற்றுஞ் சில பெயர்களையும் பார்க்கலாம்.

## 2-11 சக்கிர புட்பம்-புட்பி:

சா. சி. பி. அகரமுதலியில் சக்கிர புட்பம் என்னும் பெயரும், மூலிகை வைத்திய அகராதியில் சக்கிர புட்பி என்னும் பெயரும் தரப்பட்டுள்ளன. பூக்கள், மலர்த்

தாளாகிய கிண்ணம் போன்ற விருந்தம் (Pedicel) என்னும் உலுப்பில் சக்கரம் போன்ற வட்ட வடிவில் தங்கியிருப்பதால் 'சக்கிரபுட்பி' என்னும் பெயர் தரப்பட்டது.

## 2-11-1 திருமேனிக் கடுக்கன்:

ஜூபிலி தமிழ்ப்பேரகராதியில் கொடுக்கப்பட்டிருக்கும் இப்பெயர் முன் பெயரோடு தொடர்புடையது. கடுக்கன் என்பது காதில் அணியும் ஓர் அணிகலம். இக்காலத்தில் கடுக்கன் புதுப்புது மாதிரியாகச் செய்யப்படுகிறது. முன் பெல்லாம் வட்டமாகச் செய்வதே வழக்கம். குப்பை மேனியின் பூ சக்கரம்போல் வட்டமாயிருக்கும்; காதில் அணியும் கடுக்கன் போலவும் இருக்கும். பூக்களைப் பார்த்த பிறகு அணிகள் சில செய்யப்பட்டன. எனவே. கடுக்கன் போன்ற பூக்களை உடைமையால் குப்பை மேனிக்குத் திருமேனிக் கடுக்கன் என்னும் பெயர் பொருந்தும்.

## 2-12 அரி மஞ்சரி:

வைத்திய மலை யகராதியில் இது தரப்பட்டுள்ளது. அரி என்பதற்கு ஆழி (சக்கரம்) என்னும் பொருள் உண்டு, இதனைத் திவாகர நிகண்டில் உள்ள

''சிங்கம், திருமால், திகிரி, இரவி,அரியாகும்'' (11-237)

என்னும் நூற்பாப் பகுதியால் அறியலாம். அரி என்பதற்குத் திகிரி (சக்கரம்) என்னும் பொருள் உண்டெனக் கூறுகிறது. மஞ்சரி என்பது பூ-பூங்கொத்து ஆகும்.

''துணரே மஞ்சரி, பூங்கொத்தென்ப'' (4-249)

என்பது திவாகரம். எனவே, சக்கரம் போன்ற வட்ட மான பூங்கொத்தை உடைய காரணத்தால் 'அரி மஞ்சரி' என்னும் பெயர் ஏற்பட்டது எனலாம். சக்கிர புட்பி என்பது போன்றதே இது. இதற்கு இன்னொரு பெயர்க் காரணமும் கூறலாம்.

அரி என்பதற்கு, பனங்கருக்கு, அரிவாள் என்ற பொருள்கள் உண்டு. அரிவாள் என்னும் பெயரே இதற்குச் சான்றாகும். அரிவாள், பனங்கருக்கு ஆகியவற்றின் விளிம்பு, அரம்போல், கூரிய பல்-பல்லாக இருக்கும். குப்பை மேனி இலையின் விளிம்பும் அரம்போன்ற பல்வெட்டு உடையது. வேப்பிலையும் இதேபோல் இருக்குமாதலின் அதற்கு 'அரவாய்' என்னும் பெயர் அளிக்கப்பட்டிருப்பது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. மஞ்சரி என்பதற்கு இலைத்தளிர் என்னும் பொருள் உண்டு. இதனை,

''வல்லரி, குழை, முறி, மஞ்சரி, கிசலயம்,
பல்லவம், அலங்கல், கிளை, தளிர் ஆகும்'' (4-112)

என்னும் திவாகர நூற்பாவால் அறியலாம்: எனவே, அரி போன்ற-அதாவது, அரம் போன்ற விளிம்புடைய இலைகளை உடைமையால் குப்பை மேனிக்கு 'அரிமஞ்சரி' என்னும் பெயர் இடப்பட்டதாகவும் கூறலாம்.

மேற்கூறிய இருபெயர்க் காரணங்களுமே வடிவத்தோடு தொடர்புடையவை.

## 2-13 வாலப் பரிதி:

பரிதி என்பதற்கு, வட்ட வடிவம், சக்கரம் என்னும் பொருள் உண்டு, வாலம் என்பது இளமையைக் குறிக்கும். எனவே, இளமையான (பசுமையான) வட்ட வடிவப் பூக்களை உடையது என்னும் காரணத்தால் 'வாலப் பரிதி' என்னும் பெயரை, சா.சி.பி. அகரமுதலி ஈந்துள்ளது போலும்.

## 2-14 தனிவல்லி - பெருமாள்:

சா.சி.பி. அகரமுதலி 'தனிவல்லி' என்னும் பெயரையும், வைத்திய மலை யகராதி 'தனிவல்லிப் பெருமாள்' என்னும் பெயரையும் கொடுத்துள்ளன. வல்லி என்பது மருந்துச் செடி கொடிகளைக் குறிக்கும்.

"வல்லியும் புல்லும் பூடு மரமுதல்
மருந்தென் றாகும்" - (4-64)

என்பது சூடாமணி நிகண்டு நூற்பா. இங்கே 'தனி' என்பதற்குப் பொருள் காண வேண்டும். தனியாயிருக்கும் செடி என்பதுபோலப் பொருள் ஒன்றும் கூற முடியாது.

பூக்களில், மகரந்தப் பை (Anther) உள்ள கேசரக் குழாய் (Staminal tube) ஆண் பாகம் என்றும், காய் காய்க்கும் அண்ட கோசம் (GYNAECIUM) என்னும் பகுதி பெண் பாகம் என்றும் கருதப்படும். சில மர இனங்களில், ஒரே பூவில் ஆண் பாகம், பெண் பாகம் ஆகிய இரண்டும் இருக்கும். சில இனங்களில், ஆண்பூ தனியாகவும் பெண்பூ தனியாகவும் இருக்கும்.

குப்பைமேனிச் செடியில், கேசரப் பகுதியாகிய ஆண் பூவும், அண்ட கோசப் பகுதியாகிய பெண் பூவும் தனித் தனியாகவே இருக்கும். அதனால் இது 'தனிவல்லி' என்னும் பெயர் தரப்பட்டது எனலாம். குப்பைமேனியின் பூக் கதிரிலே ஆண்பூ மேல் பகுதியிலும் பெண்பூ கீழ்ப் பகுதி யிலும் இருக்கும். ஆண்பூ மேலே இருந்தால்தான், அதிலிருந்து மகரந்தப் பொடி (Pollen), கீழே உள்ள பெண் பூவில் விழ வாய்ப்பாயிருக்குமல்லவா? இந்த அமைப்பு, இயற்கையின் தேர்வு (Selection of Nature) ஆகும்.

தனிவல்லிப் பெருமாள் என்பது, தனிவல்லியாக உள்ள பெருமாள் என மக்கட் பெயர் போலவோ அல்லது தெய்வப் பெயர் போலவோ வேடிக்கையாகத் தரப்பட்டுள்ளது எனக் கொள்ளல் வேண்டும்.

**2-15 அண்டகம்:**

அண்டகம் என்னும் பெயரொன்று வைத்திய மலை யகராதியில் உள்ளது. பெயர்க் காரணம் விளங்கவில்லை.

அண்டம் என்பதற்கு விதை என்ற பொருள் உண்டு. விதையைத் தனித்திருக்கும் அண்டகோசத்தில் உடையது என்னும் பொருளில் இப்பெயர் இடப்பட்டிருக்கலாமோ என்னவோ தெரியவில்லை. அண்டகமேனி என்னும் பெயர் சா.சி.பி. அகரமுதலியில் தரப்பட்டுள்ளது.

## 2-16 சுரூபனாதி:

சுரூபனாதி என்பதற்கு, அழகான சுரூபம் - வடிவம் உடையது எனப் பொருள் செய்யலாம். மேனி, திருமேனி, திருமேனி அழகி என்னும் பெயர்கள் இந்தப் பொருள் உடையன வன்றோ?

இவையெல்லாம் வடிவால் வந்த பெயர்களாகும்.

## 2-17,18,19,20 பெண் தெய்வப் பெயர்கள்:

இந்திரை மேனி என்னும் பெயர் சி.வை. அகராதியிலும், பயிரவி - மாயக் கன்னி - மேனகைவாரி என்பன சா.சி.பி. அகரமுதலியிலும் கூறப்பட்டுள்ளன. இவை பெண் தெய்வம் தொடர்பான பெயர்கள். குப்பை மேனி என்னும் பெயரில் உள்ள மேனி என்பதை அடிப்படையாகக் கொண்டு இப் பெயர்கள் இடப்பட்டிருக்கலாம்.

இந்திரை = இலக்குமி, பயிரவி = துர்க்கை, மாயக் கன்னி = கன்னிமார் எழுவருள் ஒருத்தி. மேனகை = ஆடல் பாடல் வல்ல அழகிய தேவமகளிர் நால்வருள் ஒருத்தி.

செடியின் மேனியழகால் இப்பெயர்கள் வைக்கப் பட்டிருக்க வேண்டும். அங்ஙனமெனில், இவை வடிவால் வந்த பெயர்களாம்.

## 3. நிறத்தால் பெற்ற பெயர்கள்

### 3-1 & 2 மயிலம் மயில மேனி

வை.ம. அகராதியில் 'மயிலம்' என்னும் பெயரும் சி'வை' அகராதியில் 'மயில மேனிச்செடி என்னும் பெயரும் சா. சி. பி. அகர முதலியில் 'மயிலை மேனிச்செடி' என்னும் பெயரும் குப்பை மேனிக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

மயிலம்-மயிலை என்னும் சொற்கட்கு வெளிர் கறுப்பு அதாவது வெண்மை கலந்த கருநிறம்என்னும் ஒரு பொருள் உண்டு. இப்பொருளிலேயே இப்பெயர்கள் தரப்பட்டுள்ளன. இந்நிற முள்ள மாடு, மயிலை, மயிலந் காளை என்று கூறப்படும் உலக வழக்கு ஒப்பு நோக்கத்தக்கது.

ஆனால், குப்பை மேனிச் செடியைப் பார்த்தால் பச்சை நிறமாக உள்ளது. ஆனால் அழுத்தமான பச்சை நிற மன்று-மெல்லிய பச்சை நிறமே; அதாவது வெண்மை கலந்த பச்சை நிறம்என்று சொல்லலாம். உண்மை யிவ்வாறு இருக்க, வெண்மை கலந்த கருநிறம் என்னும் பொருள் உடைய மயிலை-மயிலம் என்னும் சொற்களால் குறிப்பது எவ்வாறு பொருந்தும்? என்ற வினா எழலாம்.

இங்கே, யங், நியூட்டன், ஐன்ஸ்டீன் போன்றோரின் நிறம், ஒளி, பார்வை பற்றிய அறிவியல் ஆராய்ச்சிக்குச் செல்லாமல், இலக்கிய மரபை ஒட்டியே பொருள்கண்டு கருத்து கொள்ளல் வேண்டும். தமிழ் இலக்கியத்தில் பச்சை, நீலம் - கறுப்பு ஆகியவற்றை மயங்கிச் சொல்வதுண்டு. எடுத்துக்காட்டாக, திருமாலின் நிறம் பற்றிக் காணலாம்:-

திருமால், பச்சை நிறத்தர்-நீல நிறத்தர்-கருநிறத்தர் என்ற மூவகைப் பெயர்களாலும் சுட்டப்படுகிறார், இலக்கியச் சான்றுகளாவன:-

**1. பச்சை: திவ்யப் பிரபந்தம் - 873:**

''பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண் அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே!''

**2. கருமை:** க. ரா. பால காண்டம்—கையடைப் படலம்.

''செருமுகத்துக் காத்தி என நின்சிறுவர் நால்வரினும் கரிய செம்மல்

ஒருவனைத் தந்திடுதி''- (உ. வே. சா. பதிப்பு-325)
(கரிய செம்மல்-இராமர்)

**3. நீலம்:** சிலம்பு-16-46 & 47

''ஆயர் பாடியின் அசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ''
(பூவைப்பூ நீலநிறமானது)

ஆயர்பாடிக் கிருஷ்ணன் கறுப்பன். கிருஷ்ணன் என்னும் சொல்லுக்குக் கறுப்பு என்பது பொருள். ஆனால் இளங்கோ வடிகள் 'பூவைப் புதுமலர் வண்ணன்' எனக் கூறியுள்ளார், பூவைப் பூ நீல நிறமானது. இன்னும் கேட்டால் செம்மை யும் வெண்மையும் சிறிது சிறிது கலந்த நீல நிறம் உடையது என்றும் கூறலாம். நீல வண்ணன் என்னும் பெயர் வழக்கு உலகியலிலும் உண்டு.

**4. நீலக் கறுப்பு மயக்கம்:** சிலம்பு-11-35 & 36

''நீல மேகம் நெடும்பொற் குன்றத்துப்
பால்விரித் தகலாது படிந்தது போல''

இங்கே, நீல மேகம் என்பதற்குக் கரிய மேகம் எனப் பொருள் கூறப்படுகிறது. உலக வழக்கிலும்தெருக் கூத்திலும் திருமாலை 'நீல மேக சியாமள வர்ணன்' என்று கூறுவ துண்டு. சியாமளம்-கருமை.

ஈண்டு, திவ்யப் பிரபந்தத்தில் உள்ள

''நீலக் கருநில மேக நியாயற்கு'' (2689)

என்னும் பகுதி ஒப்பு நோக்கற் பற்று.

**5. மூன்று நிறங்களும்:** க. ரா. அயோத்தியா காண்டம் கங்கைப் படலம்-உ. வே. சா. பதிப்பு-620

''மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ
ஐயோ இவன் வடிவு என்பதோர் அழியா
அழகுடையோன்''

இப்பாடலில், இராமன் வடிவு, கரிய மையாகவும், பச்சை மரகத மணியாகவும், நீலக் கடலாகவும், கரிய மழை முகிலாகவும் தோன்றுவதாகக் கூறப்பட்டுள்ளது. காணப் படும் பொருளைப் பொறுத்தும், அப்பொருள் ஊடுருவும் பொருளைப் பொறுத்தும், காண்பவரின் கண்ணைப் பொறுத்தும் நிறம் அமைவதுண்டு என்னும் ஒரு சார் அறிவியல் கொள்கை ஈண்டு ஒப்பு நோக்கற் பாற்று.

**6. நிகண்டுகள்:**

பல்வேறு நிகண்டுகளில், திருமாலின் நிறம் தொடர்பான பெயர்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன:- கருங்கடல் வண்ணன், கரியவன், கரியோன், மேக வண்ணன், கொண்டல் வண்ணன் கடல் வண்ணன், பூவை வண்ணன்-முதலியனவாம்

எனவே, இலக்கிய அகச் சான்றுகளின் அடிப்படையில், பச்சை-நீலம்-கருமை ஆகியவற்றை ஓரளவு ஒத்த நிறமாகக் கொள்ளவேண்டும். அவ்வாறு கொள்ளின், வெண்பச்சை நிறமுள்ள குப்பை மேனிச் செடிக்கு, வெண்கருமை என்னும் பொருளுடைய மயில மேனிச் செடி என்னும் பெயர் பொருந்துவதாகும்.

## 7. இராமர் பச்சை:

இலைப் பச்சை, கிளிப் பச்சை, இராமர் பச்சை என்றெல்லாம் பச்சை நிறத்தை வகைப்படுத்துவ துண்டு. இவற்றுள் இராமர் பச்சையாகக் குப்பைமேனியின் நிறத்தைக் கொள்ளலாம்.

## 3-3. மாங்கரியான்:

இப்பெயர் சா. சி. பி. அகர முதலியில் தரப்பட்டுள்ளது. 'மா' என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்கு உரிய பல்வேறு பொருள்களுள், கருமை, மாமரம் என்ற இரு பொருள்களும் அடங்கும். மாங்கரியான் என்ற பெயருக்குக் கரிய கரியான் என்று பொருள் செய்ய முடியாது. அதாவது 'மா' என்பதற்கு, இங்கே, கருமை என்னும் பொருள் பொருந்தாது. எனவே, மாமரம் என்னும் பொருளே பொருந்தும். இங்கே, மா என்பது ஆகு பெயராக, மாமரத்தின் நிறத்தைக் குறிக்கிறது.

உலகியலில், நல்ல நிறமாய் இருப்பவரைச் சிவப்பாய் இருக்கிறார் என்றும், கருநிறம் உடையவரைக் கறுப்பா யுள்ளார் என்னும் இரண்டுக்கும் இடைப்பட்ட நிறம் உடையவரை 'மாநிறம்' உடையவர் என்றும் கூறல் மரபு. எனவே, இவண், மாங்கரியான் என்பதற்கு மாநிறக் கருமை அதாவது மயிலை என்பது போல் வெளிர் கருமை உடையது எனப் பொருள் கொள்ளவேண்டும். மயிலை என்பதற்கு உரிய விளக்கங்கள் இதற்கும் பொருந்தும்.

மயிலம், மயில மேனி, மயிலை மேனி, மாங்கரியான் ஆகிய பெயர்கள் நிறத்தால் பெறப்பட்டவை யாகும்.

## 4. பண்பாட்டால் பெற்ற பெயர்கள்

### 4-1 & 2 அக்கினிச்சலம்-சிவம்

குப்பை மேனிக்கு, சா. சி. பி. அகர முதலியில் அக்கினிச் சலம் என்னும் பெயரும், வை, ம, அகராதியில் அக்கினிச் சிவம் என்பதும், சி.வை. அகராதியில் அக்கினிச்சிவச் செடி என்பதும் கொடுக்கப்பட்டுள்ளன. இவை சிவன்தொடர்பான பெயர்கள்.

### 4-1-2-1 நெருப்புக் கடவுள்:

திருமாலை நீர்க் கடவுள் என்றும், சிவனை நெருப்புக் கடவுள் என்றும். கூறுவர். திருமாலுக்கு. நாராயணன் என்ற பெயர் உண்டு. நாரம் என்றால் தண்ணீர்; அயணம் என்பது செலவு — சென்று தங்கும் இடம் என்பதைக் குறிக்கும், தண்ணீரை இருப்பிடமாகக் கொண்டவன் நாராயணன்; பாற்கடலில் பள்ளி கொண்டவன் அல்லவா?

சிவன் நெருப்பு (சோதி) வடிவானவர். நெருப்போடு நெருங்கிய தொடர்புடையவர். சிவன் சிரிப்பு நெருப்பால் முப்புரம் எரித்தார், நெற்றிக்கண்ணால் மன்மதனை எரித்தார்; நக்கீரர்க்கு வெப்பு நோய் தந்தார். அவரிட மிருந்து வந்த ஆறு தீப்பொறிகள் முருகனாக மாறின; அண்ணாமலையில் நெருப்பு மலையாய் நின்றார்; அழலை ஏந்திக்கொண்டுள்ளார்; இறுதியில் உலகைச் சுட்டெரித்த சுடுகாட்டு நெருப்பில் நின்று ஆடுபவர்

நிகண்டுகளில், சோதி, ஒளி, அழலேந்தி, அழலது ஏந்தி, அழலாடி, ஆரழலாடி, முதலிய நெருப்பு தொடர் பான பெயர்கள் சிவனுக்குத் தரப்பட்டுள்ளன. 'ஒளி வளர் விளக்கே' எனத் திருமாளிகைத் தேவரின் திருவிசைப்பாவும், ''சோதியே சுடரே சூழொளி விளக்கே'' எனத் திருவாசகம் அருட்பத்தும் ''சோதியாய்த் தோன்றும் உருவமே'' எனத்

திருவாசகம்-கோயில் திருப்பதிகமும் (9) மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்'' என அப்பர் தேவாரப் பாடல் பகுதியும் இவ்வாறு இன்ன பிற நூல்களும் சிவனைக் குறிப்பிடுகின்றன.

எனவே சிவன் அக்கினிச் சிவம் எனவும் அக்கினிச்சலம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளார். அக்கினிச்சலம் என்பது நெருப்பின் வெப்பக் கடுமையாகும். வெப்பம் தரும் சாறு உடையது என்றும் கூறலாம். சரி, இப்பெயர்களைக் குப்பை மேனிச் செடிக்கு வைத்ததன் பொருத்தம் என்ன?

### 4-1-2-2 வெப்பப் பண்பு:

குப்பை மேனி உடம்புக்கு வெப்பம் தரக் கூடியது. முருகேச முதலியாரின் பொருட்பண்பு நூலில் குப்பை மேனியின் தன்மை (பண்பு) வெப்பம் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

### 4-1-2-3 குப்பைக் கீரை:

குப்பையில் முளைக்கும் மற்றொரு கீரை 'குப்பைக் கீரை' எனப்படும். இதற்கு முள்ளிக்கீரை என்ற பெயரும் உண்டு. இந்தக் குப்பைக் கீரையும் மிகவும் வெப்பம் தருவதாகும். இதுப்பற்றி, அகத்தியர் குண பாட நூலில்.

> ''நீரைப் பெருக்கிவிடும் நீரு அனலைத் தானெழுப்பும்
> பாரநறுந் தங்கத்தைப் பற்பிக்கும்''

எனக் கூறப்பட்டுள்ளது. கருத்து:- இது சிறு நீரைப் பெருக்கும்; உடம்புக்கு வெப்பத்தை உண்டாக்கும்; தங்கத்தைப் பற்பமாக்கும் - என்பதாம்.

### 4-1-2-4 குப்பைவேளை:

இப்படியொரு செடி உண்டு. வேளையும் மிகுந்த வெப்பம் தருவதே. இதுபற்றி அகத்தியர் குணபாடத்தில்,

''நல்லவே ளைப்பூண்டை நாடுங்கால் வாதமும்போம்
சொல்லும் ஐயத்துடனே சோபையறும் - மெல்ல
மெல்லத்தக்க அனலும் பித்தும் தானெழும்பும்
சாந்தமின்றி அக்கரநோய் மிஞ்சும் அறி''

இப்பாடலில் உள்ள அனலும் பித்தும் தான் எழும்பும்' என்னும் பகுதி கவனிக்கற் பாற்று, அனல் - வெப்பம்.

எனவே, குப்பையோடு தொடர்புடைய மூவகைச் செடிகளும் மிக்க வெப்பம் உடையவை என்பது போதரும். ஆகவே, இவற்றுள் ஒன்றானதும் தலைமையானது மாகிய குப்பை மேனி அக்கினிச்சலம், அக்கினிச் சிவம் என்னும் பெயர்களால் குறிப்பிடப்பட்டிருப்பது. சரியே இவை பண்பால் வந்தவை.

## 4.3 காலாக்கினி யானோன்

காலாக்கினி யானோன், கால காலாக்கினி யானோன் என்னும் பெயர்கள் குப்பை மேனிக்கு சா.சி.பி. அகர முதலியில் தரப்பட்டுள்ளன.

காலாக்கினி யானோன் என்பது சிவன் பெயர். காலாக்கினி ருத்திரன் என்றும் கூறுவது உண்டு. உலகம் இறுதியில்-அதாவது, ஊழிக் காலத்தில் தீயால் சுட்டு அழிக்கப்படுமாம். அந்தத் தீ ஊழித்தீ எனப்படும். காலாக்கினி என்பதும் அதுவே.

### 4.3.1. வடவை

ஊழிக் காலத்தில் உலகை அழிக்கும் தீ, வடவை, வடவைத் தீ, வடவா முகாக்கினி (வடவா+முகம்+அக்கினி) என்னும் பெயர்களாலும் குறிப்பிடப்படும். வடவை என்றால் பெண் குதிரை, இத்தீ, பெண் குதிரையின் முக வடிவு கொண்டு கடலில் தங்கியிருந்து, இறுதிக் காலத்தில்

பொங்கியெழுந்து உலகை அழிக்குமாம். கடலின் வடப் பக்கத்தில் இருக்கும் ஊழித் தீ என்று விளக்கம் கூறுவாரும் உளர்.

## 4.3.2. வடவை வரலாறு

பகன் என்பவன், தன் தந்தையைக் கொன்ற கிருத வீரியனது மரபை (வமிசத்தை) வேரொடு அழிக்கும் நோக்குடன் தவம் செய்கையில், அவன் முன்னோர் அத்தவத்தைத் தடுக்க, அவன் தவத்தை விட்டு, அந்தத்தவ நெருப்பைத் தன் முன்னோரது கட்டளைப்படி கடலில் விட்டானாம். அதுதான் வடவையாயிற்றாம். இது ஒரு வகை புராண வரலாறு. மற்றொன்று:

ஞாயிறு மண்டலத்தைத் தேவர்கள் சாணை பிடித்தார்களாம். அப்போது தெறித்த தீப் பொறிகளை விச்வ கர்மன் என்பவன் சேர்த்துக் கடல் நீரை அடக்கக் கடலில் இட்டான். அதுதான் வடவை. இது, விரத சூடாமணி என்னும் நூலிலுள்ள வரலாறு.

ஊழிக் காலத்தில் இந்தத் தீ பெருக, சிவனும் நெருப்பு வடிவாயிருந்து உலகை அழிப்பாராம். சிவன் அழித்தல் கடவுள் என்பது அறிந்ததே. இதனால் காலாக்கினி யானோன் என்னும் பெயர் ஏற்பட்டது.

## 4.4. காலகாலாக்கினி யானோன்

காலத்துக்குக் காலனாய் (எமனாய்) இருக்கும் நெருப்பு கால காலாக்கினியாகும். அந்நெருப்பாயிருப்பதால் சிவன் கால காலாக்கினி எனப்பட்டார்.

இந்த வெப்பத் தொடர்பினால், அதாவது குப்பை மேனி மிகுந்த வெப்பத்தை உடம்புக்கு உண்டாக்குவதால்,

சிவன் பெயர்களாகிய இந்த இரண்டையும் பெற்றது. இவையும் பண்பால் பெறப்பட்டவையாகும்.

## 4.5. வேதாக்கினி குமரன்

சா.சி.பி. அகர முதலியில் உள்ள இப்பெயரும் வெப்பத் தொடர்பால் தரப்பட்டதே. அக்கினியின் பிள்ளை போல் குப்பை மேனி வெப்பம் தருகிறதாம். (குப்பை மேனிக்கு இவ்வளவு பெரிய பெயர்களைக் கொடுத்திருக்க வேண்டுமா என்ன!)

## 4.6 திரிபுரம் எரித்தோன்

திரிபுரத்தான் என்னும் பெயர் சங்கத்து அகராதியிலும், திரிபுரம் எரித்தோன் என்பது சா.சி.பி. அகர முதலியிலும் கூறப்பட்டுள்ளன. இப்பெயர்களும் நெருப்பு தொடர் பானவை - சிவனுடையவை, நெருப்பின் (வெப்பத்தின்) தொடர்பால் குப்பைமேனிக்கும் இடப்பட்டன.

### 4.6.1. வரலாறு

சைவ சித்தாந்திகள் இதுபற்றிக் கூறும் புராண வரலாறாவது:—

தாராசுரனின் பிள்ளைகளாகிய வித்துற்மாலி (வித்வன் மாலி). தாராக்கன், கமலாக்கன் என்னும் அரக்கர் மூவரும். முறையே பொன்கோட்டை, வெள்ளிக்கோட்டை, இரும்புக் கோட்டை ஆகியவற்றை இருப்பிடமாகக் கொண்டவர்கள்; சிவனுக்கு அன்பர்கள். இவர்கள் தம் கோட்டையோடு தேவர்கள் இருக்கும் பகுதியில் சென்று இறங்கி நசுக்கி அழித்துத் தேவர்கட்குத் தொல்லை தந்து வந்தனர். தேவர்கள் திருமாலின் துணையால், இந்த அரக்கர்களைச் சிவனுக்குப் பகையாக்கி விட்டனர். சிவன், இந்த அரக்கர் களை அழிக்கப் பின்வருமாறு செய்து புறப்பட்டார்.

அதாவது,-அண்ட அமைப்பினைத் தேராகவும், ஞாயிறையும் திங்களையும் தேர் உருளைகளாகவும், மறைகளைக் குதிரைகளாகவும், நான்முகனைத் தேரோட்டியாகவும், மேரு மலையை வில்லாகவும். வாசுகிப்பாம்பை வில்லின் நாணாகவும், திருமாலை அம்பாகவும் கொண்டு போருக்குப் போனார். போன இடத்தில், தேவர்களின் இரங்கத் தக்க நிலையையும் அரக்கர்களின் செருக்கையும் எண்ணி ஒரு வெடிச் சிரிப்பு சிரித்தார். அந்தச் சிரிப்பிலிருந்து நெருப்பு தோன்றிப்போய், மூன்று அரக்கர்களின் மூன்று கோட்டை நகரங்களையும் எரித்து அழித்தது. திரிபுரம் என்றால் மூன்று கோட்டை நகரங்கள்.

இதனால் சிவனுக்குத் திரிபுரம் எரித்தோன் என்னும் பெயரும் சுருங்கத் திரிபுரத்தான் என்னும் பெயரும் ஏற்பட்டன. இவை வெப்பம் உண்டாக்கும் குப்பை மேனிக்கும் பண்பால் பெயராயின.

## 4.7 தோலுரித்தோன்

இந்தப் பெயரும் நெருப்பு தொடர்பானது; சிவனுக்கு உரியது. இதன் வரலாற்றைக் காணலாம்:—

### 4.7.1. வரலாறு

இஃதும் சைவ சித்தாந்திகள் கூறும் வரலாறாகும், தாருகாவன முனிவர்கள், செயலே பயன்தரும் - தெய்வம் வேண்டா எனவும், அவர்தம் மனைவியர்கள், கற்பேபோதும் · தெய்வம் வேண்டா எனவும் தருக்கு கொண்டிருந்தனர். இவர்தம் தருக்கை அடக்க எண்ணிய சிவன் திருமாலுடன் புறப்பட்டார்.

முனிவர்கள் நீராடச் சென்றிருந்த இடத்தில் திருமால் மோகினி உருக்கொண்டு சென்று அவர்களை மயக்கித்

தம்மைப் பின் தொடரச் செய்தார். சிவன் உடையின்றி, அழகிய தோற்றத்துடன், முனிவர்களின் மனைவியர்கள் இருக்கும் இடத்திற்கு இரவலனாகச் சென்று அவர்களை மயக்கிப் பின்தொடரச் செய்தார்.

சிவனால் தாங்களும் தம் மனைவியர்களும் நிலை தடுமாறியதை யறிந்த முனிவர்கள், சிவனை அழிக்க எண்ணி, தீ மூட்டி 'ஆபிசாரம்' என்னும் ஒரு வேள்வி நடத்தினர். அவ்வேள்வியில் பல பொருள்களைத் தோன்றச் செய்து, அவற்றைச் சிவன்மேல் ஏவி அழிக்கும்படித் தூண்டினர். அனுப்பிய பொருள்களுள் புலியும் யானையும் உண்டு. சிவன் எல்லாப் பொருள்களையும் தம்வயப்படுத்திக் கொண்டார். புலியின் தோலை உரித்து ஆடையாகக் கட்டிக் கொண்டார். யானையின் தோலை உரித்து மேலே போர்த்திக் கொண்டார். யானையின் தோல், மக்கள் தோல் போலவே உரிக்க முடியாதது; அதையும் உரித்து விட்டார். இறுதியில் வேள்வித் தீயையே ஏவியனுப்பினர்; அதைக் கையில் ஏந்திக் கொண்டார். பின்னர், முனிவர் செருக்கு அடங்கிச் சிவனை வழிபடலாயினர்.

வேள்வி நெருப்பிலிருந்து வந்த புலி, யானை ஆகியவற்றின் தோலை உரித்ததால், தோலுரித்தோன் என்னும் பெயர் சிவனுக்கு ஏற்பட்டது. வெப்பத் தொடர்பால், இது குப்பை மேனிக்கும் கூறப்பட்டது.

## 4.8 கரியுரியுரித்தோன்

கரியுரி (கரி+உரி) என்றால் யானைத்தோல். யானைத் தோலை உரித்தவன் கரி உரித்தோனாவான். சிவனுக்கு உரிய இப்பெயரும் வெப்பத் தொடர்பால் குப்பை மேனிக்கும் கூறப்பட்டது. தோலுரித்தோன், கரியுரி உரித்தோன் என்பன பண்பால் பெற்ற பெயர்கள்.

# 5. பயனொடு பிறகாரணங்கள் பயனால் பெற்ற பெயர்கள்:

## 5-1 & 2. ஊருடம்-ஊருடன் முதலியார்:

ஊருடம் என்னும் பெயர் சா.சி.பி. அகர முதலியிலும், ஊருடன் முதலியார் என்பது சித்த வைத்திய அகராதியிலும் குப்பை மேனிக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய பெயர்கள் முருங்கை மரத்துக்கும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஊரார்க்குப் பொது உடைமையாகவும், பஞ்சம் போக்கும் உணவுப் பொருளாகவும், மூலதனம் போன்ற முதன்மைப் பொருளாகவும், ஊரின் பல இடங்களிலும் உள்ள பொருளாகவும் இருப்பதால், முருங்கைக்கு இப்பெயர்கள் இடப்பட்டிருக்கலாம்.

குப்பை மேனி, முருங்கையளவு பயன் தராவிடினும், ஊரில் யார்க்கும் எளிதில் கிடைத்துப் பயன்தரும் பொருளாகவும், ஊரில் பல இடங்களில் அதாவது - கண்ட கண்ட இடங்களில் உள்ள பொருளாகவும் இருப்பதால், இதற்கும் இப்பெயர்கள் ஓரளவேனும் பொருந்தலாம்.

## 5-1 & 2-1. மருத்துவப் பயன்:

குப்பைக் கீரை, குப்பை வேளை ஆகிய இரண்டும் நிரம்பவும் உணவாகப் பயன்படுபவை. குப்பை மேனியோ, உணவுக்கு ஓரளவே பயன்படினும், இதன் மருத்துவப் பயன் மிகுதியாகும். இதன் மருத்துவப் பயன், தேரையர் குண பாட நூலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

''தந்த மூலப்பிணி, தீத்தந்திடு புண், சர்வவிடம்,
உந்து குன்மம், வாதம், உதிரமு - லந்தினவு,

சூலம்; சுவாசம், தொடர் பீநசம், கபம்போம்
ஞாலங்கொள் மேனி யதனால்''

(மேனி = குப்பை மேனி)

கருத்து:— குப்பை மேனி இலையால், பல்நோயின் மூலகாரணம், நெருப்பு சுட்டபுண், உணவு - வகையால் பயறு முதலியவற்றால் உண்டாகும் நச்சுத்தன்மை, வயிற்று வலி, வளிநோய் (வாயுவு), குருதிமூலம் (Piles) நமைச்சல், குத்தல், மூச்சு இரைப்பு, மூக்குநீர் ஒழுகல், கோழை ஆகிய பிணி நீங்கும் - என்பது கருத்து.

**5-1 & 2-2. உணவுப் பயன்:**

''காந்திமெய் இலைக்கறி கனிவுடன் அயிலமெய்
யாந்திமிர் வாதநோ யாதிகள் போய்விடும்''

என்னும் தேரையர் பாடலில்; குப்பைமேனி இலையின் உணவுப் பயன் கூறப்பட்டுள்ளது. காந்திமெய் என்பது, ஒளி வீசம் உடம்பு எனப் பொருள்படும். இது இங்கே, பளபளக்கும் மேனிச் செடியைக் குறிக்கின்றது. இதன் இலையைக் கறி (பதார்த்தம்) செய்து விருப்பமுடன் உண்டால், உடம்பிலுள்ள திமிர்வாத நோய் முதலியன போய்விடும் - என்பது கருத்து.

அடுத்து, முருகேச முதலியாரின் பொருட் பண்பு நூலில் தரப்பட்டுள்ள தேரையர் பாடல் பகுதி ஒன்றும் அதன் பொருளும் வருமாறு:—

''இலைமேனி யயிறி விளக்கெண் ணெயின்மெய்
யட்டியிலை மேனியை யா''

பொருள்: குப்பை மேனியின் கீரையை ஆமணக்கு எண்ணெயில் தாளிதம் பண்ணி, ஒரு மண்டலம் கற்ப முறையாய் உண்க. அது, வாய்வுடனே சேர்ந்த பொல்லாத

சேத்துமப் பிணிகள் யாவற்றையும் போக்கி, உடல் நலத்தை உண்டு பண்ணும்.

## 5.3. ஆனந்த வாதோதகம்:

மேற்கூறியுள்ள மூன்று பாடல் பகுதிகளாலும், குப்பை மேனி வாதத்தைப் (வளிநோயைப்) போக்கும் என்பது புலனாகும். அதனால் இதற்கு 'ஆனந்த வாதோதகம்' என்னும் பெயரும் சா.சி.பி. அகர முதலியில் தரப் பட்டுள்ளது. வாதோதகம் என்பதை வாதம் + உதகம் எனப் பிரிக்கலாம். உதகம் என்றால் நீர், குப்பை மேனிச் சாறு வாதத்தைப் போக்கி நலம் (ஆனந்தம்) செய்யும் என்பது கருத்து. குப்பை மேனியில் வெள்ளையும் உண்டு. வெண் குப்பை மேனிக்கு உரியதாக இப்பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது.

### கலவைக் கீரை:

குப்பை மேனி இலையை மிகுதியாக உண்ணலாகாது. சிறிதளவே உண்ணவேண்டும். இதைக் கலவைக் கீரையில் கலந்து உண்ணும் வழக்கம் உண்டு. முளைக்கீரை, அரைக் கீரை, வேளைக்கீரை, மணத்தக்காளிக் கீரை, பசலைக் கீரை, பொன்னாங் கண்ணிக் கீரை, கரிசலாங் கண்ணிக் கீரை, தூதுளைக் கீரை, சிறுகீரை, தும்பைக் கீரை, கீழா நெல்லிக் கீரை, வள்ளைக் கீரை, மூக்கிரட்டை, சாட்டறணை முதலியவற்றோடு குப்பை மேனிக் கீரையையும் கலந்து கடையல் (மசியல்) செய்தும் துவட்டியும் உண்ணுவது உண்டு. இத்தகைய கலப்புக் கீரைகள் கலவைக் கீரை எனப்படும். பிள்ளை பெற்ற பெண்கட்கு, நாட்டு மருத்துவ முறையில், கலவைக் கீரையை ஆக்கி உண்ணக் கொடுப்ப துண்டு.

முருங்கை போல், குப்பை மேனி, ஊரில் எளிதாய்க் கிடைத்து எல்லோருக்கும் பயன்படுவதால், இதற்கும் 'ஊருடம்', 'ஊருடன் முதலியார் என்ற பெயர்கள் பயன் காரணமாக ஏற்பட்டிருக்கலாம். ஊரில் எங்கும் – பல இடங்களிலும் காணப்படுவதால் இப்பெயர்கள் ஏற்பட்டிருக் கலாம் எனின், இடம் காரணமாகப் பெற்ற பெயர்களாகக் கொள்ளல் வேண்டும்.

## 5.4. உப்பு மூலிகை:

இப்பெயர் சா.சி.பி. அகர முதலியில் தரப்பட்டுள்ளது. உப்புக் கூறு இருப்பதால் வாழை மரத்துக்கும் 'உப்பு மூலிகை' என்னும் பெயர் உண்டு. அதே போல், குப்பை மேனியிலும் உப்புக் கூறு அடங்கியிருக்கிறது. அதனால் இதற்கும் இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது பயனால் வந்த பெயர். இதில் உப்புக் கூறு அடங்கியிருப்பதால் உடற் கூறால் பெற்ற பெயர் எனவுங் கூறலாம்.

## 5.5. கடிப்பாங்கிச் செடி;

இப்பெயர் சித்த வைத்திய அகராதியில் தெரிவிக்கப் பட்டுள்ளது. கடி என்பது, பூச்சி, எலி முதலியவை கடித்ததால் உண்டாகும் நோயைக் குறிக்கும். பாங்கி என்ற சொல்லுக்கு, 'nurse' என்னும் ஆங்கிலச் சொல்லுக்குக் கொள்வது போல், தாதி, செவிலி, பிணி போக்கிப் பேணிக்காப்பவர் என்றெல்லாம் பொருள் கொள்ளலாம், கடிப் பாங்கி என்பதற்கு, கடி நோயை வளர்க்கும் பாங்கி என்று பொருள் கொள்ளலாகாது. பசிப் பிணி மருந்து என்றால் பசிப் பிணியைப் போக்கும் மருந்து எனவும், பசிப் பிணி மருத்துவன் என்றால், பசி நோயைப் போக்கும் மருத்துவனாகிய வள்ளல் எனவும் பொருள் கொள்ளல் போல, கடிப் பாங்கி என்பதற்கு, கடி

நோயைப் போக்கிக் காக்கும் தாதி - செவிலி எனப் பொருள் கொள்ளல் வேண்டும். குப்பை மேனி நச்சுக் கடியைப் போக்கும் என்பது பற்றி முருகேச முதலியாரின் பொருட் பண்பு நூலில் கூறப்பட்டுள்ள பகுதிகள் வருமாறு.

''குப்பை மேனி இலையை அரைத்துப் புண், நஞ்சுக் கடி இவைகளுக்குப் போடலாம். அல்லது, இலையை மஞ்சளுடன் கூட்டி அரைத்துப் பூசலாம்''.

''குப்பை மேனி வேரை அரைத்து, சுமார் ஒரு கொட்டைப் பாக்கு அளவு நீரிற் கலந்து மூன்று நாள் கொடுத்து உப்பில்லாப் பத்தியம் வைக்க, எலி விடம் தீரும். ஆனால், வாந்தியையும் கழிச்சலையும் உண்டாக்கும்''

நச்சுக் கடி, எலிக்கடி போன்றவை குணமாகும் என்பது இதனால் விளங்கும் 'பாங்கு' என்பதற்கு 'உடல் நலம்' (Health) என்ற பொருளும் உண்டு. ''திருமேனி பாங்கா?'' (உடல் நலமா?) என்று வினவும் ஒரு வகை மரபு உண்டு. எனவே, கடி நோயை நலப்படுத்துவது - குணப்படுத்துவது கடிப்பாங்கி என்றும் பொருள் கொள்ளலாம். ஆகவே, கடிப் பாங்கிச்செடி என்னும் பெயர் குப்பை மேனிக்குப் பொருந்தும். இது பயனால் பெற்ற பெயர்.

### 6. சார்பினால் பெற்றபெயர்கள்:

### 6.1 & 2. பூனை வணங்கி - பூனைப்பகை:

பூனை வணங்கிச் செடி, பூனைப் பகைச் செடி என்னும் பெயர்கள் சி. வை. அகராதியிலும், பூனை வணங்கி என்பது மூ. வை. அகராதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பெயர்களால், பூனைக்குக் குப்பை மேனிச் செடி பகை போலவும், அதனால் பூனை அந்தச் செடியை வணங்குவது போலவும் குறிப்பு தெரிகிறது.

யான் ஒரு முறை குப்பை மேனிக்கு உரியனவாகக் கூறப்பட்டுள்ள நாற்பத்திரண்டு பெயர்களை எழுதி என் மனைவியிடம் காட்டி, இவற்றுள் பூனை வணங்கிச் செடி - பூனைப் பகைச் செடி என்னும் பெயர்கள் உள்ளனவே - இது பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா என்று கேட்டேன். எங்கள் வீட்டின் வெளிப்புறச் சுற்று மதிலுக்குள் குப்பை மேனிச் செடிகள் பல உள்ளன; பூனைகளும் சில உள்ளன; அதனால் என் மனைவியை வினவினேன். ''பூனைகள் குப்பை மேனிச் செடியின் மேல் விழுந்து புரண்டு விளையாடுவதைப் பார்த்திருக்கிறேன். இலையை நாக்கினால் நக்குவதும் உண்டு'' - என்ற பதில் என் மனைவியினிட மிருந்து கிடைத்தது. இதை நான் பார்த்ததில்லை.

குப்பை மேனிச் செடியின் மேல் பூனை விழுந்து புரளுவது மற்போர் புரிவதுபோல் தோற்றம் அளிப்பதால் பூனைப் பகைச் செடி என்றும், அச்செடியின் கீழ் விழுந்து புரளுவது அச்செடிக்கு வணங்குவதுபோல் தோன்றுதலால் பூனை வணங்கிச் செடி எனவும் வேடிக்கையாகப் பெயர் வைத்துள்ளனர் போலும்.

## 6.3 Cat's Struggle

இந்தக் கருத்துக்கு ஆங்கிலப் பெயரும் துணை செய்கிறது. ஆங்கிலத்தில் இதற்கு 'Cat's Struggle' என்னும் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. முருகேச முதலியார், தம் பொருட்பண்பு நூலில், இந்த ஆங்கிலப் பெயருக்கு ஆங்கிலத்தில் எழுதியுள்ள சிறு விளக்கம் வருமாறு; —

Note—The cat is supposed to be very fond of this plant, hence the meaning of the name Cat's Struggle. (பூனை வணங்கி). இதனால், பூனைக்குக் குப்பை மேனிச் செடியின் மேல் விருப்பம் உண்டெனத் தெரிகிறது.

பூனை குப்பைமேனிச் செடியின் மேல் விழுந்து புரள்வதால், அது அச்செடியோடு பகை கொண்டு மோதுவது போலவும் – அல்லது – அதற்கு வணங்குவது போலவும் தோன்றுகிறது. உண்மையில் பகையோ வணக்கமோ ஒன்றுமில்லை. பூனை இவ்வாறு செய்வது குறிப்பிட்ட ஒரு பயனுக்காகவே என்று உய்த்துணர இடமுள்ளது. அஃதாவது:- குப்பைமேனியின் தொடர் பினால், புண், நச்சுக்கடி, தினவு ஆகியவை குணமாகும் என்ற கருத்து, தேரையர் குணபாட நூற் செய்யுளில் கூறப்பட்டுள்ளமை முன்பு அறிவிக்கப்பட்டுள்ளது. தனது புண், கடி, சொறி, நமைச்சல் ஆகியவற்றைக் குணப் படுத்திக் கொள்வதற்காகவே பூனை இவ்வாறு செய்கிறது என்பதே நமது உய்த்துணர்வாகும்.

## 6.4 மாற்சால மோகினி

இப்பெயரும் 'பூனை வணங்கி' என்னும் பெயரோடு தொடர்புடையதே. மாற்சாலம் என்றால் பூனை: மோகினி என்றால், மோகம் கொள்ளச் செய்யும் பெண் என்பது பொருள். குப்பை மேனிச் செடி, பூனைக்குத் தன்னால் உண்டாகும் பயனால், அப் பூனையைத் தன்னை விரும்பும் படிச் செய்கிறது; இதனாலேயே மாற்சால மோகினி என்னும் பெயர் பெற்றது. ஆங்கிலப் பெயர் உட்பட மேற் கூறப் பட்டுள்ள நான்கு பெயர்களும் சார்பினால் பெறப்பட்டவை.

## 6.5 சுக துக்கம்

சுக துக்கம் என்பதற்கு இன்ப துன்பம் என்று பொருளாம். ஆனால், 'சுக துக்கம்', 'சுக துக்கம் இரண்டும் அறியும் இலை' என்பன குப்பை மேனிக்கு உரியனவாகச் சா.சி.பி. அகர முதலி அறிவிக்கிறது. இதற்கு உரிய

பெயர்க் காரணம் உய்த்துணர்ந்து கூறப்பட வேண்டும். சில காரணங்கள் வருமாறு:-

1. குப்பை மேனி சில பிணிகளைப் போக்கி இன்பம் உண்டாக்கும். சிறிது அளவு மீறினும் வாந்தி, கழிச்சல் ஆகியவற்றால் துன்பம் செய்யும். இதனால், இதற்கு, வாந்தியுண்டாக்கி (Emetic), பெருமலம் போக்கி (Cathartic) என்ற பெயர்களும் உண்டு.

2. குப்பைமேனி, செல்வமுடைய இன்பக் காலத்தில் மருந்தாகப் பயன்படுகிறது; ஏழமையுள்ள துன்பக் காலத்தில் உணவாகப் பயன்படுகிறது. (பொதுவாகக் குப்பைக் கீரையையும் இதில் அடக்கவேண்டும்).

3. மங்கல நிகழ்ச்சிகளில் உண்டாகும் கழிவுப் பொருள்களும் குப்பையில் போடப்படுகின்றன. துக்க (சாவு) நிகழ்ச்சிக் கழிவுகளும் போடப்படுகின்றன. இந்தக் குப்பையில் உள்ள மேனிச்செடி இரண்டையும் அறிகிறது.

4. குப்பை என்பது பொதுவாகத் தாழ்வையும், மேனி என்பது பொதுவாக உயர்வையும் குறிக்கும். இவ்வாறு உயர்வு தாழ்வுகளை நினைவு செய்யும் இருவகைச் சொற்களையும் கொண்டது.

மேற்கூறியவற்றுள், முதலிரண்டு காரணங்களின் அடிப்படையில் பயனால் பெற்ற பெயராகவும், பின்னிரு காரணங்களின் அடிப்படையில் சார்பில் பெற்ற பெயராகவும் கொள்ளலாம்.

## 7. மிகுதியால் பெற்ற பெயர்கள்:

### 7-1, 2, 3. பயிலியம் - பயிலியமேனி - பயிலிகம்:

மூலிகை வைத்திய அகராதியிலும் வைத்திய மலை அகராதியிலும் 'பயிலியம்' என்னும் பெயரும், சித்த

வைத்திய அகராதியில் 'பயிலிய மேனிச் செடி' என்னும் பெயரும், சா.சி.பி. அகராதியில் 'பயிலிகம்' என்னும் பெயரும் குப்பை மேனிக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

பயில் என்ற வேர்ச் சொல்லின் அடிப்படையில் இப்பெயர்கள் எழுந்திருக்க வேண்டும். பயிலுதல் என்பது, செயல் மிகுதி, கால மிகுதி, பொருள் மிகுதி, இட மிகுதி, முதலிய மிகுதிகளைக் குறிக்கும். எனவே, ஊரில் பல விடங்களில் - கண்ட கண்ட இடங்களில் குப்பை மேனி பரவலாக என்றும் மிகுந்து காணப்படுவதால், இம்மிகுதி பற்றி இப்பெயர்கள் சூட்டப்பட்டிருக்க வேண்டும் என்றெல்லாம், அரைகுறை மனத்தோடு எண்ணிக்கொண் டிருக்கையில், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதியில் (Lexicon) உள்ள 'பயிலியம்' என்னும் சொல்லின் விளக்கம், இப்பெயர்க் காரணம் சரியே என நம்பிக்கை ஊட்டுவதாயிற்று. அதிலுள்ள சொற்பொருள் விளக்கம் அப்படியே வருமாறு:— "பயிலியம் Payiliyam, N. A wide - Spread Common weed. See குப்பை மேனி. (மலை)" wide - Spread என்பது, மிகப் பரந்துபட்ட அளவில் பல இடங்களிலும் பரவியிருப்பது என்னும் கருத்தில் உள்ளது. Common என்பது, எல்லார்க்கும் பொதுவான இடங்களில்-எல்லாருக்கும் பொதுவான முறையில் என்பது போன்ற கருத்துடையது. Weed என்பது, மிகுதியாக உள்ள செடி என்னும் கருத்தினது. பெரும்பாலும் பெயர்க்காரணம் கூறாத இப்பேரகராதி, இந்தப் பெயர்க்காரணம் கூறி யிருப்பது பெருந்துணை. எனவே, இந்தச் சொல் விளக்கத் தைக் கொண்டு, குப்பை மேனி, பல இடங்களிலும் மிகுதி யாகப் பரந்துபட்டு முளைத்துக் கிடக்கும் செடிவகை என்னும் கருத்து புலனாகும்.

## 7-அ. இலக்கியச் சான்று

பயிலுதல் என்னும் சொல்லின் பொருள் விளக்கத்திற்கு இலக்கியச் சான்றுகள் பார்க்கலாமே:

### 1) திருக்குறள்

''நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு'' (783)

கற்றக் கற்க நூல் நயமாயிருப்பது போல், பழகப் பழக நல்லோர் நட்பு இனிக்கும் என்பது குறள் கருத்து. இது செயல் மிகுதியாகும்.

### 2) புறநானூறு

அதியமான் அஞ்சியை ஔவையார் பாடியுள்ள ஒரு புறப்பாட்டில் உள்ள ஒரு பகுதி குறிப்பிடத்தக்கது.

''ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ'' (101)

பழைய உரை, ''யாம் ஒருநாட் செல்லேம்; இரண்டு நாட் செல்லேம்; பலநாளும் பயின்று பலரோடு கூடச் செல்லினும் முதற் சென்ற நாள் போன்ற விருப்பத்தை யுடையன்'' என்பதாகும். இது கால மிகுதியாகும்.

### 3) கலித்தொகை 103-60

''பயில் இதழ் மலர் உண்கண் மாதர் மகளிரும்''

நச்சர் உரை: நெருங்கிய இதழ்களையுடைய மலர் போலும் உண் கண்ணினை யுடைய காதலை யுடைய] மகளிரும்'' – இதழ்கள் நெருங்கி நிரம்ப இருப்பது பொருள் மிகுதியாகும்.

4) சுந்தரர் தேவாரம்-திருப்பனையூர்:

''பாவிரி புலவர் பயிலுந் திருப்பனையூர்'' – (6)

''பஞ்சிமெல்லடியார் பயிலுந் திருப்பனையூர்'' – (10)

பாவிரி புலவர்களும் பஞ்சிமெல் லடியார்களும் திருப்பனையூரின் பல பகுதிகளிலும் பயின்றிருப்ப ராதலின் இவை இட மிகுதியாகும்.

### 7-ஆ. நான்கு மிகுதிகள்

பயிலியம் (பயிலிகம்) என்பதில், மேற்கூறியுள்ள நான்கு மிகுதிகளும் உள்ளன. குப்பை மேனிச் செடி, ஊரின் எல்லாப் பகுதிகளிலும் எல்லாக் காலத்தும் மிகுந்த அளவில் பயின் றிருத்தலின், இதற்கு இப்பெயர்கள் மிகவும் பொருந்தும். மழைக் காலத்தில் இதன் மிகுதிப் பயிற்சியைப் பற்றிச் சொல்லவேண்டிய தில்லை. இப்பெயர்கள் மிகுதியால் பெறப்பட்டவை.

## 8. செயலால் பெற்ற பெயர்:

### 8-1. முறை மயக்கிச் செடி

இப்பெயர் சி.வை. அகராதியில் தரப்பட்டுள்ளது. குறிஞ்சித் திணையில் (குறிஞ்சி நிலத்தில்) வளரக்கூடிய மரம், முல்லைத் திணையில் (முல்லை நிலத்தில்) இருப்ப தாகக் கூறுவது திணை மயக்கம் எனப்படும். ஒரு வேற்றுமை உருபு இருக்கவேண்டிய இடத்தில் மற்றொரு வேற்றுமை உருபு மயங்கி (மாறி)யிருந்து பொருள் தருவது உருபு மயக்கம் எனப்படும். இவைபோல, குப்பை மேனியில் என்ன மயக்கம் உள்ளது எனக் காணின், வெளிப்படையாக ஒன்றும் தெரிந்திலது.

திகைப்பூண்டு, மதி மயக்கி, மன மயக்கி என்னும் பெயர்களை உடைய ஒரு செடி உள்ளது. அதை மிதித்தவர்

மனம் பேதுறுமாம். என்ன செய்வது - எங்கே செல்வது எவ்வாறு செல்வது - என்று ஒன்றும் புரியவொட்டாமல் திகைக்க வைக்குமாம். மயங்கச் செய்யுமாம். முறை மயங்கிச் செடி என்னும் பெயர் பெற்றுள்ள குப்பை மேனிச் செடி இப்படியொன்றும் மயக்குவதில்லை. அங்ஙனமாயின் இதில் என்ன மயக்கம் உள்ளது?

மேனி என்பது, உயர்ந்த அழகிய வடிவம் உடைய பொருளைக் குறிப்பது. குப்பை என்பது, இழிந்த இடத்தைக் குறிப்பது. இயற்கையாக, உயர்ந்த பொருள் உயர்ந்த இடத்தில் வைத்துக் காக்கப்பட வேண்டியதே முறை யாகும். மாறாக, உயர்ந்த பொருள் இழிந்த இடத்தில் இருக்குமாயின், இந்த நிலைமைக்கு 'முறை மயக்கம்' என்ற பெயரே கூறப்பட வேண்டியதாகும். இங்கே, நீதி வெண்பா என்னும் நூலின் முதல் பாடல் ஒப்பு நோக்கத் தக்கது:—

''தாமரைபொன் முத்து சவரம் கோரோசனை பால்
பூமருதேன் பட்டு புனுகு சவ்வாது – அம்அழல்மற்று
எங்கே பிறந்தாலும் எள்ளாரே; நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என்''.

என்பது பாடல். தாமரை, பொன், முத்து, சாமரை, கோரோசனை, பால் (பசுவின்பால்), தேன், பட்டு, புனுகு, சவ்வாது, நெருப்பு, ஆகியவை உயர்ந்த பொருள்களாம். இவை எங்கே பிறந்தாலும் – அதாவது – தோன்றிய இடம் இழிந்ததாக இருப்பினும் இகழப்படா. இவ்வாறே, நல்லவர்கள் எங்கே – எந்த ஏழைக் குடும்பத்தில் பிறந்தாலும் (ஏசு நாதரைப்போல் மாட்டுக் கொட்டிலில் பிறப்பினும்) உயர்வாக மதிக்கப் பெறுவர் - என்பது கருத்து.

மேனிச் செடிக்கும் இந்த நிலை பொருந்தும். உயர்ந்த இடத்தில் இருக்க வேண்டிய உயர் பொருள் போல்

**4) சுந்தரர் தேவாரம்-திருப்பனையூர்:**

''பாவிரி புலவர் பயிலுந் திருப்பனையூர்'' - (6)

''பஞ்சிமெல்லடியார் பயிலுந் திருப்பனையூர்'' - (10)

பாவிரி புலவர்களும் பஞ்சிமெல் லடியார்களும் திருப்பனையூரின் பல பகுதிகளிலும் பயின்றிருப்ப ராதலின் இவை இட மிகுதியாகும்.

### 7-ஆ. நான்கு மிகுதிகள்

பயிலியம் (பயிலிகம்) என்பதில், மேற்கூறியுள்ள நான்கு மிகுதிகளும் உள்ளன. குப்பை மேனிச் செடி, ஊரின் எல்லாப் பகுதிகளிலும் எல்லாக் காலத்தும் மிகுந்த அளவில் பயின் றிருத்தலின், இதற்கு இப்பெயர்கள் மிகவும் பொருந்தும். மழைக் காலத்தில் இதன் மிகுதிப் பயிற்சியைப் பற்றிச் சொல்லவேண்டிய தில்லை. இப்பெயர்கள் மிகுதியால் பெறப்பட்டவை.

## 8. செயலால் பெற்ற பெயர்:

### 8-1. முறை மயக்கிச் செடி

இப்பெயர் சி.வை. அகராதியில் தரப்பட்டுள்ளது. குறிஞ்சித் திணையில் (குறிஞ்சி நிலத்தில்) வளரக்கூடிய மரம், முல்லைத் திணையில் (முல்லை நிலத்தில்) இருப்ப தாகக் கூறுவது திணை மயக்கம் எனப்படும். ஒரு வேற்றுமை உருபு இருக்கவேண்டிய இடத்தில் மற்றொரு வேற்றுமை உருபு மயங்கி (மாறி)யிருந்து பொருள் தருவது உருபு மயக்கம் எனப்படும். இவைபோல, குப்பை மேனியில் என்ன மயக்கம் உள்ளது எனக் காணின், வெளிப்படையாக ஒன்றும் தெரிந்திலது.

திகைப்பூண்டு, மதி மயக்கி, மன மயக்கி என்னும் பெயர்களை உடைய ஒரு செடி உள்ளது. அதை மிதித்தவர்

மனம் பேதுறுமாம். என்ன செய்வது - எங்கே செல்வது எவ்வாறு செல்வது - என்று ஒன்றும் புரியவொட்டாமல் திகைக்க வைக்குமாம். மயங்கச் செய்யுமாம். முறை மயங்கிச் செடி என்னும் பெயர் பெற்றுள்ள குப்பை மேனிச் செடி இப்படியொன்றும் மயக்குவதில்லை. அங்ஙனமாயின் இதில் என்ன மயக்கம் உள்ளது?

மேனி என்பது, உயர்ந்த அழகிய வடிவம் உடைய பொருளைக் குறிப்பது. குப்பை என்பது, இழிந்த இடத்தைக் குறிப்பது. இயற்கையாக, உயர்ந்த பொருள் உயர்ந்த இடத்தில் வைத்துக் காக்கப்பட வேண்டியதே முறை யாகும். மாறாக, உயர்ந்த பொருள் இழிந்த இடத்தில் இருக்குமாயின், இந்த நிலைமைக்கு 'முறை மயக்கம்' என்ற பெயரே கூறப்பட வேண்டியதாகும். இங்கே, நீதி வெண்பா என்னும் நூலின் முதல் பாடல் ஒப்பு நோக்கத் தக்கது:—

''தாமரைபொன் முத்து சவரம் கோரோசனை பால்
பூமருதேன் பட்டு புனுகு சவ்வாது – அம்அழல்மற்று
எங்கே பிறந்தாலும் எள்ளாரே; நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என்''.

என்பது பாடல். தாமரை, பொன், முத்து, சாமரை, கோரோசனை, பால் (பசுவின்பால்), தேன், பட்டு, புனுகு, சவ்வாது, நெருப்பு, ஆகியவை உயர்ந்த பொருள்களாம். இவை எங்கே பிறந்தாலும் – அதாவது - தோன்றிய இடம் இழிந்ததாக இருப்பினும் இகழப்படா. இவ்வாறே, நல்லவர்கள் எங்கே – எந்த ஏழைக் குடும்பத்தில் பிறந்தாலும் (ஏசு நாதரைப்போல் மாட்டுக் கொட்டிலில் பிறப்பினும்) உயர்வாக மதிக்கப் பெறுவர் - என்பது கருத்து.

மேனிச் செடிக்கும் இந்த நிலை பொருந்தும். உயர்ந்த இடத்தில் இருக்க வேண்டிய உயர் பொருள் போல்

தோற்றமளிக்கும் மேனிச்-செடி, தாழ்ந்த இடமாகக் கருதப்படும் குப்பையில் இருப்பது முறையாகாது - முறை மயக்கமே யாகும். செந்தாமரைத் திருமகள் என்னாமல், சாக்கடைத் திருமகள் என்று கூறுவது போல் இருக்கின்ற தல்லவா இது? இந்த மயக்கத்தைச் செய்வதால், குப்பை மேனி, 'முறை மயக்கிச் செடி' என்னும் பெயர் பெற்றதாகக் கூறலாமன்றோ? சேற்றில் முளைக்கும் செந்தாமரை முதலிய பொருள்கள் போலவே குப்பையில் தோன்றும் மேனியும் பயனால் மதிக்கப் பெறும். 8-2. இப்பெயரைச் செயலால் பெற்ற பெயர் என்று சொல்வதல்லாமல், பண்பாலோ - இடத்தாலோ - சார்பாலோ பெற்ற பெயராகவும் கூறலாமே!

## 9. ஒன்றினமும் தன்னினமும்

'ஒன்றினம் முடித்தல் தன்னினம் முடித்தல்' என்னும் நன்னூல் கொள்கைப்படி, பிறப்பிடத்தால் மேனியின் இனத்தைச் சேர்ந்த குப்பை வேளை, குப்பைக் கீரை ஆகியவவை பற்றியும் ஈண்டு காண்பாம். இம் மூன்றுமே, வெப்பம் உண்டாக்குதல், வாதம் - கபம் முதலிய பிணிகளைப் போக்குதல் ஆகியவற்றாலும் ஓரினமாகும். இவை பற்றிய பாடல்களும் கருத்துகளும் இந்தக் கட்டுரை யில் முன்னமேயே கூறப்பட்டுள்ளன.

### 9.1. நித்திய கல்யாணி

வாடா மல்லிகைச் செடி, துலுக்க மல்லிகைச் செடி ஆகியவற்றை, அவற்றின் பண்பினால், நித்திய கல்யாணி என்று கூறுவதுண்டு. ஆனால், சா.சி.பி. அகர முதலியோ, குப்பை வேளை என்னும் செடிக்கும் நித்திய கல்யாணி என்னும் பெயர் தந்துள்ளது.

குப்பை வேளை, சங்க இலக்கியமாகிய சிறுபாணாற்றுப் படையில் இடம் பெற்றுள்ளது:—

''ஒல்குபசி உழந்த ஒடுங்கு நுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம் வீட''... (135-140)

என்பது பாடல் பகுதி. மிக்க வறுமை நிலையை இப்பகுதி ஓவியப் படுத்திக் காட்டுகிறது. கிணைப் பறை கொட்டு வோனுடைய ஏழை மனைவி, பசியினால் தளர்ந்து வருந்துகிறாள். நுண்ணிய இடுப்பு தளர்ச்சியால் ஒடிந்து விடும்போல் தோன்றுகிறது. குப்பையில் உள்ள வேளைக் கீரையைத் தன் கையின் கூரிய நகத்தால் கிள்ளிப் பறித்து வந்தாள்; உப்பும் இல்லாமையால், வறிதே வேகவைத்து அடுப்பினின்றும் இறக்கினாள்; (வேகவைக்கத் தண்ணீராவது கிடைத்துள்ளது போலும்). உப்பில்லாத குப்பை வேளைக் கீரையை உண்பதை, அறிவில்லாத – செருக்குடைய மாந்தர் சிலர் காணின் இகழ்வர் என நாணுகின்றாள்; அதனால், யாரும் காணாதவாறு கதவைச் சாத்திவிட்டாள்; அக்கீரை உணவை, தன் பெரிய குடும்பச் சுற்றத்துடன் சேர்ந்து உண்கிறாள். அப்படியும் மிக்க பசி போகாமல் வருத்துகிறது என்பது பாடல் செய்தி.

மனையில் எது இருப்பினும் இல்லாவிடினும், மனைத் தோட்டத்தில், பசியைப் போக்க இந்தக் குப்பை வேளைக் கீரை என்றும் இருக்கும் ஆதலின் இதற்கு 'நித்திய கல்யாணி' என்னும் பெயர் இட்டனர் போலும்!

தோற்றமளிக்கும் மேனிச்-செடி, தாழ்ந்த இடமாகக் கருதப்படும் குப்பையில் இருப்பது முறையாகாது - முறை மயக்கமே யாகும். செந்தாமரைத் திருமகள் என்னாமல், சாக்கடைத் திருமகள் என்று கூறுவது போல் இருக்கின்றதல்லவா இது? இந்த மயக்கத்தைச் செய்வதால், குப்பை மேனி, 'முறை மயக்கிச் செடி' என்னும் பெயர் பெற்றதாகக் கூறலாமன்றோ? சேற்றில் முளைக்கும் செந்தாமரை முதலிய பொருள்கள் போலவே குப்பையில் தோன்றும் மேனியும் பயனால் மதிக்கப் பெறும். 8-2. இப்பெயரைச் செயலால் பெற்ற பெயர் என்று சொல்வதல்லாமல், பண்பாலோ - இடத்தாலோ - சார்பாலோ பெற்ற பெயராகவும் கூறலாமே!

## 9. ஒன்றினமும் தன்னினமும்

'ஒன்றினம் முடித்தல் தன்னினம் முடித்தல்' என்னும் நன்னூல் கொள்கைப்படி, பிறப்பிடத்தால் மேனியின் இனத்தைச் சேர்ந்த குப்பை வேளை, குப்பைக் கீரை ஆகியவவை பற்றியும் ஈண்டு காண்பாம். இம் மூன்றுமே, வெப்பம் உண்டாக்குதல், வாதம் - கபம் முதலிய பிணிகளைப் போக்குதல் ஆகியவற்றாலும் ஓரினமாகும். இவை பற்றிய பாடல்களும் கருத்துகளும் இந்தக் கட்டுரையில் முன்னமேயே கூறப்பட்டுள்ளன.

### 9.1. நித்திய கல்யாணி

வாடா மல்லிகைச் செடி, துலுக்க மல்லிகைச் செடி ஆகியவற்றை, அவற்றின் பண்பினால், நித்திய கல்யாணி என்று கூறுவதுண்டு. ஆனால், சா.சி.பி. அகர முதலியோ, குப்பை வேளை என்னும் செடிக்கும் நித்திய கல்யாணி என்னும் பெயர் தந்துள்ளது.

குப்பை வேளை, சங்க இலக்கியமாகிய சிறுபாணாற்றுப் படையில் இடம் பெற்றுள்ளது:—

''ஒல்குபசி உழந்த ஒடுங்கு நுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம் வீட''... (135-140)

என்பது பாடல் பகுதி. மிக்க வறுமை நிலையை இப்பகுதி ஓவியப் படுத்திக் காட்டுகிறது. கிணைப் பறை கொட்டு வோனுடைய ஏழை மனைவி, பசியினால் தளர்ந்து வருந்துகிறாள். நுண்ணிய இடுப்பு தளர்ச்சியால் ஒடிந்து விடும்போல் தோன்றுகிறது. குப்பையில் உள்ள வேளைக் கீரையைத் தன் கையின் கூரிய நகத்தால் கிள்ளிப் பறித்து வந்தாள்; உப்பும் இல்லாமையால், வறிதே வேகவைத்து அடுப்பினின்றும் இறக்கினாள்; (வேகவைக்கத் தண்ணீராவது கிடைத்துள்ளது போலும்). உப்பில்லாத குப்பை வேளைக் கீரையை உண்பதை, அறிவில்லாத – செருக்குடைய மாந்தர் சிலர் காணின் இகழ்வர் என நாணுகின்றாள்; அதனால், யாரும் காணாதவாறு கதவைச் சாத்திவிட்டாள்; அக்கீரை உணவை, தன் பெரிய குடும்பச் சுற்றத்துடன் சேர்ந்து உண்கிறாள். அப்படியும் மிக்க பசி போகாமல் வருத்துகிறது என்பது பாடல் செய்தி.

மனையில் எது இருப்பினும் இல்லாவிடினும், மனைத் தோட்டத்தில், பசியைப் போக்க இந்தக் குப்பை வேளைக் கீரை என்றும் இருக்கும் ஆதலின் இதற்கு 'நித்திய கல்யாணி' என்னும் பெயர் இட்டனர் போலும்!

## 9.2 அமெரிக்கக் குப்பை வேளை

பேச்சு வழக்கில் 'பீநாறிப் பூ', 'காக்காப் பூச்செடி', 'பீங்கான் பூச்செடி', 'சுடுகாட்டுச் செடி' என்றும், தமிழ் மருத்துவர்களால் 'சுடலைப் பூ' என்றும், மர நூலாரால் 'வின்கா ரோசியா' (Vinca Rosea) என்றும் பெயர் சொல்லப் படுகின்ற ஒருவகைக் குப்பை வேளை இந்தியநாடு முழுவதிலும் இருக்கிறது. இதன் தாயகம் 'அமெரிக்க நாடு' என்றும் சொல்லப்படுகிறது. இற்றைக்குமுன் ஐந்நூறு ஆண்டுகால அளவுக்குள்தான் - அதாவது 1492-ஆம் ஆண்டு தான், கொலம்பசு அமெரிக்கக் கண்டத்தை முதல் முதல் கண்டுபிடித்தார்.

எனவே, இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்டதாகச் சொல்லக்கூடிய சிறுபாணாற்றுப் படையில் சொல்லப்பட்டுள்ள குப்பை வேளை என்னும் செடி, அமெரிக்காவிலிருந்து வந்ததினும் வேறுபட்டதாக இருக்க வேண்டும்.

மற்றும், நாடோறும் (நித்தியம்) ஒரே நிலையில் இருப்பதற்கும் 'நித்திய கல்யாணி' என்று சொல்வது வழக்கம். இந்தக் குப்பை வேளை நித்தியம் தவறாமல் உதவக்கூடிய (ரெடிமேடு) சரக்கு ஆதலின், 'நித்திய கல்யாணி' என்னும் பெயர் பெற்றது என்றும் சொல்லலாமோ!

## 9.3 பேய்ப் பலாதி

'பேய்ப் பலாதி = குப்பைக் கீரை' எனச் சா.சி.பி. அகர முதலியிலும், 'பேய்ப் பலாதிக் கீரை = குப்பைக்கீரைச் செடி' எனச் சி.வை. அகராதியிலும் சொற்பொருள் விளக்கம் செய்யப்பட்டுள்ளது. குப்பையில் பேய்போல் நிரம்ப மண்டிக் கிடக்கும் கீரையாதலின், குப்பைக் கீரைக்குப் 'பேய்ப் பலாதி' எனப் பெயர் இட்டனர் போலும். தாறுமாறாய் ஏராளமாக

மண்டிக் கிடப்பதைப் 'பேயாட்டம்' மண்டிக் கிடக்கிறது என்று சொல்லும் உலக வழக்கு உண்டு. ஒருமுறை எங்கள் வீட்டுத் தோட்டத்தில், ஏராளமாகப் படர்ந்து கிளைத்துக் கொண்டிருந்த தூதுவளையைக் கண்ட விருந்தினர் ஒருவர், 'என்ன இது! பேயாட்டம் மண்டிப் போயிற்றே!' என்று கூறியது இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இந்தக் குப்பைக் கீரை இலக்கியத்திலும் இடம்பெற்றுள்ளது. தன் தாயும் மனைவி மக்களும் பசியால் வாடும் வறுமையின் உயரிய எல்லையை ஓவியப்படுத்திக் கூறி, புலவன் ஒருவன் குமண வள்ளலிடம் பரிசு கேட்பதாக அமைந்த பரிசில் கடா நிலை என்னும் துறையின் பேரால் பெருஞ்சித்திரனார் பாடியுள்ள புறநானூற்றுப் பாடல் பகுதியொன்று, படிப்பவரின் - கேட்பவரின் கல் மனத்தையும் கரையச் செய்துவிடும்; புறநானூறு - 159.

''வாழு நாளோடு யாண்டுபல உண்மையின்
தீர்தல் செல்லாது என்உயிர்எனப் பலபுலந்து
கோல் காலாகக் குறும்பல ஒதுங்கி
நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்துயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாயும்,
பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கில் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய முலையிள் பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் அகைத்த
முற்றா இளந்தளிர் கொய்துகொண்டு உப்புஇன்று
நீர் உலையாக ஏற்றி மோர்இன்று
அவிழ்ப்பதம் மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த உடுக்கையள் அறம்பழியாத்
துவ்வாளாகிய என் வெய்யோளும்
என்றாங்கு இருவர் நெஞ்சமும் உவப்ப'' (1-15)

## 9.2 அமெரிக்கக் குப்பை வேளை

பேச்சு வழக்கில் 'பீநாறிப் பூ', 'காக்காப் பூச்செடி', 'பீங்கான் பூச்செடி', 'சுடுகாட்டுச் செடி' என்றும், தமிழ் மருத்துவர்களால் 'சுடலைப் பூ' என்றும், மர நூலாரால் 'வின்கா ரோசியா' (Vinca Rosea) என்றும் பெயர் சொல்லப் படுகின்ற ஒருவகைக் குப்பை வேளை இந்தியநாடு முழுவதிலும் இருக்கிறது. இதன் தாயகம் 'அமெரிக்க நாடு' என்றும் சொல்லப்படுகிறது. இற்றைக்குமுன் ஐந்நூறு ஆண்டுகால அளவுக்குள் தான் – அதாவது 1492-ஆம் ஆண்டு தான், கொலம்பசு அமெரிக்கக் கண்டத்தை முதல் முதல் கண்டுபிடித்தார்.

எனவே, இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்டதாகச் சொல்லக்கூடிய சிறுபாணாற்றுப் படையில் சொல்லப்பட்டுள்ள குப்பை வேளை என்னும் செடி, அமெரிக்காவிலிருந்து வந்ததினும் வேறுபட்டதாக இருக்க வேண்டும்.

மற்றும், நாடோறும் (நித்தியம்) ஒரே நிலையில் இருப்பதற்கும் 'நித்திய கல்யாணி' என்று சொல்வது வழக்கம். இந்தக் குப்பை வேளை நித்தியம் தவறாமல் உதவக்கூடிய (ரெடிமேடு) சரக்கு ஆதலின், 'நித்திய கல்யாணி' என்னும் பெயர் பெற்றது என்றும் சொல்லலாமோ!

## 9.3 பேய்ப் பலாதி

'பேய்ப் பலாதி = குப்பைக் கீரை' எனச் சா.சி.பி. அகர முதலியிலும், 'பேய்ப் பலாதிக் கீரை = குப்பைக்கீரைச் செடி' எனச் சி.வை. அகராதியிலும் சொற்பொருள் விளக்கம் செய்யப்பட்டுள்ளது. குப்பையில் பேய்போல் நிரம்ப மண்டிக் கிடக்கும் கீரையாதலின், குப்பைக் கீரைக்குப் 'பேய்ப் பலாதி' எனப் பெயர் இட்டனர் போலும். தாறுமாறாய் ஏராளமாக

மண்டிக் கிடப்பதைப் 'பேயாட்டம்' மண்டிக் கிடக்கிறது என்று சொல்லும் உலக வழக்கு உண்டு. ஒருமுறை எங்கள் வீட்டுத் தோட்டத்தில், ஏராளமாகப் படர்ந்து கிளைத்துக் கொண்டிருந்த தூதுவளையைக் கண்ட விருந்தினர் ஒருவர், 'என்ன இது! பேயாட்டம் மண்டிப் போயிற்றே!' என்று கூறியது இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இந்தக் குப்பைக் கீரை இலக்கியத்திலும் இடம்பெற் றுள்ளது. தன் தாயும் மனைவி மக்களும் பசியால் வாடும் வறுமையின் உயரிய எல்லையை ஓவியப்படுத்திக் கூறி, புலவன் ஒருவன் குமண வள்ளலிடம் பரிசு கேட்பதாக அமைந்த பரிசில் கடா நிலை என்னும் துறையின் பேரால் பெருஞ்சித்திரனார் பாடியுள்ள புறநானூற்றுப் பாடல் பகுதி யொன்று, படிப்பவரின் - கேட்பவரின் கல் மனத்தையும் கரையச் செய்துவிடும்; புறநானூறு - 159.

''வாழு நாளோடு யாண்டுபல உண்மையின்
தீர்தல் செல்லாது என்உயிர்எனப் பலபுலந்து
கோல் காலாகக் குறும்பல ஒதுங்கி
நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்துயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாயும்,
பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கில் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய முலையிள் பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் அகைத்த
முற்றா இளந்தளிர் கொய்துகொண்டு உப்புஇன்று
நீர் உலையாக ஏற்றி மோர்இன்று
அவிழ்ப்பதம் மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த உடுக்கையள் அறம்பழியாத்
துவ்வாளாகிய என் வெய்யோளும்
என்றாங்கு இருவர் நெஞ்சமும் உவப்ப'' (1-15)

''நான்தான் மிகப்பல ஆண்டுகள் வாழ்ந்து விட்டேனே- இன்னும் எனக்கு எதற்கு வாழ்நாள்? - என் தலைவிதி இன்னும் பல ஆண்டு காலம் எனக்கு உள்ளது போலும்! - அதனால் என் உயிர் போகவில்லை என்று தன் பல்லாண்டு வாழ்நாளை வெறுத்து, கோலையே காலாகக் கொண்டு, விரைந்து நடக்க இயலாமையால், அடிமேல் அடிவைத்துப் பல குறுநடையிட்டு ஒதுங்கி நடந்து, வெள்ளை நூல் விரித்தாற் போன்ற தலைமயிருடன் தெரியாத கண்ணை மூடிக்கொண்டு, வீட்டு முற்றம் வரையிலுங்கூடப் போக முடியாமல் முதிர்ந்து தளர்ந்து வருந்துகிறாள் தாய்க் கிழவி. மனைவியோ, நிறங் குன்றிய உடலொடு பல்வகைத் துன்பத் தால் வருந்தி, இடுப்பைச் சுற்றியுள்ள குழந்தைச் சிறார் பலர், பால் வராமையால் குடிக்காமல் கையால் பிசைந்து தின்னுகிற வாடிய முலையுடன், மிகவும் துன்புற்று, குப்பையில் தானாக முளைத்த கீரைச் செடியில் முன்பு பறித்து விட்ட கணுக்களிலிருந்து புதிதாகக் கிளைத்துள்ள முற்றாத இளந்தளிரைப் பறித்துவந்து, உப்புகூட இல்லாத வெறுந் தண்ணீர் உலையில் இட்டு வேகவைத்து எடுத்து, மோரும் இன்றி, ஆரவாரமான அமிழ்த உணவை மறந்து, சரியாக வேகாத பச்சை இலையைத் தின்று, அழுக்கு ஏறிய - அளவில் குறைந்த ஆடையுடையவளாகி, தம் குடும்பத் திற்கு நல்லது நல்காத அறக் கடவுளைப் பழித்துக்கொண்டு, ஒரு நலனும் துய்க்காமல், அதே நேரம் என்மேல் பெரு விருப்பம் கொண்டவளாய் உள்ளாள் என்பது பாடல் பகுதியின் கருத்து.

இதில், குழந்தைகள் (சிலர் அல்லர்) பலர் முலையையே தின்னத் தொடங்குதல், குப்பையில் உள்ள கீரைச் செடி, அதில் உள்ள கீரைகள் முன்பே பல முறை பறிக்கப் பட்டிருத்தல், கணுவிலிருந்து புதிதாக முளைத்தல், முற்றா திருத்தல், இளைய தளிர்க் கொழுந்தும் வேறு உணவுப்

பொருள் இல்லாமையால் பறிக்கப்படல், உப்பும் இல்லாமை, எண்ணெய்-தாளிதம் ஒன்றும் இல்லாத வெற்று நீர் உலை, மோரும் இன்மை, நல்ல உணவு என ஒன்று உண்டு என்பதை மறந்தே போனமை, பசி தாங்காமையாலும் எரி பொருள் போதாமையாலும் சரியாக வேகவிடாமல் விரைந்து இறக்கி விட்டதால் பசுமையாகவே இருக்கும் கீரையுணவு, குறைந்த அழுக்கு உடை, கடவுளைப் பழித்தல், இன்பம் என்பதையே துய்த்தறியாமை, இந்த நிலையிலும் கணவன் மீது பேரன்பு கொண்டுள்ளமை - ஆகிய செய்திகள் உள்ளத்தை உருக்குவன வாகும்.

இப்புறப் பாடல் பகுதியால், வறியோர்க்குக் குப்பைக் கீரை புரியும் பேருதவி புலனாகும். மழை பெய்யும் இரவில் பசியோடு வந்திருக்கும் சிவனடியார்க்கு உணவு படைக்க, இளையான் குடிமாற நாயனார், தோட்டத்துக் கீரையைப் பறித்துக் கொண்டு வந்து, கறி சமைக்க மனைவியிடம் தந்தமை கூறும் பெரிய புராண வரலாறு ஈண்டு ஒப்பு நோக்கற் பாற்று.

இதுகாறும், குப்பை மேனி, குப்பை வேளை, குப்பைக் கீரை ஆகியவற்றின் பெயர்க் காரணங்கள் விளக்கப் பட்டன.

## 10. நூலும் பெயர்களும்

10.1 தேரையர் பாடலில் காந்தி மெய் என்னும் பெயரும், சங்கத்து அகராதியில் திருமேனி-திரிபுரத்தான் என்பனவும், வைத்திய மலையகராதியில் அக்கினிச் சிவம்-அரி மஞ்சரி - தனி வல்லிப் பெருமாள்-மயிலம் - பயிலியம் என்பனவும், மூலிகை வைத்திய அகராதியில் தெருவிலழகு-மேனி - திருமேனி அழகு-சக்கிர புட்பி-பயிலியம்-பூனை வணங்கி என்பனவும், சித்த வைத்திய அகராதியில் வினை

''நான்தான் மிகப்பல ஆண்டுகள் வாழ்ந்து விட்டேனே- இன்னும் எனக்கு எதற்கு வாழ்நாள்? - என் தலைவிதி இன்னும் பல ஆண்டு காலம் எனக்கு உள்ளது போலும்! - அதனால் என் உயிர் போகவில்லை என்று தன் பல்லாண்டு வாழ்நாளை வெறுத்து, கோலையே காலாகக் கொண்டு, விரைந்து நடக்க இயலாமையால், அடிமேல் அடிவைத்துப் பல குறுநடையிட்டு ஒதுங்கி நடந்து, வெள்ளை நூல் விரித்தாற் போன்ற தலைமயிருடன் தெரியாத கண்ணை மூடிக்கொண்டு, வீட்டு முற்றம் வரையிலுங்கூடப் போக முடியாமல் முதிர்ந்து தளர்ந்து வருந்துகிறாள் தாய்க் கிழவி. மனைவியோ, நிறங் குன்றிய உடலொடு பல்வகைத் துன்பத் தால் வருந்தி, இடுப்பைச் சுற்றியுள்ள குழந்தைச் சிறார் பலர், பால் வராமையால் குடிக்காமல் கையால் பிசைந்து தின்னுகிற வாடிய முலையுடன், மிகவும் துன்புற்று, குப்பையில் தானாக முளைத்த கீரைச் செடியில் முன்பு பறித்து விட்ட கணுக்களிலிருந்து புதிதாகக் கிளைத்துள்ள முற்றாத இளந்தளிரைப் பறித்துவந்து, உப்புகூட இல்லாத வெறுந் தண்ணீர் உலையில் இட்டு வேகவைத்து எடுத்து, மோரும் இன்றி, ஆரவாரமான அமிழ்த உணவை மறந்து, சரியாக வேகாத பச்சை இலையைத் தின்று, அழுக்கு ஏறிய - அளவில் குறைந்த ஆடையுடையவளாகி, தம் குடும்பத் திற்கு நல்லது நல்காத அறக் கடவுளைப் பழித்துக்கொண்டு, ஒரு நலனும் துய்க்காமல், அதே நேரம் என்மேல் பெரு விருப்பம் கொண்டவளாய் உள்ளாள் என்பது பாடல் பகுதியின் கருத்து.

இதில், குழந்தைகள் (சிலர் அல்லர்) பலர் முலையையே தின்னத் தொடங்குதல், குப்பையில் உள்ள கீரைச் செடி, அதில் உள்ள கீரைகள் முன்பே பல முறை பறிக்கப் பட்டிருத்தல், கணுவிலிருந்து புதிதாக முளைத்தல், முற்றா திருத்தல், இளைய தளிர்க் கொழுந்தும் வேறு உணவுப்

பொருள் இல்லாமையால் பறிக்கப்படல், உப்பும் இல்லாமை, எண்ணெய்-தாளிதம் ஒன்றும் இல்லாத வெற்று நீர் உலை, மோரும் இன்மை, நல்ல உணவு என ஒன்று உண்டு என்பதை மறந்தே போனமை, பசி தாங்காமையாலும் எரி பொருள் போதாமையாலும் சரியாக வேகவிடாமல் விரைந்து இறக்கி விட்டதால் பசுமையாகவே இருக்கும் கீரையுணவு, குறைந்த அழுக்கு உடை, கடவுளைப் பழித்தல், இன்பம் என்பதையே துய்த்தறியாமை, இந்த நிலையிலும் கணவன் மீது பேரன்பு கொண்டுள்ளமை - ஆகிய செய்திகள் உள்ளத்தை உருக்குவன வாகும்.

இப்புறப் பாடல் பகுதியால், வறியோர்க்குக் குப்பைக் கீரை புரியும் பேருதவி புலனாகும். மழை பெய்யும் இரவில் பசியோடு வந்திருக்கும் சிவனடியார்க்கு உணவு படைக்க, இளையான் குடிமாற நாயனார், தோட்டத்துக் கீரையைப் பறித்துக் கொண்டு வந்து, கறி சமைக்க மனைவியிடம் தந்தமை கூறும் பெரிய புராண வரலாறு ஈண்டு ஒப்பு நோக்கற் பாற்று.

இதுகாறும், குப்பை மேனி, குப்பை வேளை, குப்பைக் கீரை ஆகியவற்றின் பெயர்க் காரணங்கள் விளக்கப் பட்டன.

## 10. நூலும் பெயர்களும்

10.1 தேரையர் பாடலில் காந்தி மெய் என்னும் பெயரும், சங்கத்து அகராதியில் திருமேனி-திரிபுரத்தான் என்பனவும், வைத்திய மலையகராதியில் அக்கினிச் சிவம்-அரி மஞ்சரி - தனி வல்லிப் பெருமாள்-மயிலம் - பயிலியம் என்பனவும், மூலிகை வைத்திய அகராதியில் தெருவிலழகு-மேனி - திருமேனி அழகு-சக்கிர புட்பி-பயிலியம்-பூனை வணங்கி என்பனவும், சித்த வைத்திய அகராதியில் வினை

விகாசச் செடி-அக்கினிச் சிவச் செடி, மயிலமேனிச் செடி, இந்திரை மேனி-ஊருடன் முதலியார்-கடிப்பாங்கிச் செடி-பூனைப் பகைச் செடி - பூனை வணங்கிச் செடி - பயிலிய மேனிச் செடி-முறை மயக்கிச் செடி-பேய்ப் பலாதிக் கீரை என்பனவும், சா.சி.பி, அகர முதலியில் மற்ற பெயர்களும் குப்பை மேனிக்கு உரியனவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

## 10.2 பொருட் பண்பு நூற்பெயர்கள்

குப்பை மேனியின் செயல்-பண்பு கருதி, முருகேச முதலியாரின் பொருட் பண்பு நூலில் பின் வரும் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன:

துயர் அடக்கி, புழுக் கொல்லி, பெருமலம் போக்கி, சிறு நீர்ப் பெருக்கி, வாந்தி உண்டாக்கி, கோழை அகற்றி, சூதம் உண்டாக்கி - என்பனவாம். இவற்றின் பெயர்க் காரணம் சொல்லாமலே விளங்கும்.

## 10.3 பிற மொழிப் பெயர்கள்

தெலுங்கு — குப்பி செட்டு (Kuppi Chettu)
மலையாளம் — குப்ப மணி (Kuppa-mani)
கன்னடம் — குப்பி கிதா (Kuppigida)
இந்தி (Hindi)— குப்பி (Kuppi)
வங்காளம் (Beng) குபி (Kupi)

மேலே குறிப்பிட்டுள்ள குப்பை மேனியைக் குறிக்கும் சில மொழிப் பெயர்கள், குப்பை என்பதற்கு உரிய வேர்ச் சொல்லைத் தாமுங் கொண்டு தமிழோடு ஒத்திருத்தல் குறிப்பிடத் தக்கதாகும்.

# 3. காணாமல் பூ பூக்கும் — கண்டு காய் காய்க்கும்

## I விடுகதைகள்

1. கண்டு பூ பூக்கும் — காணாமல் காய் காய்க்கும் - அது எது?

2. காணாமல் பூ பூக்கும் — கண்டு காய் காய்க்கும் - அது எது?

3. பூத்தும் காய்க்காத மரம் எது?

4. பூவாது காய்க்கும் மரம் எது?

இவ்வாறு சிறுவர் சிறுமியர் விடுகதைகள் போடுவதும் அவற்றை வெடிப்பதும் உண்டு.

1.1 முதல் விடுகதையின் பதில் 'பூசணி' ஆகும். பூசணிப் பூ பூத்திருப்பது நன்றாகத் தெரியும். ஆனால் காய்க்கத் தொடங்குவது கண்ணுக்குத் தெரியாது. பூசணிப் பூ பூப்பதற்கு முன் அரும்பு நிலையில் உள்ளபோதே சூல் கொண்டு விடும். பூவினுள் பிஞ்சு தோன்றிப் பருக்கத் தொடங்கும். மலர் சாய்ந்ததும் காய் வெளியில் தெரிய வரும்.

இரண்டாவது விடுகதையின் பதில் அத்தி, ஆல் முதலியன. இவை பூப்பது தெரியாது; காய்ப்பதே தெரியும். முறையே மூன்றாவது நான்காவது விடுகதைகளின் விடைக

ளாகிய பூத்தும் காய்க்காத மரங்களும், பூவாது காய்க்கும் மரங்களும் யாவை என்பது அடுத்து விளக்கப்படும்.

### பூவாதும் காய்க்கும் மரங்களும் - பூத்தும் காயா மரங்களும்

### 1.1.1 இலக்கியச் சான்று

பூக்காமலே காய்க்கும் மரங்களும் உள்ளன; நல்லன அறிந்து நன்கு ஒழுகுபவர்களும் நல்லறிவு நூல் வல்லவர் களும், மூவாத இளைஞராயிருப்பினும், மூத்த தகுதியின ராவர்; மக்கள் செயற்கையாக விதைக்காமலே, இயற்கை யாக முளைக்கும் விதைகளும் உள்ளன; மேதைக்கு ஒருவரும் உரைக்காமலே நல்லுணர்வு தோன்றும்.

இவற்றிற்கு எதிர் மாறாக, பூத்தாலும் காய்க்காத மரங்களும் உள்ளன; நல்லன அறியாரும் நல்ல நூல் அறிவு பெறாதாரும், அகவை முதிர்ந்திருப்பினும், மூத்தவர்க்கு உரிய தகுதியினைப் பெற்றவராகார்; பாத்தியில் நட்டாலும் முளைக்காமல் கெட்டுப்போகும் விதைகளும் உண்டு; பேதைக்கு எவ்வளவு உரைத்தாலும் நல்லுணர்வு தோன்றாது.

இக்கருத்துகள் அமைந்த பாடல்கள், சங்க காலஞ் சார்ந்த பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாகிய சிறுபஞ்சமூலம் என்னும் நூலில் உள்ளன. அவையாவன:

''பூவாது காய்க்கும் மரமுமுள, நன்றறிவார்
மூவாது மூத்தவர் நூல்வல்லார் — தாவா
விதையாமை நாறும் வித்துள, மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு''. (22)

''பூத்தாலும் காயா மரமுமுள, நன்றறியார்
மூத்தாலும் மூவார் நூல் தேற்றாதார் — பாத்திப்
புதைத்தாலும் நாறா வித்துள, பேதைக்கு
உரைத்தாலும் செல்லா துணர்வு'' (23)

### 1.1.2 சில மரங்கள் அறிமுகம்

ஒவ்வொரு பாட்டிலும் உள்ள அவ்வைந்து செய்திகளுள், பூவாது காய்க்கும் மரம், பூத்தும் காய்க்காத மரம் ஆகிய வற்றை மட்டும் இவண் எடுத்துக் கொள்வோம். பூத்தாலும் காயா மரங்கள், பாதிரி மரம் முதலாயின என்று சிறுபஞ்ச மூல உரையாசிரியர் பு. சி. புன்னைவன நாதனார் கூறுகின் றார். பூத்தும் காய்க்காத மரங்கள், வேங்கை மரம், அவகோசி மரம் முதலியன என்று சாம்பசிவம்பிள்ளை தம் தமிழ்-ஆங்கில அகர முதலியில் கூறியுள்ளார். ''சண்பகமும் வேங்கையும் வண்டுணா மலர் மரம்'' என்று திவாகர நிகண்டு (4-81) தெரிவிக்கிறது; பூத்தும் காய்க்காத மரங் களை விட்டு, பூவாமலே காய்க்கும் மரங்களைப் பற்றி இனி மிக்க அக்கறை எடுத்துக் கொள்வோமாக. இக்கட்டுரை பூவாது காய்க்கும் மரங்களைப் பற்றியதே யாகும்.

## 2. பூவா மரப் பெயர்கள்

பூக்காது காய்க்கும் மரங்கட்கு உரிய பெயர்களாக, கோளி, கோளிகம், ஆடலை, ஆண்டலை, கடகம், பூவா மரம், புட்ப சூனியம், அதிசயப் புட்பி, அபுட்ப பலம், பூவாது காய்க்கும் மரம் முதலிய பெயர்கள் பல்வேறு அகர முதலிகளிற் கூறப்பட்டுள்ளன, அத்தி மரம், ஆல மரம், அரச மரம் முதலியன, பூவாது காய்க்கும் மரங்களாக அகர முதலிகளிற் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலியன என்பதில், பலா மரம், அன்னாசி ஆகியவற்றையும் நாம் அடக்கிக் கொள்ளலாம்.

## 3. பெயர்க் காரணம்

புட்ப சூனியம், அதிசயப் புட்பி, அபுட்ப பலம் என்னும் வடமொழிப் பெயர்கள், பூ இல்லாதது என்னும் பொருள்

உடைமை எளிதில் விளங்கும். கோளி என்னும் சொல்லுக்கு, கொள்ளுபவன் - (தானாகப்) பொருள் விளங்கிக் கொள்ளு பவன் என்று பொருள் கூறலாம். "கோளாளன் என்பான் மறவாதான்" என்னும் திரிகடுக நூல் (12) ஆட்சியும், 'கொள்வோன் கொள்வகை', 'உரை கோளாளன்' என்னும் நன்னூல் (36, 37) ஆட்சியும் காண்க. எனவே, பூ இல்லாமலே தாமாகக் காய்க்கும் மரங்கள் கோளி, கோளிகம என்னும் பெயர் பெற்றிருக்கலாம்.

பொதுவாக, பூவில் காயாக மாறும் பகுதி, அண்ட-கோசம் (Gynaecium) எனப்படும் பெண்பாகமே. பூக்காமல் காய்க்கும் மரங்கள், பெண் தன்மை இன்றி, ஆண் தன்மையே மிக்குடையன என்னும் கருத்தில் ஆடலை, ஆண்டலை என்னும் பெயர்கள் வைக்கப்பட்டிருக்கலாம். இப்பெயர்கள் ஆளுமை, ஆண்மை, ஆள்தல் என்னும் வேர்ப் பொருள் உடையன என்று கூறலாம். சரியான காரணம் தெரியாத காலத்தில் இப்பெயர்கள் வைக்கப்பட்டிருக்கலாம்.

அத்தி, ஆல், அரசு, பலா, அன்னாசி ஆகிய மரங்கட்குப் பூ உண்டா - இல்லையா? பூத்துக் காய்க்கின்றனவா - பூவாமற் காய்க்கின்றனவா? - என்று ஆராய்ந்து காண வேண்டும். இம் மரங்களின் பேராளி (பிரதிநிதி) மரமாக அத்தி மரத்தை எடுத்துக் கொள்வோம். அது குறித்து ஆராய்ந்து காணும் முடிபுகளைக் கொண்டு மற்ற மரங்கள் பற்றியும் தெரிந்து கொள்ளலாம். எனவே, அத்தியிலிருந்து விளக்கத்தைத் தொடங்குவோமாக.

## 4. "அத்தி பூத்தாற் போல...."

'அத்தி பூத்தாற்போல இருக்கிறதே உங்கள் வருகை!' என்று ஒருவர் மற்றொருவரை நோக்கிக் கேட்பதை உலகியலில் எப்போதோ சில நேரங்களில் கண்டிருக்கிறோம்.

'இவன்வேறு வந்துவிட்டானே-எப்பொழுது தொலைவான்?' என்று வெறுக்கக்கூடிய நிலையில் அடிக்கடி வந்து ஆணியடித்துக்கொண்டு அமர்ந்து விடுபவர்களைப் பார்த்து இப்படி யாரும் கேட்பதில்லை. நீண்ட நாட்களாக வராமல், எப்போதோ ஒருநேரம் அரிதாக வந்து தலையைக் காட்டிவிட்டுப் போனவர்களை நோக்கியே இப்படிக் கேட்பது உலக வழக்கம். அரிதாக வருவதற்கும் அத்தி பூப்பதற்கும் என்ன ஒப்புமை? ஆராய்வோம்.

நாம் சிறுவராயிருந்த போது அத்திப் பூவைப் பற்றி என்னென்னவோ கேள்விப்பட்டிருக்கிறோம்-சிறுவர்களோடு பேசிக் கொண்டு இருந்திருக்கிறோம். ஏன்-எப்போதுமே பலர், சிறு வயதில் பேசிக்கொண்ட-கேள்விப்பட்ட அதே அளவில்தான் உள்ளனர்!

## 4.1 அத்தி-வினா விடை

'அத்திப் பூ பார்த்திருக்கிறாயா?' என்று கேட்பான் ஒரு சிறுவன். 'அத்தி மரத்தில் பூவே பூப்பதில்லை' என்பான் மற்றொரு சிறுவன். 'பூ இல்லாமல் எப்படி காய் காய்க்கும்?' என்று கேட்பான் இன்னொருவன். 'இருட்டினதும் பூத்து விடிவதற்குள் காய்த்துவிடும் என்று ஒரு பதில் வரும். 'அப்படி யென்றால் இதுவரையும் அத்திப் பூவை யாராவது பார்த்திருக்க வேண்டுமே' என்று ஒரு கேள்வி புறப்படும். 'எல்லோரும் தூங்கிய பின்பு பூத்து, எல்லோரும் விழித்துக் கொள்வதற்குள் காய்த்துவிடும்' என்ற பதில் கிடைக்கும். 'அப்படி யென்றாலும் யாராவது ஒருவர் வேண்டுமென்றே இரவு முழுவதும் விழித்திருந்து கண்டுபிடித்திருப்பாரே' என்ற கேள்வி எழும். 'பட்டைக் குள்ளே பூத்து, பிறகு காயாக வெளிப்படும் என்றோ அல்லது அது பூப்பதும் தெரியாது-காய்ப்பதும் தெரியாது; பூத்த மறுநொடியே காய்த்துவிடுவதால் யார் கண்ணுக்கும்

புலப்படாது' என்றோ திறமையான பதில் வரும். அல்லது, 'அத்தி பூக்காமலேயே ஒரேயடியாகக் காயாகவே காய்த்துவிடும்' என்றும் ஒரு குரல் பேசும். 'இல்லையில்லை-அத்தி மரத்தில் பூக்கள் உண்டு-அவை பூத்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன்' என்று அடித்துப் பேசுகிற 'அண்டப் புளுகு-ஆகாயப் புளுகுகளும்' உண்டு.

மற்ற பூக்களைப் போல அத்திப்பூ என ஒன்று தனியாக இருக்குமானால், அது பூப்பதும் உண்மையானால், மேற் கூறிய பேச்சுகளுக்கே இடமில்லை; 'அத்திபூத்தாற் போல' என்ற பழமொழியும் தோன்றியிருக்க முடியாது. எனவே, இதில் ஆராய்ந்து காணவேண்டிய மறைபொருள் ஏதோ ஒன்றுள்ளது.

### 4-2. மறை பொருள்

அத்தி மரத்தை நன்கு அறிந்து வைத்துள்ள நம் மக்கள், அத்திப் பிஞ்சு இதற்கு நல்லது-அத்திக்காய் அதற்கு ஏற்றது-அத்திப்பழம் இதற்கு உகந்தது-அத்திப்பால் அதற்குச் சிறந்தது-என்றெல்லாம் அத்தியைப்பற்றி மருத்துவ முறையில் நன்கு ஆராய்ந்து அறிந்து வைத்துள்ள நம் மக்கள் - அத்திப் பிஞ்சினையும் காயினையும் கூட்டு செய்தும் குழம்பு வைத்தும் பொரியல் பண்ணியும் வற்றல் போட்டு வறுவல் செய்தும் உண்டு பழகிய நம் மக்கள் அத்திப் பூவைப் பற்றிய வரலாற்றை மட்டும் அறியாதிருப்பது வியப்பா புள்ளது. அந்த வரலாற்றினை நாம் ஈண்டு காண்போமே!

'பூவாமல் காய்க்காது-மின்னாமல் இடிக்காது' என்னும் பழமொழிக்கேற்ப அத்தி மரத்திலும் பூக்கள் மிக உண்டு; அந்தப் பூக்களினால் காய்கள் கிடைப்பதும் உண்டு. ஆனால், மற்ற மரத்துப் பூக்களிலிருந்து காய்கள் உண்டாவதற்கும், அத்திப் பூவிலிருந்து காய் உண்டாவதற்கும் நிரம்ப வேறு

பாடு உண்டு. வித்தை காட்டுபவன் போல் இதனை வளர்த்துவதேன்? ஒரு முடிவுக்கு வந்து விடுவோம். அத்திப் பூவேதான் காய்-அத்திக்காயேதான் பூ-பூவும் காயும் ஒன்றே. அத்திப்பூ மொட்டுபோல் இருந்தபடியே காயாகி விடுகிறது. முல்லை முதலில் மொக்காக-மொட்டாக இருந்து, பின்னர் மொட்டு உடைந்து இதழ்கள் விரிந்து மலர்ந்து விடுகிறது. அது போல் இல்லாமல், அத்தி கடைசிவரையும் மொட்டு போலவே உருண்டையாய்க் காட்சியளிக்கிறது. அந்த ஓர் உருண்டைக்குள்ளே பல பூக்கள் உள்ளன. அவையாவும் உருண்டைக்குள்ளேயே பூத்துக் காய்த்துக் கனிந்து விடுகின்றன. எனவே, ஓர் அத்திக்காய் என்பது பல அத்திப் பூக்களின் முதிர்ந்த மாற்றமேயாகும். இதனை 'விருந்த பரிணாம சமூகக்கனி என்பர் மர (தாவர) நூலார்.

## 5. கடகம்

கடகம் என்னும் சொல்லுக்கு வலயம், உருளை என்னும் பொருள்கள் உண்டு. வண்டி உருளை (சக்கரம்) வலயமாக உருள்வது தானே. இம்மரங்களின் மலர்களும் உருளை போல உருளக் கூடியனவே. எனவே, இக்காரணங் கருதி இவற்றிற்குக் கடகம் என்னும் பெயர் சூட்டப்பட்டிருக் கலாம்.

## 6. இலக்கியக் கோளி

பூவாது காய்க்கும் மரங்களைக் குறிக்கும் மேற்கூறிய பெயர்களேயன்றி, இன்னும், பெயர்க் காரணம் தெளிவாகத் தெரியாதனவும் தெரிந்தனவுமாயிருக்கிற வேறு சில பெயர் களும் உள்ளன. கோசா மரம், சிரடகம், சய முகத்தி, வன பத்தியம், கொழிஞ்சி, கேசவாரிட்டம், கோனி முதலியன அவை.

தமிழிலும் வடமொழியிலும் உள்ள இப்பெயர்கட்குள் கோளி என்னும் தமிழ்ப் பெயரே சங்க இலக்கியங்களில் தலைமை தாங்கியுள்ளது. அத்தி, ஆல், அரசு, பலா, அன்னாசி ஆகியன பூவாது காய்ப்பன என முன்னர்க் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவற்றுள், அன்னாசி அமெரிக்காவைப் பிறப்பிடமாகக் கொண்டது; கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படுகிறது. எனவே, இதை விட்டுவிடலாம். மற்றவற்றுள் மக்கள் உண்பன அத்தியும், பலாவுமாம். பறவைகள் உண்பன ஆலும் அரசுமாம். அத்தியிலும் பலாப்பழமே மிக்க சிறப்புடையது. அரசினும் ஆல் சிறப்புடையது. எனவே, பலாவும் ஆலும் சங்க இலக்கியங்களில் தக்க இடம் பெற்றுள்ளன.

## 6.1 கோளிப் பலா

கோளி மரங்கள் பல உள்ளன என்பதையும், அவற்றுள் பலா மரத்தின் பழமே சிறந்தது என்பதையும் நம் முன்னோர்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்பே அறிந் திருந்தனர். கோளி மரங்கட்குள் பழத்தால் பலா சிறப்புப் பெற்றிருப்பது போல, கடல் சூழ்ந்த - வானங் கவ்விய இவ் வுலகில் உள்ள ஊர்கட்குள் விழாவாலும் வெற்றியாலும் பழமையாலும் பலர் தொழுதலாலும் கச்சி மாநகர் மிகவுஞ் சிறந்தது என்பதாகப் பெரும்பாணாற்றுப்படை என்னும் நூலில் கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூறியுள்ளார். பாடல் பகுதி வருமாறு:

''கொழுமென் சினைய கோளி யுள்ளும்
பழமீக் கூறும் பலாஅப் போலப்
புலவுக் கடலுடுத்த வானஞ் சூடிய
மலர்தலை யுலகத் துள்ளும் பலர்தொழ
விழவுமேம் பட்ட பழவிறல் மூதூர்'' (407-11)

என்பது பாடல் பகுதி. ''கோளியுள்ளும் பழமீக் கூறும் பலாப் போல'' என்னும் பகுதிக்கு உரிய நச்சினார்க்கினியரின் உரை விளக்கமாவது: ''பூவாமற் காய்க்கும் மரங்களில் விசேடித்தும் பழத்தின் இனிமையால் மேலாகச் சொல்லும் பலா மரத்தை யொக்க'' என்பது.

இளங்கோவடிகள் 'கோளிப் பலா' என இணைத்தே கூறிவிட்டார். மதுரையிலே மாதரியின் இல்லத்திலே, கண்ணகியும், கோவலனும் (சமைத்து) உண்பதற்காகக் கொடுக்கப்பட்ட காய் கனிகளுள் பலாவும் இடம் பெற்றுள்ளது. அப்பகுதி (16-24,25) வருமாறு:—

''கோளிப் பாகல் கொழுங்கனித் திரள்காய்
வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்''

என்பது பாடல் பகுதி.

பாகல் என்பதற்கு பலா, கசப்புச் சுவையுடைய பாகல் காய் என்னும் இரு பொருள் உண்டு. ஈண்டு பலா எனப் பொருள் கொள்ளல்வேண்டும். இதற்கு அகச் சான்று, அடுத்துள்ள ''கொழுங்கனி'' என்னும் தொடராகும். பழங்களுக்குள் கொழுத்த பெரிய பழம் பலாப்பழம் அல்லவா? இது முழவு (மிருதங்கம்) போல் இருப்பதால், இதற்கு, முழவுக் கனி, மிருதங்க பலம் (பலம்-பழம்) என்னும் பெயர்கள் உள்ளமையை மருத்துவ — மூலிகை அகர முதலிகளால் அறியலாம். 'கோளி' என்பதற்கு உரிய அடியார்க்கு நல்லாரின் உரை விளக்கமாவது:- ''கோளி பூவாது காய்க்கும் மரம்; என்னை? கோளி ஆலத்து என்றார்'' என்பது.

## 6.2. கோளி ஆலம்:

நச்சினார்க்கினியரும் அடியார்க்கு நல்லாரும், கோளி என்பதற்குப் பூவாது காய்க்கும் மரம் எனப் பொருள்

கூறியிருப்பது காண்க. ''கோளி பூவாது காய்க்கும் குளிர் மரம்'' என்பது திவாகர நிகண்டு (4-80) நூற்பா அடுத்து ஆல மரத்துக்குச் செல்லலாம்:—

''கோடுபல முரஞ்சிய கோளி ஆலத்துக்
கூடியத் தன்ன குரல்புணர் புள்ளின்''
(மலைபடு கடாம்: 268-69

''முழுமுதல் தொலைந்த கோளி ஆலத்துக்
கொழுநிழல் நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்கு''
(புற நானூறு 58: 2,3)

''முன்னூர்ப் பழுநிய கோளி ஆலத்துப்
புள்ளார் யாணர்த் தற்றே'' (புறம்-254:7,8)

ஆலமரத்தைப் பறவைகள் சூழ்ந்திருப்பதாகவும் அடி தொலைந்த ஆல மரத்தை விழுதுகள் தாங்கிக் காப்ப தாகவும் கூறப்பட்டுள்ள இப்பாடல் பகுதிகளில், ஆல மரம் ''கோளி ஆலம்'' என இணைத்தே கூறப்பட்டிருப்பது கருதற்பாற்று.

திவாகர நிகண்டும் சூடாமணி நிகண்டும் இன்னும் ஒரு படி மேல் நோக்கிச் சென்றுள்ளன. ஆல மரத்தின் பெயர் களுள் கோளி என்பதும் ஒன்று என அவை கூறுகின்றன:

''பூதவம், கான் மரம், வட மரம், தொன் மரம்,
ஓதிய பழு மரம், கோளி, ஆலே''
(திவாகரம்-மரப் பெயர்த் தொகுதி-8)

''படருந் தொன்மரமே, கோளி, பழுமரம், ஆலின்
பெயரே''

(சூடாமணி-மரப் பெயர்த் தொகுதி - 14)

என்பன அந்நிகண்டு நூற்பாப் பகுதிகள். வேறு சில நிகண்டுகளும் இவ்வாறு கூறியுள்ளன. பூவாது காய்க்கும் மரங்கள் என்பது பற்றி இப்போது நன்கு விளங்கலாம்.

பூவாது காய்க்கும் மரங்களைக் குறிக்கும் பெயர்கள் உடற் கூறால் பெறப்பட்டவை எனலாம்.

# 4. மடிக் குருவி

## 1. சார்பினால் பெற்ற பெயர்கள்

### 1.1.அ. மடி

''மூத்தவரே, ஒரு வாய்க்கு அரைக் கோடு இருந்தால் கொடு'' - என்பார் ஒருவர். உடனே, மூத்தவர் மடியிலிருந்து பாதி வெற்றிலையை எடுத்துக் கொடுப்பார். இத்தகைய காட்சியைச் சிற்றூர்களில் காணலாம்.

மூத்தவர் என்றால், அவர் வீட்டுக்கு அவர் மூத்த பிள்ளை என்பது பொருள்; அதனால் அவர் பெயர் சொல்லி அழைக்கப்படாமல், மூத்தவர் என்னும் இடைக்காலப் பெயராலேயே அழைக்கப்படுகிறார்.

அவரிடம் வெற்றிலை பெறுபவர் 'மூத்தவரே' என மதிப்போடு விளிக்கிறார். வெற்றிலை பெற வேண்டுமே! அரைக்கோடு என்பது அரை வெற்றிலை. இவர் அரைக் கோடு கேட்பது, பிறரிடம் நிரம்பப் பெறக்கூடாது என்னும் பெருந்தன்மையினால் அன்று; இவர் ஒவ்வொரு முறையிலும் அரை வெற்றிலைக்கு மேல் போட்டுப் பழக்கம் இல்லை. அவ்வளவு ஏழமைச் சிக்கனம். மூத்தவரும் வெற்றிலைகளைப் பாதிப் பாதியாகத்தான் கிழித்து வைத்திருப்பார். அவரும் ஒரு தடவையில் அரைக்கோட்டுக்குமேல் போட்டுப் பழக்கமில்லை; மற்றும் அரைக் கோட்டுக்குமேல் கேட்டும் கொடுத்தும் பழக்கம் இல்லை. இது சிலரது நிலைமை.

இடுப்பில் கட்டியிருக்கும் துணியின் ஒரு மூலை மடித்துத் தொங்கவிடப்பட்டிருப்பதற்கு மடி என்று பெயர். சிலரே வெற்றிலை பாக்கைப் பெட்டியிலாவது சுருக்குப் பையிலாவது வைத்திருப்பார். பெரும்பாலோர் வெற்றிலை பாக்கை மடியில் கட்டி வைத்திருப்பதே சிற்றூர்களில் வழக்கம். அதனால் வெற்றிலைக்கு 'மடிக் குருவி' என்னும் பெயர் சார்பினால் பெறப்பட்டது. மடி என்னும் சொல்லுக்கு இலக்கிய ஆட்சி வருமாறு:—

> ''இடுபிணம் தின்னும் இடாகினிப் பேய்வாங்கி
> மடியகத் திட்டாள் மகவை'' - (சிலம்பு. 9-21, 22)

**வயிற்று மடி**

மடி என்பது மடித்து வைக்கப்படும் துணியைக் குறிக்கும்; இங்கே, வயிற்றின் மேலே மடிந்து காணப்படும் துணிப்பகுதியைக் குறிக்கும். அந்தத் துணி மடி இருப்பதால், ஆகுபெயராக' மடி என்பது வயிற்றுப் பகுதியையும் குறிக்கும். மகவை மடியில் இட்டாள் என்பது போல, வெற்றிலையை மடியில் வைப்பர் எனக் கொள்ளல் வேண்டும்.

### 1.1.ஆ. குருவி

குருவி என்பது, வெற்றிலைக்கு வேடிக்கையாக வைக்கப்பட்ட பெயராகும். வெற்றிலைக்கும் குருவி என்னும் சொல்லுக்கும் சில தொடர்புகளும் உண்டு. சிறிய சிறிய இலைகளையுடைய 'குருவி வெற்றிலைச் செடி' என்னும் ஒரு வகைச் செடி உண்டு. இளம் பருவத்தில் சிறார்களோடு சேர்ந்து கொண்டு, விளையாட்டாக, அந்தக் குருவி வெற்றிலைச் செடியின் இலைகளைப் பறித்துத் தின்ற துண்டு. மற்றும், பாக்கில், குருவிப் பாக்கு - குருவித் தலைப் பாக்கு என்னும் ஒருவகைப் பாக்கு உண்டு. குருவியின் சிறிய

தலைபோல் இருக்கும் கொட்டைப் பாக்குக்கு இப்பெயர் இருக்கலாமோ என்னவோ! இத்தகைய பாக்குடன் வெற்றிலையை இடுப்பு வயிற்றுத் துணி மடியில் வைத்திருக்கும் தோற்றம் குருவிபோல் தெரிவதால், மடிக்குருவி என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம். கூட்டில் இருக்கும் குருவிபோல், வெற்றிலை மடியில் இருக்கும் குருவியாகும்.

## 1.1.இ. மடி குருவி

மடிக் குருவி என்பதற்கு, மடியில் உள்ள குருவி என்று பொருள் செய்யின், அத்தொடர், இலக்கணத்தில், ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை நிலைத் தொடர் எனப்படும். இடையிலே'க்' என்னும் ஒற்றுமிகுக்காமல், 'மடி குருவி' என்று கூறின், இந்தத் தொடர் வினைத் தொகை எனப்படும். எந்த வினைத் தொகையிலும் இடையே ஒற்றுமிகாது என்பது ஒருவகைப் புணர்ச்சி விதி. மடி குருவி என வினைத் தொகையாக வைத்துப் பொருள் கொள்ளின், சுருட்டி மடக்கி மடித்து மடியில் வைத்திருக்கும் குருவி என்றோ, மடித்து வாயில் போட்டுக் கொள்ளும் குருவி என்றோ பொருள் கொள்ளலாம். பொதுவாக, வெற்றிலையை மடித்துப் போட்டுக் கொள்வது என்று சொல்வதே மரபு. குறிப்பிட்ட ஒருவர் வாயில் வெற்றிலை போட்டுக்கொள்ள, அவர்தம் மனைவியோ அல்லது பணியாளோ வெற்றிலை 'மடித்துக்' கொடுப்பதாகக் கூறும் மரபு வழக்கு அறிந்ததே! இக்காலத்தில் 'பீடா' செய்வோர் வெற்றிலையை மடித்துத் தானே செய்கின்றனர்!

## 1.1.ஈ. மடிக் குருவி

மடித்துக் கொடுப்பது என்னும் பொருளில் 'மடிக் குருவி' என இடையே'க்' என்னும் ஒற்று மிகுத்துச்

சொல்லினும் ஒரு வகையில் பொருந்தும். இங்கே 'மடி' என்பதை முதனிலைத் தொழிற் பெயராகக் கொள்ளல் வேண்டும். அடிப்பது அடி-கடிப்பது கடி-பிடிப்பது பிடி - என்பன போல், மடிப்பது மடி என, மடி என்பது முதனிலை (பகுதி) மட்டுமே நின்று தொழிற் பெயராவதும் உண்டு. இனி, இங்கே, மடி என்பதைத் தொழிலாகுபெயராகக் கொண்டு, மடித்த வெற்றிலை என் அதற்குப் பொருள் செய்ய வேண்டும். செய்யவே, மடியாகிய (வெற்றிலை யாகிய) குருவி எனப் பொருள் கொள்ளுங்கால், மடிக் குருவி என்பது இப்பெயரொட்டுப் பண்புத் தொகை யாகிறது; இந்தத் தொகையில் இடையே ஒற்று மிகும் என்பது புணர்ச்சி விதி.

இதுகாறும், மடிக் குருவி என்னும் பெயர், பல கோணங் களில் பொருள் செய்யப்பட்டு வெற்றிலையைக் குறிக்கும் பெயராக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைச் சார்பினால் பெற்ற பெயர் எனலாம். இப்பெயர், ஜூபிலி தமிழ்ப் பேரகராதியில் தரப்பட்டுள்ளது.

## 1.2. பிடி குருவி

பிடி குருவி (சா. சி. பி.) என்னும் பெயரும் வெற்றிலைக்கு உண்டு. வெற்றிலை, முகந்து அளக்கும் பொருளோ - நீட்டி அளக்கும் பொருளோ - நிறுத்து அளக்கும் பொருளோ அன்று. எண்ணித் தரும் பழக்கம் இப்போது பல இடங்களில் இருப்பினும், தொடக்கத்தில், பிடி பிடியாகப் பிடித்து எடுத்துத் தரும் பழக்கமே இருந்தது. மற்றும், சென்னைப் பக்கத்தில், சிறப்பு நிகழ்ச்சிகளில், வெற்றிலையை மடித்து இடக்கை விரல்களால் பிடித்து இடுக்கிக் கொண்டு, வலக்கையால் ஒவ்வொரு பிடியாக எடுத்து ஒவ்வொருவருக்கும் கொடுப்பதைச் சில ஊர்களில் காணலாம். எனவே பிடி குருவி என்னும் சார்புப் பெயரும்

பொருந்தலாம். பறவையாகிய குருவியை எளிதில் பிடிக்க முடியாது; இந்தக் குருவியை எளிதில் பிடிக்கலாம் அல்லவா?

## 1.3 வெற்றிலை

வெற்றிலையைக் குறிக்கும் மற்ற பெயர்கட்குப் பெயர்க் காரண விளக்கம் கூறுவது ஒரு புறம் இருக்க, 'வெற்றிலை' என்னும் பெயருக்கும் காரண விளக்கம் தர வேண்டு மல்லவா? வெற்றிலை என்பதை வெறுமை + இலை = (வெற்றிலை) எனப் பிரித்துப் பண்புத் தொகை எனக் கூறுவர் இலக்கண நூலார்.

வெறுமை என்பதற்கு, ஒன்றும் இல்லாமை, பயன் இல்லாமை, அறிவு இல்லாமை வறுமை, கலப்பு இல்லாமை என்ற பொருள்கள் உண்டு. இந்தப் பொருள்களுள் யாதொன்றும் இங்கே பொருந்தாது.

இதற்கு ஒரு வகையான பெயர்க் காரணம் கூறலாம். மற்ற மரஞ்செடி கொடிகளில், வேர் - கிழங்கு - தண்டு - பட்டை-தளிர்-இலை-ஈர்க்கு-பூ-காய்-கனி-முதலிய உறுப்பு களுள் சிலவோ பலவோ பயன் தருபவையாயிருக்கும்; ஆனால், வெற்றிலைக் கொடியில் உள்ள உறுப்புகளுள் இலையைத் தவிர வேறொன்றும் பயன்படுவதில்லை. கொடியின் உறுப்புகளுள் வெற்று இலை மட்டும் பயன் தருவதால் வெற்றிலை எனப் பெயர் இட்டிருக்கலாம். இலையை உட்கொள்ளுமுன், அதில் உள்ள காம்பு-நுனி-நரம்பு-வரம்பு ஆகியவற்றை அகற்றி உட்கொள்வது வழக்கம். இலையிலும் சிறிது கழிக்கப்படுகிறது. இங்கே வெற்று (வெறுமை) என்பதற்கு 'மட்டும்' (only) என்று பொருள் கொள்ளல் வேண்டும். அதாவது 'இலை மட்டும்' என்பது. வெற்றிலைக்கு இலக்கிய ஆட்சி வருமாறு:

''உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும்
வெற்றிலையும் எல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்றென்றே
கண்கள் நீர் மல்கி'' (6-7-1)

என்னும் திருவாய் மொழிப் பாடல் பகுதி காண்க.

### 1.4 வெற்றி யிலை

இது மிகப் பழங் காலத்தில் 'வெற்றியிலை' என முதலில் வழங்கப் பட்டிருக்கலாம்; பின்னர் நாளடைவில் இப்பெயர் சுருங்கி 'வெற்றிலை' என வழங்கப்பட்டிருக்க வேண்டும் என உய்த்துணர இட முண்டு. வெற்றியிலை என்பதன் பெயர்க் காரணமாவது:-

எந்த வேலையாய் வெளியிடத்திற்கோ-வெளியூருக்கோ சென்று வரப் பெரியவர்களிடம் விடை பெறுபவர்கட்குப் பெரியவர்கள் 'வெற்றிலை பாக்கு' தந்து வெற்றியுடன் வருக என வாழ்த்தி விடை கொடுத்து அனுப்புவது வழக்கம். விடை பெறுபவர்கள், விடை யளிப்பவர் பெரியவரானால் அவருடைய கால்களில் விழுந்து வணங்கி, வெற்றிலையுடன் வாழ்த்து பெற்றுச் செல்வதும் உண்டு. இங்கே வெற்றி என்பது, போர்க்கள வெற்றியை மட்டும் குறிப்பதன்று; மேற்கொண்டுள்ள எந்த நற்செயலிலும் பெறும் வெற்றி யையும் குறிக்கும்.

### 1.5,6 விசயம்-வீரக்கொடி

விசயம், வீரக்கொடி (சா.சி.பி.) என்ற பெயர்களும் வெற்றிலைக்கு உண்டு. விசயம் என்பது வெற்றியைக் குறிக்கும். அதாவது வெற்றியிலைதான். வீரக் கொடி என்பது, வெற்றியின் வீரச் செயலின் நன்னிமித்தமாக வழங்கப்படும் இலையையுடைய வெற்றிலைக் கொடியைக்

குறிக்கும். தாமரை என்பது தாமரைக் கொடியையும் குறிப்பது போல, வெற்றிலை என்பது வெற்றிலைக் கொடியையும் குறிக்கும்.

## 1.7 மண்ணில் வேந்தன்

வேந்தன் என்ற பெயர் வெற்றிலைக்கு உண்டு. மண்ணில் வேந்தன் (மூ.வை.அ.), மண்ணில் வேந்தன் இலை (சி.வை.அ.), மண்நில வேந்தன் (மலை) என்னும் பெயர்களும் தரப்பட்டுள்ளன. இலைகளுக்குள் பயனால் மிக்கிருப்பதனாலும், எல்லாச் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் வேந்தன் போல்-தலைவன் போல் இன்றியமையா இடம் பெற்றிருப்பதனாலும் வெற்றிலைக்கு வேந்தன் என்னும் பெயர் இடப்பட்டிருக்கலாம். வேந்தன் அரண்மனையில் இருப்பவன்; இந்த வெற்றிலை வேந்தன், மண்ணில் முளைத்து வளர்வதனால் மண்ணில் வேந்தன் எனவும் மண் நில வேந்தன் எனவும் பெயர் பெற்றது. மண்ணில் வேந்தன் என்பதற்கு, மூலிகை வைத்திய அகராதியில் 'அரசு வெற்றிலை' என்னும் பெயர் தரப்பட்டுள்ளது. அரசு எனினும் வேந்தன் எனினும் பொருள் ஒன்றே யன்றோ?

## 1.8 தாம்பூலம்

தாம்பூலம் என்பது வெற்றிலையைக் குறிக்கும் சொல். இலக்கிய ஆட்சியும் இது பெற்றுள்ளது:

''தக்கிணை தாம்பூலத்தோ டளித்து''

என்பது சேதுபுராணப் பாடற் பகுதி (சேது - பல. 91). இதையொட்டி, தாம்பூலி (மூ. வை. அ.), தாம்பூலவல்லி (மூ.வை.அ., சி.வை.அ.), தாம்பூலக்கண்ணி (சா.சி.பி.) என்னும் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இங்கே, வல்லி, கண்ணி என்பனவற்றிற்கு வெற்றிலைக் கொடி எனப் பொருள் கொள்ளல் வேண்டும்.

### 1.8.1 தம்பல், தம்பலம்

தம்பல், தம்பலம் என்னும் பெயர்களும் வெற்றிலையைக் குறிக்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. கம்பராமாயணம்-பாலகாண்டம்-வரைக்காட்சிப் படலத்தில் உள்ள

''மேவருங் கோபம் அன்ன வெற்றிலைத்
 தம்பல் கண்டார்'' (49)

என்னும் பகுதியும், கிட்கிந்தா காண்டம் - கார்காலப் படலத்திலுள்ள,

''வெள்ளடைத் தம்பல் குப்பை சிதர்ந்தென
 விரிந்த மாதோ'' (29)

என்னும் பகுதியும், கலித்தொகையில் உள்ள

''தையால் தம்பலம் தின்றியோ'' (65)

என்னும் பகுதியும், திருக்கோவையாரி லுள்ள

''பொதுத் தம்பலம் கொணர்ந்தோ
 புதல்வா எம்மைப் பூசிப்பதே'' (396)

என்னும் பகுதியும், அகத்தியர் குண பாடத்திலுள்ள

''காந்திதரும் புத்திக்கும் கட்குநலஞ் செய்யுமணுஞ்
 சார்ந்தநறுந் தம்பல ரசம்''

என்னும் பகுதியும் காண்க.

தம்பலம் என்பது தாம்பூலம் என மாறியிருக்கலாம். சம்சுகிருத நூலில் தாம்பூலம் இடம் பெற்றிருப்பதால், தாம்பூலம் என்பது வடமொழிச் சொல் என வடமொழியாளரால் கூறப்படுகிறது.

## 1.9 நாகவல்லி

நாகவல்லி என்பது திருமணம் சார்பான ஒரு சடங்கு வகை; 'நாகவல்லி முகூர்த்தம்' என்பர் சிலர். சில இனத்தவர், திருமண ஐந்தாம் நாளில் இந்தச் சடங்கைச் செய்வதுண்டு. இந்தச் சடங்கில் இன்றியமையா இடம் பெறுவதால், வெற்றிலைக்கு இப்பெயர் வந்தது எனலாம். இருப்பினும், இப்பெயர்க் காரணம் உள நிறைவு அளிக்கவில்லை.

பச்சைக் கல்லுக்கு 'நாகப் பச்சை' என்னும் ஒரு பெயர் சொல்லப்படுகிறது. நாகம் என்பதற்குப் பாம்பு என்னும் ஒரு பொருள் உண்டு. நாகப் பச்சை என்பதற்குப் பச்சைப் பாம்பின் நிறம் போன்ற பச்சை எனப் பொருள் கொள்ளலாம். இதே அடிப்படையில், பச்சைப் பாம்பு போல் தோற்றம் அளிக்கும் வெற்றிலைக் கொடிக்கு 'நாக வல்லி' என்னும் பெயர் நல்கப்பட்டிருக்கலாமோ-என்னவோ! நாகவல்லி என்னும் பெயர் சித்த வைத்திய அகராதியிலும் மூலிகை வைத்திய அகராதியிலும் உள்ளது. நாகவல்லி என்னும் பெயர், வெற்றிலை என்னும் பொருளில் வைத்திய மலையகராதியில் உள்ளது. வள்ளி என்பதும் கொடியைக் குறிக்கும்.

## 1.10 மெல்லிலை

மற்ற இலைகள்-கீரைகள் சமைத்து உண்ணப்படுவதால்-வெந்து குழைந்து போவதால்-வாயிலிட்டு மெல்ல வேண்டிய முயற்சி மிகுதியாகத் தேவையில்லை. ஆனால், வெற்றிலையைச் சமைக்காமலேயே பச்சையாக வாயிலிட்டு நன்கு மெல்ல வேண்டியிருப்பதால், இதற்கு மெல்லிலை (சி வை அ.) என்னும் பெயர் தரப்பட்டுள்ளது. இதற்கு இலக்கிய ஆட்சி வருமாறு – சீவகசிந்தாமணி:

''இவர்தரு மெல்லிலைக் காவும் ஏந்திய'' (826-3).

நச்சர் உரை: ''பரத்தலைத் தரும் வெற்றிலைப் படலிகையையும் மூற்றக் காவிவந்து (சுமந்து வந்து)''-'மெல்லிலைக் கா'' என்பதற்கு, 'வெற்றிலைப் படலிகை' என நச்சினார்க்கினியர் பொருள் எழுதியுள்ளார். படலிகை என்பது பெட்டி. வெற்றிலைப் பெட்டியை ஏந்தி வந்தனராம்.

## 1.11 மெல்லடகு

மெல்லடகு (பொ.ப.நூ.) என்னும் பெயரும் உண்டு. அடகு என்பது இலையைக் குறிப்பதனினும் இலைக்கறியை-சமைத்த கீரை உணவைக் குறிப்பதே இலக்கிய ஆட்சியில் உள்ளது. கம்பராமாயணம் - சுந்தரகாண்டத்திலுள்ள,

''அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்தும்
என்று இரங்கும்''

என்னும் பகுதி காண்க. ''பல்லசைந்தால் பசி ஆறும்'' என்பது ஒரு பழமொழி. எனவே, ஏழை மக்கள் சிலர், உணவு இல்லாவிடினும் வெற்றிலை பாக்கு போட்டாவது மென்று கொண்டிருப்பர். இந்த அடிப்படையில் மெல்லடகு என்னும் பெயரைக் கொள்ளலாம்.

## 1.12-13 திரை-திரையல்:

திரை (ஜா), திரையல் (மூ. வை. அ.), திரையலாலிக் கொடி (சி. வை. அ.) ஆகிய பெயர்களும் உண்டு. இவை ஒரே பொருளன. திரைதல் என்பதற்குச் சுருங்குதல் - சுருளுதல் என்னும் பொருள் உண்டு. இந்தப் பொருளின் அடிப்படையிலேயே இப் பெயர்கள் எழுந்துள்ளன. வெற்றிலையை மடித்துப் போட்டுக் கொள்வது ஒரு முறை. மேலே பாக்கு வைத்தும் சுண்ணாம்பு தடவியும் வெற்றிலையை ஒரு சுருள்போல் சுருட்டிப் போட்டுக்

கொள்வது மற்றொரு முறை. சிலர் இரண்டு — மூன்று வெற்றிலைகளைத் தனித் தனியே சுருளாகச் சுருட்டி விரல் களுக்கு இடையில் இடுக்கி வைத்துக் கொண்டிருப்பதும், பிறகு ஒவ்வொரு சுருளாக எடுத்து வாயிலிட்டு மெல்லுவதும் பார்ப்பதற்கு அழகாயிருக்கும். இப்பெயர்கட்கு இலக்கியச் சான்றுகள் வருமாறு:

சீவகசிந்தாமணி

''கப்புரப் பசுந்திரை கதிர்செய் மாமணிச்
செப்பொடு சிலதியர் ஏந்த'' (197-1,2)

நச்சர் உரை: ''கருப்பூர முதலியவற்றை யுடைய (வெற்றிலைச்) சுருளைச் சேடியர் செப்போடு ஏந்த''- திரைதலால்-சுருளுதலால் வெற்றிலைக்குத் திரை என்னும் பெயர் வந்தமை காண்க.

''இளிந்த காய்கமழ் திரை வாசம் ஈண்டி'' (1479-1) என்னும் சிந்தாமணிப் பாடல் பகுதியில் உள்ள 'திரை' என்பதற்கும் 'வெற்றிலை' என்றே நச்சினார்க்கினியர் பொருள் உரைத்துள்ளார்.

சிலப்பதிகாரம்:

''அம்மென் திரையலோடு அடைக்காய் ஈத்த
மையீ ரோதியை வருகெனப் பொருந்தி'' (16-55,56)

கண்ணகி கோவலனுக்கு வெற்றிலைபாக்கு ஈந்தாளாம். ஈண்டு, திரையல் என்பது வெற்றிலையைக் குறிக்கும்.

## 1.14 உதறி

இப்பெயர் சா. சி. பி. அகர முதலியில் உள்ளது. வெற்றிலையை விற்பவர்களும், வெற்றிலையில் உள்ள நீர் சிந்துமாறு கையால் உதறி, வலக்கையால் இடக்கையில்

அடித்துக் காட்டுவார்கள். வெற்றிலை உண்பவர்களும், ஒவ்வொரு வெற்றிலையையும் கையால் உதறி, தூசு போகக் கையால் வழித்துவிட்டுப் பிறகே சுண்ணாம்பு தடவி உட் கொள்வார்கள். அதனால் இதற்கு உதறி என்ற பெயர் வந்தது எனலாம்.

மடிக்குருவி முதல் உதறி வரையுள்ள பெயர்கள் சார்பினால் பெறப்பட்டவையாகும்.

## 2. பண்பால் பெற்ற பெயர்கள்

### 2.1 உறைக்கும் இலை

மருத்துவ நூல்களில் வெற்றிலையின் சுவை, விறு விறுப்பான கார்ப்பு (உறைப்பு) என்று குறிப்பிடப் பட்டுள்ளது. அகத்தியர் குணபாடப் பாடல் ஒன்றில் 'கார வெற்றிலை' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கைப்பூணுக்குக் கண்ணாடி ஏன்? வெற்றிலை உறைக்கும் என்பதற்கு நூற் சான்று வேண்டியதில்லை; ஒரு வெற்றிலையைத் தின்று பார்த்தாலே தெரியும். அதனால் இதற்கு 'உறைக்கும் இலை' (சா.சி.பி.) என்னும் பெயர் தரப்பட்டுள்ளது. இது பண்பால் வந்தது.

### 2.2 சிவத்தானம்

சிவன் என்றாலே நெருப்பு-வெப்பம் என்னும் கருத்து, 'தெருவில் அழகி' என்னும் குப்பைமேனி பற்றிய கட்டுரை யில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. சிவத்தானம் என்றால் நெருப்புக்கு-வெப்பத்திற்கு இருப்பிடமானது என்று பொருள் ஆகும். ஸ்தானம் என்னும் சமசுகிருதச் சொல்லின் தமிழ் வடிவம் தானம் என்பது. சீதளத்தைப் போக்கி வெப்பம் தருவதால் இப்பெயர் ஏற்பட்டது. மருத்துவ நூல்களில், இதன் தன்மை வெப்பம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வெற்றிலை சீதளத்தைப் போக்கி வெப்பம் தரும் என்பதற்கும் கார-உறைப்பு உடையது என்பதற்கும். அகத்தியர் குணபாட நூல் பாடல் ஒன்று சான்றாக வருமாறு:

''ஐயம் அறுங்காண, அதன்சாரங் கொண்டக்கால்
பையச் சயித்தியம்போம் பைந்தொடியே—மெய்யின்
கடியின் குணம்போகும் காரவெற் றிலைக்குப்
படியும் முத்தோட மிதைப் பார்''

கருத்து: வெற்றிலைச் சாற்றைப் பருகினால், ஐயம் (கபம்) அற்றுவிடும்; சயித்தியம் (சீதளம்) குணமாகி வெப்பம் உண்டாகும்; கடி நோய் நீங்கும்; வளி - பித்தம் - ஐயம் ஆகிய முக்குற்றம் தீரும். சயித்தியம் போம் என்பதால், உடலில் சீதளம் குறைந்து வெப்பம் ஏற்படும் என அறியலாம். இதனால் சிவத்தானம் என்னும் பெயர் (சா. சி. பி.) ஏற்பட்டது. இஃதும் பண்பால் வந்ததே.

## 3. பயனால் பெற்ற பெயர்கள்

### 3.1 பல்லழகி

பல்லழகி, பல்லுக்கு அழகு (சா.சி.பி.) என்னும் பெயர்களும் உண்டு. முத்துப்போல் பல் வெண்மையா யிருந்தால் தான் அழகாயிருக்கும்; வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு போட்டுக் கொண்டால், பல் கருஞ்சிவப்பாகிப் பொலிவின்றிக் காணப்படும் என்று எண்ணுவது இயற்கை. பல் வெண்மையாயிருப்பது மட்டும் பல்லுக்கு அழகாகாது; பல் ஆடாமல் அசையாமல் உறுதியாகவும் இருந்தால்தான் பல்லுக்கு அழகாகும். கருஞ்சிவப்பானால், துலக்கி வெண்மையாக்கிக் கொள்ளலாம். ஆனால், பல் ஆடி அசைந்து, அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாக விழுந்து இடையிடையே பள்ளம் காணப்படின், காண்பதற்கு அருவருப்பாயிருப்பதன்றி, பொக்கைப் பல்-பொக்கை வாய் என்ற ஏளனத்துக்கும் இடமுண்டாகும்.

காய்ச்சுக் கட்டி சேர்த்து வெற்றிலை போட்டுக் கொண்டால், முன்பே ஆடி அசைந்து கொண்டிருக்கும் பற்களும் இறுக்கம் பெற்று ஒன்றும் விழாமல் அழகாயிருக்கும். அதனால் இப்பெயர்கள் பொருத்தமானவையே?

## 3.2 காம சனனி

காம சனனி (சா.சி.பி) என்னும் பெயருக்குக் காமத்தை உண்டாக்குவது என்று பொருளாம். வெற்றிலையால் இப் பயன் உண்டு. இலவங்கம் - கிராம்பு போன்ற இன்பப் பொருள்களுடன் வெற்றிலை சேர்த்து உண்ணின், காம உணர்வு பெருகிக் கலவியில் விருப்பம் உண்டாகும். பொருட் பண்பு நூலில், ''காமம் பெருக்கி — காம வர்த்தநி — Aphrodisiae'' என்னும் பெயர் வெற்றிலைக்குத் தரப்பட் டுள்ளது.

## 3.3,4 தேகலட்சுமி - சாதகலட்சுமி

இப்பெயர்கள் (சா.சி.பி), வெற்றிலை உடம்புக்குப் (தேகத்திற்கு) பொதுவில் நலமும் திருவும் உண்டாக்கும்; பலவகையிலும் சாதகமாய் (ஆக்கமாய்) இருக்கும் - என்னும் கருத்தில் இடப்பட்டுள்ளன. இதுபற்றிய அகத்தியர் குண பாடப் பாடல் வருமாறு;

''வெற்றிலைக்கு முன்னம்
வெறும்பாக்கை வாயிலிட்டால்
குற்றம்உறும், உறவோர்
கூட்டம்போம் — வெற்றிலையை
முன்னிட்டுப் பாக்கருந்தும்
மூதறிவோர் தம்மார்பின்
மன்னிட்டு வாழும்பூ மாது''.

கருத்து: வெற்றிலைக்கு முன்னால் வெறும் பாக்கைப் போடலாகாது. முதலில் வெற்றிலையை மட்டும் போட்டு

மென்று பின்பு பாக்கைப் போட்டுச் சுவைத்தால்; நெஞ்சு-மார்பு நோய்கள், அதாவது, நெஞ்சு உலர்ந்து போதல், கோழைக் கட்டு ஆகியவை நீங்கி, திருமாலின் மார்பில் இருப்பது போல், பூமாதாகிய திருமகள் உண்டவர் மார்பில் தங்குவாள். மார்பில் திருமகள் தங்குவாள் என்றால், மார்பு-நுரையீரல்-இதயம் பற்றிய நோய்கள் இன்றி உடம்பு நன்றாயிருக்கும் என்பது கருத்து. இவர்கள் உடல் நலத்துடன் முயன்று உழைத்தால் திரு (லட்சுமி-செல்வம்) சேரும் அல்லவா? எனவேதான், தேக லட்சுமி, சாதக லட்சுமி என்னும் பெயர்கள் வெற்றிலைக்குத் தரப்பட்டுள்ளன.

வெற்றிலையால் பல் உறுதியாகும்; காம உணர்வு பெருகும்; உடல் பொதுவில் நலமாயிருக்கும் – என்பதற்கு உரிய அகத்தியர் குணபாடப் பாடல் வருமாறு:

''காய்ச்சுக் கட்டிக்கு இறுகும் கட்டவிழ்ந்த தந்தம்; அங்கார்
பூச்சிக் குழாம்இப் புனலில்சாம் – ஆச்சுக்கு
இலவங்கம் ஆதிகளால் இன்புண்டாம்; இன்னும்
சொல அங்க நோயும் அறும் சொல்''

கட்டவிழ்ந்த தந்தம் (பல்) இறுகும்; பூச்சிக் குழாம் (கூட்டம்) சாகும்; காம இன்பம் உண்டாம்; அங்க நோயும் அறும் - என்னும் பகுதிகள் இங்கே கருதற்பாலன. ''தூயுடற்குக் காந்தி தரும்; புத்திக்கும் கட்கும் நலஞ் செய்யும்'' என்னும் வேறொரு அ.கு.பாடல் பகுதியும் எண்ணத்தக்கது.

## 3.5 நாகத்தைச் சூரண மாக்கி

வெற்றிலைச் சாறு பாதரசத்தைத் தூய்மையாக்கும் என்று முருகேச முதலியார் பொருட் பண்பு நூலில் கூறியுள்ளார். சாம்பசிவம் பிள்ளையின் அகரமுதலியில் உள்ள 'நாகத்தைச் சூரண மாக்கி' என்னும் பெயரால், வெற்றிலைச்

சாறு, துத்தநாகத்தைத் தூய்மை செய்து தூள் (பஸ்பம்) ஆக்க உதவும் என்று தெரிகிறது. இந்தத் தூளுக்கு 'நாக பசுபம்' என்று பெயர் சொல்லப்படுகிறது. இது மூல நோய்க்கு (Piles) நல்லது என்றும் சொல்லப்படுகிறது.

பல்லழகி முதல் நாகத்தைச் சூரண மாக்கி வரையுள்ள ஆறு பெயர்கள் பயனால் பெறப்பட்டவையாகும்.

## 4. வடிவால் வந்த பெயர்கள்

### 4-1,2,3 வடிவழகி-சுந்தரமாது

வடிவழகி, சுந்தரமாது, சித்திரப்பெண் (சா.சி.பி.) என்னும் பெயர்களும் உண்டு. வெற்றிலையின் வடிவம் காண்பதற்கு அழகாயிருப்பதால் வடிவழகி என்னும் பெயர் வந்தது. சுந்தர மாது என்றால் அழகிய பெண். இப்பெயரும் வடிவழகி போன்றதே. சித்திரப் பெண் என்பதும் அன்னதே. சித்திரம் என்னும் சொல்லுக்கு அழகு என்னும் பொருள் உண்மையை, பெருங்கதை வத்தவ காண்டத்தில் உள்ள

''வித்தக வினைஞர் சித்திர மாக
உறழ்படச் செய்த ஒண்பூங் காவின்'' (4-7-149,150)

என்னும் பாடல் பகுதியால் அறியலாம்.

### 4-4 செந்துளிர் மேனிக்கொடி

வெற்றிலைக் கொடியில் உள்ள செந்துளிர் காண்பதற்கு மேனியாக - வடிவழகாக இருப்பதால், அக்கொடிக்கு 'செந்துளிர் மேனிக் கொடி' (சி.வை.அ.) என்னும் பெயர் ஈயப்பட்டது.

### 4-5, 6,7 சூல் - சூலினி – கணிச்சி

சூல் (சா.சி.பி.), சூலினி (மூ.வை.அ., சி.வை.அ.), கணிச்சி (ஜூபிலி), கணிச்சியிலை (சி.வை.அ.) என்னும்

பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இவை யாவும் ஒத்த பொருள் உடையனவே.

சூல் என்றால் சூலம் என்னும் படைக் கருவி. அதன் வடிவம் வெற்றிலை போன்றிருக்கும். திரிசூலம் என்பதில் மூன்று கூறுகள் இருக்கும். இருபக்கங்களிலும் இருப்பவை சிறிய கூர் முனைகளாகும். நடுவில் இருக்கும் பகுதி வெற்றிலை வடிவாயிருக்கும். ஆகச் சூலம்போல் வெற்றிலை யிருப்பதால் 'சூல்' என்பதை உவமையாகு பெயராகப் பெற்றுள்ளது. சூல் என்பதற்குச் சூலம் என்னும் பொருள் உண்மைக்கு இலக்கியச் சான்று:—

''குலிசம் கதை சூல்''

(சேதுபுராணம் - தேவிபுர - 27)

சூலினி என்பது உமாதேவியின் பெயர்களுள் ஒன்று. சூலத்தை ஏந்தியிருப்பதால் உமைக்குச் சூலினி என்னும் பெயர் ஏற்பட்டது. அபிராமி அந்தாதியில் உள்ள

''வாயகி, மாலினி, வாராகி, சூலினி, மாதங்கி என்று
ஆய கியாதி யுடையாள் சரணம் அரண் நமக்கே''
(50)

என்னும் பாடல் பகுதியில் சூலினி என்னும் பெயர் உள்ளமை காணலாம்.

வெற்றிலை சூலம்போல் இருக்கிற தல்லவா? சூலம் போன்ற இலையையுடைய வெற்றிக் கொடி. சூலினி எனப் பெயர் வழங்கப்பட்டது.

கணிச்சி என்பதும் சூலம் போன்றதொரு படைக் கருவியே. இதனை மழு என்றும் கூறுப. இது சிவனது படைக்கலமாகும். புறநானூற்றில் உள்ள

''ஏற்று வலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்'' (56-1,2)

என்னும் பாடல் பகுதி காண்க. வெற்றிலை கணிச்சி போன்ற வடிவு உடையதாதலின் கணிச்சி என்பதை உவமை யாகுபெயராகப் பெற்றுள்ளது. கணிச்சியிலை என்பது, கணிச்சி போன்ற வடிவுடைய இலை எனப் பொருள்படும்.

வடிவழகி முதல் கணிச்சி வரையுள்ள ஏழுபெயர்களும் வடிவத்தால் பெறப்பட்டவை.

## 5. நிறத்தால் பெற்ற பெயர்கள்

### 5.1 வெள்ளிலை

வெள்ளிலை (சி.வை.அ) என்னும் பெயர் நிறத்தால் ஏற்பட்டதாகும். வெற்றிலையைக் குறிக்கும் இப்பெயர் இலக்கிய ஆட்சியும் பெற்றுள்ளது. கம்பராமாயணம் – பால காண்டம் வரைக் காட்சிப் படலத்தில் உள்ள

''பூவணை பலவுங் கண்டார்;
பொன்னரி மாலை கண்டார்;
மேவருங் கோபம் அன்ன
வெள்ளிலைத் தம்பல் கண்டார்'' (49)

என்னும் பாடல் பகுதி காண்க. கருத்து: மலைக் காட்சி காண்பவர் பூ அணையும் பொன்னரி மாலையுங் கண்டனர்; மற்றும், சிவந்த இந்திர கோபப் பூச்சி போன்ற - மென்று உமிழ்ந்த வெற்றிலைக் கொத்தைகளையும் கண்டனர். இங்கே, தம்பல் என்பது, மென்று உமிழ்ந்த சிவப்பான வெற்றிலைச் சக்கையைக் (கொத்தையைக்) குறிக்கிறது. தம்பல் என்பதற்கு முன்னால் உள்ள 'வெள்ளிலை' என்பது வெள்ளை வெற்றிலையைக் குறிக்கிறது.

### 5.2 வெள் வெற்றிலை

இப்பெயர் சி.வை. அகராதியில் உள்ளது. இதற்குக் கற்பூர வெற்றிலை என்னும் பொருள் தரப்பட்டுள்ளது.

## 5.3 வெள்ளடை

வெள்ளடை என்னும் பெயரும் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. கம்பராமாயணம் - கிட்கிந்தா காண்டம் - கார்காலப் படத்திலுள்ள,

''எள்ளிட இடமொன் றின்றி
எழுந்தன இலங்கு கோபம்...
வெள்ளடைத் தம்பல் குப்பை
சிதர்ந்தென விரிந்த மாதோ'' (29)

என்னும் பாடல் பகுதியில், மென்று உமிழ்ந்த வெற்றிலைச் சக்கைபோல் இந்திர கோபப் பூச்சிகள் எழுந்தன என்னும் கருத்தைக் காணலாம். சுந்தர காண்டம்-காட்சிப் படலத்தி லுள்ள,

''உருப்பசி உடைவாள் ஏந்தினள் தொடர
மேனகை வெள்ளடை உதவ'' (79)

என்னும் பாடலில், இராவணனுக்கு மேனகை வெற்றிலை (வெள்ளடை) மடித்துத் தந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அடை என்னும் சொல்லுக்கே வெற்றிலை என்னும் பொருள் உண்டு.

''நூறு காய்அடை கூடும் வேறொருவன் தனால்'' (7) (சிவஞான சித்தியார் - பரபக்கம் - உலோகாயதன் மத மறுதலை) என்னும் பாடல் பகுதி காண்க.

## 5.4 அடைக்காய்

பாக்குக்கு அடைக்காய் என்னும் பெயர் உண்டு. இலக்கியச் சான்றுகள்:

### அ) சிலப்பதிகாரம்

''அம்மென் திரையலொடு அடைக்காய் ஈத்த''
(16-55)

### ஆ) அருணாசல புராணம்

''விஞ்சிய அடைக்காய் உண்டி வழியிடை
வெறுப்ப தாக்கி'' (திருமலை - 26)

### இ) தாயுமானவர் பாடல்

''வெள்ளிலை அடைக்காய் விரும்பி வேண்டிய
வண்ணம் விளையாடி விழி துயிலினும்''
(சச்சிதானந்த சிவம்-11)

இப் பகுதிகளால், வெற்றிலைக்கு வெள்ளிலை என்னும் பெயரும், பாக்குக்கு அடைக்காய் என்னும் பெயரும் உள்ளமை புலனாகும். பாக்குக் காய்க்கு அடைக்காய் என்னும் பெயர் வந்ததன் காரணம், அடையுடன் — வெற்றிலையுடன் போடப்படும் காய் பாக்குக் காய் என்பதே யாகும்.

## 5.5 வகைகள்

வெற்றிலையில் பல வகை உண்டு. அவற்றுள் வெள்ளை வெற்றிலை ஒன்றாகும். வெள்ளை வெற்றிலை வெளிறிய பசு நிறமாகவும் மென்மையாகவும் அழகாகவும் சுவைப்பதற்கு இன்பமாகவும் இருக்கும். கரும் பச்சையாகவும் சிறிது முரடாகவும் காரமாகவும் இருக்கும் வெற்றிலை உலக வழக்கில் 'பச்சை வெற்றிலை' எனப்படுகிறது. சிலர் வெள்ளை வெற்றிலையையே விரும்புவர். புகையிலை போடுவோரும் ஏழை மக்களும் பெரும்பாலும் பச்சை வெற்றிலையே உட்கொள்வர். பச்சை வெற்றிலையினும் வெள்ளை வெற்றிலை விலை கூடுதல் என்பதும் இதற்குக் காரணமாகும். சி.வை. அகராதியில் குறிப்பிடப்பட்டுள்ள வெள்ளிலை என்பது வெள்ளை வெற்றிலையைக் குறிக்கும்.

**அ) கலைக் களஞ்சியச் சான்று**

வெள்ளை வெற்றிலை தோன்றும் விதமும், வெற்றிலை இனங்களும், வெளிறிய வெள்ளிலையின் பயனும் தமிழ்க் கலைக் களஞ்சியம் - ஒன்பதாம் தொகுதியில் கூறப் பட்டுள்ளது. அப்பகுதி வருமாறு:

''இனங்கள்: வெற்றிலையில் பல இனங்கள் உள. அவை இலையின் உருவம், நிறம், சுவை, மணம் ஆகிய வற்றில் வேறுபடும். சென்னைக்குத் தெற்கே சாதாரண மாகக் காணப்படுபவை கருப்பூரக் கொடி, கள்ளஸ் கொடி, வட்டக் கொடி, சித்துக் கொடி என்பனவாம். கருப்பூரக் கொடி கருப்பூரம் நாறும்; மென்பச்சை முதல் பச்சை மஞ்சள் வரையுள்ள நிறம் தோன்றும்; உருவம் நீண்டிருக்கும். கள்ளஸ் கொடிதான் அதிக விற்பனைக்கு வருவது. கரும் பச்சை நிறமாகவும் முரடாகவும் காரம் மிகுந்ததாகவும் இருக்கும். அந்தக் கொடி நாள்பட்டதானால், அதில் கிடைக்கும் இலைகள் நிறம் குறைந்தனவாயும் மிருதுவாயும் காரம் குறைந்தனவாயுமிருக்கும். அவை வெள்ளை வெற்றிலை என்று கூறப்படும். கள்ளஸ் வெற்றிலை கருப்பூர வெற்றிலையினும் அகலமாயிருக்கும். வட்டக் கொடி வெற்றிலை பெரிதாயும், வட்டமாயும், அதிக நாள் வாடாததாயுமிருக்கும். சித்துக் கொடி வெற்றிலை சிறியதா யும் வெல்வெட்டைப் போல் மிருதுவாயும், சுவையுடைய தாயும் இருக்கும்.''

''விற்பனை: வெற்றிலை தென்னிந்தியாவிலிருந்து ஒழுங்காகப் பம்பாய்க்கும் ஒரிஸ்ஸாவுக்கும், வேறு சில வடக் கிந்திய இராச்சியங்களுக்கும் மிகுந்த அளவில் போய்க் கொண்டிருக்கிறது. வடக்கிந்திய இராச்சியங்களில் வெற் றிலையை வெளிறச் செய்த பின்னரே விற்கிறார்கள். வெற்றிலைக் காம்பை நீக்கி விட்டு, வாழை இலை

பரப்பிய கூடைகளில் பொதிந்து வைத்துப் பல நாட்கள் காற்றோட்டமுள்ள இருட்டறைகளில் வைத்திருந்தால் வெளிறிவிடும். அடிக்கடி புரட்டிப் பார்த்து வெளிறிய இலைகளைப் பொறுக்கி எடுத்து விற்பார்கள். வெளிறிய இலைகளில் எண்ணெய்ப் பசையும் சீரண சக்தியும் அதிக மாகக் காணப்படும்.''

## ஆ) பொருட் பண்பு நூற் சான்று

வெள்ளை வெற்றிலை தோன்றும் விதத்தினைக் கலைக் களஞ்சியத்தால் அறிந்தோம் வகைகளும் அறியப்பட்டன. முருகேச முதலியாரின் பொருட் பண்பு நூலில் பின்வருமாறு மூவகை கூறப்பட்டுள்ளன:-

''இஃது இலையின் நிறத்தாலும் மணத்தாலும் கார்ப்புச் சுவையாலும் மூவகைப்படும். மிகுந்த மணமும் காரமும் கறுப்பு நிறமும் இல்லாதது 'வெற்றிலை'. கருமையும் காரமும் மிகுந்தது 'கம்மாறு வெற்றிலை'. கருப்பூர மணமும் சிறு காரமுமுடையது 'கருப்பூர வெற்றிலை'. இதன்படி இம் மூன்றனுள் முதலில் வெற்றுபடியாக 'வெற்றிலை' என்று சுட்டப்பட்டிருப்பது வெள்ளை வெற் றிலையா யிருக்கலாம். அடுத்த கம்மாறு வெற்றிலை என்பது, அகத்தியர் குணபாட நூலில் 'ஐயம் அறும்' என்று தொடங் கும் பாடலில் 'கார வெற்றிலை' எனவும், 'ஏட்டில் ஒன்று' என்று தொடங்கும் பாடலில் 'கம்மாறு வெற்றிலை' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப் பாடல்கள் முழுமையாக முன்னர்த் தரப்பட்டுள்ளன. அகத்தியர் குணபாட நூலி லுள்ள பின்வரும் பாடல், கருப்பூர வெற்றிலையைப் பற்றியதாக இருக்கலாம்:—

> ''வாயுமந்தம் பீநசம் சுவாசகாசம் அருசி
> யேயுதர தோடம் இவைபோக்கும்-தூயுடற்குக்
> காந்திதரும் புத்திக்கும் கட்குநலஞ்செய்யு மணஞ்
> சார்ந்த நறுந் தம்பல ரசம்''.

என்பது பாடல். கருத்து: மணம் பொருந்திய வெற்றிலைச் சாற்றால், வளி நோய், மாந்தம், மூக்கு நோய் மூச்சிரைக்கும் ஐய நோய் ஆகியவை போய் விடும்; உடலுக்குள் ஒளியும், அறிவுக்குத் தெளிவும், கண்ணுக்கு நற்பார்வையும் உண்டாகும் — என்பது, பாடலின் இறுதியிலுள்ள 'மணஞ் சார்ந்த நறுந் தம்பல ரசம்' என்னும் பகுதி கருதற் பாற்று. கருப்பூர மணம் வீசும் கருப்பூர வெற்றிலையைப் பற்றியதே இப்பாடல் என்று கூறலாம். (சி. வை. அகராதி இதனை வெள்ளை வெற்றிலை என்கிறது.)

மற்ற வெற்றிலைகளினின்றும் வெள்ளிலை என்னும் வெள்ளை வெற்றிலையை வேறு பிரித்தறிய இவ்வளவு சொல்ல வேண்டியதாயிற்று. வெள்ளிலை, வெள்ளடை என்பன நிறத்தால் பெற்ற பெயர்களாம்.

## 6. வேறு பெயர்கள்

பொருட் பண்பு நூலில், வெற்றிலையின் செய்கை காரணமாக, வெப்பம் உண்டாக்கி, அகட்டு வாய்வு அகற்றி துவர்ப்பி, காமம் பெருக்கி, அழுகல் அகற்றி, பசித் தீத் தூண்டி, பால் பெருக்கி, உமிழ் நீர்ப் பெருக்கி என்னும் பெயர்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் அழுகல் அகற்றி, பால் பெருக்கி என்பனவற்றிற்கு மட்டும் விளக்கம் தந்தால் போதும். புண் அழுகிப் புரை போடாமல் இருக்கச் செய்வது = அழுகல் அகற்றி (Antiseptic). வெற்றிலை களை நெருப்பில் வாட்டி அடுக்கடுக்காக முலைகளின் மேல் வைத்துக் கட்டினால் பால் சுரக்குமாம்பால் பெருக்கி.

# 5. உள் கண்ணாடி

இந்தக் கட்டுரை, கண்ணுக்கு நன்மை புரியும் பொன்னாங் கண்ணியைப் பற்றிய தாகும். இதற்கு உரிய பெயர்களையும் பெயர்க் காரணங்களையும் விளக்கமாகக் காண்போம்.

**காணும் மூளை**

இங்கே ஒரு செய்தியை நினைவு கூரவேண்டியுள்ளது. பொருள்களைக் கண் காண்பதில்லை, மனமே காண்கிறது. மனம் என்பது மூளையின் இயக்கமாகும். மனமாகிய மூளையே கண் என்னும் வாயிலின் - சாளரத்தின் வழியாகப் பொருள்களைப் பார்க்கிறது. நாம் தேடிச் செல்லும் ஒருவர் எதிரே வரினும், யாரோ வருகிறார் என அறியினும், மனம் வேறு எதையாவது எண்ணிக் கொண்டிருந்தால், நாம் அவரது உருவத்தைப் பார்த்தும், பார்க்காதவர் போல் சென்று விடுவோம். மனம் காணாததால், கண் அவரை இனம் கண்டு கொள்ள இயல வில்லை.

கண் என்றென்ன! மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளை வாயில்களாகக் கொண்டு மூளையே ஐவகைச் செயல்களையும் புரிகிறது. அதனால் ஐம்பொறிகளை 'அறிவுக் கோட்டையின் ஐந்து வாயில்கள்' (Gates of knowledge) என்பர் உளவியலார். தூண்டல் களாகிய (stimulus) வெளிப் பொருள்கள் பற்றிய செய்தி கள் ஐம்பொறிகளிலிருந்து செல்லும் உட் செல் நரம்பு

களின் (Afferent Nerves) வழியாக உள்ளே சென்று, தண்டு வடம் (spinal cord) என்னும் அஞ்சலகத்தால் வாங்கப்பட்டு மூளைக்குச் செலுத்தப்படுகின்றன. பின்னர் மூளையிலிருந்து கட்டளைகளாகிய துலங்கல்கள் (Responses) தண்டுவட அஞ்சலக வாயிலாக - வெளிச் செல் நரம்புகளின் (Efferent Nerves) வழியாக ஐம்பொறிகட்குக் கொண்டு செல்லப்பட்டு இயங்கச் செய்கின்றன. இதனால், கண் பார்க்கவில்லை; மூளை பார்ப்பதற்குக் கண் ஒரு கருவியாக இருக்கிறது என்பது புலனாகலாம்.

### காணும் துணைக்கருவிகள்

கருவிகள் (Instruments) பழுதுபட்டால் பழுது பார்ப்பதுபோல், கண் பழுதுபடின் மருத்துவம் செய்கிறோம். தொலைவி லுள்ள பொருள் தெரியவில்லை யெனின் கண்ணுக்குக் கண்ணாடி போட்டுக் கொள்கிறோம். மிக்க தொலைவிலுள்ள பொருள்களைப் பார்க்க, இரட்டைத் தொலை நோக்காடி (Binocular), நுண்ணோக்காடி (Microscope) ஆகியவற்றைப் பயன்படுத்துகிறோம்.

### உலகின் பெரிய கண்

ஆயிரக்கணக்கான கல் (மைல்) தொலைவுக்கு அப்பால் உள்ள பொருள்களை 'பட்டெறி தொலைநோக்கு ஆடி' (Reflecting Telescope) வாயிலாகப் பார்க்க முடியும். உலகின் பல்வேறு பகுதிகளில் இத்தகைய தொலை நோக்கு ஆடிகள் உள்ளன. தென்னிந்தியாவில் கோடைக் கானலில் உள்ளது. இது சிறியது. மிகப் பெரியது, அமெரிக்க-தென் கலிபோர்னியாவில் உள்ள மவுண்ட் பாலொமார் (Palomar) என்னும் இடத்தில் இருக்கும் 'பட்டெறி தொலை நோக்கி ஆடி'யாகும். இதில் 200 (இருநூறு) அங்குல விட்டமுடைய ஆடி உள்ளது. இரஷ்யாவில் காகசஸ் மலைப் பகுதியில் உள்ள தொலை நோக்கியும் அமெரிக்காவில் உள்ளது

போன்றே மிகவும் பெரியதாகும். இவை உலகின் பெரிய கண்கள் எனலாம்.

இத்தகைய ஆடிகளின் வழியாக ஐயாயிரம் பத்தாயிரம் கல் தொலைவுக்கு அப்பால் உள்ள பொருள்களையும் காணலாம். பூமி உருண்டையாய்ச் சரிந்திருப்பதால், பூமியில் ஓரிடத்திலிருந்து ஐயாயிரம் - பத்தாயிரம் கல் தொலைவிலுள்ள பொருள்களைப் பார்க்கவியலாது. நேர்ப் பார்வையில் விண்ணில் உள்ளவற்றையே பார்க்க முடியும்.

இங்கே இவ்வளவு கூறியதன் நோக்கம்: மூக்குக் கண்ணாடி முதல் 'பட்டெறி தொலை நோக்காடி' வரையுள்ள பல ஆடிகள், கண் பார்வையின் கூர்மையைப் மிகுதிப் படுத்த உதவுகின்றன என்பதை அறிவிப்பதேயாகும்.

**உள் கண்ணாடி**

ஆனால், இக் கண்ணாடிகள் வெளியிலிருந்து கண்ணுக்கு உதவுகின்றன; பொன்னாங்கண்ணியோ உடம்புக்கு உள்ளே சென்று ஊறிக் கண்ணுக்கு உதவுகின்ற உள்கண்ணாடியாகும்.

**ஓர் உத்தியின் உதவி**

'ஒன்றினம் முடித்தல் தன்னினம் முடித்தல்' என்னும் நன்னூல் உத்தியின்படி பகலில் நட்சத்திரம் தோன்றி என்னும் பெயரின் அடிப்படையில், வானவியல் தொடர்பான சில செய்திகளை ஈண்டு எண்ணிப் பார்ப்பது நலம்:

**பகலில் தெரியும் விண்மீன்**

பகல் இரவு என்பதெல்லாம் இங்கேதான். பகல் இரவு அற்ற இடம் உண்டு. நாம் இங்கே பகலிலும் ஒரு

விண்மீனைப்-ஒரு பெரிய விண்மீனைப் பார்க்கிறோம். அது தான் ஞாயிறு.

நம் நிலவுலகுக்கு ஏறக்குறைய 9.3 கோடி கல் (மைல்) தொலைவில் ஞாயிறு இருப்பினும், அது நெருப்புப் பிழம்பாய் இருப்பதாலும் மற்றகோள்களினும் மிகவும் பெரியதாயிருப்பதாலும் நாம் அதைப் பார்க்க முடிகிறது. நம் ஞாயிறு குடும்பத்தைச் சேர்ந்த கோள்களின் குறுக்களவை அறியின், ஞாயிறின் உருவப் பெருமை விளங்கும். ஞாயிறின் குறுக்களவு: 8,64,400 மைல்; புதன்: 3,100 கல்; வெள்ளி: 7,700; பூமி: 7,913; செவ்வாய்: 4,216; வியாழன்: 86,700; சனி: 71,500; யுரேனசு: 32,000; நெப்டியூன்: 31,000; புளூட்டோ: 7,900; நிலா: 2,160.

இந்த அட்டவணையை நோக்கின் ஞாயிறின் பருமன் விளங்கும். அதனால் அது நன்றாகத்தெரிகிறது.

### உண்டைப் பிறக்கம்

ஞாயிறு ஒரு விண்மீன் என மேலே கூறப்பட்டது. ஆம்; இரவில் வானில் தெரியும் கோடிக்கணக்கான விண்மீன்களைப் போல் ஞாயிறும் ஒரு விண்மீனே. பெருவெளியாகிய அண்டப் பகுதியில், அளக்க முடியாத - நூற்றுக்கணக்கான கோடிகளின் எண்ணிக்கையில் உருண்டை வடிவமான கோள்கள் பலப்பல உள்ளன. வீட்டுக் கூரையின் ஓட்டை வழியாய் வரும் ஞாயிற்றின் ஒளியில் தெரியும் சிறு சிறு அணுத் துகள்கள்போல், அண்டப்பெரு வெளிப்பரப்பில் இந்த கோள்கள் சிறியனவாய் மிதந்து இயங்குகின்றன. இந்தச் செய்தியை, திருவாசகம் - திருவண்டப் பகுதியில் உள்ள,

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்

நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் துன்அணுப் புரையச்
சிறிய வாக .... ... ... .... (1-6)

என்னும் பாடல் பகுதியில் அறியலாம். ஆசிரியர் மாணிக்க வாசகரின் வானவியல் அறிவுதான் என்னே! பாண்டிய மன்னனுக்குத் தலைமை அமைச்சராய் இருந்தவர் அல்லவா? இப்பாடல் பகுதியில், உண்டை என்பது கோள்களின் உருண்டை வடிவையும், பிறக்கம் என்பது கூட்டத்தையும் குறிக்கின்றன.

இரவில் வானில் தெரியும் கோடிக்கணக்கான விண் மீன்கள் கோள்களேயாகும். நம் ஞாயிறைவிட மிக்க தொலைவில் இருப்பதால் மிகவும் சிறியனவாய்க் காணப் பட்டுக் கண் சிமிட்டுகின்றன. நமது ஞாயிறைவிடப் பெரிய ஞாயிறுகள் பல மேலே மிக்க தொலைவில் உள்ளன. நம் ஞாயிறு குடும்பத்தில் உள்ள கோள்களைப் போலவே, அந்த ஞாயிறு மண்டலங்களிலும் கோள்கள் பல உண்டு.

மிக்க தொலைவில் இருப்பதால் இரவில் மிகவும் சிறியனவாய்த் தெரியும் கோடிக்கணக்கான கோள்கள் பகலில் தெரியாமைக்குக் காரணம், அவற்றினும் நமக்கு அண்மையில் உள்ள நம் ஞாயிற்றின் பேரொளியேயாகும். நம் நிலத்திலேயே, இரவில் நன்றாகச் சுடர்விடும் விளக்கு, பகலில் ஞாயிறின் முன்னர் இருப்பதாகவே தெரியவில்லை யல்லவா?

## மாலையில் தெரியும் விண்மீன்

ஆனால், பகலில் மாலையில் நிலா (சந்திரன்) மட்டும் தெரிவதற்குக் காரணம், நிலா நம் நிலத்தின் ஒரு துணைக் கோளாய் (Satellite) இருப்பதும், நிலத்திற்கு அண்மையில் 2,30,900 கல் தொலைவில் மட்டும் இருப்பதுமாகும்.

**இலக்கிய ஓவியங்கள்**

ஞாயிறும் திங்களும் ஒரே நேரத்தில் தெரியும் காட்சி இலக்கியங்களில் ஓவியப்படுத்தப்பட்டுள்ளது. சில சான்றுகள் காண்பாம்:

**சிலப்பதிகாரம்**

வேங்கட மலையின் ஒரு கோடியில் ஞாயிறும் மற்றொரு கோடியில் திங்களும் உள்ளனவாம். இரண்டிற்கும் இடையில் மேகம்போல் திருமால் இருக்கிறாராம். மேகமாகிய திருமாலுக்கு உடை மின்னலாம்; வில் இந்திர வில்லாம்; ஒரு கை ஆழி (சக்கரம்) ஞாயிறாம்; மற்றொரு கை சங்கு திங்களாம்.

''வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக் கோடி யுடுத்து விளங்குவில்பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங்கு ஆழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி,' (11:41-48)

(ஆழி = சக்கரம்; சங்கம் = சங்கு)

என்பது சிலம்புப் பாடல் பகுதி. ஞாயிறும் திங்களும் திருமாலின் ஆழியும் சங்கும் போல் உள்ளதாகக் கூறும் உவமை பரிபாடல் பாடல் பகுதி யொன்றிலும் இடம் பெற்றுள்ளது:-

**பரிபாடல்**

''தண்ணளி கொண்ட அணங்குடை நேமிமால்
பருவம் வாய்த்தலின் இருவிசும்பு அணிந்த
இருவேறு மண்டிலத்து இலக்கம் போல
நேமியும் வளையும் ஏந்திய கையால்'' (13:6-9)

என்பது பாடல் பகுதி. இருவேறு மண்டிலம் என்பது ஞாயிறையும் திங்களையும் குறிக்கும். நேமி = சக்கரம். வளை = சங்கு.

**மணிமேகலை**

கிழக்கே தெரியும் முழுத்திங்களும் மேற்கே சென்று மறைந்து கொண்டிருக்கும் ஞாயிறும், புகார் நகர் என்னும் பெண்ணுக்கு இரண்டு தோடுகளாகப் (காதணிகளாக) பொலிவு செய்கின்றன என்னும் கருத்து மணிமேகலையில் சொல்லப்பட்டுள்ளது.

> ''புலவரை பிறந்த புகாரெனும் பூங்கொடி ...
> குணதிசை மருங்கில் நாள் முதிர் மதியமும்
> குடதிசை மருங்கிற் சென்று வீழ் கதிரும்
> வெள்ளிவெண் தோட்டோடு பொன்தோடாக
> எள்ளறு திருமுகம் பொலியப் பெய்தலும்''
> (5—199—119—122)

என்பது பாடல் பகுதி ஞாயிறும் திங்களும் ஒரே நேரத்தில் தெரியும் காட்சி ஆங்கிலப் பாடல் ஒன்றிலும் ஓவியப் படுத்தப்பட்டுள்ளது:-

**ஆங்கிலப் பாடல்**

கிரேக்கப் படைத் தலைவனாகிய யூலிசெஸ் (ulysses) என்பான், தன் கப்பல் படை மறவர்களுடன், அனட்டோலியா எனப்படும் ஆசியாமைனரில் உள்ள 'டிராய்' (Troy) நகரை வென்று, 'இத்தாகா' (Ithaea) என்னும் தன் சொந்த இடத்திற்குத் திரும்பும் வழியில் 'லோட்டஸ் உண்ணிகள் நிலம்' (Land of Lotos Eaters) என்னும் தீவில் தங்க நேர்ந்தது. மாலை நேரம். அனைவரும் கடற்கரையில் மஞ்சள் நிற மண்மேல் ஞாயிறுக்கும் திங்களுக்கும் இடையே அமர்ந்திருந்தார்

களாம். இதனை, லார்டு டென்னிசன் (Lord Teunyson) என்னும் ஆங்கிலப் பாவாணரின் 'The Lotos - Eaters' என்னும் தலைப்புடைய பாடலில் காணலாம்.

> "They sat them down upon the yollow sand,
> Between the sun and moon upon the shore"
> (5:1,2)

என்பது பாடல் பகுதி. 'Between the sun and moon' என்னும் பகுதியால், ஒரே நேரத்தில் ஒரு பக்கம் ஞாயிறை யும் இன்னொரு பக்கம் திங்களையும் காண முடிகிறது என்பது புலனாகும். தமிழ்ப் புலவர்கள் ஆழியாகவும் சங்காகவும் தோடுகளாகவும் செய்த கற்பனைச் சுவையை ஆங்கிலப் பாடலில் காண முடியாவிடினும், எடுத்துக் கொண்ட கருத்து காணப்படுகிறது.

**பயணத்தின் பயன்**

இவண் இவ்வளவு நெடுந் தொலைவு வழி கடந்து பயணம் செய்து வந்த காரணம்: இரவிலேயே இன்னும் சில விண்மீன்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கும் நிலையில்—புதுப்புது விண்மீன்கள் காலந்தொறும் கண்டுபிடிக்கப்பட்டு வரும் நிலையில் பகலிலே ஞாயிறு, திங்கள் என்னும் இரு கோள்கள் ஒரே நேரத்தில் தெரிவதன்றி, பகலிலேயே விண் மீன்களும் தெரியும்; அவ்வாறு தெரியவைக்கும் ஆற்றல் பொன்னாங் கண்ணிக் கீரைக்கு உண்டு என்று கூறுவது மிகவும் வியத்தகு செய்தி எனச் சுட்டிக் காட்டுதலே யாகும்.

**தொடக்கப் புள்ளி**

நம் நாட்டுச் சித்தர் யாரேனும் பொன்னாங் கண்ணி போன்றவற்றின் உதவியாலும் தம் சித்தின் ஆற்றலாலும் பகலில் விண்மீண்களைப் பார்த்திருப்பரோ என்னவோ தெரியவில்லை. **பகலில் விண்மீனைப் பார்த்தல் – பகல்**

நட்சத்திரம் தோன்றி – என்ற எண்ணமும் பெயருமே, 'பட்டெறி தொலை நோக்கி ஆடி' (Reflecting Telescope) பிற்காலத்தில் தோன்றுவதற்குத் தொடக்கப் புள்ளியாக (Starting Point) மக்களினத்தின் உள்ளத்தில் அரும்பிப் பின்னர்ப் பெரிதாக மலர்ந்தது என்று கூறலாம்.

பொன்னாங் கண்ணிக்குப் 'பகல் நட்சத்திரம் தோன்றி' என்பது பயனால் பெற்ற பெயராகும். பயனால் பெற்ற மற்ற பெயர்களையும் இனிக் காண்போம்:

**கண்ணியும் காணியும்**

இந்தச் செடிக்கு உரிய பொன்னாங் கண்ணி, பொன் னாங்காணி என்னும் இரு பெயர்கட்கும் இறுதியில் உள்ள கண்ணி, காணி என்னுஞ் சொற்கள் கண் தொடர்பான பொருள் உடையனவாகவே தெரிகிறது. கண்ணி என்ப தற்கு, பூங்கொத்து, பூமாலை, வலை முதலிய பொருள்கள் பொருந்தா. கண்ணுக்கு ஏற்றது கண்ணி எனக்கோடலே பொருந்தும். கண்ணுக்கு நலம் பயக்கும் மற்றொரு செடி கரிசலாங் கண்ணி என்பது. இஃதும் கண்ணி என முடிதல் காண்க. இவ்விரண்டிற்கும் 'கண்ணி' என்னும் தனிப் பெயரும் உண்டு. கண்ணுக்கு நலம் பயப்பதால் இவ்விரண் டிற்குமே 'கண்ணுக்கு இனியாள்' என்ற பெயர் உண்டு. இருப்பினும், கண்ணுக்கு இனிமை தருவதில் கரிசலாங் கண்ணியினும் பொன்னாங் கண்ணியே சிறந்த தாகும்.

அடுத்து, காணி என்பதற்கு, காண்பது காணி காணச் செய்வது காணி என்று பொருள் கொள்ளலாம். கண் ணொளியை மிகுத்துக் காணச் செய்கிற தன்றோ!

**கண்ணுக்கு அணி**

''கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும்''. (575)

என்னும் திருக்குறளோடு பொன்னாங் கண்ணி போட்டி போடுகிறது. இதற்கும் 'கண்ணுக்கு அணி' என்ற பெயர் உண்டு. வெளியே கண்ணுக்கு அணியாக மூக்குக் கண்ணாடி அணிகிறோம்; உள்ளே கண்ணுக்கு அணியாகப் பொன்னாங் கண்ணிக் கீரை உண்ணல் வேண்டும்.

**பயன்களுள் பயன்**

பொன்னாங் கண்ணியால் விளையும் பயன்கட்குள் சிறந்த பயனாக, கண்ணுக்கு நன்மை தரும் பயனையே மருத்துவ நூல்கள் பெரிது படுத்திப் பேசியுள்ளன:

''காசம் புகைச்சல் கருவிழிநோய் வாதமனல்
கூசும் பீலிகம் குதாங்குரநோய்-பேசியவையால்
என்னாங்கா ணிப்படிவம் ஏமமாம் செப்ப
லென்னைப்
பொன்னாங்கா ணிக்கொடியைப் போற்று''.

என்பது தேரையர் குணபாடப் பாடல். இதன் உரை: கண் காசம், கண் புகைச்சல், கரு விழி நோய், வாயு, அனல், ஈரல் நோய், கீழ் வாயில் உண்டாகும் நோய்கள் இவைகள் போம்; உடல் பொன்னிற மாம்.

இது தொடர்பாகப் பொருட் பண்பு நூலில் உள்ள சில செய்திகள் வருமாறு:—

பொன்னாங்கண்ணியை உப்பில்லாமல் வேக வைத்து, வெண்ணெ யிட்டு நாற்பது நாளுண்ண, கண்ணில் உண்டாகும் நோய்கள் தீரும்.

இதை அரைத்து அடையாகச் செய்து, ஒரு நீர் நிறைந்த பானை மீது அப்பி, மறுநாள் காலையில் இதை எடுத்துக் கண்களின் மீது வைத்துக் கட்ட, கண் நோய்கள் தீரும்.

நெய்விட்டு வதக்கிக் கண்களுக்குக் கட்டக் கண் நோய்கள் தீரும். அன்றியும் இதன் தைலத்தைத் தலை மூழ்கிவரக் கண் நோய்கள் தீரும்.

இதன் சாறு படி 2, கரிசாலைச் சாறு படி ஒன்று, நெல்லிக்காய்ச் சாறுபடி ஒன்று, எண்ணெய் படி 2, பசுவின் பால் படி 2, இதில், அதிமதுரம் பலம் 2, எடுத்துப் பால்விட்டரைத்துக் கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில் வடிகட்டித் தலை மூழ்கிவர, 96 வகைக் கண் நோய்களும் அழல் நோய்களும் தீரும்.

மேலுள்ளவாறு இன்னும் பல கூறப்பட்டுள்ளன. இவ்வாறு கண்ணுக்கு உகந்ததாயிருத்தலின் கண்ணி, காணி என்னும் பெயர்கள் ஏற்றனவே.

**நேத்திர நாசி**

நேத்திரம் என்பது கண்; நாசி என்பது மூக்கைக் குறிக்குமாயினும் இங்கே பொருந்தாது. நாசி = நாசப் படுத்துவது — அழிப்பது என்பதே சரி. அங்ஙனமாயின், நேத்திரம் என்பதை ஆகுபெயராக்கி, கண் தொடர்பான நோய்களை அழிப்பது எனப் பொருள் கொள்ளினே இப் பெயர் பொருந்துவதாகும்.

**பொன்மேனி**

பொன் மேனி, பொன் மூலி, பொற் கண்ணி, பொற் காணி, பொன்னாங் கண்ணி, பொன்னாங் காணி என்னும் பெயர்கள், உண்டவரது உடம்பைப் பொன்னொளி பெறச் செய்யும் பயனால் ஏற்பட்டவை. இக்கீரையில் தங்கச் சத்து உள்ளதாம். பொன்னாங்காணி என்னும் பெயர், உண்டால் உடம்பு 'பொன் ஆகும் காண் நீ' என்று சொல்வதுபோல் அமைந்திருப்பதாக வேடிக்கையாகக் கூறுவதுண்டு, பொன்னாங்கண்ணி என்பதற்குப் பொன்

னாகச் செய்யும் கொழுந்து இலை என்றும் பொருள் பண்ணலாம்.

**விண்ணுக்குள் மூர்த்தி**

விண்ணிலே இருக்கும் விண்மீண்களையும் காணச் செய்யும் ஆற்றல் உடைமையால் 'விண்ணுக்குள் மூர்த்தி' என்னும் பெயர் இதற்கு ஏற்பட்டிருக்கலாம்.

**உம்பர் ஊர்**

உம்பர் ஊர் என்றால் தேவ உலகம் என்று பொருளாம். இப்பெயரும் 'விண்ணுக்குள் மூர்த்தி' என்பது போன்றதே. தேவ உலகம் வரையுங்கூடப் பார்க்கக்கூடிய ஆற்றலை அளிப்பதால், பொன்னாங்கண்ணிக்கு இப்பெயர் தரப் பட்டது.

**மை சாட்சி**

மை என்பதற்கு விண் என்னும் பொருள் அரும் பொருள் விளக்க நிகண்டில் கூறப்பட்டுள்ளது. சாட்சி என்பதற்கு, நேரில் பார்த்தறிந்தவர் (Eye-witness) என்னும் பொருள் உண்டு. விண்ணையும்-விண்ணில் உள்ளவற்றையும் பார்த்தறியும் ஆற்றலைத் தருவதால், பொன்னாங் கண்ணிக்கு 'மைசாட்சி' என்னும் பெயர் தரப் பட்டிருக்கலாம். அன்றோ!

**பித்த சாந்தி - அதிமூத்திரம் சீக்கி**

பித்தத்தைச் சமன் செய்வதால், 'பித்த சாந்தி' என்ற பெயரும் உண்டு. சிவப்புப் பொன்னாங் கன்னியை உண்டால், அடிக்கடிச் சிறு நீர் கழிப்பதுமிகுதியாகச் சிறு நீர் கழிப்பது ஒழுங்கு பெறுமாதலின் 'அதி மூத்திரம் நீக்கி' என்ற பெயரும் உண்டு.

**சீதளத்தி—சீதளி**

இம்மூலிகை உடலுக்கு மிகவும் குளிர்ச்சி தருதாலால் 'சீதளி' கடுஞ் சீதளத்தி' என்ற பெயர்கள் உண்டு, தேரையர் பாடலில் அனல் தணியும் எனக் கூறப்பட்டிருப்பதன் பொருள், குளிர்ச்சி தரும் என்பது தானே!

**சீதை**

மன்னன் சனகன் வேள்விச் சாலையமைக்க நிலத்தைச் சமன்படுத்த உழுதபோது, உழவுச் சாலில் கிடைத்த பெண்ணுக்குச் சீதை எனப் பெயர் இட்டான். 'சீதா' என்னும் வட சொல்லுக்கு உழவுசால் என்பது பொருள். நம் பொன்னாங் கண்ணியும் இப்பெயரோடு போட்டி போடுகிறது. பொன்னாங் கண்ணியும் ஒரு வகையில் சீதை யாகும். சீதம் என்றால் குளிர்ச்சி; சீதம் தருவது சீதை யாகும். இப்பெயரைத் தேரையர் காண்டப் பாடல் கூறுகிறது:—

''சீதையை நாடொறுஞ் சீரண வுண்டிடக்
காதைசேர் நோயெல்லாம் காதம் ஓடிடுமே''

என்பது பாடல் பகுதி. சீதை = பொன்னாங் கண்ணி; காதை = கொலை. இக்கீரையை உண்ணின், கொல்லக்கூடிய நோய்கள் யாவும் காதத்தொலைவு பறந்தோடிடும் என்பது கருத்து.

**சானகி**

இம்மூலிகைக்குச் 'சானகி' என்னும் பெயர் வைத்திய மலை யகராதியில் கொடுக்கப்பட்டுள்ளது. சீதை என்னும் பெயரின் அடிப்படையில் இது தரப்பட்டுள்ளது. சீதைக்குச் சானகி என்னும் மற்றொரு பெயர் உண்டல்லவா? ஒரு சொல் விளையாட்டாகும் இது.

**திரேக சித்தி - சித்தி**

இவ்வாறு நோய்களைப் போக்கி, உடலுக்கு (திரேகத்திற்கு) நலம் செய்வதால் இதற்குத் 'திரேக சித்தி' என்ற பெயரும் உண்டு. சித்தி என்றால் நன்மை சித்திப்பது-நன்மை கைகூடுவது என்று பொருளாம். இக்கீரை நன்மை செய்வதால், இதற்குச் 'சித்தி' என்னும் தனிச் சொற் பெயர் வைத்திய மலையகராதியில் வழங்கப்பட்டுள்ளது.

இதில் தங்கச் சத்து இருப்பதோடு, 6% புரோட்டீன் உள்ளது; 100 கிராமில் 16 மில்லிகிராம் இரும்புச் சத்தும் உண்டு. இவற்றால் உடலுக்கு நலம் உண்டாகிறது.

**பௌதிக மங்கை**

பௌதிக மங்கை என்னும் பெயர், திரேக சித்தி என்பதன் பெயர்க் காரணத்தோடு ஒத்த காரணத்தது. பௌதிகம் என்றால் பூதம் தொடர்பானது ஆகும், விண், காற்று, தீ, நீர், மண் என்னும் ஐந்து பூதங்களால் ஆனவையே உலகில் உள்ளன. உலகம் என்பது இந்த ஐந்து பூதங்களின் தொகுப்பே; அதனால், பௌதிகம் என்பதற்கு உலகம் என்ற பொருள் உண்டு. இந்த ஐந்து பூதங்களும் திரிந்து புதுவடிவம் பெற்றதே உடம்பு. ''அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் உள்ளது'' என்பது முன்னோர் மொழி: அண்டம்=உலகம். பிண்டம்=உடம்பு. இதனால், உடம்பை, வடமொழியில், 'பஞ்சபூத பரிணாம சரீரம் என்பர். அதாவது, 'ஐம் பூதங்களின் திரிபாக்கம் உடம்பு' என்பது அதன் தமிழ்ப் பொருள்.

''வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்'' (271)

என்னும் குறள், உடம்புக்குள் ஐந்து பூதங்கள் இருப்பதை அறிவிப்பது காண்க. எனவேதான், உடம்புக்குப் பௌதிகம்

என்னும் பெயர் தரப்பட்டது. ஈண்டு, ''தேகங்கள் அத்தனையும் மோகங்கொள் பௌதிகம்'' என்னும் தாயு மானாரின் (பரிபூரணானந்தம்-2) பாடல் பகுதி ஒப்பு நோக்கற் பாலது.

இத்தகைய உடம்புக்கு வேண்டிய உரத்தைத் தருவதால் பொன்னாங் கண்ணிக்குப் 'பௌதிக மங்கை' என்னும் பெயர் இடப்பட்டது. பல செடி கொடிகள் உடலுக்கு உரம் தரினும், தங்கச் சத்து அமைந்த பொன்னாங் கண்ணி மிகவும் சிறந்த தாகும். இதை உண்டவர் நீடித்த வாழ்நாள் பெறுவர். இதற்குச் சான்றாக, முருகேச முதலியாரின் பொருட் பண்பு நூலில் உள்ள ஒரு பாடலும் அதன் பொருளும் அதில் உள்ளவாறு வருமாறு:—

''பொன்னாங் காணி கற்பம்''

''பொன்னாங் கணிக்கீரை போற்றியுணக் கற்பமுறை
பொன்னாங் கணிக்கீரை போதுமோ-பொன்னா
யிருபதி லக்கமதி யேற்பத் தியத்தை
யிருபதி லக்கமதி யே''

''(பொருள்) செழிப்பாய் வளர்ந்த பொன்னாங் கணிக் கீரையை, செம்மையாக நெய்யில் வதக்கி, மிளகு உப்பு கூட்டி, புளியை நீக்கி, கற்ப முறையின்படி ஒரு மண்டலம் உட்கொள்ளின், உடலுக்கு அழகு, பொன்னிறம், நீண்ட ஆயுள், கண் குளிர்ச்சி இவற்றைத் தரும்''

எனவே, வாழ்நாளை நீட்டிக்கும் கீரைக்குப் பௌதிக மங்கை (உடம்பை நீட்டித்து வளர்ப்பவள்) என்னும் பெயர் பொருத்தமே. இதற்கு மேலும் அரண் செய்ய ஒரு கருத்து காத்திருக்கிறது. 'பௌதிகம்' என்னும் சொல்லுக்குக் கரு நெல்லி என்னும் ஒரு பொருள் சங்கத்து அகராதியில் கூறப் பட்டுள்ளது. அதியமான் கொடுத்த கருநெல்லியை உண்ட

தால் ஔவையார் நீண்ட நாள் உயிர் வாழ்ந்தார் என்பதே அச்செய்தி. எனவே, கருநெல்லி போலவே, பௌதிகம் ஆகிய உடம்பை நெடுநாள் வாழ்விக்கும் பொன்னாங் கண்ணிக்கு இப்பெயர் சாலத் தகும்.

## முதல் 24. மச்சி

மச்சி யாச்சி (மூ.வை.அ.), மச்சிக் கண்ணி, மச்சியாங் கணி (சி.வை.அ.), மச்சியாங் கண்ணி, மச்சியாத்தி (சா.சி.பி.அ.), மச்சிப் பாசி (யா.அ.) ஆகிய பெயர்கள் பொன்னாங் கண்ணிக்கு அகர முதலிகளில் தரப்பட்டுள்ளன.

மச்சியாச்சி என்பதில் உள்ள 'ஆச்சி' என்பது பெண்டிரைக் குறிப்பது. 'ஆத்தி' என்பது பெண்பாற் பெயரீற்று உறுப்பு ஆகும் (எ. கா. வண்ணாத்தி). கணி, கண்ணி, காணி, என்பன, கண்ணை உடையவள் - காண் பவள் என்னும் பொருளன. ஆக, பொன்னாங்கண்ணிச் செடி பெண்பாலாக்கப்பட்டுள்ளது. பௌதிக மங்கை என்னும் பெயரிலும் இதைக் காணலாம். எனவே, மேலே - இங்கே தரப்பட்டுள்ள பெயர்களின் அடிப்படைப் பெயராக இருப்பது மச்சி என்பதே, இனி மச்சி என்பதற்குப் பெயர்க் காரணம் காணவேண்டும். நெடுநேரம் எண்ணிப் பார்த்ததில் மூன்று வகையான பெயர்க் காரணங்கள் முகிழ்த்தன. முறையே அவற்றைக் காண்பாம்:-

### முதலாவது காரணம்

மச்சி என்பதற்கு மைத்துனி என்னும் பொருள் உண்டு. மைத்துனியை மச்சி என அழைக்கும் வழக்கம் நடைமுறை யில் உண்டு. வித்தை விச்சையானாற்போல, மைத்துனி என்பது மைச்சுனி என்றாகி, ஐ-அ போலி என்னும் கொள்கைப்படி மைச்சுணி மச்சுனி யாகி, இறுதியில் சுருக்க மாக மச்சி எனும் மரூஉப் பெயராயிற்று. எனவே, மச்சி

என்பதன் முதற்சொல் மைத்துனி என்பதே. மச்சிக்கு ஆண்பால் மச்சான்.

திருமணம் செய்துகொள்ளும் முறை உள்ளவர்களை மைத்துனன் - மைத்துனி என்பது வழக்கம். இதற்கு ஓர் இலக்கியச் சான்று திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் உள்ள சான்றழைத்த திருவிளையாடல் என்னும் பகுதியிலிருந்து வருமாறு:-

வணிகன் ஒருவன் தன் அம்மான் மகளைச் சுற்றத்தார் ஒப்புதலுடன் திருமணம் செய்துகொள்ள அழைத்துக் கொண்டு வடபுறமிருந்து மதுரைக்குச் செல்லும் வழியில் திருப்புறம்பியம் என்னும் ஊருக்கு அருகில் மைத்துனியாகிய அப்பெண் நடக்கமுடியவில்லை என்று சொல்ல அன்றிரவு அவ்வூரிலேயே தங்கிவிட்டனர். இச்செய்தியை,

''மைத்துனி நடக்கமாட்டேன்
இளைத்தனன் என்ன வாய்ந்த
உத்தமன் பொருளனைத்தும்
உற்றவர் கைக் கொடுத்து
மெத்தென மாதைக் கொண்டு
வருகுவல் விரைவில் நீங்கள்
முத்தெயில் மதுரை தன்னிற்
போமென மொழிந்து விட்டான்''

என்னும் (62-7) பாடலால் இவ்வுறவு முறையறியலாம்.

உலகியலில், கணவனுடன் பிறந்தவள், மனைவியுடன் பிறந்தவள், அம்மான் மகள், அத்தை மகள் ஆகியோரை மச்சி என அழைப்பர். அதாவது, சம்பந்தி (மருவி) முறை உள்ளவர்களே மச்சியாவர். சம்பந்திகள் (மருவியோர்) ஒருவர்க் கொருவர் பெண் கொண்டு கொடுத்துத் திருமணம் நடத்துவது உண்டு. இங்கே திவாகர நிகண்டில் உள்ள இரண்டு நூற்பாக்களின் உதவி தேவைப்படுகிறது.

> ''மணத்தல் கூடுதல்'' (9-53)
> ''இணை விழைச்சு, மைதுனம், புணர்வுப் பெயரே'' (9-53)

என்பன அந்நூற்பாக்கள். மணத்தல் என்றால் ஆணும் பெண்ணும் கூடுதலாம். ஆணும் பெண்ணும் கூடும் புணர்ச்சிக்கு, இணைவிழைச்சு, மைதுனம் என்னும் இரு பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இங்கே எடுத்துக் கொள்ள வேண்டியது ''மைதுனம்'' என்பதையே: ஈண்டு,

> ''வதுவைச் சடங்கதனை மைதுனமாக் கொண்ட
> புதுவைச் சிவானந்தம் போதும் - பதையா
> விளக்கொளியில் எண்ணெய் வியாபியா னாற்போல்
> கொளக் கொடுத்தல் சத்தியமாக் கொள்''
>
> (ஒழிவி லொடுக்கம் - கிரியைக் கழற்றி - 16)

என்னும் பாடற் பகுதி கருதத்தக்கது. யாழ்ப்பாண அகராதியில் மைதுனம் என்பதற்கு விவாகம் (திருமணம்) என்று பொருள் தரப்பட்டுள்ளது. எனவே, மணந்து கொண்டு புணரும் முறையுள்ளவள் மைத்துனி என்பது புலப்படும். மைதுனம் உடையவள் மைத்துனி. இந்த மைத்துனி என்பதன் மரூஉப் பெயரே மச்சி.

சரி, இந்த நிலையில் பொன்னாங் கண்ணியை யாருக்கு மைத்துனி யாக்குவது? இது யாருக்கும் மைத்துனி யன்று. உண்டவர்க்குப் புணர்ச்சிவேட்கையை புணர்ச்சிஆற்றலை உண்டாக்குவதால் இது மச்சி (மைத்துனி) எனப்பட்டது எனப் பொருத்திக் கொள்ளல் வேண்டும். இதில் பொன் (தங்கச்) சத்து இருப்பதாலும் உண்பவரைப் பொன்போல் பொலிவு பெறச் செய்வதாலும் இது பொன்னாங்கண்ணி எனப்பட்டது. தங்கப் பொடி (தங்க பசுபம்) மருந்து உண்பவர்க்குப் புணர்ச்சி யாற்றல் மிகும் என்பர். தங்கப் பொடிக்குப் போவது ஏன்! தங்கத்தால் ஆன உண்கலத்தில்

(பாத்திரத்தில்) உணவிட்டு உண்டவர்க்கும் புணர்ச்சி யாற்றல் மிகுமாம். இதற்கு அரணாக, பதார்த்த குண சிந்தாமணியில் உள்ள சித்தர் பாடல் வருமாறு:-

''தங்கக் கலத்தில் உண்ணத் தாது விர்த்தியும் பசியும்
பொங்க மிகுதிடமும் பூரிப்பும் -- அங்கு உறையும்
பித்த சோபைப் பிணியிப் பேருலகை விட்டகலும்
சுத்தரசத் தீங்கினியே சொல்''

தாது விர்த்தி உண்டாகும் என்பது புணர்ச்சி யாற்றலைக் குறிக்கும். மிகு திடமும் பூரிப்பும் உண்டாகும் என்னும் கருத்தும் புணர்ச்சி யாற்றலுக்கு உறுதுணை யானதே. தங்கக் கலத்தில் உண்டாலேயே இப்பயன் விளையும் என்றால், தங்கச் சத்து உடைய பொன்னாங்கண்ணியை உண்டால் புணர்ச்சி யாற்றல் உண்டாகும் எனச் சொல்லத் தேவையில்லை.

எனவே (மைதுன ஆற்றலை) புணர்ச்சி யாற்றலைத் தருவது (மைதுனத்திற்கு) புணர்ச்சிக்கு ஏற்றது என்னும் செய்தியின் அடிப்படையில், பொன்னாங் கண்ணிக்கு மைத்துனி - மச்சி என்னும் பெயர் ஒருவாறு பொருந்தலாம். இனி இரண்டாங் காரணத்திற்குச் செல்லலாம்.

**இரண்டாங்காரணம்**

மச்சி என்பதற்கு, மச்சம் என்பதை அடிப்படைச் சொல்லாகக் கொண்டு, மச்சம் உடையது - மச்சத்தின் இயல்பு உடையது மச்சி எனப் பொருள் கொள்ளலாம். இங்கே மச்சம் என்பதற்கு மீன் எனப் பொருள் கொள்ள வேண்டும். மச்சத்தின் – மீனின் தன்மையுடையது மச்சி. அங்ஙனம் எனில், மீனின் தன்மைகளுள் எந்தத் தன்மையை இங்கே கொள்ள வேண்டும் என்ற வினா எழும்.

பொன்னாங்கண்ணி கண் - கண் பார்வையோடு தொடர்புடைய தாதலின், இங்கே மீனின் கண்பார்வை இயல்பை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். மீனின் கண் பார்வை மிகுந்த ஆற்றல் உடையது. மீன் தன் முட்டைகளைத் தன் கண் பார்வையால் கூர்ந்து நோக்கின அளவிலேயே குஞ்சு பொரித்து விடுமாம். இதற்குச் சான்றாக, கைவல்ய நவநீதம் என்னும் நூலின் தத்துவ விளக்கப் படலத்தில் ஒரு பாடல் உள்ளது:

''அன்னதன் சிசுவைஐயன் ஆமைமீன் பறவைபோலத்
தன்னகங் கருதி நோக்கித்தடவிச் சந்நிதி யிருத்தி
உன்னது பிறவிமாற்றும் உபாயமொன்
றுண்டு சொல்வேன்
சொன்னது கேட்பாயாகில் தொடர்பவம்
தொலையும் என்றார்.'' (8)

என்பது அப்பாடல். இதன் முதல் இரண்டு அடிகளே இங்கே தேவை. மெய்யறி வாசான் (ஞானாசிரியன்) தன் மாணாக்கனை (சிசுவை), ஆமைபோல் தன் அகத்தால் (மனத்தால்) ஆழ நினைத்தும், மீனைப் போல் தன் கண்களால் கூர்ந்து நோக்கியும், பறவைபோல் தன் கையால் உடம்பைத் தடவிக் கொடுத்தும் அவனுக்கு மெய்யறிவு புகட்டுகிறார் - என்பது முதல் இரண்டு அடிகளின் கருத்து. ஆமை தன் முட்டைகளை நினைத்தாலே குஞ்சு பொரியுமாம். மீன் தன் முட்டைகளைக் கண்களால் கூர்ந்து நோக்கினாலே குஞ்சு பொரியுமாம். பறவை தன் முட்டையைத் தடவித் தழுவி அடைகாத்தால் குஞ்சு பொரியும். இவற்றைப் போலவே ஆசிரியர் மாணாக்கனை உய்விக்கிறார் - என்பது இதன் விளக்கம்.

இங்கே நாம் மீனை (மச்சத்தை) மட்டும் எடுத்துக் கொள்வோம். மீனைப் போல் நினைத்த அளவிலேயே

உயிர்களை உய்வித்தலால், உமாதேவிக்கு மீனாட்சி, அங்கயற்கண்ணி என்னும் பெயர்கள் ஏற்பட்டதாகக் கூறுவது மரபு. மீனின் கண்பார்வையில் உள்ள ஆற்றல் போல, பொன்னாங் கண்ணியும் கண் பார்வைக்கு ஆற்றலைத் தருகிறது. அதாவது, மூக்குக்கண்ணாடி வெளியிலிருந்து கண்ணுக்குத் தெளிவையும், கூர்மையையும், தொலைநோக்கையும் தருதல் போல, பொன்னாங் கண்ணி உள் சென்று இந்த வேலையைச் செய்கிறது. மூக்குக் கண்ணாடி கண்ணின் வெளியுறுப்பு; பொன்னாங் கண்ணி கண்ணின் உள் உறுப்பு. எனவே, பொன்னாங் கண்ணியைக் கண்ணின் ஒரு பகுதியாகவே கொள்ள வேண்டும்.

எனவே, மச்சத்தின் கண் பார்வையைப் போன்று பொன்னாங் கண்ணியாம் கண்ணும் ஆற்றல் உடைமையால் மச்சி எனப்பட்டது. இஃது ஒரு வகையில் பெயர்க் காரணமா யிருக்கலாம்.

பொன்னாங் கண்ணிக்கு மலையாளத்தில் 'மீனாங் கண்ணி' என்ற பெயரும், சம்சுகிருதத்தில் 'மீனாக்ட்சி' என்ற பெயரும் 'மத்ஸயாக்ட்சி' என்ற பெயரும் தரப் பட்டிருப்பது ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது. மீன்–மத்சம் போன்ற கண்ணையுடையவள் என்பது இவற்றின் பொரு ளாகும். பொன்னாங் கண்ணிக்கும் மீனுக்கும் உள்ள பொதுத் தன்மை, கண் பார்வை ஆற்றல் தொடர்பானதே.

(கட்டுரையாசிரியர் குறிப்பு: யான் நெடிது எண்ணி மச்சத்தின் (மீனின்) கண் போன்ற ஆற்றல் உடைமையால் மச்சி எனப்பட்டது எனக் காரணம் கண்டுபிடித்து முதலில் எழுதிவிட்டேன். பிறகு, தற்செயலாக ஒருநாள், முருகேச முதலியாரின் பொருட் பண்பு நூலைப் பார்த்தபோது, மேலே கூறியுள்ள மலையாளப் பெயரையும் வடமொழிப் பெயர்களையும் கண்டு மட்டில்லா வியப்பும் மகிழ்வும் எய்தினேன்.)

**மூன்றாங் காரணம்**

மூன்றாங் காரணம் ஏறக்குறையப் பொன்னாங் கண்ணியோடு மிகவும் நெருக்கம் உடையது என்று கூறலாம். மச்சு, மச்சம் என்ற சொற்கட்குப் பொன் என்னும் ஒரு பொருள் உண்டு. இதற்குப் பெரிய புராணத்தில் நல்லதொரு சான்று உள்ளது:

சிவபெருமானுக்குச் சுந்தரமூர்த்தி நாயனார் தோழராம். கதையைப் பார்த்தாலும் அவ்வாறே தோன்றுகிறது. சுந்தரர், விருத்தாசலம் என்னும் திருமுது குன்றத்தில், சிவனிடம் பொருள் வேண்டினாராம். சிவன் சுந்தரர்க்குப் பன்னிரண்டாயிரம் பொன் வழங்கினாராம். இப்போது மக்கள் பணத்தை ஓர் ஊரில் உள்ள வங்கியில், (Bank) போட்டு வேறோர் ஊரில் உள்ள வங்கியில் எடுத்துக் கொள்வதைப் போல, திருமுது குன்றத்தில் உள்ள மணிமுத்தாற்றில் அப்பொன்னைப் போட்டு, திருவாரூரில் உள்ள கமலாலயம் என்னும் குளத்தில் எடுத்துக் கொள்ளுமாறு அருள் செய்ய வேண்டும் என்று சுந்தரர் சிவனை வேண்டினாராம். அவ்வாறே ஆகுக எனச் சிவனும் அருள் செய்தாராம். (இப்போது இப்படியொரு கடவுள் கிடைப்பாரா?)

திருமுது குன்றத்திலே தந்த பொன் உயர்ந்த மாற்று ('காரட்'-Carat) உடையது. திருவாரூர்க் குளத்தில் எடுக்கும் போது மட்டமான மாற்று உடையதாக இருந்துவிடக் கூடாதல்லவா? அதனால், சுந்தரர் தானங் கொடுத்த மாட்டின் பல்லைப் பிடித்துப் பார்ப்பதுபோல, பொன் கட்டியில் ஒரு சிறு துண்டினை வெட்டியெடுத்து வைத்தக் கொண்டாராம். பின்னர்த் திருவாரூர்க் குளத்திலிருந்து எடுத்ததும், தாம் வெட்டி வைத்திருந்த துண்டு போலவே மாற்றுக் குறையாததாக இருக்கிறதா என உரைத்து

ஒப்பிட்டுப்பார்த்த போது சிறிதும் தரம் குறையாது உயர்தரம் உடையதாகவே இருந்ததாம். இவ்வாறு மாற்று அறிவதற்காக - மாதிரிக்காக வெட்டி யெடுத்து வைக்கும் பொன் துண்டுக்கு 'மச்சம்' என்று பெயராம். இவ்வாறு சுந்தரர் மச்சம் வெட்டி எடுத்துவைத்துக்கொண்டு மற்ற பொன் கட்டிகளைத் திருமுது குன்ற மணி-முத்தாற்றில் விட்டதையும், பின்னர்த் திருவாரூர்க் குளத்தில் சிறிதும் குறையாத நிலையில் எடுத்ததையும் அறிவுக்கும் பெரிய புராணப் பாடல் பகுதிகள் அகச்சான்றுக்காக வருமாறு:

''வன்தொண்டர் மச்சம் வெட்டிக் கைக்கொண்டு
மணிமுத் தாற்றில்
பொன்திரள் எடுத்து நீருள் புகவிட்டுப்
போதுகின்றார்'' (3268)

''ஒட்டறு செம்பொன் ஒக்க ஒருமாவுங் குறையாமல்
காட்டுதலும் மகிழ்ந்தெடுத்துக் கொண்டு கரை
ஏறினார்'' (3296)

இந்த இலக்கியச் சான்றைக் கொண்டு, பொன் துண்டுக்கு மச்சம் என்னும் பெயர் உண்மையை அறியலாம். இதை வலியுறுத்தவே, இவ்வளவு நெடுந் தொலைவுப் பயணம் செய்ய வேண்டியதாயிற்று. பொன்னின் மாற்று அறிதலுக்கு 'மச்சம் பார்த்தல்' என்னும் வழக்காறு உலகியலிலும் உண்டு.

எனவே, மச்சமாகிய பொன்னின் தன்மை உடைமையால் பொன்னாங் கண்ணிக்கு மச்சி, மச்சிக் கண்ணி, மச்சியாங் கண்ணி, மச்சியாங் காணி, மச்சி யாச்சி, மச்சி யாத்தி, மச்சிப் பாசி ஆகிய பெயர்கள் தரப்பட்டன என்றும் சொல்லலாம் அல்லவா? பெயரிலேயே பொன் என்னும் சொல் முதலில் உள்ள தன்றோ? இந்த மூன்றாங்

காரணத்தைச் சொல் விளையாட்டாகக் கொள்ள வேண்டும். முதல் இரு காரணங்களும் பயன் பற்றியவை.

**செயலால் பெற்ற பெயர்**

இந்தச் செடிக்கு 'வான நாடி' என்னும் பெயர் ஜூபிலி தமிழ்ப் பேரகராதியில் தரப்பட்டுள்ளது. பொன்னாங் கண்ணி வளர்ந்து செழிக்க நீர் வளம் நிரம்ப வேண்டு மாதலின், அது மழையை எதிர்பார்த்து வானத்தை நோக் குவதால் 'வான நாடி' என்னும் பெயர் செயல் காரணமாக அதற்கு ஏற்பட்டது. மழைக் காலத்தில் பொன்னாங்கண்ணி மிகுதியாகக் கிடைக்கும்.

இன்னொரு பெயர்க் காரணமும் கூறலாம். அது சிறிது வலிந்து கூறுவதுபோல் தோன்றலாம். பகல் நட்சத்திரந் தோன்றி என்னும் பெயர் போல, வானத்தில் உள்ள விண் மீன்களைப் பகலிலும் நாடிப் பார்க்கக்கூடிய தொலைக் காட்சிக் கூர்மையைத் தருவதால் இப்பெயர் பெற்றிருக்கலாம் என்பதே இன்னொரு காரணமாகும். இந்தக் காரணம் ஏற்றுக் கொள்ளப்படின், இது பயனால் பெற்ற பெயர் எனக் கொள்ளல் வேண்டும்.

**வடிவத்தால் வந்தவை**

**மூசி:** மூசி என்பது, வடிவால் – உடற் கூறால் பொன் னாங் கண்ணிக்கு உற்ற பெயராகும். மூசுவது மூசி. மூசுதல் என்றால் மொய்த்தல் என்று பொருளாம். இதனை,

''வண்டு மூசு தேறல் மாந்தி'' (33)

(நச்சினார்க்கினியர் உரை: ''வண்டுகள் மொய்க்கும் கள்ளை யுண்டு'') என்னும் நெடுநல்வாடைப் பகுதியாலும் உரையாலும், அப்பர் தேவாரப் பாடல் ஒன்றிலுள்ள ''மூசு வண்டறை பொய்கையும் போன்றதே'' (பொது)

என்னும் பகுதியாலும் அறியலாம். தேனுக்காக மலரில் வண்டுகள் மொய்ப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த இரண்டிடத்தும் 'மூசு' வினைத் தொகையா யுள்ளது.

மூசு என்பது, மூசுதல் எனத் 'தல்' என்னும் தொழிற் பெயர் விகுதியின் தேவையில்லாமலேயே, அடி, உதை என்பன போல, 'மூசு' என முதனிலைத் தொழிற் பெயராக நின்றே 'மொய்க்கை' (மொய்த்தல்) என்னும் பொருளைத் தரும். இதனை,

''வண்டு மூசுஅறா நறவம் ஆர்ந்தவர்'' (418)

என்னும் சீவக சிந்தாமணிப் பாடற் பகுதியால் அறியலாம். வண்டு மூசு அறா நறவம் என்றால், வண்டுகள் மொய்க்கை நீங்காத – அதாவது – வண்டுகள் எப்போதும் மொய்த்துக் கொண்டிருக்கிற தேன் - என்று பொருளாம்.

வண்டுகள் மலரில் மொய்த்தல் என்று என்ன! மக்களும் கும்பலாக ஓரிடத்தில் சூழ்ந்து கொண்டிருந்தால், ''அங்கே சனங்கள் கூட்டமாய் மொய்த்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்று கூறுவது மரபு.

பொன்னாங் கண்ணியும் இலைகளும் காம்புகளும் கணுக்களும் கணு வேர்களும் பூக்களுமாக அடர்ந்து படர்ந்து மொய்த்துக் கொண்டிருக்கும். இருபத்தைந்து காசுக்குப் பொன்னாங் கண்ணிக் கீரை வாங்கினால், அதைக் கீரை வேறு - மற்றவை வேறு என ஆய்ந்து எடுப்பதற்கு ஐம்பது காசு கூலி கொடுக்க வேண்டும் என வேடிக்கையாகச் சொல்வதுண்டு. அந்த அளவுக்கு ஒன்றோடொன்று மொய்த்துக் கொண்டிருக்கும். இவ்வாறு மொய்த்திருப்ப தால் – மூசுவதால் 'மூசி' என்ற பெயர் ஏற்பட்டதாகச் சொல்லலாம். வேறு பெயர்க் காரணம் உளதேல் கொள்ளலாம்.

**பெருங் கொடுப்பை**

பெருங் கொடுப்பை என்பதற்கு, ''பெரிய அல்லது செழுமையாக உள்ள பொன்னாங்கண்ணி'' எனச் சா.சி.பி. அகர முதலியில் பொருள் தரப்பட்டுள்ளது. இது, நீர் வளமுள்ள நிலப்பாங்கில் செழுமையாக வளரக் கூடியது தான். செழுமை எனினும் கொழுமை எனினும் ஓரளவு பொருள் ஒன்றே. கொழுமை - கொழுப்பு என்ற அடிச் சொல்லிலிருந்தே கொடுப்பை'' என்ற சொல்தோன்றியிருக்க வேண்டும். கொழுப்பு உள்ளது கொழுப்பு; அது கொடுப்பை எனத் திரிந்திருக்கவேண்டும்.

ழகரம் டகரமாவது உண்டு. தமிழில் கோழி என்பது கன்னடத்தில் கோளி எனவும் தெலுங்கில் கோடி எனவும், தமிழில் ஏழு என்பது கன்னடத்தில் ஏளு எனவும் தெலுங்கில் ஏடு எனவும், தமிழில் கூழு (கூழ் + உ = கூழு = உணவு) என்பது கன்னடத்தில் கூளு எனவும் தெலுங்கில் கூடு எனவும் திரிந்து வழங்குவது காண்க. கூழு என்பதன் தெலுங்கு வடிவமான கூடு என்பது இலக்கிய ஆட்சியும் பெற்றுள்ளது. வேமன்னரின் வேமன்ன பத்தியம் என்னும் நூலில் உள்ள 'பப்புலேனி கூடு' (467) (பருப்பு இல்லாத உணவு), 'நெய்யிலேனி கூடு' (469-நெய்யில்லாத உணவு), 'ப்ரியமுலேனி கூடு' (விருப்பம் இல்லாத உணவு) என்னும் தெலுங்குப் பாடல்களில் 'கூடு' வந்துள்ளமை காண்க. எனவே, செழுமை - கொழுமை என்னும் பொருள் உடைய கொழுப்பை என்பது கொடுப்பை எனத் திரிந்திருக்கலாம். எனவே, பெருங் கொடுப்பை என்னும் பெயர் வடிவால் - உடற் கூறால் வந்ததாகும்,

**கான வடிவழகி**

சிவப்புப் பொன்னாங்கண்ணி, கானத்தில் (சோலையில்) அழகான வடிவுடன் காணப்படுவதால் 'கானவடிவழகி' என்னும் பெயர் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இனத்தில் முள் உடையதும் உண்டு; அது 'முள் பொன்னாங்கண்ணி' எனப்படும். இதற்குச் 'சுகதிர்' என்னும் பெயர் சா.சி.பி. அகர முதலியில் தரப் பெற்றுள்ளது. சு = நல்ல, கதிர் = கதிரையுடைய செடி எனப் பொருள் பண்ணுவது சரியாகத் தோன்றவில்லை, சு=வட மொழிச் சொல்; கதிர் தமிழ்ச் சொல். இரண்டும் இவ்வாறு இணைய முடியாது. பொருத்தமான பொருள் புலப்படவில்லை. அறிந்தார் வாய்க் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

## சொல் விளையாட்டு

**பதுமாலயம்**

பொன்னாங்கண்ணிக்குப் 'பதுமாலயம்' என்னும் பெயர் சா.சி.பி. அகர முதலியில் தரப்பட்டுள்ளது. இஃது ஒரு சொல் விளையாட்டுப் பெயராகும். பொன் என்பதற்குத் திருமகள் (இலட்சுமி) என்னும் பொருள் உண்டு. இதனைச் சீவக சிந்தாமணியிலுள்ள

> ''பொன் துஞ்சு மார்பன்
> புனலாட்டிடைப் புன்கணெய்தி'' (பதிகம்-14)

என்னும் பாடல் பகுதியால் அறியலாம். மற்றும், திவாகர நிகண்டில் பொன், பதுமை என்பனவும், பிங்கலத்தில் கமலை, பதுமை, பூமகள் என்பனவும், சூடாமணியில் பொன், அலர் மகள், பூமின், சலசை என்பனவும், கயாதர நிகண்டில் பொன், மலராள் என்னும் பெயர்களும், ஆசிரிய நிகண்டில் பூமகள், கமலை, பொன், பதுமை, கோகனகை என்பனவும் திருமகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

நிகண்டுப் பெயர்களுள், பொன் என்பது, செல்வத்திற்கு உரியவள், பொன்னிறம் உடையவள் என்னும் பொருளது. மற்ற பெயர்கள், பதுமமாகிய தாமரை மலரை இருப்பிட

மாகக் கொண்டவள் என்னும் பொருளன. எனவே, பொன்னுக்கும் பதுமத்திற்கும் உள்ள தொடர்பு தெரிய வரும்.

பதுமாலயம் (பதும+ஆலயம்) என்பது, தாமரையைக் கோயிலாக் கொண்ட திருமகளை நினைவு செய்கிறது. திருமகளுக்குப் பொன் என்னும் பெயர் உண்டு. எனவே, பொன் என்னும் சொல்லை முதலில் கொண்டுள்ள பொன்னாங்கண்ணிக்குப் பதுமாலயம் என்னும் பெயர், ஒரு சொல் விளையாட்டாகத் தரப்பட்டுள்ளது. இத்தகைய சொல் விளையாட்டுக்குப் பலப்பல எடுத்துக் காட்டுகள் உண்டெனினும், ஈண்டு ஒன்றே ஒன்று காண்பாம்: 'சிவகரந்தை' என்னுஞ் செடிக்கு 'விடையூர்தி' என்னும் பெயர் சித்த வைத்திய அகராதியில் தரப்பட்டுள்ளது. சிவகரந்தை என்பதன் முன்சொல்லாகிய 'சிவ' என்பதைக் கொண்டு, விடையை (காளையை) ஊர்தியாகக் (வாகன மாகக்) கொண்ட சிவன் பெயராகிய 'விடையூர்தி' என்னும் பெயர் தரப்பட்டுள்ளமை காண்க.

**வாது வர்ணம்**

வாது வர்ணம் என்பதும் சொல் விளையாட்டுப் பெயரே. வர்ணம் (வருணம்) என்பதற்குப் பொன் என்ற பொருள் உண்டு. வாதுதல் என்பதற்கு அறுபடுதல் - வெட்டுப்படுதல் என்ற பொருள் உண்டு; இதனைப் புறத்திரட்டு என்னும் தொகை நூலின் 'மூதின் மறம்' என்னும் பகுதியில் உள்ள

''வாதுவல் வயிறே வாதுவல் வயிரே ...
எம்மில் செய்யாப் பெரும்பழி செய்த
கல்லாக் காளையை ஈன்ற வயிறே'' (9)

என்னும் பாடற் பகுதியில் காணலாம். ''போரில் தோற்ற மகனைப் பெற்ற கொடிய வயிறே! நீ அறுபடுவாய் -

வெட்டப்படுவாய் - கிழிக்கப்படுவாய் (வாதுவாய்)'' என மறக்குடி மகளொருத்தி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. எனவே, 'வாது வர்ணம்' என்பதற்கு, அறுக்கப்பட்ட வெட்டப்பட்ட பொன் துண்டு என்பது பொருளாம். பெரிய புராணத்தில் உள்ள ''மச்சம் வெட்டிக் கைக் கொண்டு'' என்ற பகுதி முன்னர் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதே மச்சந்தான் இந்த வாதுவர்ணம் என்பது. எனவே, இது சொல்விளையாட்டாகப் பொன்னாங்கண்ணிக்குப் பொருந்தும்.

வெறும் பொன் என்றில்லாமல், வெட்டப்பட்ட - அறுக்கப்பட்ட பொன் என்று கூறுவானேன்? - என்று வினவலாம். அதற்கும் காரணம் உண்டு. முருங்கைக் கீரையை ஒவ்வோர் இலையாகப் பறிப்பதோ கத்திகொண்டு அறுப்பதோ செய்வதில்லை; சொரட்டுக்கோல் என்னும் கருவியால் சிறு சிறு கணுவாக ஒடிப்பார்கள். தென்னார்க்காடு மாவட்டத்தில் 'முருங்கைக் கீரை ஒடித்தல்' என்று கூறுவதே பல இடங்களில் வழக்கமாயுள்ளது. பசலைக் கீரை, தூதுவளைக் கீரை போன்றவற்றை இலை இலையாகப் பறிப்பார்கள். ஆனால், அறுகீரை (அரைக்கீரை), பொன்னாங்கண்ணிக் கீரை போன்றவற்றைக் கத்தியால் - அரிவாளால் அறுப்பதே வழக்கம். அதனால், அறுபடுகின்ற பொன் கீரை என்னும் பொருளில் 'வாது வர்ணம்' என்ற பெயர் தரப்பட்டுள்ளது.

**வரிக்கண்ணி**

வரிக்கண்ணியும் சொல் விளையாட்டே. கண்ணி என்பது பொன்னாங்கண்ணியைக் குறிக்கும். 'வரி' என்பது பொன்னைக் குறிக்கும்.

பெண்களின் தோளிலும் மார்பிலும் படரும் பொன் னிறமான தேமலுக்குப் பொன், வரி, பசலை, சுணங்கு,

திதலை என்னும் பெயர்கள் உண்டு. சில இலக்கியச் சான்றுகள் வருக: (சங்க இலக்கியங்கள் பலவற்றில் பற்பல இடங்களில் இவை வந்துள்ளன)

**கலித்தொகை - 22—19**

''அடர்பொன் அவிர் ஏய்க்கும் அவ்வரி''
நச்சினார்க்கினியர் உரை: ''தகடாகிய பொன்னினது விளக்கத்தை யொக்கும் அழகிய சுணங்கு''.

இங்கே 'வரி' என்பதற்குப் பொன்னிறம் என்னும் பொருள் உள்ளமை காண்க.

**சீவக சிந்தாமணி — 1530**

''வயங்கு பொன்னீன்ற நீலமாமணி முலையினாளே''
முலையிலும் முலையைச் சுற்றியும் பொன்னிறப் பசலை படர்ந்துள்ளது. நீலமாமணி என்பது, முலைக் காம்பு நீல நிறமாயிருப்பதைக் குறிக்கிறது. இங்கே வரி (பசலை) பொன் எனக் கூறப்பட்டிருப்பது காண்க.

**கந்தபுராணம் - இரணியன் யுத்தப் படலம்**

''பசலை சேர் முலை மங்கையர் விழிக்கணைபாய''

**புறநானூறு - 155**

''பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ''
நெருஞ்சிப்பூ பொன்னிறமாயிருக்கும். அப் பொன்னிறம் இங்கே 'பசலை' எனக் குறிப்பிடப்பட்டிருப்பது காண்க.

**ஐங்குறுநூறு**

''பசுமலர்ச் சுணங்கின் மடவரல்'' (76)
''திதலை மாமை தேயப்
பசலை பாயப் பிரிவு தெய்யோ'' (231)

'மலர்ச் சுணங்கு = வேங்கை மலரைப் போன்ற தேமல்' — என்பது பழைய உரை. பசு மலரின் சுணங்கு என்பது, மலரின் சுணங்கு நிறமான - பொன்னிறமான மகரந்தத்தை யும் குறிக்கிறது.

அடுத்த பாடல் பகுதி, தலைவனைப் பிரிந்ததால் தலைவிக்குப் பொன்னிறப் பசலை தோன்றியுள்ளதை அறிவிக்கிறது. திதலை = தேமல். மாமை = நிற அழகு.

மற்றும், சுணங்கு அணி ஆகம் (மார்பு), சுணங்கு அணி மென்முலை, சுணங்கு அணி வனமுலை ஆகிய தொடர்கள் சங்கநூல்கள் பலவற்றில் இடம் பெற்றுள்ளன.

## பெருங்கதை - மகத காண்டம்

''மின்னுறழ் சாயல் பொன்னுறழ் சுணங்கின்'' (16-5) சுணங்கு பொன்னிறமானது என்பது பெருங்கதைப் பகுதி யாலும் புலனாகும். எனவே, இந்தத் துறையில், வரி, பொன், பசலை, சுணங்கு, திதலை, தேமல் என்பன ஒரு பொருட் சொற்களாம்.

இங்கே மற்றொரு கருத்தும் நினைவு கூரத் தக்கது. பண்டொரு காலத்தில் நாணயம் (Coin) பொன்னால் செய்யப்பட்டிருந்தது. அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி (Tax) பொன்காசாகக் கொடுக்கப்பட்டது. பொன் செலுத் துதல் — வரி செலுத்துதல் என்பன ஒரு பொருளவாய் வழங்கப்பட்டன. வரியாகச் செலுத்தப்பட்ட பொன் 'மேனிப் பொன்' எனப் பண்டு பெயர் வழங்கப்பட்டது. மாடுகள் நிரம்ப இருப்பது செல்வமாகக் கருதப்பட்டதால் மாடு என்னும் சொல்லுக்குச் செல்வம் என்னும் பொருள் ஏற்பட்டது போல, பொன் வரியாகச் செலுத்தப்பட்டதால் பொன்னுக்கு வரி என்னும் பெயர் ஏற்பட்டது. ஆகவே,

பொன்னாங்கண்ணிக்கு வரிக்கண்ணி என்பது சொல் விளையாட்டுப் பெயராயிற்று.

## இடத்தால் பெற்ற பெயர்

### மேனாட்டுக் கண்ணி

பொன்னாங்கண்ணி ஏழாயிரம் அடி உயரம் உள்ள மேடான மலைப்பாங்கிலும் நீர்வளம் இருந்தால் செழிக்கக் கூடியது என்பதனால், இதனை மேல் நாட்டுக் (மேட்டுப் பகுதிக்) கண்ணி என்னும் பெயரால் குறிப்பிடுவதாகக் கருத முடியாது. இந்த இனத்தில் சிவப்புப் பொன்னாங் கண்ணி என ஒன்று உண்டு. இது பார்ப்பதற்கு அழகாய், மேல்நாட்டுப் பெண்ணின் நிறம் உடையதால் இப்பெயர் பெற்றதாகச் சொல்லத் தோன்றும், ஆனால் இந்தச் சிவப்புப் பொன்னாங்கண்ணியைச் சில இடங்களில், ''இலண்டன் கீரை'' என்னும் பெயரால் சுட்டுகின்றனர். 'சீமைப் பொன்னாங்கண்ணி' என்னும் பெயரும் இதற்கு உண்டு. எனவே இதனை, மேனாட்டிலிருந்து வந்ததால் இப்பெயர் பெற்றது என்றே கொள்ள வேண்டும். இடத்தால் பெற்ற பெயராகும் இது.

### சுவைச் சிறப்பு

பொன்னாங்கண்ணி பொதுவாக உடலுக்கும் சிறப் பாகக் கண்ணுக்கும் நலம் பயப்பதுடன், உண்பதற்கும் மிகவும் சுவையாக இருக்கும். வைத்திய மூலிகை அகராதியில்,

> ''பொன்னாங் காணிக்குப் புளியிட்டுக் கடைந்தால்
> அண்ணாக்கெல்லாம் தித்திக்கும்''
> (அண்ணாக்கு = உள்நாக்கு)

என்பதாக இதன் சுவை சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

"பொன்னாங்கண்ணியைப் புளியிட்டுக் கடைந்தால்
அண்ணா மலையாருக்கு அடிநாக்குக்கும் பத்தாது
உண்ணா முலையாளுக்கு உள்நாக்குக்கும் பத்தாது"

என்பது மக்கள் வழக்கில் உள்ள பாடல். புளியோதரை விரும்பிகட்குப் புளிபோட்டுக் கடைய வேண்டும். பத்தியத் திற்குப் புளியில்லாமல் சமைத்து உண்பதே சாலச் சிறந்தது.

## பெயர்களும் நூல்களும்

பொன்னாங்கண்ணிக்கு உரிய பெயர்களுள், சீதளி என்பது மலையகராதியிலும் சீதை என்பது தேரையர் பாடலிலும், சித்தி - சானகி என்பன வைத்திய மலை யகராதியிலும், மச்சி யாச்சி மூலிகை வைத்திய அகராதியிலும், காணி - மேனாட்டுக்கண்ணி - கண்ணுக்கு இனியாள் - மச்சிக் கண்ணி - மச்சியாங்கண்ணி என்பவை சித்த வைத்திய அகராதியிலும், மச்சியாச்சி யாழ்ப்பாண அகராதியிலும், வான நாடி ஜூபிலி தமிழ்ப் பேரகராதியிலும், மற்ற பெயர்கள் சாம்பசிவம்பிள்ளை தமிழ் - ஆங்கில அகரமுதலியிலும் சொற்பொருள் விளக்கம் செய்யப்பட்டுள்ளன.

# 6. யானை வணங்கி

நெருஞ்சி உலகின் பெரும்பாலான பகுதிகளிலும் உள்ளது. நெருஞ்சிக் குடும்பம் ஏறக்குறைய 225 இனங்கள் உடையது எனச் சொல்லப்படுகிறது. இஃது ஆங்கிலத்தில் Small caltrops என்று பெயர் வழங்கப்பட்டுள்ளது.

Caltrops என்பதற்குக் கப்பணம் என்பது பொருள். நான்கு பக்கம் கூரிய முள் உடைய இருப்பு உருண்டைக்குக் கப்பணம் என்பது பெயர். இந்தக் காலத்தில் எதிரியின் போர்ப் படைகளின் வருகையைத் தடுக்க வழிகளில் கண்ணி வெடிகள் வைத்திருப்பது போல், முன்பு எதிரியின் யானைப் படையும், குதிரைப் படையும் வருவதைத் தடுக்க வழிகளில் கப்பணங்களை இட்டு வைப்பர். கப்பண முள் தைப்பதால் யானைகளும், குதிரைகளும் முன்னேறாமல் பின் செல்லும். பெரிய இருப்புக் கப்பணங்களைப் போலவே சிறிய நெருஞ்சிக் காய்களையும் (Small caltrops) வழியில் தூவி வைப்பது வழக்கமாம். நாம் நெருஞ்சி முள் என்று சொல்வது நெருஞ்கிக் காயாகும். திருவள்ளுவர் இதனினும் ஒரு படி மேலே சென்று - அதாவது - நெருஞ்சிக் காய் என்னாமல், நெருஞ்சிப் பழம் என்று கூறியுள்ளார்:

''அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்'' — (1120)

என்பது குறள். கருத்து: (மென்மைக்குப் பெயர் பெற்றன வாகிய) அனிச்ச மலரும், அன்னத்தின் சிறகும், இவள் காலடிக்கு நெருஞ்சிப்பழ முட்கள் போலாம்''. வள்ளுவரின் வழி நின்று திருத்தக்கதேவரும் இவ்வாறு கூறியுள்ளார்:

> ''பஞ்சியடர் அனிச்சம் நெருஞ்சியீன்ற பழமாலென்று
> அஞ்சு மலரடிகள்....'' (341)

என்பது தேவரின் சீவகசிந்தாமணிப் பாடற் பகுதியாகும். இத்தகைய கூரிய நெருஞ்சி முள் தைப்பதால் யானைகளும் குதிரைகளும் முன்னேற முடிவதில்லை. இவ்வாறு யானைகளையும் வணங்கச் செய்வதால் - பின்னிடச் செய்வதால் நெருஞ்சிக்கு ''யானை வணங்கி'' என்னும் பெயரும் சூட்டப் பட்டுள்ளது. இப்பெயரை, அகத்தியரின் ஏமதத்துவம் என்னும் பஞ்ச காவிய நிகண்டின் நான்காவது பாகமாகிய வைத்திய காண்டத்தின் 67ஆம் பாடலில் காணலாம்.

> ''விட்ட யானை வணங்கி யென்றும்
> தொட்டப் பூடென்றும் .. யானை நெருஞ்சியின்
> பேரே''

என்பது பாடல் பகுதி. மத யானைகளை அங்கும் இங்கும் ஓடாமல் அடங்கச் செய்வதற்கும் இதைப் பயன்படுத்துவது உண்டு. தேட் கொடுக்கி என்னும் செடியும் முள்ளால் தைத்து யானையைத் துன்புறுத்துவதால், அதற்கும் 'யானை வணங்கி' என்னும் பெயர் அகரமுதலிகளில் தரப் பட்டுள்ளது.

தரையில் நடப்பவர்களையும் காலில் தைத்துத் துன்பம் செய்வதால் நெருஞ்சிக்கு மர நூலார் (Botanists) Tribulus Terrestrisஎன்னும்பெயர் வைத்துள்ளனர்.Tribulus என்பது இன்னலை - துன்பத்தைக் குறிக்கிறது. Terrestris என்பது தரைப் பகுதியைக் குறிக்கிறது. அஃதாவது, தரையில் நடப்பவர்க்கும் - நடப்பனவற்றிற்கும் இன்னல் விளைவிப்பது-என்பது பொருளாகும். மக்களை என்றென்ன! யானைகளையே துன்புறுத்தும் நெருஞ்சிக்கு 'யானை வணங்கி' என்னும் பெயர் சாலப் பொருந்தும். இது சார்பினால் பெற்ற பெயராகும்.

# 7. ஒரு கண்ணோட்டம்

## 1. பொது விதி

மர இனங்களைக் குறிப்பனவாக, மக்கள் அனைவரும் அறிந்த பெயர்கள் இருக்க, அவற்றிற்கு மாற்றுப் பெயர்கள் செயற்கையாக முன்னோர்களால் இடப்பட்டுள்ள செய்தி, இதுகாறும் இந்நூற் கட்டுரைகளில் விரிவாக விளக்கப் பட்டுள்ளமையை அறியலாம். இந்த மாற்றுப் பெயர்களில் ஒரு கண்ணோட்டம் செலுத்தினால், இத்தகைய முயற்சியில் உள்ள நிறைகுறைகள் புலப்படும். நிறைகள் உள்ள செயலில் குறைகளும் சில இருப்பது, மர இனப் பெயர் வைப்புக் கலைக்கும் விதிவிலக்கு அன்று; பொது விதியாகும். முதலில் இந்த முயற்சியில் உள்ள குறைகளையும் அடுத்து நிறைகளை யும் குறை அமைதிகளையும் முறையே காணலாம். குறைகளாவன:

## 2. குறைகள்

1. சில செயற்கைப் பெயர்களின் பொருள் தெளிவாகப் புரியவில்லை. எ.கா.: தவசி - முதலியன.

2. சில பெயர்கள், பொருள் செய்வதில் ஐயப்பாடும் குழப்பமும் தருகின்றன.

3. சில பெயர்களின் பொருள் முற்றிலுமே புரிய வில்லை.

4. சில பெயர்களின் பொருளை ஒரு தோற்றமாக (நிதானமாக) உய்த்துணர வேண்டியுள்ளது.
எ.கா.: தங்கைச்சி, ஊருடைமுதலியார் - முதலியன.

5. பொருள் தெளிவாகப் புரியாத குழப்பத்தினால் திரிபு ஏற்படலாம். அதாவது, ஒரு சரக்குக்குப் பதிலாக வேறொரு சரக்கைப் பயன்படுத்தி விடலாம்.

6. கானக்குதிரை, ஆனைக்கன்று - முதலியன தெளிவாகப் பொருள் புரிவன என்றாலும், மருத்துவ அறிவோடு இலக்கிய நூலறிவும் உடையோர்க்கே, அத்தெளிவு கைவரக் கூடியதாயிருக்கும். மற்றவர்க்கு இயலக்கூடியதன்று. எல்லாருக்கும் தெரிய வேண்டும் என்பது இக்கால நோக்கமாகும்.

7. பல பெயர்கள் வடமொழியில் வைக்கப்பட்டுள்ளன. தாய்மொழியாகிய தமிழையே இன்னும் சரிவரப் புரிந்து கொள்ள முடியாத மக்களுக்கு வடமொழிப் பெயர்கள் புரிய வழியேயில்லை.

8. கடவுளாகிய சிவனுக்குப் பல பெயர்கள் உள்ளன. அவற்றுள் சில பெயர்கள் ஒரு மர இனத்துக்கும், வேறுசில பெயர்கள் வேறொரு மர இனத்திற்கும் இடப்பட்டுள்ளன. இப்பெயர்களுள் எந்தப் பெயரையும் ஓரளவு தொடர்புள்ள மர இனத்துக்கும் வைக்கலாம் போல் தோன்றுகிறது. இந்த முயற்சி அவ்வளவு சரியானதாகத் தெரியவில்லை.

9. மதத் தொடர்புடைய - புராணக்கதை தொடர்புடைய சில பெயர்கள் மதக் காழ்ப்பை உண்டாக்கலாம்.

10. இந்துமதத் தொடர்பான பெயர்கள், இந்துமதப் புராண - இலக்கியங்களைக் கற்றோர்க்கன்றி, அவற்றைக் கற்காத இந்துக்களுக்கும் மற்ற மதத்தினர்க்கும் புரிய வாய்ப்பில்லை.

11. சொல் விளையாட்டுப் பெயர்களுள் சில, முழுப் பொருத்தம் உடையனவாயில்லை.

12. சில ஒப்புமைப் பெயர்கள் முற்றிலும் பொருந்துவன என்று சொல்வதற்கில்லை.

13. சார்புப் பெயர்களுள்ளும் சிலவற்றில் தெளிவின்றிக் குழப்பம் உள்ளது.

14. இன்னின்னது இன்னின்ன நோய் போக்கும் என்பதை விளக்கும் பயன் மர இனம் அனைத்துமே, அனைவருக்குமே எளிதில் கிடைத்து அவ்வந் நோயைப் போக்கும் என்று சொல்வதற்கில்லை. சிலருக்கு ஒத்து வரலாம் – சிலருக்கு ஒத்து வராமல் போகலாம். சில நோய்கட்கு, குறிப்பிடப்பட்டுள்ள சரக்குகள் மட்டும் போதா; அவற்றுடன் வேறு சில சரக்குகளையும் துணை யாகச் (அனுமானமாகச்) சேர்த்து உட் கொண்டாலேயே நோய் தீரும். எனவே, குறிப்பிட்ட ஒரு பயன் பெயரின் துணை கொண்டு குறிப்பிட்ட ஒரு நோயைப் போக்க முடியாமற் போகலாம்.

15, பயன் பெயர்கள் சிலவற்றை நம்பிச் சிலர் துணைப் பொருள் இன்றியோ, அளவு - காலம் போன்றவை தெரியாமலோ உட்கொள்ளின் எதிர்மாறான பயன் நேரிட்டு விடலாம்.

16. வடிவால் வந்த பெயர்களுள், சில பெயர்கள், சரியான பொருத்தம் உடையனவாய்த் தோன்றவில்லை.

17. சில மர இனங்கள், உலோகங்களை மாற்றுவ தாகவும் உருக்குவதாகவும் பற்பம் (பஸ்பம்) ஆக்குவதாகவும் சொல்லபட்டுள்ளன. இரசவாதம் இடம் பெற்றுள்ளது. இவை முற்றிலும் சரியா? இப்போது செய்ய முடியுமா? - முழு வெற்றி கிடைக்குமா? - என்பது சிக்கலான செய்தி.

குறை சொல்வதாயின், இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம்.

### 3. நிறைகள்

இனி, மர இனப் பெயர் வைப்புக் கலை முயற்சியினால் பெறப்படும் நன்மைகளைக் காண்பாம்:-

1. பயனால் பெற்ற பெயர்களால், எந்தச் சரக்கால் எந்த நோய் குணமாகும் என எவரும் எளிதில் அறிந்து கொள்ளலாம்.

2. இதனால், கை வைத்தியம் எனப்படும் பழைய வீட்டு மருத்துவம் புத்துயிர் பெறும்.

3. எதற்கெடுத்தாலும் அதாவது எளிய - சிறிய நோய்க்கெல்லாம் ஆங்கில முறை மருத்துவரிடம் (டாக்டரிடம்) ஓடாமல் தாமே மருத்துவம் செய்து கொள்ளலாம். இதனால், காலம், முயற்சி, பணம் ஆகியவை மிச்ச மாகும்.

4. வீட்டு மருத்துவ முறையால், தொலைவிலுள்ள மர இனப் பொருள்கள் எளிதில் - விரைவில் கிடைக்கா விடினும், நாட்டு மருத்துவக் கடைகளில் விலைக்குக் கிடைக்கும். அங்கிருந்து பெற்று நோயைக் குணப்படுத்தலாம். நகரில் உள்ளவர்க்குத் தெரியா விடினும், சிற்றூர்களில் உள்ள மக்கட்கு, மருத்துவ மர இனப் பொருள்களைப் பற்றி நன்கு தெரியும். அவர்கள் தம் ஊர்ப் பக்கத்திலேயே - இருக்குமிடம் அறிந்து எடுத்துக் கொண்டு வந்து பயன்படுத்திக் கொள்வர்.

5. சுக்கு, மிளகு, திப்பிலி போன்ற பொருள்களை எவரும் அறிந்திருப்பர். அவற்றால் எளிதில் - விரைவில் பயன் பெறலாம்.

6. இத்தகைய முயற்சியால், மக்கட்குத் தன்னம்பிக்கையும் தன்னூக்கமும் தற்சார்பும் உண்டாகும்.

7. சில மர இனப் பெயர்களால் வட மொழி அறிவும் பிற மொழி அறிவும் கிடைக்கும்.

8. பொதுவாக மரநூல் (தாவர நூல்) அறிவும் வேளாண்மை அறிவும் பெறலாம்.

9. சில பெயர்களால் நிலநூல் அறிவு, வாணிக அறிவு, வரலாற்றறிவு கிடைக்கும். எ.கா: கரிசலாங் கண்ணி போன்ற பெயர்களால் நிலநூல் அறிவு கிடைக்கும்.

10. புராணங்கள் தொடர்பான செய்திகளும் இலக்கிய அறிவும் பெற முடியும். மால் துயில் முதலிய பெயர்களால் புராணச் செய்திகளும், கோளி - வசந்த தூதம் முதலிய பெயர்களால் இலக்கிய அறிவும் உண்டாகும்.

11. சொற் பொருள் கூறும் நிகண்டு நூலறிவும், அதனால், சொல்லுக்குப் பொருள் காணும் திறனும் உண்டாகும். இதனால் இலக்கியங்களைப் பொருள் புரிந்து சுவைத்துப் படிக்கும் பயிற்சியும் ஏற்படும்.

12. மருத்துவ அறிவுடன் பல் வகை அறிவியல் அறிவும் கிடைக்கும். எ.கா: உப்பு மூலிகை, கந்தகச் சத்துரு, முதலியன.

13, 14. சொல் விளையாட்டுச் சுவையும் ஒப்புமைக் கலைச் சுவையும் கிடைக்கின்றன.

15. நுட்பமாய் எண்ணிப் பார்க்கும் (சிந்திக்கும்) பயிற்சி, கண்டு பிடிக்கும் ஆராய்ச்சி அறிவு முதலிய திறன்கள் வளரும். எ. கா:- அறமறை, தவசி, கற்பு, கைகேசி முதலியன.

16. நுனிப்புல் மேயாமல், எதையும் உற்று நோக்கும் பயிற்சி உண்டாகும். எ.கா:- மறி.

17. சில பெயர்கள், படிப்போர்க்குக் கற்பனை ஆற்றலை மிகுக்கும். எ.கா:- வடுகும் தமிழும், தாயைக் கொன்றான் முதலியன.

18. நல்ல நடை முறை - நல்ல பழக்க வழக்கம், வாழும் வழி ஆகியவை கைவரப் பெறும், இன்னதை

உண்டால் இன்னின்ன கேடுகள் வரும்; இன்னதை உட்கொள்ளின் இன்னின்ன நன்மைகள் உண்டாகும் என அறிந்து, நல்ல பழக்க வழக்க நடைமுறைகளைப் பின் பற்றவும், அதனால் நீண்ட நாள் நோயின்றி இனிது வாழவும் துணை செய்யம்.

இவ்வாறு இன்னும் நிறைகள் பல இயம்பிக் கொண்டு செல்லலாம்.

## 4. குறை நிறை அமைதி:

### 4.1 மிக்க கொளல்

எதிலும் ஒரு சிறிதேனும் குறை இருக்கலாம். ஆனால், அதிலுள்ள நிறைகளைக் கொண்டு குறையை அமைதி செய்துகொள்ள வேண்டும். ஒன்றிலுள்ள குணங்களையும் (நிறைகளையும்) குற்றங்களையும் ஆய்ந்து, குற்றம் மிகுதி யாயின் தள்ளலாம்; குணம் மிகுதியாயின் கொள்ளலாம் என வள்ளுவர் கூறியுள்ளார்:

> ''குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
> மிகைநாடி மிக்க கொளல்'' (504)

என்பது குறட்பா, இதன்படி நோக்கின், மர இனங்கட்குக் கொடுக்கப்பட்டுள்ள செயற்கைக் கலைப் பெயர்களால் நன்மை மிகுதி என்பது புலப்படும். மிகப் பல பெயர்கள் பயனால் இடப்பட்டவை யாதலின், பயனறிந்து மர இனச் சரக்குகளைப் பயன்படுத்தி மக்கள் நல்வாழ்வு பெற வாய்ப்பு உண்டு.

### 4.4.1 புதுப் பெயர்க்காரணம்

இயற்கைப் பெயர்களைச் சொன்னால் மருத்துவம் பயனளிக்காது (பலிக்காது) என்ற ஒரு நம்பிக்கை காரண மாகவும், எளிய மரஇனப் பெயர்களை அறியின் மக்கள்

மருத்துவத்தை நம்பாமல் மிகவும் எளிமையாய் நினைக்கக் கூடும் என்ற உளவியல் காரணமாகவும், புதுப்பெயர்கள் இடப்பட்டுள்ளன. கலைச் சுவை காரணமாகவும் புதுப் பெயர்கள் இடப்பட்டுள்ளன.

### 4.3 5.3 செய்யுள் நூல்

ஈண்டு மற்றுமோர் உண்மையை மறப்பதற்கில்லை. பண்டைக் காலத்தில் கணக்கு, மருத்துவம், கணி (சோதிடம்) முதலிய அனைத்துக் கலைகளும் செய்யுளாலேயே இயற்றப்பட்டன. செய்யுள் என்றதும், எதுகை மோனை நயம், கற்பனைக் கலைநயம் முதலிய நயங்கள் இயற்கை யாக இடம் பெற்றுவிடும். எனவே, மருத்துவ நூல்களில், மர இனங்கட்குப் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பெயர்கள் கற்பிக்கப்பட்டு இடப்பட்டுள்ளன. இதனால், செய்யுளிலுள்ள சில பெயர்கள், ஐயப்பாடும் திரியும் குழப்பமும் இன்றி, எளிதில் தெளிவாகப் பொருள் புரிந்து கொள்ள முடியா நிலையில் இருப்பது இயற்கையே. செய்யுள்—இலக்கியப் படிப்பில், சில பகுதிகளை ஒரு தோற்றமாக உய்த்துணர்ந்து கொள்ள வேண்டியும் இருக்கலாம்.

### 4.4. இலக்கியப் பயிற்சி

தக்க இலக்கியப் பயிற்சியின் வாயிலாகத் தமிழில் உள்ள அருஞ்சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் புரிந்து கொள்ளலாம். சொந்த இலக்கியப் பயிற்சித் திறன் இல்லாதார், உரை நூல்களைக் கொண்டும், 'மர இனப் பெயர் வைப்புக் கலை' என்னும் இந்நூல் போன்ற பெயர்க் காரண விளக்க நூல்களாலும், வேலூர் கண்ணப்பரின் 'நம் நாட்டு மூலிகைகள்' போன்ற நூல்களாலும் பொருள் புரிந்து பயன் பெறலாம். எல்லா மதத்தினருமே, பிற

மதங்கள் தொடர்பான புராண-இலக்கியங்களை ஆய்ந்து படிக்கும் காலம் இது. எனவே, பயிற்சி வாயிலாக எம் மதத்தினரும் இந்துமதப் புராணக் கதைகள் தொடர்பான பெயர்களின் பொருள்களைப் புரிந்து கொள்ள முடியும். இந்து மதத்திற்குள்ளும், சைவம் தொடர்பான பெயர்களும் வைணவம் தொடர்பான பெயர்களும் இடம் பெற்றிருப்ப தால், சைவ - வைணவக் காழ்ப்புக்கும் இடமில்லாமற் போகலாம்.

## 4.5. சில வழிமுறைகள்

சொல் விளையாட்டுப் பெயர்கள், ஒப்புமைப் பெயர்கள், சார்புப் பெயர்கள், வடிவப் பெயர்கள் முதலியவற்றைப் பட்டறிவு வாயிலாகவும் பிறர் வாயிலாகவும் அறிந்து சுவைக்கலாம்.

பயன் பெயர்களின் உதவியால், சில சரக்குகளைத் தனியாகப் பயன்படுத்தியும், சில சரக்குகளுடன் வேறு சில சரக்குகளைச் சேர்த்துப் பயன்படுத்தியும் நன்மை பெறலாம். போதிய பயிற்சியிலாதார் பிறர் அறிவுரையை நாடலாம்.

### ஒப்புமைக்கலை

மர இனங்கட்கு இடப்பட்டுள்ள பெயர்களுள் ஒப்புமைப் பெயர்கள் மிகவும் சுவை பயந்து ஒரு கலையாகத் தோன்று வதைக் காணலாம். சொல் விளையாட்டு - வேடிக்கைப் பெயர்கள் சிலவற்றிலுங்கூட, சார்புப் பெயர்கள் சில வற்றிலுங்கூட' வடிவ (உடற்கூறு) - நிறப்பெயர்கள் சில வற்றிலுங்கூட, ஒப்புமைக் கலை இழையோடியிருப்பதை யறியலாம். மர இனங்கட்குத் தரப்பட்டுள்ள ஒப்புமைப் பெயர்களுள் தெய்வப் பெயர்களும் புராண-இதிகாசக் கதை உறுப்பினர் பெயர்களும் குறிப்பிடத்தக்கன.

### 6. கலை நூல்

இந்நூலில் இதுகாறுங் கூறப்பட்டு வந்துள்ள செய்திகளால் கிடைக்கும் கலை சார்பான தொகுப்புப் பொதுக் கருத்தாவது பயன், பண்பு, செயல், ஆகியவை காரணமாக வைக்கப்பட்டுள்ள மர இனங்களின் பெயர்களில் பயன் கலையைக் காணலாம். வடிவம், சார்பு, உவமை (ஒப்புமை) உயர்திணைப்பெயர் (மக்கள் பெயர் போன்றவை), தெய்வப் பெயர், சொல் விளையாட்டு ஆகியவை தொடர்பாக இடப்பட்டுள்ள மர இனப் பெயர்களில் கவின் கலையைக் காணலாம்.

எனவேதான், இந்நூலுக்கு, 'மர இனப் பெயர் வைப்புக் கலை' என்னும் பட்டப் பெயர் சூட்டப் பெற்றது. இத்தகைய பெயர்களை இட்டுள்ள நம் முன்னோர்களின் பல துறைக் கலையறிவினை எவ்வளவு போற்றினாலும் தகும்!

### 7. நூற்பயன்

மர இனப் பெயர்க் காரண விளக்கம் செய்யப்பட்டுள்ள இந்நூலைக் கற்பதால், மர இனங்களால் உண்டாகும் பல்வேறு பயன்களை அறிந்து கொள்ளலாம். மற்றும், பொதுவான மர நூல் (தாவர நூல்) அறிவும் கிடைக்கும். எனவே, இந்தப் படிப்பினை, மர இனங்களின் இன்றியமையாமையை உணர்ந்து, இருக்கும் மர இனங்களைப் போற்றிக் காக்கவும், புதிதாக மர இனங்களை வைத்துப் பயிராக்கி வளர்க்கவும் தூண்டலாம். இதனால், மருத்துவம், வேளாண்மை, பொது அறிவியல் ஆகிய துறைகள் மேலும் வளர வாய்ப்பு உண்டாகலாம்.

வளர்க மர இனம்! மர இனத்தின் பயனைப் பெற்று வாழ்க மக்கள் இனம்! இத்தகைய நூல்களால் தமிழ் மொழி வளம் பெறுக!

# 8. பிற்சேர்க்கை

## இந்நூலுக்குக் கருத்து வழங்கிய கருவூலங்களின் பட்டியல்

குறிப்பு: இதில், நூல் பெயரும் உட்பிரிவும் முதலிலும், ஆசிரியர் பெயர் அடுத்தும், இந்நூலின் பக்க எண் இறுதியிலும் இருக்கும்.

**மாதவம் புரிவாள் என்னும் கட்டுரைக்கு**

*பிரபுலிங்கலீலை - மாயை உற்பத்தி கதி - 32. நல்லாற்றூர்ச் சிவப்பிரகாச அடிகளார் — 7*

*பாம்பாட்டி சித்தர் பாடல் - 70. பாம்பாட்டி சித்தர் — 8*

*கீதாசாரத் தாலாட்டு - 97. திருவேங்கடநாதர் — 8*

*சிவஞான சித்தியார் - சு பக்கம் - 2 - 67, 68. அருள்நந்தி சிவாசாரியார் — 9, 10*

*தைலவ சருக்கச் சுருக்கம் - பாயிரம் - 30 — 11*

*நளவெண்பா - கலிநீங்கு படலம் - 19 - புகழேந்திப் புலவர் — 11*

*பெருங்கதை - உஞ்சைக் காண்டம் - 43-61. கொங்குவேளிர் — 12*

*திருவெங்கைக் கலம்பகம்-84 - சிவப்பிரகாச அடிகளார் — 12*

*பாரதம் - வாரணா - 61, 65. வில்லிபுத்தூரார் — 12*

*ஞானாமிர்தம் - 46 -19. வாகீச முனிவர் — 12*

*மணிமேகலை - பதிகம் - 10. சீத்தலைச் சாத்தனார் — 12*

*நளவெண்பா - சுயம்வர காண்டம் - 15. புகழேந்தி — 12*

*பிங்கல நிகண்டு - பல இடங்களில் - பிங்கலர்*

*திவாகர நிகண்டு - பல இடங்களில் - திவாகரர்*

*கம்பராமாயணம் - சூர்ப்பணகைப் படலம் - 4. கம்பர் — 13*

திருப்புகழ் - 7079. அருணகிரிநாதர் — 13
பாரதம் - பதினேழாம் போர்ச்சருக்கம்-24 - வில்லிபுத்தூரார் — 13
இலக்கண விளக்க உரை - வைத்தியநாத தேசிகர் — 14
திருவிளையாடல் புராணம் - பரஞ்சோதி முனிவர் — 14
புறநானூறு - 141 - பரணர் — 14
பதிற்றுப்பத்து - 48 - பரணர் — 14
திருவாய்மொழி - 9-8-2 - நம்மாழ்வார் — 14
மணிமேகலை - 24-84 - சாத்தனார் — 14
பரிபாடல் - 10 - 81, 82 - கரும்பிள்ளைப் பூதனார் — 15
சூளாமணி - நாட்டுப் படலம்-2 - தோலாமொழித்தேவர் — 15
சேதுபுராணம் - தோத்-40 - நிரம்ப அழகிய தேசிகன் — 15
இரகுவம்சம் - குலமுறை - 3 - அரசகேசரி — 16
திவ்வியப் பிரபந்தம் - இயற்பா - நான்முகன் திருவந்தாதி - 45 - திருமழிசையாழ்வார் — 16
தக்கயாகப்பரணி - 282 - ஒட்டக்கூத்தர் — 16
திவ்வியப் பிரபந்தம் - 1604 - திருமங்கையாழ்வார் — 16
கல்லாடம் - 71 - கல்லாடர் — 16
கந்த ரந்தாதி - 8 - அருணகிரிநாதர் — 17
கல்லாடம் - 71-3 - கல்லாடர் — 17
சீவகசிந்தாமணி - 908 - திருத்தக்கதேவர் - 2019 — 17
சிலப்பதிகாரம் - 19-61 - இளங்கோவடிகள் — 17
திருக்குறள் - 610 - திருவள்ளுவர் — 18
தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - 266 - தொல்காப்பியர் — 19
புறநானூறு - 24 - மாங்குடிகிழார் — 19
திருமுருகாற்றுப்படை - 74, 75 - நக்கீரர் — 20
மலரும் மாலையும் - 49 சூரியகாந்தம் - கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை — 20, 21
கந்தபுராணம் - காப்பு - 1 - கச்சியப்ப முனிவர் — 21, 22

திருவெங்கையுலா - 40 - சிவப்பிரகாசர் — 22
மலரும் மாலையும் - 46 வெண்ணிலா - கவிமணி — 22
தனிப்பாடல் திரட்டு - ஆசிரியர் பெயர் தெரியவில்லை — 22
பிங்கலம் பல இடங்களில் - பிங்கலமுனிவர் — 23
சூடாமணி - பல இடங்களில் - மண்டல புருடர் — 23
மணிமேகலை - 18 - 59, 60 - சாத்தனார் — 23
விவேக சிந்தாமணி - 13 — 24
சீவகசிந்தாமணி - 1620 - திருத்தக்கதேவர் — 25
அம்பிகாபதி காதல் காப்பியம் - 7 - 75 முதல் - 82
சுந்தர சண்முகனார் — 25
திருக்குறள் - 3 - திருவள்ளுவர் - பலர் உரைகள் — 26, 27
சகலகலா வல்லி மாலை - 1, குமரகுருபர அடிகளார் — 28
தமிழ் அகராதிக்கலை - 2 - 1 - 1 சுந்தரசண்முகனார் — 28
நன்னூல் - எழுத்து & சொல் - காப்புகள் - பவணந்திமுனிவர்
— 29, 30
திவ்வியப் பிரபந்தம் - தொண்டரடிப் பொடியாழ்வார்
— 30
திருக்குறள் - 9 - பரிமேலழகர் உரை — 32
திவாகரம் - சூடாமணி — 34
மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்-2 - குமரகுருபரர் — 35
இரகுவம்சம் - நகரப்படலம் - 16 - அரசகேசரி — 35
காஞ்சிப் புராணம் - திருவேகம்பம் - 36 - கச்சியப்பர் — 36
சீவகசிந்தாமணி - 2870 - நச்சினார்க்கினியர் உரை — 36
அரிச்சந்திர புராணம் - வேட் - 36 - ஆசுகவிராசர் — 37
திருவாலவா யுடையார் திருவிளையாடல் புராணம் - 37-58-
பெரும்பற்றப் புலியூர் நம்பி — 37
The Lotos Eaters - Lord. Tennyson - 5: 1, 2 — 39
அகத்தியர் குணபாடம் - அகத்தியர் — 39
இரகுவம்சம் - தேனு - 17. அரசகேசரி — 40
செவ்வந்திப் புராணம் - தாயான - 11 - எல்லப்ப நாவலர்
— 40
அப்பர் தேவராம் - நமச்சிவாயத் திருப்பதிகம் - 2 — 41

கயாதர நிகண்டு - கயாதரர் — 43
நால்வர் நான்மணிமாலை - 4, 40 - சிவப்பிரகாசர் — 45
அகத்தியர் குணபாடம் — 45
அகராதி நிகண்டு - இரேவண சித்தர் — 46
பரிபாடல் - 2 : 13, 14, 15 — 47
தொல்காப்பியம் - 394 - தொல்காப்பியர் — 47
அப்பர் தேவாரத் திருத்தாண்டகம் - பொது — 47

**'தெருவிலழகி' என்னும் கட்டுரைக்கு**

திருக்குறள் - 1037, 1038 - திருவள்ளுவர் — 52, 53
நாலடியார் - 341 - சமண முனிவர் — 53, 54
பெருங்கதை - மகத காண்டம் - நலனாராய்ச்சி - 108 முதல் 114 வரை - கொங்கு வேளிர் — 54
குறுந்தொகை - 305 - குப்பைக் கோழியார் — 55
நற்றிணை - 291 - நெடுங் கழுத்துப் பரணர் — 55
புறநானூறு - 116 - 6, 7 - கபிலர் — 55
புறநானூறு - 24 - 22 - மாங்குடிகிழார் — 56
புறநானூறு - 230 - 3 - அரிசில் கிழார் — 56
புறநானூறு - 237 - 2 - பெருஞ்சித்திரனார் — 56
பொருநராற்றுப்படை - 242-44 - முடத்தாமக் கண்ணியார் — 55
பெரும்பாணாற்றுப் படை - 239 முதல் 41 வரை - கடியலூர் உருத்திரங் கண்ணனார் — 56
கல்லாடம் - 56 - 28 - கல்லாடர் — 56
நற்றிணை - 101 - 2, 3 - வெள்ளியந் தின்னனார் — 57
நற்றிணை - 138 - 1 - அம்மூவனார் — 57
பெருங்கதை - 2 - 2 - 72 - கொங்குவேளிர் — 57
பெருங்கதை 2 - 14 - 68, 69 - கொங்குவேளிர் — 57
சிலப்பதிகாரம் - 25-37; 26-168; 6-121 - இளங்கோ — 57
மணிமேகலை - 16 - 122, 123 - சாத்தனார் — 58

கலித்தொகை - 101 - 9 - சோழன் நல்லுருத்திரனார் & நச்சினார்க்கினியர் உரை — 59
அகநானூறு - 253 - நக்கீரர் — 59
குறுந்தொகை - 190 - பூதம் புலவன் — 59
இறையனார் அகப்பொருள் - 3 - உரை — 59
ஈடு - 4 - 1 - 10 — 59
சிலப்பதிகாரம் - 8-68, 69 - இளங்கோ — 60
பிங்கல நிகண்டு - 994, 995 - பிங்கலர் — 60
திருமுருகாற்றுப்படை - நக்கீரர் & 144 - நச்சினார்க்கினியர் உரை — 60
தேரையர் பாடல் - தேரையர் — 61
கம்பராமாயணம் - நாகபாசப் படலம் - 194 - கம்பர் — 62
திவாகர நிகண்டு - 4-249 - திவாகரர் 11-237 & 4-112 — 64-65
சூடாமணி நிகண்டு - 4-64 - மண்டலபுருடர் — 66
திவ்வியப் பிரபந்தம் - 873 - தொண்டரடிப்பொடியாழ்வார் — 69
திவ்வியப் பிரபந்தம் - 2689 - நம்மாழ்வார் — 69
கம்பராமாயணம் - கையடைப் படலம் - 325 — 69
கம்பராமாயணம் - கங்கைப் படலம் - 620 — 70
சிலப்பதிகாரம் - 16-46, 47 & 11-35, 36 - இளங்கோ — 69
திருவிசைப்பா - திருமாளிகைத் தேவர் — 72
திருவாசகம் - அருட்பத்து-1 - மாணிக்கவாசகர் — 72
திருவாசகம்-கோயில் திருப்பதிகம்-9 - மாணிக்கவாசகர் — 72
அப்பர் தேவாரம் - தனித்திருக் குறுந்தொகை-பொது — 73
அகத்தியர் குணபாடம் — 73, 74
விரத சூடாமணி - ஆசிரியர் பெயர் தெரியவில்லை — 75
சங்கத்து அகராதி - கதிரைவேல் பிள்ளை — 76
தேரையர் பாடல் - தேரையர் — 79, 80
சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி — 87
திருக்குறள்-378 - திருவள்ளுவர் — 88

புறநானூறு-101 - ஔவையார் — 88
கலித்தொகை - 103-60 - சோழன் நல்லுருத்திரனார் — 88
சுந்தரர் தேவாரம் - திருப்பனையூர்ப் பதிகம் - 6, 10 — 89
நீதி வெண்பா - ஆசிரியர் பெயர் தெரியவில்லை — 90
நன்னூல் - பாயிரம் - பவணந்தி — 91
சிறுபாணாற்றுப்படை - 135 முதல் 140 வரை - இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் — 92
புறநானூறு-159 - பெருஞ்சித்திரனார் — 94
பெரிய புராணம் - இளையான்குடி மாறர்-4 - சேக்கிழார் — 96

**'காணாமல் பூ பூக்கும்' என்னும் கட்டுரைக்கு**

சிறுபஞ்சமூலம்-22, 23 - காரியாசான் — 99
திவாகர நிகண்டு - 4-8, 80, 81 - திவாகரர் — 100
திரிகடுகம்-12 - நல்லாதனார் — 101
நன்னூல் - 36, 37 - பவணந்தி முனிவர் — 101
பெரும்பாணாற்றுப்படை-407 முதல் 411 வரை - கடியலூர் உருத்திரங்கண்ணனார் & நச்சினார்க்கினியர் உரை — 105
சிலப்பதிகாரம் - 16-24, 25 - இளங்கோ — 106
மலைபடுகடாம் - 268, 269 - பெருங்கௌசிகனார் — 107
புறநானூறு - 58-2, 3 - காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் — 107
புறநானூறு - 254-7, 8 - கயமனார் — 107
திவாகர நிகண்டு - மரப் பெயர்த் தொகுதி - 8 - திவாகரர் — 107
சூடாமணி நிகண்டு - மக்கள் பெயர்த் தொகுதி-14 - மண்டல புருடர் — 107

**'மடிக் குருவி' என்னும் கட்டுரைக்கு**

சிலப்பதிகாரம் - 9-21, 22 - இளங்கோவடிகள் — 109
திருவாய்மொழி - 6-7-1 - நம்மாழ்வார் — 113

சேது புராணம் - சேது படலம்-9 - நிரம்ப அழகிய தேசிகர் — 114

கம்பராமாயணம் - வரைக் காட்சிப் படலம்-49 (பா.கா.) — 115

கம்பராமாயணம் - கார்காலப் படலம்-29 (கி.கா.) - கம்பர் — 115

கலித்தொகை-65 - கபிலர் — 115

திருக்கோவையார்-396 - மாணிக்கவாசகர் — 115

அகத்தியர் குணபாடம் - அகத்தியர் — 115

சீவகசிந்தாமணி-826 - திருத்தக்க தேவர் & நச்சினார்க்கினியர் உரை — 116

சீவகசிந்தாமணி-197 & 1479 - நச்சினார்க்கினியர் உரை — 118

கம்பராமாயணம் - காட்சிப் படலம்-79 (சு.கா.) — 117

சிலப்பதிகாரம் - 16-55, 56 - இளங்கோ — 118

அகத்தியர் குணபாடம் — 120, 121, 122

பெருங்கதை - வத்தவ காண்டம் - 4-7-149, 150 - கொங்கு வேளிர் — 123

சேது புராணம்-தேவி-27 - நிரம்ப அழகிய தேசிகர் — 124

அபிராமி அந்தாதி-50 - அபிராமி பட்டர் — 124

புறநானூறு - 56 - மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் — 124

கம்பராமாயணம் - பாலகாண்டம் - வரைக்காட்சிப்படலம் (49) — 125

சிவஞான சித்தியார் - பர பக்கம் - உலோகாயதன் மறுதலை-7 - அருள்நந்தி சிவாசாரியார் — 126

சிலப்பதிகாரம் - 16-55 - இளங்கோ — 126

அருணாசல புராணம் - திருமலை-26 - எல்லப்ப நாவலர் — 127

தாயுமானார் பாடல் - சச்சிதானந்த சிவம்-11 — 127

தமிழ்க் கலைக் களஞ்சியம் - தொகுதி-9. — 128

**'உள் கண்ணாடி' என்னும் கட்டுரைக்கு:**

நன்னூல் - ஒன்றின் முடித்தல் தன்னிடம் முடித்தல் பொதுப்பாயிரம்-14 - பவணந்தி முனிவர் — 133

திருவாசகம் - திருவண்டப் பகுதி - 1 முதல் 6 வரை - மாணிக்கவாசகர் — 134

சிலப்பதிகாரம்-11 - 41 முதல் 48 - இளங்கோ — 136

பரிபாடல்-13 - 6 முதல் 9 - நல்லெழுநியார் — 136

மணிமேகலை - 5-199, 119 முதல் 122 - சாத்தனார் — 137

The Lotos Eaters - 5-1-2 - Lord Tennyson — 137

திருக்குறள் - 575, 271 - திருவள்ளுவர் — 139

தேரையர் குணபாடம் - தேரையர் — 140

பொருட் பண்பு நூல் - க. ச. முருகேச முதலியார் — 140

தேரையர் காண்டம் - தேரையர் — 140

திருக்குறள் - 271 — 144

தாயுமானார் பாடல் - பரிபூரணானந்தம்-2 — 145

பொருட் பண்பு நூல் - க. ச. முருகேச முதலியார் — 145

சங்கத்து அகராதி - கதிரை வேல் பிள்ளை — 145

மூலிகை வைத்திய அகராதி - பதினெண் சித்தர்கள் — 146

சித்த வைத்திய அகராதி - இ. ராம. குருசாமிக்கோனார் — 146

சாம்பசிவம் பிள்ளை - தமிழ்-ஆங்கில அகராதி — 146

யாழ்ப்பாணத்து மானிப்பா யகராதி - (இரண்டு இடங்களில்) சந்திரசேகரப் புலவர் — 146

திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணம் - சான்றழைத்த திருவிளையாடல் - 62-7 - பெரும் பற்றப் புலியூர் நம்பி — 147

திவாகர நிகண்டு - 9-53 - திவாகரர் — 148

ஒழிவிலொடுக்கம் - கிரியைக் கழற்றி-16 - கண்ணுடைய வள்ளல் — 148

பதார்த்த குண சிந்தாமணி - பதினெண் சித்தர்கள் — 149

கைவல்ய நவநீதம் - தத்துவ விளக்கம்-8 - தாண்டவராய சுவாமிகள் — 150

பெரிய புராணம் - 32-68, 3296 - சேக்கிழார் — 153
ஜூபிலி தமிழ்ப் பேரகராதி - சங்கரலிங்க முதலியார் — 154
நெடுநல்வாடை - நக்கீரர் - 33. நச்சினார்க்கினியர் உரை — 154
அப்பர் தேவாரம் - பொது — 154
சீவக சிந்தாமணி-418 - திருத்தக்கதேவர் — 155
சீவக சிந்தாமணி - பதிகம்-14 - திருத்தக்கதேவர் — 157
சாம்பசிவம் பிள்ளை தமிழ்-ஆங்கில அகராதி — 156
புறத் திரட்டு - மூதின் மறம்-9 - திரட்டியவர் பெயர் தெரியவில்லை — 158
கலித்தொகை - 22-19 - சேரமான் பாலை பாடிய பெருங் கடுங்கோ & நச்சினார்க்கினியர் உரை — 160
சீவக சிந்தாமணி - 1530 - திருத்தக்கதேவர் — 160
கந்தபுராணம் - இரணியன் யுத்தப் படலம் - கச்சியப்பர் — 160
புறநானூறு-155 - மோசி கீரனார் — 160
ஐங்குறுநூறு-76 - ஓரம்போகியார் — 160
ஐங்குறுநூறு-23 - ஓரம்போகியார் — 160
பெருங்கதை - மகத காண்டம்-16-5 - கொங்கு வேளிர் — 161
வைத்திய மூலிகை அகராதி — 162

**'யானை வணங்கி' என்னும் கட்டுரைக்கு**

திருக்குறள்-1120 - திருவள்ளுவர் — 164
சீவக சிந்தாமணி-341 - திருத்தக்கதேவர் — 165
அகத்தியர் ஏமதத்துவம் என்னும் பஞ்ச காவிய நிகண்டு - நான்காம் பாகம் - வைந்திய காண்டம்-67 - அகத்தியர். — 165

# 9. மர இனப் பெயர்களின் அகரவரிசை

எண்: பக்க எண்


**அ**

| | |
|---|---|
| அக்கினிச் சலம் | 72 |
| அக்கினிச் சிவச்செடி | 72 |
| அக்கினிச் சிவம் | 72 |
| அகட்டுவாய் அகற்றி | 130 |
| அஞ்சித பத்திரி | 36 |
| அதிசயப் புட்பி | 100 |
| அதிமூத்திரம் நீக்கி | 142 |
| அட்டதளம் | 35 |
| அடை | 126 |
| அடைக்காய் | 126 |
| அண்டகம் | 66 |
| அண்டகமேனி | 67 |
| அத்தி | 100 |
| அப்புசம் | 11 |
| அபுட்பபலம் | 100 |
| அம்புசம் | 11 |
| அம்புஜம் | 11 |
| அம்புசாதம் | 12 |
| அம்புயம் | 11 |
| அம்போகம் | 11 |
| அம்போருகம் | 11 |
| அமெரிக்கக் குப்பைவேளை | 93 |
| அரசமரம் | 100 |
| அரசு வெற்றிலை | 114 |
| அரிமஞ்சரி | 64 |
| அருகன்வாகனம் | 26 |
| அருங்கலம் | 41 |
| அவகோசி | 100 |
| அழுகல் அகற்றி | 130 |
| அற்ப கந்தக்கொடி | 40 |
| அற்ப கந்தம் | 40 |
| அன்னாசி | 105 |

**ஆ**

| | |
|---|---|
| ஆடலை | 100 |
| ஆண்டலை | 100 |
| ஆல் | 101 |
| ஆலம் | 107 |
| ஆலமரம் | 100 |
| ஆனந்தவாதோதகம் | 81 |

**இ**

| | |
|---|---|
| இண்டை | 37 |
| இந்திரைமேனி | 67 |
| இரத்தக்குமுதம் | 38 |
| இரதிகாந்தன் | 40 |
| இராமப்பிரியம் | 19, 40 |
| இராமர்பச்சை | 71 |
| இலண்டன் கீரை | 162 |

**உ**

| | |
|---|---|
| உதறி | 118 |
| உப்புமூலிகை | 82 |
| உம்பர் ஊர் | 142 |
| உமிழ்நீர்ப் பெருக்கி | 130 |
| உறைக்கும் இலை | 119 |

ஊ

ஊருடம் 79
ஊருடன் முதலியார் 79

எ

எல்லவன் 20
எல்லி 20
எல்லி மனை 19
எலி 20
எலி மனை 19

க

கஞ்சம் 12
கடகம் 104
கடிப்பாங்கிச்செடி 82
கடுஞ்சீதளத்தி 143
கண்ணி 139
கண்ணுக்கணி 139
கண்ணுக்கினியாள் 139
கணிச்சி 123
கணிச்சியிலை 123
கம்மாறு வெற்றிலை 129
கமலம் 13
கர்ப்பூரவெற்றிலை 129
கரியுரியுரித்தோன் 78
கருஞ்செந்தாமரை 38
கருந்தாமரை 38
கருப்பூரக்கொடி 128
கருப்பூரவெற்றிலை 129
கலவைக்கீரை 81
கள்ளஸ்கொடி 128

கா

காக்காப்பூச்செடி 93
காணி 139
காந்திமெய் 61
காமசனனி 121
காமம்பெருக்கி 121, 130
காமவர்த்தநி 121
காரவெற்றிலை 119
காலகாலாக்கினியானோன் 74
காலாக்கினியானோன் 74
கானவடிவழகி 156

கு

குசேசயம் 13
குப்பைக்கீரை 73
குப்பைக்கீரைச்செடி 93
குப்பைமேனி 49
குப்பைவேளை 73
குருவி 109

கோ

கோகனகம் 14
கோகனதம் 14
கோகயம் 14
கோழையறுக்கி 97
கோளி 100
கோளிஆலம் 106
கோளிகம் 100
கோளிப்பலா 105
கோளிப்பாகல் 106

ச

சக்கிரபுட்பம் 63
சக்கிரபுட்பி 63
சகஸ்ரபத்திரம் 36
சண்பகம் 100
சதபத்திரம் 35
சதபத்திரி 36
சததளம் 35
சதபதுமம் 35
சந்திரகாம்புயம் 16
சந்திரம் 13
சரசிசம் 12

சரசீருகம் 12
சரோசம் 12
சரோசினி 12
சரோருகம் 12
சலசப்பூ 13
சலசம் 13
சவோசினி 13

சா

சானகி 143
சாணக்கிமேனி 58
சாதகலட்சுமி 121

சி

சித்தி 144
சித்திரப்பெண் 123
சித்துக்கொடி 128
சிவசக்திபகர்ந்தான் 41
சிவத்தானம் 119
சிறுநீர்ப்பெருக்கி 97

சீ

சீதளம் 17, 39
சீதளத்தி 143
சீதளை 143
சீதை 143
சீமைப் பொன்னாங்கண்ணி 162

சு

சு கதிர் 157
சுக துக்கம் 85
சுக துக்கம் இரண்டும் அறியும் இலை 85
சுடலைப் பூ 93
சுடுகாட்டுச் செடி 93
சுந்தர மாது 123
சுருபனாதி 67

சூ

சூதம் உண்டாக்கி 97
சூரிய நட்பு 19
சூல் 123
சூலினி 123

செ

செந்துளிர் மேனிக்கொடி 123

த

தம்பல் 115
தம்பலம் 115
தனிவல்லி 65
தனிவல்லிப் பெருமாள் 65

தா

தாம்பூலக் கண்ணி 114
தாம்பூலம் 114
தாம்பூலவல்லி 114
தாம்பூலி 114

தி

திகைப்பூண்டு 89
திரிபுரத்தான் 76
திரிபுரம் எரித்தோன் 76
திருமலர் 16
திருமாதகம் 17
திருமால் கொப்பூழ் 18
திருமால் கொம்பர் 17
திருமேனி 61
திருமேனி அழகிச் செடி 61
திருமேனிக் கடுக்கன் 64
திருமேனி கண்டன் 61
திருமேனிச் செடி 61
திருமேனி பத்திரி 61

திருமேனியழகி 61
திரேக சித்தி 144
திரை 117
திரையல் 117
திரையலாலிக் கொடி 117

**து**

துயரடக்கி 97
துவர்ப்பி 130

**தெ**

தெருவிலழகி 49
தென்புறம் 37

**தே**

தேகலட்சுமி 121
தேட்கொடுக்கி 165

**தோ**

தோலுரித்தோன் 77

**ந**

நளினம் 13

**நா**

நாகத்தைச் சூரணமாக்கி 123
நாகவல்லி 116
நாகவள்ளி 116

**நி**

நித்திய கல்யாணி 91

**நீ**

நீர்நிதி 46
நீரோருகம் 14
நீலத் தாமரை 38

**நே**

நேத்திர நாசி 141

**ப**

பகலில் நட்சத்திரம் தோன்றி 133
பங்கசம் 15
பங்கஜம் 15
பங்கயம் 15
பங்கசாதம் 15
பங்கேருகம் 15
பசித் தீத் தூண்டி 130
பதுமாலயம் 157
பயிரவி 67
பயிலிகம் 86
பயிலியம் 86
பயிலிய மேனி 86
பல்லழகி 120
பல்லுக்கழகி 120
பலாமரம் 100
பழுதுடை நாயகம் 44
பனிக் கஞ்சி 19
பனிக்கதிரின் பகைமலர் 25

**பா**

பாதிரி 100
பால் பெருக்கி 130

**பி**

பிடி குருவி 111
பித்த சாந்தி 142

**பீ**

பீங்கான் பூச்செடி 93
பீ நாறிப் பூ 93

பு

புட்ப சூனியம் 100
புண்டரிகம் 16
புண்டரீகம் 16
புழுக் கொல்லி 97

பூ

பூவா மரம் 100
பூனைப் பகை 83
பூனை வணங்கி 83

பெ

பெருங் கொடுப்பை 156
பெருமலம் போக்கி 97

பே

பேய்ப் பலாதி 93
பேய்ப் பலாதிக் கீரை 93

பொ

பொற் கண்ணி 141
பொற் காணி 141
பொன் மனை 17
பொன் மூலி 141
பொன்மேனி 141
பொன்னாங்கண்ணி 139
பொன்னாங்காணி 139

பௌ

பௌதிக மங்கை 144

ம

மச்சி 146
மச்சிக் கண்ணி 146
மச்சிப் பாசி 146
மச்சியாங்கணி 146
மச்சியாங்கண்ணி 146
மச்சியாங்காணி 146
மச்சி யாச்சி 146
மச்சி யாத்தி 146
மஞ்சள் தாமரை 39
மடி 108
மடிக் குருவி 110
மடி குருவி 110
மண்ணில் வேந்தன் 114
மண் நில வேந்தன் 114
மதிமயக்கி 89
மயிலம் 68
மயிலமேனி 68
மயிலை 68
மயிலை மேனிச் செடி 68
மனமயக்கி 89

மா

மாங்கரியாள் 71
மாதவம் புரிவாள் 8
மாயக் கண்ணி 67
மாலின் நேத்திரம் 18
மாலுந்தி 18
மாற்சால மோகினி 85

மி

மிருதங்க பலம் 106

மு

முண்டகம் 37
முழுவுக்கனி 106
முள் பொன்னாங்கண்ணி 157
முள்ளிக்கீரை 73
முளரி 36
முறைமயக்கிச் செடி 89

மூ

மூசி 154
மூன்றிலை மேனிச்செடி 62

மெ

மெல்லடகு 117
மெல்லிலை 116

மே

மேனைகைவாரி 67
மேனாட்டுக் கண்ணி 162
மேனி 61

மை

மைசாட்சி 142
மைத்துனி 149

யா

யானை வணங்கி 165

வ

வட்டக் கொடி 128
வடிவழகி 123
வண்டுணி 15
வண்டுணிக் கொடி 15
வண்டுழு 15
வரிக்கண்ணி 159
வள்ளி 116
வனசம் 12

வா

வாணி மலர் 19
வாதுவர்ணம் 158
வாந்தியுண்டாக்கி 97
வாரிசம் 13
வாரி சாதம் 13
வாலப் பரிதி 65
வான்நாடி 154

வி

விசயம் 113
விஷபுட்பம் 40
விண்ணுக்குள் மூர்த்தி 142
வினை விகாசச்செடி 62

வீ

வீரக்கொடி 113

வெ

வெண்டாமரை 38
வெப்பமுண்டாக்கி 130
வெயிலுந்தரவிந்தம் 19
வெள்ளடை 124
வெள் வெற்றிலை 125
வெள்ளிலை 125
வெள்ளை வெற்றிலை 127
வெற்றியிலை 113
வெற்றிலை 112

வே

வேங்கை 100
வேதாக்கினி குமரன் 76
Cat's Struggle 84
Tribulus Terrestris 165

**இன்றியமையாமை:**

மரம், செடி, கொடி, புல், பூண்டு ஆகிய ஐந்தையும் மரம் (மர இனம்) என்ற பெயரில் அடக்கிக் கொள்ளல் வேண்டும். மரம் என்பது தனிப்பொருள் அன்று; பல உயிர் அணுக்களால் (Wood Cells) ஆனது அது. மரத்திற்கும் உயிர் உண்டு; அது ஓரறிவு உயிர் என்கிறார் தொல்காப்பியர். ஓர் அறிவு உயிர் மட்டுமா அது? அதற்குப் பால் (Sex) உணர்வு அறிவும் உண்டு.

மக்கள் தொடக்கக் காலத்தில் முதல் முதலாகப் பயன் படுத்தியது மர இனமேயாகும். எனவே, அதைக் கண்டபடி சிதைக்கலாகாது. மரம் நடுதலின் இன்றியமையாமை இப்போது பெரிய அளவில் பேசப்படுகிறது.

மரத்தால் கிடைக்கும் பயன் மிகப் பல. எனவே, 'மர இனப் பெயர் வைப்புக் கலை' என்னும் இந்நூலின் மூன்று பாகங்களையும் படித்ததன் பயனாக, அனைவரும் நிரம்ப மரம் வளர்க்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

## சுந்தர சண்முகனாரின் உழைப்புகளுள் சில:

| | ரூ.கா. |
|---|---|
| தமிழ் அகராதிக்கலை | 40—00 |
| தமிழ் இலத்தீன் பாலம் | 30—00 |
| கெடிலக்கரை நாகரிகம் | 50—00 |
| அம்பிகாபதி காதல் காப்பியம் | 20—00 |
| கௌதமப் புத்தர் காப்பியம் | 30—00 |
| மர இனப் பெயர்த் தொகுதி-1 | 140—00 |
| மர இனப் பெயர்த் தொகுதி-2 | 200—00 |
| உலகு உய்ய! | 30—00 |
| பாரதிதாசரொடு பல ஆண்டுகள் | 12—00 |
| கருத்துக் கண்காட்சி | 20—00 |
| தமிழ்க் காவிரி | 12—00 |
| கடவுள் வழிபாட்டு வரலாறு | 15—00 |
| தொல் திராவிடமொழி கண்டுபிடிப்பு | 20—00 |
| மக்கள் குழு ஒப்பந்தம் | 15—00 |
| மருந்தாகித் தப்பா மர இனப் பெயர்கள் | 20—00 |
| பால காண்டப் பைம்பொழில் | 25—00 |
| அயோத்தியா காண்ட ஆழ்கடல் | 20—00 |
| சுந்தர காண்டச் சுரங்கம் | 18—00 |
| தமிழ்நூல் தொகுப்புக் கலைக்களஞ்சியம் | 100—00 |
| மர இனப் பெயர் வைப்புக் கலை | 18—00 |
| தெய்விகத் திருமணம் | 14—00 |

சபாநாயகம் ஆப்செட் பிரிண்டர்ஸ், சிதம்பரம்.